## நன்றியுரை

காந்தியடிகளின் வாழ்க்கையையும், தத்துவங்களையும் பற்றிப் பல பாஷைகளிலும் எவ்வளவோ புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. சமீபத்தில் அன்னாருடைய 71-வது ஆண்டு விழாவை யொட்டி ஸ்ரீ. கனச்யாமதாஸ் பிர்லா ஹிந்தியில் 'பாபூ' என்ற பெயருடன் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீ. பிர்லா, நமது நாட்டின் பிரபல வியாபாரிகளில் ஒருவர். கோடீசுவரர் எனப் பிரசித்தி பெற்றவர். மற்றும் பல பணக்காரர்களைப் போல் அல்லாமல், தேச முன்னேற்றத்திற்குரிய புதிய புதிய கைத்தொழில்களைத்

தொடங்கி திறம்பட நடத்தி வருகிறவர். இவ்வளவுடன், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய பாஷைகளில் விற்பன்னர். வழக்கத்திற்கு மாருக, பூமகளும், நாமகளும் ஒருவருக்கொருவர் உறுதுணையாய் நின்று அவரிடம் தங்கள் அருளைச் சொரிந்திருக்கிருர்கள். இத்தகையவர், தரித்திர நாராயணனின் பிரதிநிதியாகிய காந்தியடிகளிடம் அளவிலா பக்தி சிரத்தை கொண்டவராயிருப்பது பெரும் விந்தையே!

ஸ்ரீ. பிர்லா, நாட்டின் சமய, சமூக, ராஜீய, கல்வி, கைத்தொழில் துறைகளின் முன்னேற்றத்திற்காக செய்திருக்கும் சேவை சிறிதல்ல. அவரது நுண்ணிய அறிவு, ஆராய்ச்சித் திறன், நற்பழக்கம், தூய நடத்தை ஆகியவற்றின் பயனே இந்நூல்.

சில மாதங்களுக்கு முன் இந்த நூல் ஹிந்தியில் வெளிவந்த பொழுது நான் படித்தேன். இதில் இதுவரையில் தமிழில் வெளிவந்த வேறெந்த 'காந்தி நூலி'லும் காணுத பல அம்சங்களைக் கண்டேன். இதில் காந்தியடிகளுடன் பல வருஷங்களாக நெருங்கிப் பழகும் பெருமை படைத்த ஒருவர், பிறப்பு முதல் தொடங்கி யாவரும் அறிந்த நிகழ்ச்சிகளைத் தொகுக்க முயலாது, தாம் கண்ணுற் கண்ட சம்பவங்களையும், காதாற் கேட்ட அருள் வாக்குக்களையும் முக்கிய ஆதாரமாகக் கொண்டு அவரது தத்துவங்களின் வளர்ச்சியை ஆராய்ந்

திருப்பதுடன், அன்றாட வாழ்க்கையின் 'புதிர்'களெனக் கருதப்படும் பல விஷயங்களை யும் தெளிவாக்க முயன்றிருக்கிறார்.

ஆகவே இந்நூலைத் தமிழில் வெளியிட்டால் தமிழ் மக்களுக்கு உதவியா யிருக்குமென்றெண்ணி, ஆசிரியரின் அனுமதி வேண்டினேன். அவரும் மகிழ்ந்து அனுமதியளித்தனர். பல நண்பர்கள் எனக்கு ஊக்கமும் உதவியும் அளித்திராவிடில் இவ்வளவு குறைந்த காலத்தில் இதை வெளியிட்டிருக்க முடியுமா என்பது சந்தேகமே. அவர்கள் அனைவருக்கும் எனது வந்தனங்கள் உரித்தாகும்.

மொழிபெயர்ப்பாளர்.

## மூலநூலின் முகவுரை

(ஸ்ரீ. மகாதேவ தேசாய் எழுதியது)

பகவத் கீதையைப் பற்றி எழுதுவது சுலபமாயின், காந்தியடிகளைப் பற்றி எழுதுவதும் சுலபமாகும்; ஏனெனில், பகவத் கீதையின் பாஷ்யம் கீதா பாஷ்யமாக மட்டுமின்றி பாஷ்ய கர்த்தாவினுடைய வாழ்க்கைக் கண்ணாடியாகவு மிருக்கும். 'கீதா ரஹஸ்யம்' லோகமான்யரின் வாழ்க்கைக் கண்ணாடியா யிருப்பது போல் 'அனாஸக்தியோகம்' காந்தியடிகளின் வாழ்க்கைக் கண்ணாடியாய் இருக்கிறது. அதே போன்று, காந்தியடிகளின் வாழ்க்கையை ஆராய்ந்த ஆசிரியர் தனது வாழ்க்கைச் சித்திரத்தையும் அவ்வாராய்ச்சிக் கண்ணாடியில் தீட்டியிருக்கிறார்.

மற்றொரு விஷய மென்னவெனில், கீதை எல்லோரு மறிவதற்குரிய திறந்த நூலா யிருப்பதுபோல், காந்தியடிகளின் வாழ்க்கையும் ஒரு திறந்த புத்தகமெனக் கூறப்படலாம். கீதையை

பெரிய பெரிய வித்வான்கள் படிப்பதோடன்றி, எழுத்தறிவில்லாத ஆயிரமாயிரம் பாமரர்களும் பக்திமேலீட்டால் அன்புடன் படிக்கிறார்கள். காந்தியடிகளின் வாழ்க்கை விஷயத்திலும்—முக்கியமாக 'சத்திய சோதனை' என்ற அவரது சுய சரிதை விஷயத்தில்—இப்படியே நடந்து வருகிறது. கீதை எல்லோருக்கும் பயன்படுவதுபோல், காந்தியடிகளும் எல்லோருக்கும் உதவுகிறார். கீதையினால் வித்வான்கள் பெறும் பயனதிகமா, கல்வியறிவில்லாவிடினும், பக்தியுள்ள பாமரர் எய்தும் பயனதிகமா வென்ற விஷயம் ஆராயத்தக்கதாகும். காந்தியடிகளைப் பற்றியும் இவ்வாறு கூறலாம். அவரது வாழ்க்கையை, அவருடைய தத்துவங்களை அறிவதற்கு புலமையோ, எழுத்துவன்மையோ தேவையில்லை. வேண்டுவது இதயமும், உண்மையான நடத்தையுமேயாம். ஸ்ரீ. கனச்யாமதாஸ், வித்வான்கள், எழுத்தாளர்கள் வகுப்பில் சேர்ந்தவரா என்பதை நானறியேனாயினும், தனிகரின் வகுப்பில் சேர்ந்தவரென்பது தெரிந்த விஷயம். ஆயினும், அவர் பொருளின் மோஹத்தினின்று விலகி நின்று, தன் உள்ளத்தை ஸ்படிகம் போல் தூயதாகவும், அறிவையும், மொழியையும் ஆனவரையில் உண்மையாயும், புனிதமாயும் வைத்துக்கொள்ள முயன்றிருக்கிறார். அத்தகைய உள்ளம், அறிவு, வாக்கு இவைகளினால் செய்யப்பட்ட இவ்வா

ராய்ச்சிக்கு, இன்று ஸ்ரீ. பிர்லா சிறந்த வித்வானாகவோ, அல்லது ஆசிரியராகவோ கருதப்படாவிடினும், சிறந்த ஆராய்ச்சி நூல்களினிடையில் இடம் கிடைப்பது நிச்சயம். அன்றியும் அவர் ஹிந்தியின் மிகச் சிறந்த ஆசிரியர்களில் ஒருவராகக் கருதப்பட அது காரணமாகுமென்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ. கனச்யாமதாஸின் எழுத்துவன்மையைப்பற்றி எனக்குத் தெரிந்த அளவு, ஹிந்தி உலகிற்குத் தெரிந்திராது. பல வருஷங்களாக நான் அவருடன் பழகி வருகிறேன். ஹிந்தியில் எழுதப்படும் அவரது கடிதங்கள் மிகுந்த தெளிவும், சொல் சுருக்கமும், கருத்தாழமும் கலந்த சிறந்த நடைக்கு ஒப்பற்ற உதாரணங்களாக எனக்குத் தோன்றுகின்றன. அவரது நடையில் மயங்கிய நான், அவர் ஏன் ஒன்றும் எழுதுவதில்லையென அடிக்கடி நினைத்ததுண்டு. அவருடைய கடிதங்களில் கண்ட அழகிய நடையை இந்நூலிலும் கண்டு, நான் மிக்க மகிழ்ச்சி கொண்டேன்.

ஸ்ரீ. பிர்லாவுக்கு காந்தியடிகளின் பழக்கம் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. இந்த இருபத்தைந்து ஆண்டுகளைப் பற்றி அவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"நான் காந்தியடிகளை முதலில் தரிசித்ததிலிருந்து அவருடன் எனக்கு அரூத தொடர்பு இருந்திருக்கிறது. முதற் சில வருஷங்கள்

வரையில் நான் அவருடைய குறைகளைத் தேடும் விமர்சகனாக அவரை யணுகி வந்தேன். ஏனெனில், (அக்காலத்தில்) வாலிபர்களின் தெய்வமாயிருந்த லோகமான்யரின் புகழுக்குச் சமமாக இவரது கீர்த்தியும் ஓங்க ஆரம்பித்தது, எனக்குப் பிடிக்கவில்லை. இவரது குறைகளைத் தேடும் பொருட்டு நெருங்க நெருங்க நான் ஏமாற வேண்டியதாயிற்று. ஆகவே சிறிது காலத்தில் குறை தேடும் எண்ணம் போய், மரியாதை யுண்டாயிற்று. பின்னர் அம்மரியாதையும் பக்தியாகப் பரிணமித்தது. அவருடன் நெருங்கிப் பழகியவன் அவரது பழக்கத்தினால் மாறாமல் தப்ப முடியாது."

ஸ்ரீ. கனச்யாமதாஸ் பிர்லா தப்பவில்லை யென்பது மட்டும் எனக்குத் தெரியும். அவர் மேலும் எழுதுவதாவது: "காந்தியடிகளுடன் எனக்கு இருபத்தைந்து வருஷத்திய பழக்கமுண்டு. நான் மிகவும் அருகிலிருந்து நுண்பொருள் விளக்கிக்கொண்டு அவரை ஆராய்ந்திருக்கிறேன். விமர்சகனாயிருந்து அவரது குறைகளைக் காண முயன்றிருக்கிறேன். ஆனால் அவர் உறங்குவதை ஒருபொழுதும் நான் கண்டதில்லை."

இந்த வாக்கியங்கள் காந்தியடிகளின் விஷயத்தில் உண்மையா யிருப்பதன்றி ஸ்ரீ. பிர்லா விஷயத்திலும் வெகுவாக உண்மையே யாகும். ஏனெனில், காந்தியடிகள் தான்

விழிப்புட னிருப்பதோடல்லாமல், அவரை யணுகியவர்களையும் உறங்க விடுவதில்லை.

இந்நூல் தெளிந்த படிப்பு, அனுபவம், ஆராய்ச்சி இவைகளின் சிறந்த பயனாகும். அவர் சின்னஞ் சிறு விஷயங்களைக் கொண்டு காந்தியடிகளின் வாழ்க்கையை அறிய முயன் றிருக்கிறார். முதன் முதலில் காந்தியடிகளைச் சந்தித்ததும் ஸ்ரீ. பிர்லா அவருக்கு ஒரு கடிதமெழுதினார். அதற்கு பதில் ஒரு போஸ்ட் கார்டில் வந்தது: "இதில் காசுச் சுருக்க மிருந்தது மாத்திரமல்ல; சொற் சுருக்கமும் போதுமானதிருந்தது." விஷயம் சாதாரணமானது. ஆனால் அதிலிருந்து காந்தியடிகளின் வாழ்க்கையினுடைய ஒரு ரகசியம் அவருக்குக் கிடைத்து விடுகிறது.

"காந்தியடிகள் எத்தனை வாலிபர்களின் மனதில் தம்மைப் பதிய வைத்திருக்கிறாரோ, எவ்வளவு பேர்களைத் தம் வலையுள் சிக்கவைத் திருக்கிறாரோ, எவ்வளவு பேர்களுக்கு விசித்திரமானவராகத் தென்பட்டிருக்கிறாரோ— தெரியாது! ஆனால் 1915-இல் மக்கள் கண்களுக்கு ஒரு புதிர்போலிருந்தது போன்றே இன்றும் இருக்கிறார்!" இது உண்மை. இந் நூலில் அவரது வாழ்க்கையின் அநேக புதிர்களை ஸ்ரீ. கனச்யாமதாஸ் வெகு நன்றாக அவிழ்த்திருப்பதைக் காண்கிறோம்.

கீதை தெளிவாயிருப்பதுடன் யாவரும்

விரும்பும் நூலாகவுமிருக்கிறது; ஆயினும் அதி லுள்ள புதிர்களனந்தம். காந்தியடிகளின் வாழ்க்கையிலும் இம்மாதிரியே பல புதிர்கள் நிரம்பியிருக்கின்றன. சில தினங்களுக்கு முன் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஒரு ஸ்வாமிகள் இங்கு வந்திருந்தார். மிகவும் நல்லவர். காந்தியடிகளிடம் மிகுந்த மரி யாதை கொண்டிருந்தார். காந்தியடிகளின் கிராமக் கைத்தொழில் முயற்சியை நன்கு அறிந்து கொள்வதும், நூற்றல், நெய்தல் முறைகளைக் கற்று அவைகளைத் தன் கோஷ்டி யில் பரப்புவதும் அவர் நோக்கம். ஒருநாள் அவர் என்னிடம் "காந்தியடிகளின் வாழ்க்கை யிலுடைய தீவிரத்தையும், அவருடைய கட வுட்பற்றையும் கண்டு, நான் ஆச்சரியத்தினால் திடுக்கிடுகிறேன். அவர் எப்பொழுதாவது ஆவேசமடைவதுண்டா? எப்பொழுதாவது சமாதியிலமர்வதுண்டா?" என்று வினவினார். நான் "இல்லை" என்றேன். வெளிக்குத் தெரியக்கூடிய இத்தகைய அறிகுறியொன்று மில்லாதிருந்தும், காந்தியடிகள் பெரிய பக்த ராகவும், யோகியாகவுமிருப்பது, அவருக்கு ஒரு பெரிய புதிராயிருந்தது. காந்தியடி களின் வாழ்க்கையில் இத்தகைய பல புதிர்களிருக்கின்றன. அவைகளிற் பலவற்றை அவிழ்க்க இந்நூலில் வெற்றிகரமான முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

ஓர் உதாரணம். அஹிம்ஸையினால் எப் பொருளையும் காக்க முடியுமா? இக் கேள்வி அடிக்கடி எழுகிறது. இதற்கு ஸ்ரீ. பிர்லா எவ்வளவு அழகாக விடையளித்திருக்கிறார் பாருங்கள் :—

"பொருளீட்டலும், ஈட்டிய பொருளைக் காத்தலும், அஹிம்ஸையால் முடியுமா? முடிய லாம். முடியாமலு மிருக்கலாம். சொந்த உபயோகத்திற்கென சேமித்து வைத்திருப் பவர்கள், அஹிம்ஸை முறைக்குப் பாத்திரர் களாவது முடியாது. அஹிம்ஸை யென்பது கோழைத்தனத்திற்கு மறுபெயராயில்லாமல் உண்மையான அஹிம்ஸையாயின், அது சுய நலத்திற்கெனப் பொருள் சேமிப்பதைக்கற்பிக் காது. அஹிம்ஸாவாதியிடம் பேராசைக்கிட மேது? அந்நிலையில் அஹிம்ஸாவாதிக்குத் தன் பொருட்டு பொருள் சேமிக்கவோ, காக் கவோ அவசிய மேற்படாது. அஹிம்ஸா பக்தன் தன் யோக க்ஷேமத்தின் தொந்தர வில் சிக்கவே மாட்டான்.

"சுய நல மற்றுச் சம நிலை நின்றோன்" என்று கீதையில் இத்தருமத்தை அருச்சுனனைப் போன்ற இல்லறத்தோனுக்கு ஏற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. துறவியின் தரும மென்று கூறப்படவில்லை. கீதை துறவறத்தை யல்ல, இல்வாழ்வோனுடைய தருமமான கரு மத்தைக் கற்பிக்கிறது. அஹிம்ஸாவாதியின்

அத்த தருமமும் யோகக்ஷேமமென்ற தொந்தரவிலிருந்து அவனை விலகியிருக்கப் போதிக்கிறது. ஆனால் சேர்த்தலும், காத்தலும், தனது பிறரது, இரு லாபத்திற்காகவும் செய்யக் கூடும். தனக்கென பொருள் சேமிப்பவர், அஹிம்ஸை தத்துவத்திற்கு வேண்டிய அருகதையையடையத் தவறியவராவர். பிறருக்காகப் பொருள் சேமிப்பவரோ, காந்தியடிகள் கூறுகிறபடி 'டிரஸ்டிகள்' ஆவர். அவர்கள் பற்றின்றி தந்நலத்தைக் கவனிக்கலாம். அவர்களிடம் பொருள் சேர்ந்தாலும் அவர்கள் அஹிம்ஸாவாதிகளே. ஏனெனில், அவர்களுக்குத் தங்களிடமுள்ள சேமிப்பில் பற்றில்லை. தருமத்தின் பொருட்டு சேர்த்த சொத்தை தருமத்தின் பொருட்டு விட்டு விடவும் கூடும். மேலும், அதைக் காக்க வேண்டின், தருமத்தின் மூலமாகவே காக்க முடியும். பாபத்தினாலல்ல. இவ்வாறின்றி, எவர்கள் பொருள் திரட்டுவதில் ஆசையுள்ளவர்களோ, அவர்கள் அஹிம்ஸாவாதிகளாக இருக்கவும் முடியாது. அஹிம்ஸையின் மூலமாகப் பொருளைக் காத்தலென்பதும் அவர்கள் விஷயத்தில் பொருந்தாது. ஆனால் முற்றிலும் அஹிம்ஸாவாதிகளாயிருந்து, எல்லா விதங்களிலும் தகுதி பெற்றிருந்து, தங்கள் ஆன்மீக சக்தியின் மூலமாகப் பிறருடைய சொத்தைக் காத்தல் தங்கள் கடமையென்று அவர்கள் கருதினால்,

அவ்வாறு செய்வது சரியாகும். இத்தகைய சந்தர்ப்பங்கள் ஏற்படுவது சாத்தியமே.

"ஆனால் அஹிம்ஸை முறை, ஹிம்ஸை முறை இரண்டையும் ஒப்பிடுதல் சாத்தியமல்ல வென்பதை நாம் மறத்தலாகாது. இரண்டின் இலட்சியங்களுமே வேறுபட்டவை. ஹிம்ஸையினால் ஒரு வேலை வெற்றியுடன் நிறைவேறக் கூடுமாயின்——அவ்வெற்றி சிறிது காலத்திற்கே நிலைத்தாலும் — அவ்வேலையை அஹிம்ஸையின் மூலமாக நிறைவேற்ற வியலாது. உதாரணமாக நாம் அஹிம்ஸையின் உதவியினால் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்க முடியாது; பிறர் நாட்டைக் கொள்ளையிட வியலாது. அபிஸீனியாவில் இத்தாலி சாம்ராஜ்யம் ஸ்தாபித்தது ஹிம்ஸையின் மூலமாகவே நடந்திருக்கக் கூடியது.

"இதன் பொருள் என்னவெனில், நாம் அஹிம்ஸையினால் தருமத்தைக்காக்க வியலும், பாபத்தைக் காக்க வியலாது. மேலும், பொருள் என்பது பாவத்திற்கே மறு பெயராயின், அப்பொருளையும் காக்க முடியாது. அஹிம்ஸையில் ருசியுள்ளவர்கள் பாவத்தைக் காக்க எவ்வாறு முயலுவார்கள்? அஹிம்ஸையின் இவ்வெல்லைகளை நாம் உணருவோமாயின் எவ்வளவோ சந்தேகங்கள் தாமாகவே தீர்ந்து விடும். சுருங்கக் கூறுமிடத்து நாம் காக்க விரும்பும் பொருள் தருமமாயின்

அஹிம்ஸா முறையினால் எதிரியை எதிர்த்து வெற்றி பெற முடியும். ஆனால் காக்க விரும்பு வது பாவமாயின் நாமே அதை விட்டுவிட வேண்டும். ஆகையால் அங்கிலேயில் பொருளைக் காக்க வேண்டிய பிரச்சினையே எழுவில்லை.

"இனி, தருமமென்பதெது?" 'அதரு மென்பதெது?' என்ற கேள்விகள் பாக்கி யிருக்கின்றன. ஆனால் சத்திய மார்க்கத்தில் செல்லுகிறவனுக்கு தர்மா தர்மத்தை நிச்சயிப் பதில் கஷ்டமேது?

"முத்தினைத் தேடி நீரில்
மூழ்கியே கையிற் கொண்டான்
பித்தன் நான் தேடச் சென்று—இளியே
பாரிலமர்ந்திருந்தேன்."

"உண்மை யென்னவெனில், நாம் தரு மத்தை விட்டு, பாபத்தைக் காக்க விரும்புங் கால் (அஹிம்சையின் மூலமாக பாபத்தைக் காப்பது அசாத்தியமா யிருப்பதால்) நமக்கு அஹிம்சையின் குண விசேஷங்களில் சந்தே கம் பிறக்க ஆரம்பிக்கிறது. பலவித ஆக்ஷேபங் களும் எழுகின்றன."

இவ்விதமாக, நுண்ணிய ஆலோசனை யுட னும் ஆழ்ந்த சிந்தனையுடனும் ஸ்ரீ பிர்லா இந்தப் பிரச்சினையை ஆராய்ந்திருக்கிறார். அவர் மத ஆராய்ச்சி செய்வதாகவோ, மத நூல்களை படிக்கிறாரென்றோ எனக்குத் தெரியாது. இந் நூலில் இவ்விஷயமும் வெகுவாக அறியக்

கிடக்கிறது. சிற்சில இடங்களில் கீதையின் சுலோகங்களை மேற்கோள்களாகக் கையாண்டு அவைகளை எத்தகைய புது முறையில் விளக்கி யிருக்கிறார்!

ஸ்ரீ. பிர்லாவினுடைய சொல் சுருக்கமும் அழுத்தமும் உள்ள நடைக்கு உதாரணங்கள் பலவிடங்களில் கிடைக்கின்றன :—

"ஒருவன் உண்மையில் சுத்த மனிதனு யின், தானே ஆயுதமும் அதை செலுத்து வோனுமாவான்."

"அழுக்குத் துணியின் அழுக்கை நாம் காக்க விரும்பின் தண்ணீர், சவுக்காரத்தினுல் என்ன பயன்? அங்கே தேவையானது சேர் தான்."

"ஆகாயவாணியைத் தகுதியுள்ளவனே கேட்கக்கூடும். சூரியனது நிழல் கண்ணுடியில் தெரியுமேயன்றி கல்லில் தெரியாது."

"அரசாங்கம் நமக்கு அமைதியை யளித்து, பாதுகாப்பை ஈந்து, பராதீனத் தையும் தந்தது. ஆகையால் பிரதிநிதிகளையும் ஏன் அதுவே நியமித்தலாகாது?"

"சூரியபகவானிடம் நீங்கள் மாரிகாலத் தில் தக்ஷிணுயனமாகவும், வேனிற்காலத்தில் உத்தராயனமாகவும், ஏன் போகிறீர்களென்று கேட்டால், ஏதாவது சரியான பதில் கிடைக் குமா? குளிரும் உஷ்ணமும் தக்ஷிணுயன உத்தராயனங்களினுல் உண்டாகின்றனவே

யன்றி குளிர், உஷ்ணத்தினால் தக்ஷிணாயனமும் உத்தராயனமும் உண்டாவதில்லை. காந்தியடிகளின் தர்க்கமும் இவ்வாறே. காரணங்கள் தீர்மானத்தினால் உண்டாகின்றனவே யன்றி அவைகளிலிருந்து தீர்மானம் பிறப்பதில்லை.''

கடைசி உதாரணம் எவ்வளவு அழகியதாகவும், எவ்வளவு புதுமையாகவும், பொருள் நிரம்பியதாயு மிருக்கிறது! இவ்வாறு நோக்குங்கால், காந்தியடிகளின் வாழ்க்கையின் அநேக காரியங்கள், எவ்வளவு தெளிவடைகின்றன!

காந்தியடிகளின் சுய சரிதையை நாம் யாவரும் படித்திருக்கிறோம். ஆனால் அதன் பல பகுதிகளை ஸ்ரீ. கனச்யாமதாஸ் எவ்வாறு விளக்கியிருக்கிறாரோ அவ்வாறு ஒருவரும் செய்ததில்லை எனலாம். காந்தியடிகளைக் கொல்வதற்காகத் தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையரின் கும்பல் வந்து பாய்கிறது. காந்தியடிகள் இதிலிருந்து அரிதில் தப்புகிறார். இச்சம்பவத்தை நினைத்ததும், ஸ்ரீ. பிர்லாவுக்கு காந்தியடிகள் ஸ்ரீ லக்ஷ்மிநாராயணர் கோயிலை திறந்தபொழுது டில்லியிற் கூடிய கூட்டம் நினைவுக்கு வருகிறது. அவர் இரண்டையும் அழகாகப் பொருத்திப் பார்த்து தம் கருத்தை நிலைநாட்டுகிறார்.

காந்தியடிகளின் உபவாஸங்கள், கடவுட் பற்று, சத்தியாக்கிரஹம் முதலிய பல விஷயங்

களை, அவரது வாழ்க்கையினின்றும் பல சந்தர்ப்பங்களைச் சுட்டிக் காட்டி ஆராய்ந்து, வெகு நன்றாக விளக்கியிருக்கிறார்.

அவருடைய ஆராய்ச்சித்திறன், உயரிய நோக்கம் இவற்றின் பயனாக அவரது விளக்கங்கள், சிற்சில இடங்களில் காந்தியடிகளின் விளக்கங்களை நினைவுறுத்துகின்றன. இந்நூல் மூன்று மாதங்களுக்கு முன் எழுதப்பட்டது. ஆனால் அச்சமயத்தில் 'அஹிம்சைப் படை,' 'அஹிம்சைப் படைத் தலைவன்' என்ற விஷயங்களைப் பற்றி எழுதியிருப்பது சில தினங்களுக்கு முன் 'ஹரிஜன்' பத்திரிகையில் காந்தியடிகள் எழுதியதுபோன்றே இருக்கிறது. "ஸமூகத்தின் ஒவ்வொரு மனிதனும் பூரண அஹிம்ஸாவாதியாவானென்று எதிர்பார்க்கப்படவில்லை. ஹிம்சை புரியும் படை பலத்தைக் கொண்டு ஸாம்ராஜ்யங்கள் அமைக்கும் பொழுதும் ஒவ்வொரு மனிதனும் யுத்த வித்தையில் கைதேர்ந்தவனாயிருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதில்லை. கோடிக் கணக்கான ஜனங்களுள்ள நாட்டைக் காக்க சில லக்ஷம் மனிதர்கள் போதுமென்று கருதப்படுகிறது. நூற்றில் ஒருவன் போர் வீரனானால் போதுமென்கிறார்கள். அப்போர் வீரர்களுள்ளும், தலைவர்களின் திறமையைப் பொறுத்தே எல்லாம் நடைபெறுகின்றன.

"இன்று இங்கிலாந்தில் படையை நடத்

துவதில் நிபுணர்களாக எவ்வளவு தலைவர்களிருப்பார்கள்? பத்து அல்லது இருபதின்மர் இருக்கலாம். எஞ்சிய லக்ஷக் கணக்கான வீரர்களிடம் எதிர்பார்க்கப்படுவது, அவர்களுக்குத் தங்களுடைய அதிகாரிகளின் கட்டளைப்படி இறப்பதற்கும் சக்தி யிருக்கவேண்டுமென்பது தானே. இதே உதாரணத்தை ஆதாரமாகக் கொள்வோமாயின் நாம் ஒரு அஹிம்ஸைப் படையையும் கற்பனை செய்து கொள்ள முடியும். இப்படையின் தலைவர்கள் பூரணமான ஆத்மசக்தி யுள்ளவர்களா யிருத்தல் வேண்டும். தொண்டர்கள் அவ்வளவு அறிவாளிகளா யில்லாதிருப்பினும் சிரத்தை யுள்ளவர்களாகவும், சத்தியம் அஹிம்ஸை இவற்றிற்காக இறப்பதற்கும் சக்தியுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதுபோதுமானது."

முழு நூலும் ஸ்ரீ. பிர்லாவினுடைய நுண்ணிய ஆராய்ச்சித் திறனுக்கு, நல்ல உதாரணமாகும். ஒரே ஒரு பகுதியில் அவர் போக வேண்டிய அளவு போகவில்லை யென்று தோன்றுகிறது. அஹிம்ஸையை ஆராயுமிடத்து அவர் ஒரு நித்திய சத்தியத்தை விளக்கியிருக்கிறார். 'பற்றற்று' விருப்பு வெறுப்பின்றி மக்களின் நன்மைக்காகப் புரியும் ஹிம்ஸையும் அஹிம்ஸையாகும். இந்நித்திய சத்தியம் கீதையில் உள்ளதே. ஆனால் ஸ்ரீ. பிர்லா இதி

விருந்து கண்ட முடிவை காந்தியடிகள் ஏற்க மாட்டாரென்பது என் கருத்து. ஸ்ரீ. பிர்லா "காந்தியடிகள், சிறிது நேரமாயினும் ஜீவன் முக்த நிலையிலிருந்து கொண்டு, கன்றின் விஷயத்திற் போல அஹிம்ஸையான ஹிம்ஸை செய்தால் சாதாரண மனிதர்களும் அவ்விதம் செய்ய முயலுவது, 'கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழி' போலாகும்!" என்கிருர்.

இதைப் பற்றி நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பசுங் கன்றைக் கொன்றது ஜீவன் முக்த நிலையிற் செய்த ஹிம்ஸைக்கு உதாரணமாகவே ஆகாது. சில நாட்களுக்கு முன்னர் சேவா கிராமத்தில் ஒரு வெறி பிடித்த நரி வந்து விட்டது. காந்தியடிகள் அதைக் கொல்ல அனுமதித்தார். அதைக் கொன்றவர்கள் பற்றற்ற ஜீவன் முக்தர்களல்ல. அச் செய்கை பயிர்த் தொழிலில் புழுப் பூச்சிகளை ஹிம்ஸிப்பது போல், அவசியமும் தடுக்க வியலாதது மான ஹிம்ஸை யாகும். ஹிம்ஸையிலும் பல வகை யுண்டு. கன்றைக் கொன்றது போல் வேறொன்றும் நிகழ்வதுண்டு. குதிரைப் பந்தயத்தில் குதிரையின் கால் முறிந்து போயினும் சரி, அல்லது சிகிச்சை செய்ய வியலாத வாறு காயமுண்டானுலும் சரி, குதிரைக்கு உயிர் தரிப்பது பெரிய கஷ்டமாய் விடுவதால், ஆங்கிலேயர்கள் அதைக் கொன்று விடுகிருர்

கள். அவர்கள் வெறுப்பின்றி, அன்புடன் கொன்றாலும், அவர்கள் ஜீவன் முக்தர்களல்ல. கீதையில் அனுமதிக்கப்பட்ட ஹிம்ஸை, தெய்வீகப் புருஷனே செய்யக்கூடும்—ராமனும், கிருஷ்ணனும் செய்யக் கூடும். ஆனால் காந்தியடிகளின் கருத்தில் ராமன், கிருஷ்ணன் என்ற சொற்கள் அங்கு கடவுளைக் குறிக்கின்றன. காந்தியடிகள் தன்னை ஜீவன்முக்தர் என்று மதிக்கவுமில்லை; வேறு எவரையும் பூர்ண ஜீவன்முக்தரென்று ஒப்பவுமில்லை. பூர்ண ஜீவன்முக்தர் கடவுளொருவரே.

"கொன்றிடின் மக்கள் குலத்தையே;
பாவம், பிணித்திடாதவனே; பாவியுமன்றே!"

என்ற கீதை வசனம் கடவுளைக் குறிக்குமென்பது காந்தியடிகளின் திடமான நம்பிக்கையாகும். ஆகையால் மனிதன் எவ்வளவு பெரியவனாயினும், எவ்வளவு தூயோனாயினும், கடவுளின் பதவியை எய்த முடியாததுமன்றி, மக்களின் மாபெரும் நன்மைக்கேயாயினும் ஹிம்ஸைபுரியும் உரிமை பெறான் என்று கூறுகிறார். இம்முடிவிலிருந்து சத்தியாக்கிரஹமும், உபவாஸமும் எழுந்தன.

இந்த ஒரு பகுதியைத் தவிர, எஞ்சிய நூல் முழுமையுமுள்ள ஆராய்ச்சி நுணுக்கமும், கருத்துக்களின் தூய்மையும் நான் இந்நூலை அச்சாகும்பொழுதே இருமுறை படிக்கக் காரணமாயிருந்தன; மீண்டும் எவ்வளவு

தடவை படித்தாலும், களைப்புறச் செய்யா. மற்றவர்களின் அனுபவமும் இவ்விதமே இருக்குமென்றும், என் விஷயத்திற்போலவே இந்நூலைப் படித்தல் அவர்களது மனவமைதிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் காரணமாகுமென்றும் எதிர்பார்க்கிறேன்.

சேவாக்கிராமம் }
8—9—40 }

மகாதேவ தேசாய்.

# ‘பாபு’

அல்லது

# நானறிந்த காந்தி

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | உதயம் | .... | 1 |
| 2. | அறிமுகம் | .... | 5 |
| 3. | வாழ்க்கையின் லக்ஷியம் | .... | 12 |
| 4. | அஹிம்ஸா தத்துவம் | .... | 20 |
| 5. | அஹிம்ஸாப் பிரயோகம் | .... | 46 |
| 6. | அக்னி பரீக்ஷை | .... | 60 |
| 7. | சத்திய ஆராதனை | .... | 63 |
| 8. | கடவுட் பற்று | .... | 71 |
| 9. | ஆகாயத்தில் பறப்பவரா? | .... | 94 |
| 10. | உபவாஸம் | .... | 99 |
| 11. | உபவாஸ ஆராய்ச்சி | .... | 127 |
| 12. | சத்தியாக்ரஹ ஆரம்பம் | .... | 141 |
| 13. | யுத்தமும் அஹிம்ஸையும் | .... | 152 |
| 14. | அவர் சிந்திப்பதெப்பொழுது? | .... | 181 |
| 15. | முடிவு முன், தர்க்கம் பின் | .... | 187 |
| 16. | ஸ்திதப் பிரக்ஞர் | .... | 197 |
| 17. | 'பாபூ' | .... | 205 |
| 18. | கணக்கும் கண்டிப்பும் | .... | 210 |
| 19. | 'தினசரியை' | .... | 214 |
| 20. | ஆண்டவன் அருள் வேண்டும் | .... | 222 |

# சித்திரங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகப்புப் படம் | |
| 2. | ஸ்ரீ. பிர்லாவும், காந்தியடிகளும் .... | 8 |
| 3. | ரயில்வண்டியில் காந்தியடிகள் .... | 88 |
| 4. | ஸ்ரீமதி கஸ்தூரி பாய் அம்மையார் .... | 148 |
| 5. | "பிக்ஷாரக் தேஹி" | 179 |


குறிப்பு :—

இந்த சித்திரங்கள், டில்லி ஸஸ்தா ஸாஹித்ய மண்டலின் உதவியால் கிடைத்தவை.

[ 1 ]

## உதயம்

**கா**ந்தியடிகள் பிறந்தது 1869 ஆம் வருஷத்தில். அவருக்கு எழுபத்தோராவது வயது பூர்த்தியாகிவிட்டது. அந்தமும், வரையறையுமற்ற காலப் பரப்பினுள் எழுபத்தோரு வருஷமென்றாலென்ன, எழாயிரத்து நூறு என்றால் தான் எம்மாத்திரம்! ஆழத்தை அளக்கமுடியாத சமுத்திரத்தில் எத்தனை நீர்த்துளிகள் இருக்கின்றன வென்பதை மதிப்பிடுவது ஸாத்யமாகலாம். ஆனால் முடிவிலாக் காலதேவனின் குக்ஷியில் அடங்கியுள்ள எழுபத்தோரு வருஷங்களை மதிப்பிடுதல் அஸாத்தியமானது. ஆயினும் இந்தியாவின் தற்கால சரித்திரத்தில் இந்த எழுபத்தோராண்டுகளின் பெருமை வேறெதற்கும் இருக்கமுடியாது.

இந்தச் சமயம் பாரத பூமியில் புதியதோர் மனக் கிளர்ச்சியின் உத்வேகத்தைக் காண்கிறோம்; ஒரு நவீன எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. புதியதோர் அனுபவ

வெள்ளத்தைக் கடந்துகொண்டிருக்கிறோம். தார்மிகப் புரட்சிகள் இங்கு எவ்வளவோ நடந்திருக்கின்றன. ஆனால் அரசியற் போர்வையில் தருமத்தின் ஆட்சி ஏற்படுவது என்பது இந்நாட்டிற்கு இதுதான் முதல் அனுபவமாகும். வருங்காலம் தான் இதன் முடிவு என்னகுமென்று கூறும்.

பார் முழுதும் போர்க்கருவிகளின் பேய் முழக்கத்தினல் பரிதவிக்க, பூத்துத் தழைத்திருந்த நந்தவனத்தை இமைப் பொழுதில் சுட்டுச் சுடுகாடாக்கும் நாசகாரி ஸாதனங்களைக்கண்டு பிடிக்கும் தீயவேலையில் விஞ்ஞான சாஸ்திரம் ஈடுபட்டிருக்கையில், தன் நாடு, தன் நாட்டன்பு என்ற பெயரால் ரத்த வெள்ளம் பெருக்குவது கௌரவமென்று கருதப்படுகையில், மிக மிகக் கொடிய செயல்கள் புரிவதன்மூலமாக மானிட தருமத்தை நிலை நாட்ட முடியுமென்ற பகற் கனவு காணப்படுகையில்—இத்தகைய காரிருளில், காந்தியடிகளின் வரவு காலைக் கதிரவனது இளம் கிரணத்தின் வரவை ஒக்கும்; இக்கிரணமே ஆண்டவனருளால் உயிரளிக்கும் பிரசண்ட ஒளியாக மாறி உலகில் மீண்டும் சாந்தி நிலவுமாறு செய்யக்கூடும். ஆனல் நான் ஆசை வெள்ளத்தில் மிதந்து சென்று கொண்டிருப்பவனுயிருக்கலாம்!

ஆயினும், காந்தியடிகளின் வரவு; இந்நாட்டில் பல்லாயிர மாண்டுகளாக மூழ்கியிருந்த மயக்கத்திற்குப் பிறகு ஒரு புதிய ஆசையை—ஒரு நவீன

உற்சாகத்தை—ஒரு புதிய மனக் கிளர்ச்சியை எழுப்பி, வாழ்விலேயே ஒரு புதிய முறையை உண்டாக்கியிருக்கிறதென்பது ஒரு கலப்பற்ற உண்மை.

எந்த மஹாபுருஷரையும் மற்றொருவரோடு ஒப்பிடுவதென்பது கடினமான முயற்சியாகும். காந்தியைப் போன்ற மகான்கள் யுகந்தோறும் பிறப்பதேது? எவ்வளவு ஆயிரமாண்டுகளில் எத்தனை காந்திகள் அவதரித்தனரென்று கணக்கெடுப்பதற்கு நம்மிடம் புராதன காலத்தைப் பற்றிய உண்மையான சரித்திரமோ இல்லை. ராமனும், கிருஷ்ணனும் மானிடர்களாக இருந்திருக்கலாம். ஆனால் கவிகள் அவர்களை மானிட வரம்பை மீறச்செய்து அவர்களுக்குத் தெய்வத் தன்மையை யளித்துவிட்டார்கள். கவி என்றாலும் மானிடன்தானே. ஆகையால், அவனால் அளிக்கப்பட்ட தெய்வத்தன்மையும் ஸம்பூர்ணமானதாயில்லை. ஸம்பூர்ணமான ரூபத்தை விவரிக்க வேண்டின் கவிஞனும், அவனது எழுதுகோலும், அவன் எடுத்தாளும் பாஷையும்,—எல்லாம் தெய்வீகம் பொருந்தியனவாயிருத்தல் வேண்டும். இருப்பினும், கவிஞனின் இச்செயல் காரணமாக ராம, கிருஷ்ணர்களை மானிட அளவுகோல் கொண்டு அளப்பது கஷ்டமாகிவிட்டது.

இதற்கெதிராக, கவிஞர்கள் மிக முயன்றும் புத்தருடைய சரித்திரத் தன்மையையும், மானிட வாழ்க்கையையும் அழிக்க முடியவில்லை. இதனால் உலக சரித்திரத்தில் புகழ்பெற்ற மஹா புருஷர்களில் புத்தர் மிக்க

உன்னத ஸ்தானம் பெற்றார். ஆனால் கலியுகத்தில் ஒரு புத்தர் தான் அவதரித்தார்; ஒரு காந்தி தான் பிறந்தார். புத்தர் தன் வாழ்நாளில் ஏற்றிய மணி விளக்கு அவர் மறைந்த பின்னர் ஆசியா முற்றிலும் தன் சுடரொளியைப் பரப்பிற்று. காந்தியடிகள் தம் ஆயுளில் அதைவிட வெப்பமும் ஒளியும் மிக்க தீ வளர்த்திருக்கிறார். இதன் ஒளி, உரிய காலத்தில் உலகம் முற்றிலும் பரவலாம்.

தம் ஆயுளில் காந்தியடிகள் பெற்ற புகழும், படைத்த பெருமையும், அடைந்த கீர்த்தியும், செல்வாக்கும் வேறெந்த சரித்திர கால மனிதனுக்கும் கிட்டியதில்லை. இப்படிப்பட்ட மனிதரைப் பற்றி ஒருவன் எவ்வளவுதான் எழுதக் கூடும்? எழுபத்தோராண்டு களின் தொடர்ந்து தொகுத்த ஜீவிய சரித்திரம் வெற்றிகரமாக எழுதமுடியுமாவென்று கூறமுடியாது. காந்தியடிகளை முற்று முணர்ந்தவர் யார்?

सम्यक् जानाति वै कृष्णः
किंचित् पार्थो धनुर्धरः ॥

"முற்று முணர்வான், மறையோன் முகிலோன்,
சற்றே யறிவான் வில்லன் பார்த்தன்."

என்று கீதையைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது போல் காந்தியடிகளை முற்று முணர்ந்தவர் அவர் ஒருவரே யாகும். மற்றவர்களில் ஸ்ரீ மகாதேவ தேசாய் ஒரு சிறிது அறிந்தவரெனலாம்.

[ 2 ]

## அறிமுகம்

**நா**ன் முதலில் காந்தி அடிகளைக் கண்டது 1914 ஆம் ஆண்டின் முடிவிலோ, அல்லது 1915-இன் தொடக்கத்திலோதான். குளிர்காலம். காந்தியடிகள் லண்டனிலிருந்து தம் தேசத்திற்குத் திரும்பியவர், கல்கத்தாவுக்கு வர ஏற்பாடுகள் செய்துகொண்டிருந் தார். கர்மவீரர் காந்தி கல்கத்தா வருகிறாரென்ற செய்தி கேட்டதும், தேச ஊழியர்களின் மனதில் ஒரு புத்துணர்ச்சி பொங்கி எழத் தொடங்கிற்று. அந்நாட் களின் பொது வாழ்வு ஒரு மாதிரியானது. பத்திரிகை களில் வியாஸங்கள் எழுதல், சொற்பொழிவாற்றல், தலைவர்களை வரவேற்றல், தானும் வரவேற்கப்படுவதற் குரிய ஆசையுடன் அடிகோலுதல்—ஏறக்குறைய இவைகளில் பொது வாழ்வு அடங்கியிருந்ததெனலாம்.

அப்பொழுதுதான் வாலிபப் பருவத்தில் அடி வைத்திருந்தேன்; இருபது ஆண்டு நிறைந்திருந்தது.

முன்னணித் தலைவர்களில் என் பெயரும் சேர்க்கப்பட வேண்டுமென்ற ஆவலுடன் சுற்றிக் கொண்டிருந்தேன். திருநாட்களில் தொண்டனாகி கூட்டங்களில் ஜனங்களுக் குதவுதல்; வெள்ளம், பஞ்சம் இவைகளினால் துன்புற்ற மக்களுக்கு உதவவேண்டி, சகாய ஸ்தலங்கள் அமைத்தல்; சந்தா வசூலித்தல், அளித்தல்; தலைவர்களை வரவேற்றல், அவர்களுடைய உபந்நியாஸங்களைக் கேட்டல்—இவைகள் அக்காலத்திய பொதுவாழ்வி லீடுபட்டிருந்த இளைஞர்களின் கடமைகளின் எல்லைகளாகும். அவர்களது கல்வி கேள்விகளும் இவ்வேலைகளுக்கிடையே தொடங்கி வந்தன. என் வரம்புகளும் இவைகளே. இவைகளுள் நான் பெருமிதம் கொண்டு உற்சாகத்துடன் திளைத்திருந்தேன்.

தலைவர்கள் இந்த வரம்புகளை மீறியவர்கள். அவர்களுக்கு யாதொரு விதியோ, கட்டோ, முறையோ கிடையாது. தட்டி யெழுப்பும் சொற்பொழிவாற்றல், சந்தா கேட்டல்,—இவைகள் அவர்களுடைய வேலை. வரவேற்புப் பெறுவது அவர்களது உரிமை. தலைவர்கள் சோம்பேறிகளென்பதோ, கடமையுணர்ச்சியற்றவர்களென்பதோ இதன் பொருளல்ல. விஷயம் என்னவென்றால் அவர்களிடம் இதைத்தவிர வேறு எத்தகைய காரியத்திட்டமும் இல்லை. திட்டத்தை அமைப்பதற்கு வேண்டிய கற்பனை சக்தியுமில்லை. மக்களும் அவர்களிடம் வேறெதையும் எதிர்பார்த்தாரில்லை. இருந்த

தலைவர்களோ சிலர். ஆகவே, அவர்களுக்கிருந்த கிராக்கி அதிகம். மக்கள் பக்தியுடன் வழிபட்டு வந்தனர்; தலைவர்கள் தயக்கமின்றி அதை ஏற்று வந்தனர்.

அக்காலத்திய தலைவர்களைக் கடாக்ஷித்து உருது கவிஞர் அக்பர் ஸாகேப் இவ்வாறு எழுதினர்:—

**कौम के ग़म में डिनर खाते हैं हुक्काम के साथ ।**
**रंज लीडर को बहुत है मगर आराम के साथ ॥**

"மக்களின் நோயை மறந்திடமாட்டார்
சர்க்கார் விருந்திற் சார்வர் சலியார்
தலைவர்தம் துக்கமோ சொல்லவு மரிதே
இலை குறை யவர்க்கு இகத்திலும் சுகமே."

அக்பர் கவி, குதிரையையும் கழுதையையும் ஒன்றாக எண்ண முயற்சித்திருப்பது உண்மையாயினும், அவர் முற்றிலும் மிகைப்படுத்திக் கூறியிருப்பதாகச் சொல்ல முடியாது.

சில தலைவர்கள் விஷயத்தில் அவர் கூற்று நியாயமற்ற தென்றாலும், பலர் விஷயத்தில் அது உண்மையேயாகும். காந்தீயம் பிறந்தபிறகு அளவுகோலே மாறிவிட்டது. மக்கள் தலைவர்களை தூர திருஷ்டி, விசாலதிருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டு பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு பக்கத்தில் நடத்தையைப்பற்றிய விசாரணை அதிகரித்துவிட்டதென்றால் மற்றொரு பக்கத்தில் அக்கிரமம் மிகுந்துவிட்டது. சுயநலம் வளர, தியாகமும் தழைத்தது.

அடங்கியிருந்த கடலை காந்தீயமென்ற மந்தர மலை கலக்கிவிட்டது. அதிலிருந்து அமுதமும் கிடைத்தது; ஆலமும் புகைத்தெழுந்தது. தேவாஸுர யுத்தம் தொடங்கிற்று. காந்தியடிகள் எவ்வளவோ முறை சிவனைப்போல் கைக்கும் விஷபானம் செய்து நீலகண்டரானார். போர் இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. கடைசியில் சுரர்களுக்கு வெற்றி நிச்சயமென்ற ஆசையுடன் மக்கள் காத்திருக்கின்றனர். ஆனால் நான் குறிப்பிடும் காலத்தில் இவைகளொன்றும் ஏற்படவில்லை. அக்காலத்தில் கடலில் ஜலம் அசைவற்றிருந்தது. காலைப்பொழுதின் செவ்வொளி வானத்தில் படர்ந்திருந்தது. இன்னும் ஞாயிறு வெளிப்படவில்லை. புனர்ஜன்மத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் அதைப் புதிய பிறப்பிற்கு முந்திய மரண மௌனமென்றோ, அல்லது பிரஸவவேதனையை யொட்டிய மயக்கத்திலுதித்த ஓய்வென்றோ கூறமுடியவில்லை. தலைவர்களும் தங்கள் வீண் ஆடம்பரத்தைக் குறித்து வருந்தினரில்லை; மக்களும் அதை அவ்வளவு தீயதாகக் கருதவில்லை.

இப்படிப்பட்ட ஸமயத்தில் காந்தியடிகள் ஆப்பிரிக்காவிலிருந்து லண்டன் சென்று, பிறகு தன் நாட்டிற்குத் திரும்பினார். இங்கு வந்ததும் நாடு முழுவதும் சுற்ற ஆரம்பித்தார். இதையொட்டிக் கல்கத்தாவிலும் அவரை வரவேற்பதற்கு ஏற்பாடுகள் நடந்தன.

காந்தியடிகளை நான் முதலில் பார்த்ததுமே என்



ஸ்ரீ [illegible]ம். காந்தியடிகளும்

னுள் மிகுந்த குதூகலம் உண்டாகிவிட்டது. ஒரு சாதாரண வெள்ளைச் சட்டை, இடையில் வஸ்திரம் தலையில் கத்தியவாடிகள் அணியும் தலைப்பாகை, இவை தான் அவருடைய உடைகள். பாதமோ பாதரக்ஷை யற்றது. நாங்கள் மிகுந்த ஏற்பாடுகளுடன் அவரை வரவேற்றோம். அவருடைய வண்டியைக் கைகொண்டு இழுத்து ஊர்வலம் வந்தோம். ஆனால் வரவேற்கப் படுவதிலும் அவர் வழி தனியாயிருந்தது. நான் அவர் வண்டியின் பின் பக்கத்தில் காஸாரியினிடத்தில் நின்றுகொண்டு "கர்ம வீரன் காந்திக்கு ஜே!" என்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருந்தேன். காந்தியடிகளின் அருகில் அமர்ந்திருந்த அவரது தோழர் * उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान्निबोधत ।

"கண் விழித் தெழுமின்,
விண் பொருள் பெறுமின்"

என்று கூவினால் காந்தியடிகள் மகிழ்வாரென்று என்னிடம் கூறினார். நானும் என் பல்லவியை மாற்றிக் கொண்டேன்.

ஆனால் காந்தியடிகளுக்கு இவைகளொன்றிலும் ருசியிருந்ததாகத் தெரியவில்லை. அவருடைய உபந்நியாஸமும் ரஸமற்றது போலிருந்தது. ஆவேசத்தைக் காணோம். இயற்கைக்கு மாறுபட்ட ஒரு சேஷ்டையுமில்லை. தான் குருபீடத்திலிருந்து உபதேசிப்பது போன்ற பாவனையுமில்லை. குரலிலும் ஏற்றம், இறக்கம்

* கடோபனிஷத் 3-14.

ஒன்றுமில்லை. ஒரே கம்பி போன்ற குரல். அமர்ந்த நடை. ஆனால் இந்த வெள்ளைப் பேச்சினுள் கீழே அடங்கிய ஒளி ஒன்று இருந்தது. அது கேட்போரின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துகொண்டிருந்தது.

அவர் கல்கத்தாவில் மொத்தம் ஐந்து பிரஸங்கங்கள் செய்திருக்கலாமென்று நினைக்கிறேன். பெரும்பாலும் ஹிந்தியிலேயே பேசினார். எல்லா உபந்நியாஸங்களிலும் அவர் கோக்கலேயை வானளாவப் புகழ்ந்தார். அவரைத் தமது ராஜீய ஆசிரியனுகக் குறிப்பிட்டதுடன் அவர் தம்மை ஒரு வருஷ காலம் நாட்டைச் சுற்றிப் பார்த்து, அனுபவமடைந்த பின்னர், பொது வாழ்வில் ஈடுபடும்படி கட்டளையிட்டிருப்பதாகவும், ஆகையால் தமக்குப் போதுமான அனுபவம் உண்டாகும் வரையில், எவ்விஷயத்தைக் குறித்தும் உறுதியான அபிப்பிராயம் கொள்ள விரும்பவில்லையென்றும் கூறினார். யுவர்களுக்கு கோகலேயின் வழி பிடிக்கவில்லை; ஏனெனில் அவர் அறிவுக்குகந்த விஷயங்களைப் போதிப்பார். ஆவேச மூட்டும் பேச்சையே அவரறியார். இது அக்காலத்திய வாலிபர்களுக்கு முற்றிலும் பிடித்தமில்லை. லோகமான்யர் மக்களின் வழிபடு தெய்வமாகவும், கோக்கலே கேலிக்கு இலக்காகவுமிருந்தார். ஆகையால் காந்தியடிகள் கோகலேயைத் தம் ராஜீய குருவென மீண்டும் மீண்டும் உரைத்தது வாலிபர்களாகிய எங்களுக்கு அருவருப்பைத் தந்தது.

ஆயினும், காந்தியடிகள் எழுந்து அமரும் முறை, அவருடைய எளிய உணவு, ஆடம்பரமற்ற வாழ்க்கை, பணிவு, சொற்சுருக்கம்,—இவைகள் எங்களை ஒரு மாயச் சுழலில் ஆழ்த்திவிட்டன. புதிய தலைவரை நாங்கள் ஆழம் காணக்கூடவில்லை.

அந்நாட்களில் நான் ஒரு சமயம் காந்தியடிகளிடம் "ஏதாவது பொதுஜனப் பிரச்சினையைக் குறித்துத் தங்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தலாமா?" என்று கேட்டேன். அவர் "நடத்தலாம்" எனப் பதிலளித்தார். ஒரு தலைவர் நாம் எழுதும் கடிதத்திற்கு அதுவும் என்னையொத்த முன்பின்னறியாத ஸாதாரண வாலிபனுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் பதிலளிக்க முடியுமென்று நான் நம்பவில்லை. ஆனால் சில தினங்களுக்குப் பிறகு இதைப் பரீக்ஷித்துவிட்டேன். என் கடிதத்திற்கும் பதிலாக உடனே ஒரு கார்டு வந்தது. இதில் காசுச் சுருக்கமிருந்தது மாத்திரமல்ல, சொற்சுருக்கமும் வேண்டியதிருந்தது!

காந்தியடிகள் எத்தனை வாலிபர்களின் மனதில் தம்மைப் பதிய வைத்திருக்கிறாரோ, எவ்வளவு பேர்களைத் தம் வலையில் சிக்கவைத்திருக்கிறாரோ, எவ்வளவு பேர்களுக்கு அவர் விசித்திரமானவராகத் தென்பட்டிருக்கிறாரோ தெரியாது! ஆனால் 1915-ல் அவர் மக்கள் கண்முன் ஒரு 'புதிரா'யிருந்ததுபோலவே இன்றும் இருக்கிறார்.

---

[ 3 ]

## வாழ்க்கையின் லக்ஷியம்

1932 ஆம் வருஷத்திய சத்தியாக்கிரஹம் முடிவு பெற்ற பிறகு—1934 ஆம் வருஷமென்று நினைக்கிறேன்—நான் ஒரு முறை வில்லிங்டன் பிரபுவிடம் "நீங்கள் இப்படி காந்தி யடிகளிடமிருந்து ஓடவேண்டாம். அவரைச் சந்தியுங்கள்; அவரை அறிந்துகொள்ள முயலுங்கள். இதில் தான் இந்தியா, இங்கிலாந்து இரண்டிற்கும் நன்மை இருக்கிறது" என்று வற்புறுத்திக் கூறினேன். ஆனால் ராஜப்பிரதிநிதியிடம் என் வார்த்தை பயன் பெறவில்லை. காந்தியடிகள் தன்னைச் சிக்கவைத்து விடுவாரோவென்று அவர் பயந்தார். காந்தியடிகளை நம்பக்கூடாதென்பது அவர் கொள்கை. இந்தியா மந்திரியும் காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகும்படி இராஜப் பிரதிநிதியை வற்புறுத்தினாரென்று எனக்குத் தெரியும். ஆனால் எல்லா முயற்சிகளும் வீணாயின. இர்வின் பிரபுவின் காலத்தோடு முறிந்து போன தொடர்பும், அளவளாவுதலும்

வின்லித்கோ பிரபு வந்த பிறகு தான் மீண்டும் இணைக்கப்பெற்றது.

எந்த காந்தியடிகளை நான் பயமின்றி நம்பலாமென்று நினைக்கிறேனோ அவரிடத்தில் வில்லிங்டன் பிரபுவுக்கு நம்பிக்கையில்லை! "அவர் மகா தந்திரசாலி, தேனொழுகப் பேசக்கூடியவர். இருபொருட் சொற்களைக் கையாண்டு என்னைத் தம் சொற்பிணையில் முற்றிலும் பிணித்த பின்புதான் நான் கட்டுண்ட செய்தியை நான் உணரும்படி செய்பவர். ஆகவே, என் மட்டில் பயமற்ற மார்க்கம் ஒன்றுண்டென்றால் அது அவரை சந்தியாமல் விலகியிருத்தல் தான்" என்று அவர் சொன்னார். காந்தியடிகளைப் பற்றி ஒருவர் இத்தகைய கருத்துக்களும் கொண்டிருக்க முடியுமாவென்பது எனக்கு ஒரு ஆச்சரியமே. ஆனால் வில்லிங்டன் பிரபு ஒருவருக்கு மட்டுமல்ல, இன்னும் பலருக்கும் இத்தகைய பயமிருக்கிறதென்று எனக்குப் பின்னர் தெரியவந்தது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற நூலாசிரியர் ஜான் கந்தர் (John Gunther) என்பார் காந்தியடிகளைப் பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார் :—

"மஹாத்மா காந்தியிடத்தில், ஏசுநாதர், சாணக்கியர், 'பாபூ'* இம்மூவரும் அற்புதமாகக் கலந்திருக்

* 'பாபூ' (बापू) என்றால் தகப்பனார் என்று பொருள். ஆசிரமவாசிகளும் காந்தியடிகளிடம் நெருங்கிப் பழகுவோரும், அவரை 'பாபூ' என்று கூப்பிடுவது வழக்கம்.

கிருர்கள். புத்தருக்குப் பிறகு அவர் தலை சிறந்த மஹான். அவரைக் காட்டிலும் அதிகமாக நம்மைத் திகைப்பிலாழ்த்தும் மனிதரை நான் கற்பனை செய்ய முடியவில்லை. அவர் எவ்விதத்திலும் நம் பிடியில் சிக்க மாட்டார். நான் அவரை அவமதிக்கும் நோக்கத்தில் இவ்வாறு கூறவில்லை. ஒரே மனிதர் மஹாத்மாவாக வும், ராஜநீதி நிபுணராகவும், அவதார புருஷராகவும், ஜகமறிந்த சமய தந்திரியாகவும் இருப்பது மானிட விதிகளை மீறியதாகும், அல்லது அவைகளுக்கு விலக்கா கும். அவரிடமுள்ள முரண்பாடுகளைக் கொஞ்சம் எண் ணிப் பாருங்கள். ஒரு பக்கத்தில் அவர் அஹிம்சை யிலும், ஒத்துழையாமையிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிருர். மறுபக்கத்தில் இங்கிலாந்திற்கு (சென்ற) மஹா யுத்தத்தில் உதவி செய்திருக்கிருர். அவர் நியாயத்திற்காகச் சிறையில் உண்ணுவிரதங்களி ருந்தார். அந்த உண்ணுவிரதங்களே அவர் சிறையிலி ருந்து விடுதலை பெற உதவின! ஆனுல் அவருக்கு தாம் விடுதலைபெறவேண்டுமென்ற ஆசை இல்லை. முக்கிய மற்ற காரியங்களில் அவர் அடிக்கடி மாறுபாடுகள் செய்தாலும், அடிப்படையான கொள்கைகளிலிருந்து அவர் சிறிதும் வழுவாரென்ற உண்மையை நீங் கள் உணரும் வரையில் அவருடைய முரண்பாடுகள் உங்களுக்கு மிகுந்த அருவருப்பை யுண்டாக்கும். இங் கிலாந்துடன் அவர் ஒத்துழையாமையை மேற்கொண் டிருப்பினும் இன்று அவரைவிடச் சிறந்த நண்பர்

இங்கிலாந்துக்கு வேறொருவரில்லை. நவீன விஞ்ஞானத்தினிடம் அவருக்கு வெறுப்பு. ஆனால் அவர் அனல் பதனியை (thermometer) உபயோகிக்கிறார்; மூக்குக் கண்ணாடி அணிகிறார். ஹிந்து முஹம்மதிய ஒற்றுமையை அவர் கோருகிறார்; ஆனால் அவருடைய மகன் சிறிதுகாலம் தன் மதத்தைவிட்டு முஹம்மதியனான பொழுது துயரப்பட்டார். அவர் காங்கிரஸின் உயிர், அதன் முதுகெலும்பு, அதன் கண்கள், அதன் கை, கால்—எல்லாம் அவரே; ஆனால் காங்கிரஸின் நான்கணச் சந்தா செலுத்தும் அங்கத்தினர்கூட இல்லை. ஒவ்வொரு பொருளையும் அவர் தார்மிக திருஷ்டியால் பார்க்கிறார்; ஆனால் அவரது தருமம் என்னவென்று விவரிப்பது கடினம். இதிலும் அதிக மாயா ஜால வித்தை வேறு என்ன இருக்கமுடியும்? ஆயினும் உண்மை என்ன வெனில், காந்தியடிகள் ஒரு மகான்; அவரது வாழ்க்கை சுத்த சௌரியத்தின் பிம்பமாகும்."

காந்தியடிகள் முன்னுக்குப் பின் முரண்பட்ட குணங்களின் கதம்பம் என்பதில் சந்தேகமில்லை. **वज्रादपि कठोराणि मृदूनि कुसुमादपि*** அவர் "வைரத்திலும் அதிக வலிவும், மலரிலும் அதிக மென்மையும்" உள்ளவர். கபடமின்மையும், உறுதியும் அவரிடம் அதிகம் உண்டு. மிகுந்த செட்டும், பிரமிக்கச் செய்யும்

* பவபூதி, உத்தரராம சரிதம் II-7.

தாராள குணமும் கொண்டவர். மற்றவர்பால் அவர் கொள்ளும் நம்பிக்கைக்கோர் எல்லையில்லை. ஆனால் சில சங்கடமான சமயங்களில் அவர் அவநம்பிக்கை காட்டுவதையும் நான் கண்டிருக்கிறேன். காந்தியடிகள் ஓர் அழகில்லாத மனிதர். ஆனால் அவரது உடல், விழிகள், மேலும் ஒவ்வோர் அவயவமும் தெய்வீக ஒளியும், அழகும் வீசிக் கொண்டிருக்கின்றன. அவரது கலகல வென்ற சிரிப்பு எவ்வளவு மனிதர்களைத் தான் மயக்கியிருக்கிறதோ தெரியாது. அவர் பேசும் முறை ஸாதாரணமானது. ஆனால் அதில் உள்ள மோஹன சக்தியைப் பருகிப் பருகி மெய் மறந்தோர் எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள். காந்தியடிகளைச் சொற்களால் சித்திரித்தல் அஸாத்தியமான காரியம். காந்தியடிகளை மஹாத்மா வாக்கிய வஸ்து எதுவென்று ஒருவர் வினவினால், அதற்குச் சமாதானம் சொல்லும் நோக்கத்துடன் நாம் விஸ்தாரமாக வர்ணனை செய்து முடித்த பிறகும், நமது முயற்சி வெற்றி பெறாது. முன்னர் கூறியிருக்கிறபடி காந்தியடிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதும் இணைந்ததுமான எவ்வளவோ தத்துவங்கள் சேர்ந்து உருவெடுத்திருப்பதால் அவைகளை முற்றிலும் விவரிப்பது கஷ்டம். சில வஸ்துக்களைக் குறிப்பிட்டு, இவைகளின் சக்தி ஒன்று சேர்ந்து காந்தியடிகளைப் பெரியவராக்கி யிருக்கிறதென்று கூறுவது போதுமானது. காந்தியடிகளைப்பற்றிய நூல்களின் மூலமாக அவரை அறிவது முடியாத

காரியம். அவர் அருகிலேயே வசித்தாலும் முற்றிலும் உணர முடியாது.

காந்தியடிகளின் வாழ்க்கை ஒரு பெருத்த தெய்வீகப் பவனி போன்றது. அது அவருக்கு அறிவுணர்ச்சி ஏற்பட்டதும் நகர ஆரம்பித்து இப்பொழுதும் மிகுந்த வேகத்துடன் போய்க்கொண்டிருக்கிறது. இனியும் போகும், இவ்வாறு முன்னேறிக்கொண்டேயிருக்கும். இப்பவனியில் எத்தனை எத்தனை காக்ஷிகள்! எத்தனை எத்தனை பகுதிகள்! ஆனால் இந்தக் காக்ஷிகளுக்கும் அங்கங்களுக்கும் குறிக்கோள் ஒன்றுதான். ஒரே திசையில் ஊக்கத்துடன் இப்பவனி சென்ற வண்ணமிருக்கிறது. ஒவ்வொரு கணமும் இந்தப் பவனிக்குத் தன் லக்ஷ்யத்திலேயே கண். ஒவ்வொரு கணமும் கடினமான முயற்சி நடந்து கொண்டே யிருக்கிறது. ஒவ்வொரு கணமும் அது தன் லக்ஷ்யத்தை யணுகிக் கொண்டே யிருக்கிறது.

ஒருவன் காந்தியடிகளை வெறும் 'பாபூ'வின் உருவில் பார்க்கிறான். வேறொருவன் மஹாத்மாவாக மதிக்கிறான். இன்னொருவன் அரசியல் தலைவராகக் கருதுகிறான். மற்றொருவன் ராஜத்துரோகி என்று எண்ணுகிறான்.

காந்தியடிகள் சத்தியத்தை யடையத் தவம் கிடக்கிறார். அஹிம்சையை அனுஷ்டிக்கிறார். பிரும்மசரியத்தை சாதகம் செய்கிறார். பகவானைப் பஜித்து பக்தி புரிகிறார். ஹரிஜனங்களின் நன்மைக்காக உழைத்து

வருகிறார். தரித்திர நாராயணனைப் பூஜிக்கிறார். சுய ராஜ்யத்திற்காகப் போர் தொடுத்திருக்கிறார். கதர் இயக்கத்தைக் கண்டிருக்கிறார். ஹிந்து—முஹம்மதிய ஒற்றுமைக்காக ஓய்வின்றி மதிப்பிடற்கரிய முயற்சிகள் செய்துவருகிறார். இயற்கை வைத்திய முறையை ஆராய்ந்திருக்கிறார். கோ ஸம்ரக்ஷணத்திற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார். ஆரோக்கியம், ஆத்மானுபூதி இவ்விரண்டிற்கும் உகந்த வகையில் உணவு ஆராய்ச்சி நடத்திவருகிறார். இவைகளெல்லாம் காந்தியடிகளின் பல பகுதிகள். இவைகளின் சங்கமம் தான் காந்தி.

"என் வாழ்க்கை என்பது என்ன?—இது சத்தியத்தின் ஒரு பிரயோகசாலை. என் வாழ்க்கை முழுதிலும் ஒரே ஒரு பிரயத்தனம் நடந்து கொண்டிருக்கிறது. அது மோக்ஷ மடைதலாகும், கடவுளைக் கண்ணால் காணுதல். நான் உறங்கும் பொழுதும், விழித்திருக்கும்பொழுதும், எழுந்திருக்கையிலும், அமருகையிலும், உண்ணுகையிலும், அருந்துகையிலும் என் முன்னுள்ள குறிக்கோள் ஒன்றே. அதற்காகவே நான் உயிர் வாழ்கிறேன். எனது உபந்நியாஸங்களும் சரி, வியாஸங்களும் சரி, எனது எல்லா அரசியல் முயற்சிகளும் சரி, அதே நோக்கத்தைக் கொண்டு இயங்குகின்றன. தவறுகளே செய்வதில்லை என்று நான் வீரம் பேசவில்லை. நான் செய்வது தான் சரியென்று கூறவுமில்லை. ஆனால் எந்த சமயத்தில் எதை நான் சரி

யென்று உணர்ந்தேனோ அதை, அதே சமயத்தில் செய்தேன் என்று நான் உரிமையுடன் கூறுகிறேன். எந்த சமயத்தில் எனக்கு எது "கருமம்" என்று தோன்றிற்றோ அதிலிருந்து நான் ஒருபொழுதும் நழுவினதில்லை. சேவை புரிதலே நமது கருமம் என்றும், சேவையிலேயே நமக்கு ஈசுவர தரிசனம் ஏற்படு மென்றும் நான் முற்றிலும் நம்புகிறேன்."

காந்தியடிகளின் வாழ்க்கையாவது என்ன என்ற கேள்விக்கு மேலே உள்ள அவரது வாக்கில் தக்க பதில் இருக்கிறது. இவ்வசனங்கள் அருள் வாக்குகளாகும். ஆண்டவனின் அருளொளியில் வாழும் மனிதன் தான் இவ்வசனங்களை அருளியிருக்கக்கூடும். ஆனால்—

"न त्वहं कामये राज्यं न स्वर्गं नापुनर्भवम् ।
कामये दुःखतप्तानां प्राणिनामार्तिनाशनम् ॥"

"அரசொடு விண்ணும் வேண்டேன் அரியதாம்
வீடு வேண்டேன்,
பரவுறும் மாந்தர் நோய்கள் பாரினில்
போக்குவேன் யான்.

இவைகளும் அருளில் குறைந்த வாக்குகளா?

[ 4 ]

## அஹிம்ஸா தத்துவம்

நான் ஒருமுறை காந்தியடிகளிடம் "தாங்கள் தங்களுடைய எந்த வேலையைக் குறிப்பிட்டு 'இது என் வேலைகளெல்லாவற்றிற்கும் சிகரம் போன்றது' என்று கூறுவீர்கள்?" ஆவலுடன் என்று வினவினேன்.

காந்தியடிகளால் இதற்கு உடனே பதில் கூற முடியவில்லை. ஒரிமைப் பொழுது தயங்கினார். ஏனெனில், உடனே விடைதர முடியாதிருந்தது. கடலை விளித்து, எந்த நீர் அதை சமுத்திர மாக்கிற்றென்றால் அது என்ன பதில் தரும்? காந்தியடிகள், "எல்லாவற்றிலும் தலை சிறந்த வேலைகளைக் கூறவேண்டின், கதரும் ஹரிஜன வேலையுமேயாகும்" என்றார். எனக்கு இந்த விடை அவ்வளவு திருப்தியளிக்கவில்லை. ஆகையால் என்னுடைய கேள்வியை இவ்வாறு மாற்றிச் சமர்ப்பித்தேன் :—"ஆனால் அஹிம்ஸையோ? தாங்கள் அளித்தவைக ளெல்லாவற்றிலும் சிறந்தது அஹிம்ஸை

அல்லவா?" இதற்குக் காந்தியடிகள், "ஆம், சரிதான், ஆனால் இது எனது வேலை ஒவ்வொன்றிலும் கலந்து நிற்கிறது. பொதுவான அஹிம்ஸையினின்றும் தனிப் பட்ட வேலைகளைப் பிரிப்பதென்றால், கதரும், ஹரிஜனத் தொண்டும் எனது தலை சிறந்த வேலைகளென்று கூறு வேன். அஹிம்ஸை மாலையின் மணிகளினூடே செல் லும் சூத்திரம் போன்றது. அது எனது வேலைக ளெல்லாவற்றிலும் கலந்து நிற்பது" என்றார்.

ஹரிஜன வேலை மிகப் பெருமை வாய்ந்த தென் பதில் சந்தேகமில்லை. இவருக்கு எப்பொழுது இதில் ஆசை ஏற்பட்டதென்று ஒருவரும் கூறமுடியாது. ஆனால் பன்னிரண்டாம் பிராயத்திலேயே இவர் இவ் விஷயத்தைக் குறித்து ஆராயத் தொடங்கிவிட்டார் போலும். இவர் வீட்டுக் கொல்லை கூட்டும் தோட்டி யின் பெயர் "ஊகா." அவன் 'கக்கூஸ்' சுத்தம் செய்து வருவது வழக்கம். இவரது தாய் "அவனைத் தொடா தே" என்று கூறினர். ஆனால் காந்தியடிகளுக்கு இது தவறென்று தோன்றிற்று. தீண்டாமை அதருமமாகு மென்ற இவரது நம்பிக்கை பின்னர் உறுதியடையத் தொடங்கிற்று. பிள்ளைப்பிராயத்திய இவரது கருத்துக் களிலிருந்தே, தீண்டாமை யென்பது ஹிந்து மதத்தில் ஒருகளங்கம் என்ற எண்ணங்கொண்டிருந்தாரென்பது வெளிப்படுகிறது. ஹிந்து மதத்தில் இவருக்குப் பூர்ண மான சிரத்தையுண்டாகு முன்பே தீண்டாமையினல் இவருக்கு மிகுந்த வேதனையுண்டாயிருந்தது. இந்த

ஸம்ஸ்காரங்கள் காரணமாக, இன்று நாற்பது வருஷங்களுக்கு முன்பு, ராஜகோட்டில் பிளேக் நோய் பரவ, இவர் ஜன சேவை புரியத் தொடங்கியவுடன், தீண்டாதார் சேரியை முதலிற் சென்று பார்வையிட்டார். அக்காலத்தில் இவருடைய தோழர்களுக்கு இக்காரியம் விசித்திரமாயிருந்தது. ஆனால் ஹரிஜன சேவையின் விதை அப்பொழுதே முளைத்துவிட்டது போலும்! அந்த முளை பின்னர் நாட்களாக ஆகத் தழைத்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த சேவா விருக்ஷத்தின் மகிமை ஹரிஜன உபவாஸ சமயத்தில் பிரத்தியக்ஷமாகத் தெரிந்தது. ஹரிஜன உபவாஸம் என்பது ஹிந்து சமூகத்தைச் சிதறுண்டு போகாமற் காப்பதற்கெனச் செய்யப்பட்டதோர் உறுதிமிக்க முயற்சியாகும். காந்தியடிகளுக்கு அதில் பூர்ணமான வெற்றியும் கிட்டிற்று.

ஐந்து கோடி ஹரிஜன மக்களை ஹிந்து சமூகத்திலிருந்து பிரித்து விடுவதற்கென ஒரு கொடிய சூழ்ச்சி செய்யப்பட்டது. இச்சூழ்ச்சியில் பெரிய பெரிய மனிதர்கள் சேர்ந்திருந்தனரென்று ஒரு சிலருக்கே தெரியும். காந்தியடிகளும் இதை அறிந்திருந்தார். இரண்டாவது வட்ட மேஜை மஹாநாட்டில் உபந்நியாஸத்திற் கிடையில் ஹரிஜனங்களை ரக்ஷிப்பதற்காகத் தம் முயிரையும் அர்ப்பணம் செய்வேனென்று சொல்லியிருந்தார். இந்த நெஞ்சை அள்ளும் அறைகூவலுக்கு அச்சமயத்தில் ஒருவரும் ஆழ்ந்த கருத்துண்டென்று

கருதவில்லை. ஆனால் காந்தியடிகளோ அந்தச் சமயத்தி லேயே தீர்மானம் செய்து முடித்துவிட்டார். ஆகை யால் பிரதம மந்திரி தன் ஹரிஜனத் தீர்ப்பை வெளி யிட்டதும், காந்தியடிகள் ஹரிஜன ரக்ஷைக்காக உண் மையில் தம் முயிரைப் பணயம் வைத்துவிட்டார். இவ் விதமாக உயிர் போகும் வரையில் உண்ணாவிரதமேற்று ஹிந்து சமூகம், ஹரிஜனங்கள் இரண்டையும் காப் பாற்றினர். அஹிம்ஸை ஆயுதத்தைக் கையாண்ட இம்முறை மிகவும் வெற்றிகரமாயிருந்தது. இதில் அவருடைய ராஜீய தந்திரம் ஒன்றுமில்லை. ஆனால் இதனால் ஏற்படும் ராஜீயப் பயன்களை அவர் அறியாத வருமல்ல. இருப்பினும் அவரது லக்ஷியம் தார்மிக மானது.

"ஹரிஜனங்களை நாம் மிகவும் துன்புறுத்தியிருக் கிறோம். நமது பாபங்களுக்குப் பரிகாரம் செய்தால் தான் நாம் அவைகளிலிருந்து விடுபடமுடியும்." இச் சொற்களின் கருத்தில் அறம், பொருள் இரண்டும் அடங்கியிருக்கின்றன. ஆனால் அறம் முக்கியமானது, பொருளோ அதற்கடுத்தது. இதனால் பரந்த பயனேற் பட்டது. ஹிந்து ஸமுதாயம் சிதைவுறாமல் தப்பிற்று; சூழ்ச்சி தோற்றது. இச் சூழ்ச்சியைப் பற்றி அறியாத வர் ஹரிஜன வேலையின் பெருமையை அனுமானிப்பது கடினம். காந்தியடிகள் கதருக்கும், ஹரிஜனக் காரி யத்திற்கும் தகுந்த ஸ்தானத்தையே தந்தார். இதைப் புரிந்து கொள்ளுதல் இன்று சிறிது கடினமா

யிருக்கலாம். ஆனால் பிறகு ஒரு காலத்தில் இதுவும் பெறும்.

"ஆனால் அஹிம்ஸையோ?—தாங்கள் அளித்த வைகளெல்லாவற்றிலும் தலை சிறந்தது அஹிம்ஸை யல்லவா?" "ஆம், சரிதான். ஆனால் எனது வேலை ஒவ்வொன்றிலும் இது கலந்து நிற்கிறது. அஹிம்ஸை எனது மாலையின் மணிகளூடே செல்லும் சூத்திரம்." இந்த வினா விடையை என்னென்பது? இது காந்தி யடிகளின் வாழ்க்கையின் சூத்திர ரூபமான வர்ணனை யாகும். சத்தியம் என்றாலும், அஹிம்ஸை யென்றா லும் காந்தியடிகளுக்கு ஏறக்குறைய ஒரே பொருளைக் குறிக்கும் இரு சொற்களே. இதேபோல சத்தியம், ஈச்வரன் இரண்டும் அவருக்கு ஒரு பொருளையே குறிப்பிடுகின்றன. முன்னர் அவர் கடவுளைச் சத்திய மென்று கூறிவந்தார். இப்பொழுது சத்தியத்தையே கடவுளென்று அழைக்கிறார். அஹிம்ஸையே சத்திய மானால், சத்தியமே அஹிம்ஸையாகும். ஈச்வரனே சத்தியமானால், சத்தியம் ஈச்வரனாகும். அப்படியா யின் ஈச்வரனே அஹிம்ஸை, அஹிம்ஸையே ஈச்வரன் என்று கூறலாம். சத்தியம், அஹிம்ஸை, ஈச்வரன் இவை மூன்றையும் முற்று மடைதல் மானிட வாழ்வில் பெரும்பாலும் சாத்தியமில்லாதிருப்பதால் காந்தியடி கள் இம்மூன்றையும் ஒரே சிங்காதனத்தில் அமர்த்தி மூன்றையும் ஒருங்கே வழிபடுகிறார்.

உடலின் செயல்க ளெல்லாவற்றிற்கும் பிராண்

யாயு உயிரளிப்பது போன்று காந்தியடிகளின் அஹிம்ஸை அவருடைய காரியங்களெல்லாவற்றிற்கும் பிராணனாயிருக்கிறது. காந்தியடிகள் இவ்விஷயத்தைக் குறித்து எவ்வளவு உபந்நியாஸங்கள் செய்திருக்கிறார். எவ்வளவு வியாஸங்கள் எழுதியிருக்கிறார்! ஆயினும் எத்தனை பேர் அவரது கருத்தை உணர்ந்தவர்? எவ்வளவு பேர் உணர்ந்த பிறகு அதை கிரஹித்தவர்கள்? எவர்கள் அதை அனுசரிப்பதற்கு முயன்றார்கள்? எத்தனை பேர்கள் வெற்றி பெற்றார்கள்? மற்றொரு புறத்தில் காந்தியடிகளின் அஹிம்ஸைத் தத்துவம் கொஞ்சம் ஜனத்திற்கா இலக்காயிற்று? குதர்க்க வாதங்கள் கொஞ்சமா? ஆயினும் இவைகளெல்லாவற்றிற்கு மிடையில் உண்மையில் சந்தேகங்கொண்டு அதைத் தீர்த்துக் கொள்ளும் நோக்குடன் ஒளிவு மறைவின்றிக் கேட்கப்படும் கேள்விகளும் இருக்கின்றன.

"அஹிம்ஸை துறவிகளின் தருமம். ராஜ தருமத்தில் அஹிம்ஸைக்கு இடமேது? நாம் நமது பொருளை அஹிம்ஸையின் மூலமாக எவ்வாறு காக்க முடியும்? எப்பொழுதாவது சமுதாயம் முற்றிலும் அஹிம்ஸைமயமாக ஆகமுடியுமா? முடியாதெனில் ஒரு சிலர் அஹிம்ஸாவாதிகளாவதால் எவ்வாறு விசேஷப் பயன் ஏற்படக்கூடும்? அஹிம்ஸையைப் போதிப்பதால் கோழைத்தனம் விருத்தியடையாதா? காந்தியடிகளுக்குப் பிறகு அஹிம்ஸை எவ்வாறு விருத்திபெறும்?"

இத்தகைய கேள்விகள் தினமும் கேட்கப்

படுகின்றன. காந்தியடிகள் விடையளித்துக்கொண்டே யிருக்கிறார். ஆனால் கேள்விகளும் எழுந்த வண்ண மாகவே இருக்கின்றன. ஏனென்றால் நாம் அறிவா ராய்ச்சியிலேயே நின்று கொண்டு, அனுஷ்டிப்பதற்கு முயலாமலேயே இருந்தால், சந்தேகங்கள் எவ்வாறு தீரும்? 'கரும்பின் ருசி கடித்தாலல்லவா தெரியும்?

"அஹிம்ஸை துறவியின் கருமமே. ராஜ தர்மத்தில் ஹிம்ஸை, கபடம், ஏமாற்றம் எல்லாம் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. நாம் நிராயுதர்களாயிருந்து கொடி யவனை எதிர்த்தால் அவன் நம்மை அழுக்கிவிடுவான். நாம் தோற்போம், தீயோன் ஜயிப்பான்." आततायी वधार्हः । 'தீயோன் கொலை செய்யத்தக்கவன்' आततायिनमायान्तं हन्यादेवाऽविचारयन् * 'தீயோன் எதிர்ப் படின் ஆலோசியாமல் கொன்றுவிடவேண்டும்.

இவை ஸ்மிருதி வசனங்கள்—

अग्निदो गरदश्चैव शस्त्रपाणिः धनापहः ।
क्षेत्रदारहरश्चैव षडेते आततायिनः ॥ †

"தீயிட்டு நஞ்சு தந்தோர், தாங்கியே படையைக் கொன்றோர்,
நேயமுள் மனை, மண் நெஞ்சம் நையவே பொருளைக் கொண்டோர்
ஆய இவ்வறு தீயோரை 'ஆததாயி' யென்பர் மேலோர்."

* மனு ஸ்மிருதி VIII-351.

† வஸிஷ்ட ஸ்மிருதி—III—19.

இவர்களைக் கொல்லத்தான் வேண்டும். நாம் கொடியவனை தண்டியாவிடில் உலகில் கொடுமை வளரும். ஸாதுக்களின் கஷ்டங்கள் பெருகும். அதருமம் ஓங்க தருமம் அருகும். இத்தகைய யுக்திகள் தினமும் நம்முன் வருகின்றன. ஆனால் இதில் ஆச்சரியமான விஷய மென்ன வெனில் இவ்விதம் வாதமிடுவோர் ராஜாக்களோ, ராஜ தருமத்தை அனுஷ்டிப்பவர்களோ அல்ல. நீதிபதியின் தருமத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் வழிப்போக்கன் ஈடுபடுவதை அநேகமாகக் கேட்டதில்லை. இருந்தாலும் வழிப்போக்கர்கள் ஏன் தங்களை ராஜதருமத்திற் குரிமையாளர்களாக நினைத்துக்கொள்ளுகிறார்கள்? நீதிபதி ஒருவனுக்கு தூக்கு தண்டனை விதிக்கக் கூடுமானால், வழிப்போக்கர்கள் எல்லோரும் தூக்கு தண்டனை விதிக்கும் அதிகாரம் பெறமுடியுமா? ஒரு தார்க்கிகனும் கேள்வி தொடுப்பதற்கு முன்பு தன்னையே இவ்விதம் கேட்டுக் கொள்வதில்லை. எதிராளியே கொடியவன், நானே தண்டனை விதிப்பதற் குரிமை பெற்றவனென்று நாம் சுலபமாக எண்ணி விடுகிறோம்? கொடியோர் நாமே ஆயின் பிறகு என்னாகும்?

ஹிட்லர் சர்ச்சிலைக் கொடியவன் என்கிறான். சர்ச்சில் ஹிட்லரைக் கொடியவன் என்றழைக்கிறான். இவ்விதம் பரஸ்பரம் குற்றச்சாட்டு கடுமையாக நடந்துகொண்டிருக்கிறது. இருவரும் தாங்களே பிறருக்குத் தண்டனை விதிக்க அதிகாரம் பெற்றிருப்பது

போல் கருதுகிறார்கள். இந்த ஸ்திதியில் நடு நிலைமையிலிருப்பவனே தீர்மானம் செய்யக்கூடியவன். ஆனால் மத்தியஸ்தனின் தீர்ப்பை இருவருமே ஒப்புக்கொள்வதானால் தண்டனை கொடுத்தல், பெறுதல் இரண்டிற்குமே யிடமிராது.

விஷயம் என்னவென்றால், பெரும்பாலும் நாம் நமது ஹிம்ஸைச்செயலை உறுதிப்படுத்தும்பொருட்டே வேண்டிய ஆதாரங்களின் உதவியை நாடுகிறோம்.

आततायिनमायांतं हन्यादेवाविचारयन् ।

"தீச்செயல் புரிவோன் தென்படி னெதிரில்
கூச்சமில்லாமல் கொன்று வீழ்த்திடுக."

இதை நாம் நமது எதிரியின் விஷயத்தில் மட்டும் உபயோகிக்கிறோம். நானே கொடியவன், ஆகையால் நான் கொலை செய்யப்படவேண்டு மென்று ஒருவனும் கூறுவதில்லை. இவ்வாறு யாராகிலும் கூறினால் விவாதம் உயிருள்ளதாகும். ஆனால்—

मो सम कौन कुटिल खल कामी ।

"என்னிலும் கொடியோன் இழிகுணக் காமி
மண்ணு லகினிலே மற்றும் வேறுண்டோ?"

என்று சூரதாசர் கேட்டார். நாமும் அவரைப்போல் எதிரியின் துர்க்குணங்களை மதியாது, நம் துர்க்குணங்களை விழிப்புடன் பார்க்க ஆரம்பித்தால் உலகிலுள்ள பாபங்களெல்லாம் மறைந்துபோம்.

பொருளீட்டலும், ஈட்டிய பொருளைக் காத்தலும் அஹிம்ஸையால் முடியுமா? முடியலாம்; முடி

யாமலு மிருக்கலாம். எவர்கள் சொந்த உபயோகத்திற் கெனப் பொருளைச் சேமித்து வைத்திருக்கிறார்களோ, அவர்கள் அஹிம்ஸை முறைக்குப் பாத்திரர்களாவது முடியாது. அஹிம்ஸை என்பது கோழைத்தனத்திற்கு மறு பெயராயில்லாமல் உண்மையான அஹிம்ஸையாயின் அது சுய நலத்திற்கெனப் பொருள் சேர்ப்பதைக் கற்பிக்காது. அஹிம்ஸாவாதியிடம் பேராசைக்கு இடமேது? அந்த நிலையில் அஹிம்ஸாவாதிக்குத் தன் பொருட்டு சேமிக்கவோ, காக்கவோ அவசிய மேற் படாது. அஹிம்ஸா பக்தன் தன் யோக க்ஷேமத் தின் தொந்தரவில் சிக்கவே மாட்டான்.

निर्योगक्षेम आत्मवान् । *

"தன் யோக க்ஷேமத்தைக் கருதாது ஆன்மநிலை யெய்தியோன்" என்றது கீதையில் அர்ஜுனனைப் போன்ற இல்லறத்தோனுக்கு ஏற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது துறவியின் தருமமென்று கூறப்பட வில்லை. கீதை—துறவறத்தையல்ல—கிரஹஸ்தனுடைய தருமமான கருமயோகத்தைக் கற்பிக்கிறது. அஹிம் ஸாவாதியின் சுத்த தருமமும் யோக க்ஷேமமென்ற தொந்தரவிலிருந்து அவனை விலகியிருக்கக் கற்பிக்கி றது. ஆனால் சேர்த்தலும், தனது, பிறரது இரண்டு வித லாபத்திற்காகவும் செய்யக்கூடும். தனக்கெனப் பொருள் சேமிப்பவர் அஹிம்ஸைத் தத்துவத்திற்கு வேண்டிய அருகதை அடையத் தவறியவராவார்.

* கீதை—II-45.

பிறருக்காகப் பொருள் சேர்ப்பவரோ, காந்தி யடிகள் கூறுகிறபடி 'டிரஸ்டிகள்' ஆவர். அவர்கள் பற்றின்றித் தங்கள் யோகக்ஷேமத்தை கவனிக்கலாம். அவர்களிடம் பொருள் சேர்ந்தாலும் அவர்கள் அஹிம்ஸாவாதிகளே. ஏனெனில், அவர்களுக்குத் தங்களிடமுள்ள சேமிப்பில் பற்றில்லை. தருமத்தின் பொருட்டு சேமிக்கப்பட்ட சொத்தை, அவர்கள் தருமத்தின் பொருட்டே விட்டுவிடவும் கூடும். அதைக் காக்க நேரிடின், அதை தருமத்தின் மூலமாகவே காக்க முடியும், பாபத்தின் மூலம் அல்ல. இவ்வகையிலன்றி எவர்கள், பொருள் திரட்டுவதில் ஆசையுள்ளவர்களோ, அவர்கள் அஹிம்ஸாவாதிகளாக இருக்க முடியாது. அஹிம்ஸையின் மூலமாகப் பொருளைக் காத்தலென்பதும் அவர்கள் விஷயத்தில் பொருந்தாது. ஆனால், முற்றிலும் அஹிம்ஸா வாதிகளாயிருந்து எல்லா விதங்களிலும் தகுதி பெற்றிருந்து தங்கள் ஆன்மீக சக்தியின் மூலமாகப் பிறருடைய சேமிப்பைக் காத்தலே தங்கள் தருமம் என்று அவர்கள் கருதினால், அவ்விதம் செய்வது சரிதான். இத்தகைய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதும் சாத்தியம்.

ஆனால், அஹிம்ஸை வழி, ஹிம்ஸைவழி இரண்டையும் ஒப்பிடுதல் சாத்தியமல்லவென்பதை நாம் மறத்தலாகாது. இரண்டின் லக்ஷியங்களுமே வேறுபட்டவை. ஹிம்ஸையினால் ஒரு வேலை வெற்றியுடன் நிறைவேறக் கூடுமாயின்—அந்த வெற்றி சிறிதுகாலத்திற்கே நிலைத்

தாலும்—அதே வேலையை அஹிம்ஸையின் மூலமாக நிறைவேற்றுதலென்பது ஆகவே ஆகாது. உதாரணமாக, நாம் அஹிம்ஸையின் உதவியினால் ஸாம்ராஜ்யம் ஸ்தாபிக்க முடியாது. பிறர் தேசத்தைக் கொள்ளை கொள்ளமுடியாது. அபிசீனியாவில் இத்தாலி ஸ்தாபிதம் செய்த ஸாம்ராஜ்யம் ஹிம்ஸையின் மூலமாகவே நடந்திருக்கக்கூடும்.

இதன் பொருள் என்னவெனில், நாம் அஹிம்ஸையைக்கொண்டு தருமத்தைக் காக்க முடியுமேயன்றி பாபத்தைக் காக்க முடியாது. பொருள் என்பது பாபத்தின் மறுபெயராயின், அப்பொருளைக் காத்தலும் முடியாது. அஹிம்ஸையில் ருசியுள்ளவர்கள் பாபத்தைக்காக்க ஏன் முயலுவார்கள்? அஹிம்ஸையின் இந்த எல்லைகளை நாம் புரிந்துகொண்டால், எவ்வளவோ சந்தேகங்கள் தாமாகவே தீர்ந்துவிடும். சுருங்கக் கூறின், நாம் காக்க விரும்பும் பொருள் தருமமாயின் அஹிம்ஸா முறையினால் எதிரியை எதிர்த்து வெற்றி பெற முடியும். ஆனால் காக்க விரும்புவது பாபமாயின், நாமே அதை விட்டு விடவேண்டும். ஆகையால், அந்நிலையில், பொருளைக் காக்கவேண்டிய அவசியமேயிராது.

இனி, 'தருமம்' என்பதெது? 'அதருமம்' என்பதெது?' என்ற கேள்விகள் பாக்கியிருக்கின்றன. ஆனால் சத்திய மார்க்கத்தில் செல்லுகிறவனுக்கு தருமாதருமத்தை நிச்சயிப்பதில் கஷ்டமேது?

जिन खोजा तिन पाइयां, गहरे पानी पैठ।
मैं बौरी डूबन डरी, रही किनारे बैठ ॥—कबीरदास

"முத்தினைத் தேடி நீரில்
மூழ்கியே கையிற் கொண்டான்
பித்தன் நான் தேடச்சென்று—இளியே
பாரி லமர்ந்திருந்தேன்."

உண்மை என்ன வெனில் நாம் தருமத்தை விட்டுப் பாப த்தைக் காக்க விரும்புங்கால் (அஹிம்ஸையின் மூலமாகப் பாபத்தைக் காத்தல் அஸாத்திய மாயிருப்பதால், நமக்கு அஹிம்ஸையின் குண விசேஷங்களில் சந்தேகம் பிறக்க ஆரம்பிக்கிறது. பலவித ஆக்ஷேபங்களும் எழுகின்றன.

ராஜீயத்தில் அஹிம்ஸை பிரவேசித்ததும் இந்த சிக்கல் இன்னும் அதிகரித்து விட்டது. ஏனெனில் ஐரோப்பிய ராஜீயத்தைப் பார்த்து அதேபோன்று நாம் நமது ராஜீயத்தை அமைத்திருக்கிறோம். ஜாதி அபிமானம், ஜாதிப்பூசல், பிற தேசங்களை அடக்கியாளும் ஆசை, நாம் ஓங்கவேண்டுமாயின், பிறரை ஆழ்த்த வேண்டுமென்ற தவறான கொள்கை, ஆகியவைகளால் தூண்டப்பட்டு, எல்லைகளில் அரண்களமைத்தல், பல விதமான எரிக்கும், கொல்லும் யந்திரங்களை சிருஷ்டித்தல், வெளி தேசங்களைப்போலவே வீட்டையுமமைத்தல் ஆகியவை நடைபெறுகின்றன. இந்நிலையில் நமது ஆயுதம் அஹிம்ஸையா, ஹிம்ஸையா என்பதை நிர்ணயிக்குமுன், நாம் சமுதாயத்திற்கென்றாலும் சரி,

தனி மனிதனுக்கென்றாலும் சரி, சுத்தமான தரும மார்க்கத்தைப் பின்பற்றுவதா அல்லது பாபத்தைப் பின்பற்றுவதா என்பதை நிச்சயம் செய்துகொள்ளல் வேண்டும். நமது ராஜீய மாளிகையை நாம் மானிட தருமத்தின் பரந்த ஆதாரத்தின்மீது எழுப்ப விரும்புகிறோமா, அல்லது ஒரு சிலரின் சுயநலமென்ற குறுகிய அஸ்திவாரத்தின்மீதா? அந்த ஒரு சிலர் நமது குடும்பத்தவராயினும், ஜாதி ஜனங்களாயினும், நமது மாகாணத்தவராயினும், தேசத்தவராயினும் ஒன்றுதான்.

தங்களுடைய சொந்த வாழ்க்கையில் சத்தியத்தையே பின்பற்றும் பல உண்மைத் தியாகிகள் ஐரோப்பாவிலிருக்கின்றனர். ஆனால் தேசத்திற்கு அபாயம் நேரிடின் சத்தியம், நாணயம், நேர்மை எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட அவர்கள் தயங்குவதில்லை. அவர்கள் அஹிம்ஸா மார்க்கத்தை அனுசரிக்க விரும்பினால், ஒரு வழிதானுண்டு. அதாவது தனக்கெனினும், தன் நாட்டிற்கெனினும் பாபவழியை விட்டுவிட வேண்டும். அப்படிச் செய்வதாயின் அவர்களது நாட்டிற்கு ஒரு எல்லை கிடையாது.

अयं निजः परो वेति गणना लघुचेतसाम् ।*
उदारचरितानां तु वसुधैव कुटुंबकम् ॥

"மனதிடை மகிமை மேலோர் மனையென மதிப்பராமால்
உனதது எனதீதென்று உன்னுவோர் கயவராமே."

* ஹிதோபதேசம்.

கடவுளின் சிருஷ்டி முற்றிலும் அவர்களுக்குத் தம் நாடேயாம். தெய்வீகச் சொத்தை நிலை நாட்டுவதும் அசுரச் செல்வத்தை அழிப்பதும் அவர்களது லக்ஷியமாகும்.

காந்தியடிகள் இதனாலேயே அடிக்கடி ஆத்ம சுத்தியை வற்புறுத்துகிறார். ஏனெனில் அஹிம்ஸை ஆயுதத்தைச் செலுத்துவது வெளிப் பொருள்களைப் பொறுத்ததல்ல, மனோ நிலையையும், பக்குவத்தையும் பொறுத்ததாகும். உடைந்த துப்பாக்கியில் ரவைகளை நிறைத்துச் சுட்டால் அது குறியிற் போய்ப் பாயுமா? அதே போன்று சுத்த ஹிருதயமில்லாதவனும், தெய்வீகச் சம்பத்தைப் பெறாதவனும் அஹிம்ஸை என்ற ஆயுதத்தை எடுக்க எவ்வாறு தகுதியுள்ளவனாவான்? ஒருவன் உண்மையில் சுத்த மனிதனாயின் தானே ஆயுதமும் அதைச் செலுத்துவோனும் ஆவான். அவன் ஆத்ம சுத்தியற்று அசுர சம்பத்துமட்டில் பெற்றிருந்தால் அவனது நிலை உடைந்த துப்பாக்கியையே ஒக்கும். அவனுக்கு அஹிம்ஸை பயனற்றதாகும். அஹிம்ஸாவாதியிடமே அஹிம்ஸை குடிகொள்ளும். அஹிம்ஸையைக் கையாளுமுன் ஒருவன் அஹிம்ஸாவாதி யாகிவிடவேண்டும். நியாய மார்க்கத்தில் செல்லும் மனிதனே அஹிம்ஸாவாதி யாவான்.

"ஒரு ஸமுதாயம் முழுமையும் அஹிம்ஸை மயமாக ஆகக் கூடுமா? முடியாதெனில் கிரியாம்சத்தில் இதன் மதிப்பென்ன?" இதுவும் ஒரு கேள்வி. ஆனால்

காந்தியடிகள் முழு ஸமுதாயமும் ஹிம்ஸையை முற்றி லும் ஒழித்துவிடுமென்று எங்கே எதிர்பார்க்கிருர் ? ஸமூகம் முற்றிலும் அஹிம்ஸை தருமத்தை அனு சரிக்குமென்ற ஆதாரத்தின்மேல், அவர் கோட்டை கட்டவில்லை. அவர் ஸமுதாயத்தில் பெரும் பகுதி, முற் றிலும் அஹிம்ஸா வாதியாக மாற முடியாவிடினும், ஹிம்ஸையை ஆராதிப்பதையாவது விட்டுவிடுமென்று நிச்சயம் எதிர்பார்க்கிருர்.

ஹிம்ஸை புரியும் படைபலத்தைக் கொண்டு ஸாம்ராஜ்யங்கள் அமைக்கும்பொழுதும், ஒவ்வொரு மனிதனும் யுத்த வித்தையில் கைதேர்ந்தவனுயிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதில்லை. கோடிக் கணக்கான ஜனங்களுள்ள நாட்டைக் காப்பதற்கு ஒரு சில லக்ஷம் மனிதர்கள் போதுமென்று கருதப்படு கிறது. நூற்றில் ஒருவன் போர் வீரனுனல் போது மென்கிருர்கள். இன்னும் அந்தப் போர் வீரர்களுக் குள்ளும், தலைவர்களின் சாமர்த்தியத்தைப் பொறுத்தே எல்லாம் நடைபெறுகின்றன.

இன்று இங்கிலாந்தில் படையை நடத்துவதில் மிகவும் நிபுணர்களாக எவ்வளவு தலைவர்கள் இருப்பார் கள்? பத்து அல்லது இருபதுபேர் இருக்கலாம். எஞ்சிய லக்ஷக்கணக்கான வீரர்களிடம் எதிர்பார்க்கப் படுவதெல்லாம், அவர்களுக்குத் தங்கள் அதிகாரிகளின் கட்டளைப்படி இறப்பதற்கும் சக்தி இருக்க வேண்டு மென்பது தானே. இதே உதாரணத்தை ஆதாரமாகக்

கொள்வோமாயின், நாம் ஒரு அஹிம்ஸைப் படையையும் கற்பனை செய்துகொள்ள முடியும். இப்படையின் தலைவர்கள் பூர்ணமான ஆத்மசக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும். தொண்டர்கள் அவ்வளவு அறிவாளிகளாயில்லாதிருப்பினும், சிரத்தையுள்ளவர்களாகவும், சத்தியம், அஹிம்ஸை இவற்றிற்காக இறப்பதற்குச் சக்தி பெற்றவர்களாகவுமிருத்தல் வேண்டும். இவ்வளவிருந்தால் போதுமானது. இம்முறையில் அஹிம்ஸைப் படை என்பது முற்றிலும் ஏட்டுச்சுரைக் காயல்ல.

நாம் ஸாம்ராஜ்யத்தை அமைக்கும் பேராசை கொண்டிருந்தால், நமது திருஷ்டி பிறருடைய பொருளின்மீது இருந்தால், பசியால் வாடும் அண்டை அயலார்களிடம் நமக்குக் கருணையில்லையானால், நாம் சுயநலத்திலாழ்ந்து சுகங்களைத் தேடித் திரிந்துகொண்டிருந்தால், தன் சுகங்களைக் காக்க விரும்பினால் நம்மிடம், அஹிம்ஸைக்கு இடமே இல்லை.

அழுக்குத் துணியின் அழுக்கை நாம் காக்க விரும்பின், தண்ணீரும், சவுக்காரமும் என்ன பயன்? அங்கே தேவையானது சேறு. அசுத்தம் நோயை உண்டாக்குகிறது, யமனைக் கூவியழைக்கிறது. ஆகையால் அசுத்தத்தைக் காக்க விரும்பின், நமது நிலை பரிதாபகரமானதாகும். அஹிம்ஸாவாதி நம்மை நமது குற்றங்களினின்றும் காக்க முயலுவான். ஆனால் நமது அசுத்தத்தை ஆதரிக்கவேமாட்டான். அவனது

தேசவாசியாயினும், அவனது மகனாயினும், யாராயினும் அவனுக்கு ஒன்றுதான்.

ராஜீயத்தில் அதருமம் அடங்கிருக்கிறதென்று நம்பி நாம் நம்மையே ஏமாற்றிக்கொண்டிருந்த காலையில், காந்தியடிகள் அஹிம்சையை—தருமத்தை—ராஜீயத்தில் அறிந்தே புகுத்தியிருக்கிறார். நாம் சங்கடத்திற் சிக்கியதன் காரணம் என்னவெனில் அசுத்தத்தை—அதருமத்தை—ஆதரிக்க விரும்பியவிடத்தில், காந்தியடிகள் நமக்கு சவுக்காரமும், தண்ணீரும் தந்திருக்கிறார். அவைகள் நம்மை அசுத்தத்திலிருந்து காக்க எவ்வாறு உதவுமென்று நாம் திகைக்கிறோம். இத்திகைப்பு உண்மையானது. இதுதான் சங்கடம். இதுதான் புதிர். இதை அறிந்தால் சந்தேகங்கள் தீர்ந்துவிடும்.

அஹிம்சை, சத்தியம், மோக்ஷம் இவைகளை முழுதும் அடைந்தாலல்லது பயனில்லையென்று சொல்லக் கூடாது. உண்மையில், வாழ்வில் இவைகளை முற்றுமடைதல் அசாத்தியமாகும். अधिकस्य अधिकं फलम् ।

"செய்யச் செய்யப் பலன்."

स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् । *

திணைத்துணைத் தருமமே யாயினு மிவ்வகை
பனைத்துணை யச்சம் போக்கிடுமாமே.

ஆகையால் துப்பாக்கியின் ரவை சத்துருவின்

* கீதை. XI-40.

உடலிற் பாய்ந்தால் வெற்றி, இல்லையேல் வீணென்ப தல்ல. இதில் தோல்வி யென்பதே இல்லை. ஆத்ம சுத்தியை யொட்டிப் பயனுமுண்டு.

காந்தியடிகள் சத்தியம், அஹிம்ஸை இவைகளை அறிவுறுத்துவதன் மூலம் நல்ல நாகரிகர்களாகும்படி மறைமுகமாகப் போதிக்கிறார். “பேராசையை ஒழி; ஏனெனில் சுய நலத்தினால் தூண்டப்பட்டு சேமித்த பொருளை அஹிம்ஸை அல்லது தருமத்தினால் காக்க முடியாது. அதருமத்தினால் காக்கும் முறையை அனுஸரித்தால், அதருமமே வளரும். ஆகையால் பேராசையை விடு. அண்டையிலுள்ளவனுக்கு ஊழியம் புரியக் கற்றுக்கொள். செயலில் உண்மையைக் கடைப்பிடி. ஸகிக்கும் தன்மையைப் பெறு. கடவுளை நம்பு. பேராசையினால் எதன்மீதும் ஆக்ரமிக்காதே. எவனாவது உன்னைக்கொல்ல முயன்றால், அவனைக் கொல்லாமல் நீ இறப்பதற்குக்கற்றுக்கொள். கோழைத்தனமும், அஹிம்ஸையும் ஒன்றல்ல. சூரத்தனத்தின் சிகரத்திற்கே அஹிம்ஸை யெனப் பெயர். பலசாலியே மன்னிக்கும் சக்தி வாய்ந்தவன். ஆதலால் மிக்க வீரம் பெறு. வீரனுக்குகந்த குணங்களைப் பெருக்கிக்கொள். சூரனாகி, மன்னித்து விடு. இவ்வளவும் செய்ய முடிந்து கடவுளிடம் பக்தியிருக்குமானால், பயமற்றுத் திரி” என்கிறார் காந்தியடிகள்.

‘காந்தியடிகளுக்குப் பின் அஹிம்ஸை செழிக்குமா? அஹிம்ஸை காந்தியடிகளின் வாழ்நாளுக்குப்

பிறகு முன்னேறுமா அல்லது பிற்போக் கடையுமா?' என்பது இன்னொரு கேள்வி.

புத்தர், ஏசுநாதர் இவர்களுடைய காலத்தில் அவர்களுடைய உபதேசங்கள் எவ்வளவு பிரபல மடைந்தனவோ அதைவிட அதிகமாக அவர்கள் இறந்த பிறகு அடைந்தன. அவர்களுடைய வாழ் நாட்களுக்குப் பிறகு அவர்களுடைய உபதேசங்களின் வெளிப் பகட்டு வளர்ந்து நிஜ தத்துவம் க்ஷீணமடைந்து கொண்டே வந்தது. ஆனால் புத்தரது உபதேசம் இன்று அழிந்து விட்டதென்றோ, ஏசுநாதரின் ஒளி மங்கிவிட்டதென்றோ கூறமுடியுமா? மழை பொழிந் தால் எங்கும் ஜலமயமாகத் தெரிகிறது. கோடையில் எல்லாம் வரண்டு போய்விடுகிறது. அதனால் மழையி னால் பயனில்லை என்று கூறமுடியுமா? வேனிற் பருவத் தில் வயல்களில் தானியங்கள் நிரம்பியிருக்கின்றன வென்றால் அதிலிருந்து மழையின் பெருமையே வெளிப் படுகிறது. மழைநீர் புலன்களின் மண்ணில் உலர்ந்து விட்டது. ஆனால் அதே நீர் தானியமணிகளிற் புகுந்து வாழுகிறது. கழனிகளில் நீர் தேங்கியிருந்தால் அசுத்தம் பரவும். சேறு, கொசு, துர்நாற்றம், விஷம் இவை உண் டாகும். தானியத்தினுள் புகுந்து அது அமுதமாகி விட்டது.

மகான்களின் உபதேசங்களும் இவ்விதமாகத் தகுதியானவர்களிடையே புகுந்து அழியா அருமருந் தாகிவிடுகின்றன. மழை ஜலம் எங்கே யென்று கோது

மை மணியிடம் கேளுங்கள். தன்னுள் வாழ்வதாக அது பதிலளிக்கும். இதே போன்று சாதுக்களின் வாழ்க்கையின் பயனும் தகுதி பெற்றவர்களது இதயத்தில் அமரத்துவம் பெற்றுவிளங்குகிறது. காந்தியடிகளின் ஜீவன் அல்லும், பகலும் தொழில் புரிந்து கொண்டேயிருக்கிறது. அவருக்குப் பின்னரும் அது அமரத் தன்மை பெற்றிலங்கும். ஏதோ பேச்சுக் கிடையில் எனக்குப் பிறகு அஹிம்ஸையும் அழிந்து விடுமாயின், என்னிடம் அஹிம்ஸையே இருந்ததில்லையென்று எண்ணவேண்டும்!" என்று அவர் ஒரு நாள் கூறினர். இது உண்மையான வார்த்தை. தருமம் எவ்வாறு அழிதல் கூடும்! இக்காலத்திலோ ஹிம்ஸையில் பற்றுள்ளவர்களுக்கும் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. முதலில் அபிஸீனியா வீழ்ந்தது. பின்னர் ஒன்றன் பின் ஒன்ருகத் தேசங்கள் வீழ்ச்சியடைந்து கொண்டேயிருக்கின்றன. ஜெர்மனி போர் தொடுத்தது முதல் பெரிய ஹிம்ஸைக் கெதிரில் சிறிய ஹிம்ஸையின் நிலே, பீரங்கி முனேயில் கண்ணுடிப் பாண்டத்தைப் போன்று இருக்கிறது! போலந்து போயிற்று, பின்லந்து சென்றது. நார்வே, பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ் எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன. அழிவதற்கு முன் சுடுகாடாகிவிட்டன. டென்மார்க்கு மட்டில் அழிந்ததோடிருக்கிறது.

இப்பொழுது எழும் கேள்வி என்னவெனில், 'இந்தத் தேசங்களின் மக்கள் பிறரைக் கொல்லாமல்

இறப்பதற்குத் தயாராயிருந்திருந்தால் அவர்களது தற் பொழுதைய நிலைமையிலும் அந்நிலை மிக்க சிறந்ததாயி ராதா?' என்பதேதான். இன்றோ அவர்களது உடலும் ஆத்மாவும் இரண்டும் மாண்டு கிடக்கின்றன. கொல்லா மல் இறக்கும் வழியைப் பற்றி நின்றிருந்தால் அவர்க ளது தேசங்கள் ஒருக்கால் அவர்களிடமிருந்து பிடுங் கப்பட்டாலும், அவர்களுடைய ஆத்மா இன்னும் சுதந்திரத்துடன் இருந்திருக்கும்; நாடுகளும் பறிக் கப்பட்டிருக்கு மென்பது நிச்சயமல்ல. இன்றோ பறிபட்டுப் போயின. இவர்கள் அஹிம்ஸைப்போர் நடத்தியிருந்தால் இவர்களது அஹிம்ஸையினால் ஜெர் மனிக்கு நூறு மடங்கு நல்ல படிப்பினை கிடைத்திருக் கும்.

अक्रोधेन जयेत् क्रोधम्, "பொறுமையினால் கோபத்தை வெல்" என்ற இந்த வசனம் வீணல்ல. இந்த ஐரோப்பிய 'யாதவப்போர்' எப்படி உதித்தது? இது பேராசையில் வளர்ந்த ஓர் எரிமலை. இது வானளா வக் கொழுந்து விட்டெரிந்து ஐரோப்பிய நாடுகளெல் லாவற்றையும் சாம்பராக்கப் பார்க்கிறது. இத் தீயில் அஹிம்ஸை மழையைப் போலுதவியிருக்கும். ஹிம் ஸையினால் எந்நிலையிலும் சுதந்திரத்தைக் காக்கக்கூட வில்லை யென்பது மேற் சொல்லிய உதாரணத்தால் தெளிவாகி விட்டது. பெல்ஜியம், பிரான்ஸ், இங்கி லாந்து இம்மூன்று நாடுகளின் ஐக்கிய சக்தியினால்கூட பெல்ஜியத்தைக் காக்க முடியவில்லை. இதன் பிறகு

ஒருவன் முன் வந்து “ தம்பி, ஹிம்ஸையைப் பரீக்ஷை செய்து பார்த்தாகிவிட்டது. மிகுந்த சௌரியத்தின் மறு பெயரான அஹிம்ஸையைத் தாங்கிப் போர்புரியக் கற்றுக்கொள் ” என்று கூறினால் அவனைப் பித்தன் என்று யார் கூறமுடியும்? ஏனெனில், அஹிம்ஸைப் போதகனின் உபதேசத்தின் கருத்து “ பாபத்தை விடு, அவனவன் பொருளை அவனவனுக்குக் கொடு—

तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम्। *

“ துறந்திடு பற்றை நலம்பெற வாழ்வாய்
மறந்துமே மற்றோர் பொருளினை வெளவேல் ”

தருமத்தோடு செல், பாபம் உன்னைத் தின்றுவிடும். தருமமே தலைகாக்கும். அஞ்சாதே. அச்சம் விளைவிக்காதே” என்பது தானே.

இன்றையக் கொடிய போரின் மூலகாரணமான சுய நலத்தை யடக்குவது தான், தருமத்தைக் கடைப் பிடிப்பதன் பொருள். தருமத்தை யேற்ற பின் போர் ஏது, ஹிம்ஸை ஏது?

“ இதை யாரும் ஏற்கமுடியுமா ?” என்று கேட்கிறார்கள். ஏற்கவேண்டாம். அப்படியானால் ‘பாபம் செய், திருடு, பொய் புகல், வியபசாரம் செய்’ என்று சொல்ல வேண்டுமா? இவ்வாறு வாதிப்பவன் கீதாசாரியாரிடமும் “உமது உபதேசங்களை ஏற்க முடியுமா?” என்றும் கேட்கலாம்.

* ஈசாவாஸ்யோபநிஷத்—மந்திரம் 1.

சௌரியத்தின் சிகரத்திற்கே அஹிம்ஸையென்று பெயர். கோழைத்தனத்திற்கு அஹிம்ஸை யென்ற பெயரே ஒரு பொழுதுமில்லை. பயமின்மையிலேயே அஹிம்ஸை பிறக்கும். மகா சூரனே பயத்தை முற்று மொழித்தவனுகக் கூடும். அஜாக்கிரதை, பயமின்மை இரண்டும் வேறு வேறு பொருள்கள். ஆவேசத்தில் அல்லது போதையில் பயத்தை மறந்திருப்பவன், எவ்வாறு பயமற்றவனுவான்? எவன் தன் கண் முன் ஆபத்தைக் கண்டும், பயமற்றிருக்கிருனே அவனே மகாசூரன்; அவனே அஹிம்ஸாவாதியுமாவான். திடகாத்திரமுள்ள தந்தையை ஒன்று மறியாத குழந்தை யொன்று கோபத்தினுல் அறைந்து விடுகிறது. இதனுல் தந்தைக்குக் கோபம் உண்டாவதில்லை. பதிலுக்கு அடிக்கவேண்டுமென்ற ஹிம்ஸை யுணர்ச்சி உதிப்பதுமில்லை. ஆனுல் அதே அறை ஒரு திடகாத்திரமுள்ள மனிதன் கொடுத்திருந்தால், கோபம் எழுந்து ஹிம்ஸை யுணர்ச்சியும் உதித்திருக்கும்.

இதன் காரணம் என்னவெனில் குழந்தையின் அடியினுல் தந்தைக்குப் பயமுண்டாகவில்லை, சம வயதுள்ளவன் அடிக்கவும் பயம் உதித்துவிட்டது. இவ்விதமாக ஹிம்ஸையும், பயமும் இணைந்து நிற்கின்றன. பயம் உதிக்கும்போது ஹிம்ஸையும் உதிப்பதுபோல், பயமில்லாத விடத்தில் அஹிம்ஸை வாழ்கிறது. ஹிட்லருக்கும் சர்ச்சிலுக்கும் பரஸ்பரம் பயம் இருக்கிறது. சௌரியம் இரு தரப்பிலும் இல்லை. ஹிம்ஸையின்

ஆட்சி நடக்கிறது. சௌரியத்தின் எல்லையில் அஹிம்ஸையும், பயத்தின் முடிவில் ஹிம்ஸையும் இருக்கின்றன.

மற்றுமொரு விஷயம். ஒரு உயிரைக் கொல்லுவதே ஹிம்ஸையாகாது. பித்தனொருவன் கையில் துப்பாக்கி கொண்டு, தான் கொல்லப்படாதிருக்கும் வரையில், ஆயிரக் கணக்கானவர்களைச் சுட்டு வீழ்த்திவிடக் கூடுமென்று நாம் கற்பனை செய்து கொள்ளமுடியும். இந்த மனிதனைக் கொல்வது ஹிம்ஸையாகாது. வெறுப்பற்று, சம புத்தியுடன், உலக நன்மைக்காகச் செய்யப்படும் கொலையும் ஹிம்ஸையாகாது. போலந்து தன்னைக் காக்கும் பொருட்டுப் புரியும் யுத்தத்தைப் பற்றி "போலந்தில் சுய நலமின்மை, சௌரியம் இரண்டும் உச்சத்தை யெய்தியிருக்குமாயின், போலந்து ஹிம்ஸையின் மூலமாகத் தன்னைக் காத்துக் கொண்டது என்பதை உலகம் மறந்துவிடும். போலந்தின் ஹிம்ஸை சற்றேறக் குறைய அஹிம்ஸையாகவே கருதப்படும்" என்று காந்தியடிகள் கூறினர்.

போலந்தின் ஹிம்ஸை எவ்வாறு அநேகமாக அஹிம்ஸையில் சேர்ந்ததென்பதைச் சென்ற நாட்களில் காந்தியடிகள் சிலரின் சந்தேகத்தைப் போக்குமுகத்தான் ஒரு புதிய முறையில் விளக்கினர். அந்த விளக்கமும் ஸம்பூர்ணமானதல்ல வென்பது என் கருத்து. இருக்கவும் முடியாது. ஒரே காரியம் ஒரு சமயம் தரும மாகவும் பிறிதொரு சமயம் அதருமமாகவும்

ஆகக்கூடும். குறித்ததோர் செயல் தருமமாவென்ற தீர் மானம் செயல் புரிவோனே செய்யவேண்டியதாகும். போலந்தின் ஹிம்ஸை அநேகமாக அஹிம்ஸையையே சாருமென்ற கருத்து, குழப்பத்தை யுண்டாக்கலாம். ஆனல் இதில் முரண்பாடில்லை.

இந்த விளக்கங்களிலிருந்து ஒருவாறு அஹிம்ஸை யின் உண்மைத் தத்துவத்தையும், அதன் பிரயோக வகையையும் அறிந்து கொள்வது சுலபமாயிருக்கு மெனக் கருதுகிறேன்.

[ 5 ]

## அஹிம்ஸாப் பிரயோகம்

காந்தியடிகளின் மனதில் அஹிம்ஸைப் பற்று எப்பொழுது உதித்தது; ராஜீயத்திலும், சமுதாய வியவகாரங்களிலும், குடும்ப விஷயங்களிலும் இதை எப்படிக் கையாளத் தொடங்கினர்; இதன் குணங்களில் எப்பொழுது நம்பிக்கை கொண்டார், என்றெல்லாம் கூறுவது கடினம். நம் மனதில் திடீரென உதித்ததாக நாம் எண்ணும் அநேக விஷயங்கள், உண்மையில் மெள்ள மெள்ளத்தான் எழுந்திருக்கின்றன. குணங்களின் விதைகள் நம்முள் இருக்கின்றன; அவை மெதுவாக முளைத்துத் தழைக்கின்றன. துர்க்குணங்களும் இப்படியே.

குழந்தைப் பருவத்திலிருந்தே காந்தியடிகளின் மனத்தில் சத்தியம், அஹிம்ஸை இவைகளின் உருவங்கள் அழியாதவாறு வரையப்பட்டு விட்டனவென்பதை இப்பொழுது நாம் காண்கிறோம். மிகவும் சிறு

பிராயத்தில் ஒரு கெட்டவனுடைய பழக்கத்தினுல் அதருமத்தைத் தருமமென்று கருதி, ஸமுதாயத்திற்கு நன்மை யுண்டென்று எண்ணியவராய் அவர் மாமிசம் உண்ணத் தொடங்கினர். அவருக்கு இது மனதி லுறுத்திற்று. ஏனெனில், அவர் இக்காரியத்தை ஒளிந்து மறைந்து செய்து வந்தார். இதில் பொய் மையிருந்தது. மாமிசம் அவருக்குப் பிடிக்கவுமில்லை. ஒரு தீங்கிலிருந்து மற்றொரு தீங்கு விளைகிறது. மாமிசமுண்ட பிறகு, புகையிலை—சுருட்டில் மனம் சென்றது. அதற்குக் காசு தேவை; அதை வீட்டி லிருந்து திருடினர். இப்பொழுது இச்செயல்களை அவரால் தாளக்கூடவில்லை. ஆகையால், தந்தையிடம் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்ப தென்று முடிவு செய்தார். இதனுல் தந்தையின் மனம் எவ்வாறு புண்படுமோ வென்ற பயமும் இருந் தது. ஆனுல், முழு விபரத்தையும் கடிதத்தில் எழுதி அதைத் தந்தையின் கையிலிட்டார். தந்தை படித்த தும் கண்ணீர் விட ஆரம்பித்து விட்டார். காந்தி யடிகளும் அழுதார். தந்தையின் கண்ணீர் புண்பட்ட மனத்திற் கறிகுறியா, அல்லது மகனின் உண்மை யினுல் பிறந்த ஆனந்தத்திற் கறிகுறியா வென்று யார் கூறமுடியும்? "எனக்கு இது அஹிம்ஸையின் ஒரு பாடம். அந்தச் சமயத்தில் எனக்கு அஹிம்ஸை என்ன வென்று தெரியாது. ஆனுல் இப்பொழுது அது எனது சுத்த அஹிம்ஸை என்று உணருகிறேன்" என்று

காந்தியடிகள் சொல்லுகிறார். தந்தை மன்னித்து விட்டார். காந்தியடிகள் இந்தக் கெட்டபொருள்களை யொழித்துவிட்டார். தந்தை, தனயன் இருவருடைய பாரமும் குறைந்துவிட்டது.

இச்சம்பவத்தினால் காந்தியடிகளின் எண்ணங் களில் எத்தகைய கொந்தளிப்பு ஏற்பட்டதென்று ஒருவரும் கூறமுடியாது. அஹிம்ஸை விதை இங் கிருந்துதான் முளைக்கத் தொடங்கிய தெனத்தோன்று கிறது. அச்சமயத்தில் காந்தியடிகள் சிறு குழந்தை யாயிருந்தார். இங்கிலாந்து செல்லத் தொடங்கிய பொழுது வயதடைந்துவிட்டார்,தந்தை மரணமெய்தி விட்டார். ஐரோப்பாவிற்குச் செல்லுமுன் தாயி னெதிரில், என்ன கஷ்டம் நேர்ந்தாலும் மாமிசமும், மதுவும் உட்கொள்ளுவதில்லையென்று சத்தியம் செய் திருந்தார். ஆயினும், பந்துக்களுக்குத் திருப்தியேது? அவர்கள் இவரைப் போகக்கூடாதென்று தடுத்தனர். "அங்கே மதமிழந்து பதிதனாகி விடுவாயே!" என்றனர். "ஆனால் நான் உண்ணக்கூடாததை உண்ணுவதில்லை யென்று ப்ரதிக்ஞை செய்திருக்கிறேனே" என்று காந்தியடிகள் கூறினார். ஜாதிக்காரர்களுக்கு திருப்தி யில்லை. காந்தியடிகளை ஜாதியிலிருந்து விலக்கிவிட் டார்கள்.

காந்தியடிகள் இங்கிலாந்திற்குச் சென்றார். தன் பிரதிக்ஞையினின்றும் வழுவவில்லை. திரும்பி வரவும் ஜாதி பஹிஷ்காரம் எதிர்ப்பட்டது. "ஆனால் ஜாதி யில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்று

நான் ஆசை கொள்ளவுமில்லை. ஜாதித் தலைவர்களிடம் எனக்கு வெறுப்புமில்லை. தலைவர்கள் என்னிடம் அதிருப்தி யாயிருந்தனர். ஆனால் நான் அவர்கள் மனம் புண்படும்படி ஒன்றும் செய்யவில்லை. இது மட்டுமல்ல. ஜாதிக்காரர்களுடைய பஹிஷ்காரத்தின் விதிகள் எல்லாவற்றையும் முறைப்படி நிறைவேற்றினேன். அதாவது நானே ஜாதிக்காரர்கள், பந்துக்கள் வீட்டில் சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டேன். எனது வேட்டகத்தோரும், எனது சகோதரி புருஷனும் என்னை உண்பிக்க விரும்பினர். ஆனால் இரகசியமாய்ச் செய்ய விரும்பியது எனக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் இந்த நெருங்கிய சுற்றத்தார் வீட்டிற்கூட தண்ணீ ரருந்துவதையும் நிறுத்திவிட்டேன். எனது இந்த நடத்தையினால் ஏற்பட்ட பயன் என்னவெனில், பஹிஷ்காரம் ஒருபுறம் நீடித்திருப்பினும், என்னிடம் அவர்களுக்கு அன்பு அதிகரித்தது. அவர்கள் எனது மற்ற காரியங்களில் போதிய உதவி புரிந்தனர். இந்த நற்பயன் எனது அஹிம்ஸையின் விளைவென்பது என் நம்பிக்கை" என்கிறார் காந்தியடிகள்.

ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் ஏறக்குறைய இருபது வருஷங்கள் கழித்தார். வக்கீலாக ஒரு சாதாரண வேலைக்கு அங்கு சென்றார். போனவர் அங்கே கருப்பு மனிதர்களிடம் வெள்ளையர்கள் கொண்டுள்ள வெறுப்பு, அவர்களுடைய அநியாயங்கள், இவைகளின் கொடுமையைக் கண்டு தம் நாட்டினருக்கு ஊழியம் புரியும்

நோக்குடன் சிறிது காலம் தங்கினர். பின்னர் அவ ரது நாட்டு மக்கள் அவரை அங்கிருந்து அசைய விடவில்லை. ஒவ்வொன்ருக இருபத்தோராண்டுகள் அங்கே கழிந்தன. அப்பொழுது அவர் எவ்வளவோ போர்கள் நடத்தநேர்ந்தது. அக்காலத்தில் அஹிம்ஸை ஆயுதத்தில் அவருக்கு ஏற்பட்ட நம்பிக்கை அழியாத தாகிவிட்டது. அஹிம்ஸையை விரிந்த வகையிற் கை யாண்டார். அதில் வெற்றிமாலே சூடினர். அவரது விரோதிகளின் மனமும் மாறுதலடைந்தது. அவரை எதிர்த்துப் போர் நடத்திய ஜெனரல் ஸ்மட்ஸும் முடி வில் அவரது நண்பரானர். இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டின் சமயத்தில் காந்தியடிகள் லண்டன் சென்றபொழுது ஜெனரல் ஸ்மட்ஸ் அங்குதானிருந் தார். அவர் தன்னலான உதவி புரியத் தயாரா யிருப்பதாகச் சொல்லியனுப்பினர். காந்தியடிகள் ஸாதாரண முறையில் அவரையும் உபயோகித்துக் கொண்டார்.

அஹிம்ஸை முறையினல் சத்துரு எவ்வாறு மித் திரனக மாறுகிருனென்பதற்குத் தெளிவான உதா ரணம் காந்தியடிகள் இருபத்தோராண்டுகள் ஆப்பிரிக் காவில் நடத்திய தவமாகும். காந்தியடிகள் ஆப்பிரிக் காவில் மிகவும் நுண்ணிய முறையில் அஹிம்ஸையை அனுஷ்டித்தார். அடிபெற்ருர்; தூஷிக்கப்பெற்ருர்; சிறையில் வாடினர்; எல்லா விதக் கஷ்டங்களையும் அனு பவித்தார்; ஆனல் எதிரியிடம் ஒருபொழுதும் கோபம்

கொள்ளவுமில்லை, தைரியத்தை இழக்கவுமில்லை, உறுதியைத் தளர்த்தவுமில்லை, கோபத்தை விலக்கிப் போர் நடத்திச் சென்றார். முடிவில் வெற்றி கிட்டிற்று. ஏனெனில்,

"अहिंसाप्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः।"*

அஹிம்ஸையாம் பீடத்தமர்ந்தோன் முன்
பகை யொன்றில்லை, பகைவரு மிலரே.

அஹிம்ஸையை நிலை நாட்ட விரோதத்தை ஒழிக்க வேண்டும்.

ஆப்பிரிக்காவில் கருப்பு மனிதருக்கும் வெள்ளையருக்குமிடையில் வேற்றுமை வெகு தூரம் வளர்ந்திருந்தது. கருப்பு மனிதர்கள் நடைப்பாதையிற் செல்வது கூடத் தடுக்கப்பட்டு வந்தது. இந்தியர்களும் கருப்பு மனிதர்களெனவே கருதப்பட்டு வந்தனர். இரவில் குறிப்பிட்ட ஒரு நேரத்திற்குப் பிறகு வெளியிற் செல்ல அனுமதியில்லை. காந்தியடிகளுக்குச் சுற்றித்திரியும் பழக்கமுண்டு. பல சமயங்களிலும் சுற்றவேண்டியிருந்தது. ஒரு நாள் பிரஸிடெண்டு க்ரூகரின் வீட்டின் முன் சென்றுகொண்டிருந்தபொழுது, காவலாள் இவரைப் பாதையிலிருந்து கீழே தள்ளி ஒரு உதையும் கொடுத்தான். காந்தியடிகள் பேசாமல் உதையைப் பெற்றுக்கொண்டு நின்றார். இவர் சிறிதும் சினந்தாரில்லை. அருகிற் சென்று கொண்டிருந்த இவருடைய

* பதஞ்சலி யோக சூத்திரம்—2-35

ஒரு வெள்ளேக்கார நண்பர் இதைக் கண்டார். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் "காந்தி, நான் முழுச் சம்பவத்தையும் கண்ணுற் கண்டேன். நீர் நீதிமன்றத்தில் இந்தக் காவலாளியின்மேல் வழக்கு நடத்தும். நான் உமது சாக்ஷியாக உம்மை ஆதரிக்கிறேன். உம்மிடம் அவன் இவ்விதம் தவருக நடந்துகொண்டதைக் குறித்து எனக்குத் துக்கமாயிருக்கிறது" என்ருர். காந்தியடிகள் "தாங்கள் வருந்தாதீர்கள். என் சொந்த விஷயங்களுக்கு நீதிமன்றத்தின் உதவியை நாடுவது என் வழக்கமில்லை. இந்த எளிய முட்டாள் என் செய்வான்! இங்குள்ள நிலைமை இப்படிப்பட்டது. இவன்மேல் நான் வழக்குத் தொடர விரும்பவில்லை" என்ருர். இதைக்கேட்ட அக்காவலாள் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

இவ்விதமாக அநேக சம்பவங்கள் நடந்தன. இடையில் காந்தியடிகள் சிறிதுகாலம் இந்தியாவில் தங்கியிருந்த பிறகு ஆப்பிரிக்காவிற்குத் திரும்பிஞர். அப்பொழுது அங்குள்ள வெள்ளேப் பத்திரிகைக்காரர்கள் இவருக்கு விரோதமாக விஷயங்களே மிகைப்படுத்தியும், பொய்யாகவும் பத்திரிகைகளில் எழுதிஞர்கள். வெள்ளே மக்களே இவருக்கெதிராகத் தூண்டிவிட்டார்கள். கப்பலிலிருந்து காந்தியடிகள் இறங்குகையில் வெள்ளேயர்கள் இவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். போலீஸ்காரர்களும், நண்பர்களும்

பகலில் இறங்கி வருவதில் ஆபத்திருப்பதால் இரவில் வருவது நல்லதென்று சொல்லியனுப்பினார்கள். கப்பற்றலைவன்: "வெள்ளையர்கள் உங்களை அடித்தால் நீங்கள் எவ்வாறு அஹிம்ஸையினுதவியினால் அவர்களை எதிர்ப்பீர்கள்?" என்று கேட்டான். "அவர்களை மன்னித்து விடும்படி கடவுள் எனக்குப் புத்தியளிப்பார். அவர்கள் அறியாமையில் சிக்குண்டிருப்பதால் எனக்கு அவர்கள்பால் கோபம் இல்லை. உண்மையில் என்மீது அவர்கள் வெறுப்புக்கொண்டிருப்பதால் அவர்கள் வேறு என்ன செய்வார்கள்? நான் அவர்களை எவ்வாறு கோபிப்பது?" என்று காந்தியடிகள் பதிலளித்தார்.

காந்தியடிகள் கடைசியில் கப்பலிலிருந்து இறங்கினார். இவரது வெள்ளைக்கார நண்பரொருவன் இவரைக்காப்பதற்காக இவருடன் சென்றான். இவர் கால் நடையாகவே வீடு செல்ல முடிவு செய்தார். ஏனெனில் எவ்விதக் கோழைத்தனமும் இருக்கக்கூடாதென்பது இவர் கருத்து. அவ்வளவுதான்; இவரைக் கண்டதும் வெள்ளையர்களது கோபம் எல்லையை மீறிவிட்டது. கும்பல் அதிகரிக்கத் தொடங்கியது. முன்னேறுவது கஷ்டமாகிவிட்டது. கூட்டம் நண்பரைக் காந்தியடிகளிடமிருந்து பிரித்து விட்டது. சிறிய பெரிய கற்களும், அழுகிய முட்டைகளும் மழைபோற் பொழிய ஆரம்பித்தன. இவரது தலைப்பாகை கசக்கி எறியப் பட்டது. உதைகளும், குத்துக்களும் விழுந்த வண்ணமாயிருந்தன. காந்தியடிகள் மூர்ச்சையடைந்து

விட்டார். ஆயினும் உதைகள் நின்றபாடில்லை. கடவுள் சித்தம் இவரை உயிருடன் வைக்கவேண்டுமென்பது போலும்! பக்கத்திற் சென்றுகொண்டிருந்த போலீஸ் சூபரின்டெண்டெண்டின் மனைவி இதைக் கண்டார். அவர் கும்பலிற் குதித்து தன் குடையை நீட்டி இவரைக் காப்பதற்கு வந்து நின்று விட்டார். கூட்டம் பீதி யடைந்தது. இதற்குள் போலீஸ் சூபரின்டெண்டெண்டு நேரில் வந்து இவரைக் காத்து அழைத்துச் சென்றார். காந்தியடிகள் உயிர் தப்பினார்!

எழுந்த ஆவேசம் அடங்கியதும், ஜனங்களுக்கு நடந்ததைக் குறித்து வருத்த முண்டாகி யிருக்கும். பிரிட்டிஷ் அரசாங்கம், ஆப்பிரிக்க அரசாங்கத்திடம் வெள்ளை குண்டாக்களைப் பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று கூறிற்று. ஆனால் காந்தியடிகள்: “ எனக்கு யாரிடமும் விரோதமில்லை. உண்மை உதயமாகும் பொழுது என்னைத் தாக்கியவர்கள் தாங்களே வருந்துவார்கள். நான் எவரையும் தண்டனைக்குள்ளாக்க விரும்பவில்லை” என்றார். இன்றோ காந்தியடிகளை அடிப்பது, உதைப்பது, திட்டுவது என்பவைகளை நினைக்கவும் நமக்குத் தாளவில்லை.

ஒன்றரை வருஷங்களுக்கு முன் நடந்தது. காந்தியடிகள் டில்லியில் ஸ்ரீ லக்ஷ்மிநாராயணர் ஆலயத்தைத் திறந்தார். ஒரு லக்ஷம் ஜனங்கள் கூட்டமிருக்கும். எள் விழுவதற்கு இடமில்லை. மிகுந்த கஷ்டத்துடன் காந்தியடிகளைத் திறப்பு வைபவத்திற்காக ஆலயத்தி

னுள் கொண்டு சேர்க்கப்பட்டது. கோயிலின் வெளியில் கண்ணுக்கெட்டியவரை ஒரே தலையாக இருந்தது. பசுமையான மரக் கிளைகளும் மக்கள் சுமையால் தணிந்து நின்றன. கூட்டத்திற்கு காந்தியடிகளைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் நிரம்பியிருந்தது. காந்தியடிகள் கோயிலின் கோபுரத்தில் நின்றுகொண்டு தரிசனமளித்தார். சிறிது முன் கோலாஹலமாயிருந்த கூட்டம் காந்தியடிகள் கைகூப்பி மௌனமாய் கோபுரத்தின் முன்பக்கம் வந்ததும் அடங்கிவிட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆகாயத்தைப் பிளக்கும்படி ஒரே குரலில் "மஹாத்மா காந்திக்கு ஜே!" என்று ஆரவாரித்தார்கள்.

இக் காட்சியைப் பார்த்தவர் புளகாங்கிதமடைந்தனர். எனக்கு நாவெழவில்லை. கருத்துவெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தேன். நினைத்தேன்—இவர் எத்தகைய மனிதர்! சின்னஞ் சிறு உடல், அதுவும் அரை நிர்வாணம்! இவ்வளவு மனிதர்களை மயக்கிவிட்டாரே! பித்தர்களாக்கிவிட்டாரே! அக்கூட்டத்திலிருந்தவர்களில் பத்துப்பேர்கூட காந்தியடிகளோடு பேசியிருக்க மாட்டார்கள். ஆயினும் அவரைக் கண்டதும் யாவரும் பித்தர்கள் போலாகி விட்டார்களே! தங்களுக்கு ஆபத்து நேருமென்பதையும் மறந்து மரக்கிளைகளில் ஆயிரக் கணக்கில் மனிதர்கள் தொத்திக்கொண்டிருந்தனர். அவர்களும் "மஹாத்மா காந்திக்கு ஜே!" என்ற கூச்சலில் தம்மையே மறந்திருந்தனர்.

ஒரு மரத்தின் கிளை முறிந்தது. அதில் ஐம்பதிற்கு மேற்பட்ட மக்களிருந்தனர். கிளை மடமடவென்று கீழே சாய ஆரம்பித்தது. ஆனால் மேலே ஏறியிருந்தவர்களோ "மஹாத்மா காந்திக்கு ஜே!" என்ற கூச்சலில் மயங்கியிருந்தனர். ஒருவரும் தனக்கு நேர்ந்த விபத்தையும் எண்ணவில்லை. கிளை கீழே விழுந்தது. ஒருவருக்கும் காயமில்லை. "காந்திக்கு ஜே" என்று கோஷிப்பவர் அவரது பக்தியில் பரவசராகி மெய் மறந்தனர். இது ஒரு காட்சி. மேலே சொல்லப்பட்ட தென்னாப்பிரிக்காவில் நிகழ்ந்த காட்சியிலோ வெள்ளையர் கூட்டத்தில் "காந்தியைக் கொல்" என்ற கூச்சலில் பித்தம் தலைக்கேறி யிருந்தது.

காந்தியடிகள் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றபொழுது ஏறக்குறைய மூன்றரை மாதம் லண்டனில் வசித்தார். இவர் சென்றவிடமெல்லாம் ஜனத்திரள் இவரது அன்பில் மயங்கியிருந்தது. இன்று இவர் ஆப்பிரிக்கா சென்றால், இவரது அன்பிலீடுபட்டு அவ்விடத்திய வெள்ளையர்களும் பித்தர்கள் போலாகலாம்! இந்தப் பித்தத்தின் காரணமென்ன? காந்தியடிகள் அடியும் உதையும் பெற்றும், எதிரியை மன்னித்து விடுவதைத் தம் தருமமாகக்கொண்டதே. ஆப்பிரிக்காவின் வெள்ளைஜனத்திரளின் பித்தத்தின் அக் காட்சி நம் கண்முன் வந்ததும் நமக்கு ஆத்திரமுண்டாலும், அதே சம்பவமும், மேலும் அதேபோன்ற வேறு பல சம்பவங்களும்தான் இன்

றைய காந்தியை உண்டாக்கியிருக்கின்றன என்று உணருகிறோம். ஏசுநாதர் சிலுவையில் அறையப்படா விடில் அவரது பெருமை வெளிப்பட்டிராது. காந்தியடிகள் சாந்தமாக உதைகளைத் தாங்கியிராவிடில் அவரது சகிப்புத்தன்மையின் மாற்று கல்லில் உரைக்கப்பெற்ற தங்கம்போல் வெளியாகியிராது.

காந்தியடிகள் மகாத்மா; ஏனெனில் அவர் தம்மைத் தாக்கியவனையும் நேசிக்கிறார். "எனது இந்த வழி, நான் பழகியவர்களெல்லோரையும் எனது நண்பராக்கிற்று. நான் அரசாங்கத்தின் பல இலாக்காக்களுடன் அடிக்கடி சண்டையிட நேர்ந்தது. அவைகளைக் குறித்து கடுமையான பாஷைகூட உபயோகிக்க நேர்ந்தது. ஆயினும், உத்தியோகஸ்தர்கள் எப்பொழுதும் என்னிடம் திருப்தியாகவேயிருந்தனர். எனது இம்முறை எனது இயற்கையாகவே ஆகிவிட்டதென்று அப்பொழுது எனக்குத் தெரியாது, பின்னால் தெரிந்தது. மனிதன் வேறு, அவன் புரியும் செயல் வேறு என்று தெரிந்துகொள்ளுதல் சத்தியாக்கிரகத்தின் ஓர் அங்கமாகும்; அஹிம்ஸையின் தத்துவமாகும். நாம் தீச்செயல்களை தூஷித்து, நற்செயல்களைப் புகழும்பொழுது கெட்டவர்களிடம் தயையும், நல்லவர்களிடம் மரியாதையும் காட்டவேண்டும். "பாபத்தை வெறு; பாபியையல்ல" என்ற இந்த மந்திரம் பலருக்குத் தெரிகிறது; ஆனால் நடைமுறையில்

வெகு சிலரே இதிற் பழகியிருக்கிறார்கள். இதனாலேயே உலகில் விரோதத்தின் விஷவிருக்ஷம் இவ்வளவு செழிக்கிறது.

“அஹிம்ஸை சத்தியத்தின் ஆதாரம். அஹிம்ஸையில் நிலையாத சத்தியத்தைக் காத்தல் முடியாது என்ற என் நம்பிக்கை நாளுக்கு நாள் உறுதி யடைந்து கொண்டே வருகிறது. தீய பழக்கங்களை நாம் எதிர்க்க வேண்டும். ஆனால் அந்தப் பழக்கமுள்ளவரோடு போரிடுதலும், விரோதம் காட்டுதலும் தம்மையே விரோதித்தல் போலாகும். நாம் யாவரும் ஒரே கடவுளின் மக்கள். தருமாத்மாவாயினும், பாபியாயினும், எல்லோரிடத்தும் ஒரே ஈசன் வியாபித்திருக்கிறான். ஆகையால் எந்த உயிருக்கும் துன்பந்தருவது கடவுளை அவமானத்திற்குள்ளாக்குதல், அல்லது சிருஷ்டி முழுவதையுமே துன்புறுத்தலை யொக்கும்” என்கிறார் காந்தியடிகள்.

மேற்கூறியவை சிரத்தையுடன் அஹிம்ஸையை அனுஷ்டித்தவருடைய வார்த்தைகளாகும்.

काम एष क्रोध एष रजोगुणसमुद्भव : ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥ *

“ விருப்பும் சினமும் ராஜசகுணத்து
உதிக்கும் ; ஆழ்த்திடும் பெரியதாமழிவில்
பொருப்பினை யொத்த பாவமாம் ; இஃதே
பகையுமா மிங்கென உணர்வாய்.”

* கீதை III—37.

கீதையில் "காமம், கோபம் இரண்டையும் சத்துருக்களென்று அறி" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வெறுப்பை தீமையிடம் காட்டவேண்டியதே யன்றித் தீயோனிடமல்ல. தீயவனிடம் நடக்கவேண்டிய முறையைப் பற்றி வேறு கட்டளை யிருக்கிறது.

मैत्री करुणा मुदितोपेक्षाणाम्, सुखदुःखपुण्यापुण्यविषयाणाम्
भावनातश्चित्तप्रसादनम् ॥ *

"மற்றோர் சுகத்திடை நட்பொடு, தாளாத்
துன்பத்திடையே தாளாண்மை தாங்கி
நன்மையி லின்பமும் நலமின்மைதனைக்
காணுதிருத்தலும் கடமையாம்;
உள்ளவமைதி யெய்தற்கே."

தீயவன் அல்லது பாபியின் விஷயத்தில் தயை காட்டவேண்டும் அல்லது மனதைச் செலுத்தாம லிருத்தல் வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

* பதஞ்சலி யோக சூத்திரம் I—33.

[ 6 ]

## அக்னி பரீக்ஷை

காந்தியடிகள் ஆப்பிரிக்காவில் ஸ்தாபித்த ஆச்சிரமத்திற்கு "டால்ஸ்டாய் பண்ணை" என்று பெயரிட்டார். பின்பு தம் தேசத்திற்குத் திரும்பி சபர்மதியில் சத்தியாக்கிரஹ ஆச்சிரமம் அமைத்தார். இப்பொழுதோ சேவாக்கிராமத்தில் ஆச்சிரமம் நிர்மாணித்து வசித்து வருகிறார். இவ்வெல்லா ஆச்சிரமங்களிலும் பாம்பு, தேள் உபத்திரவம் அதிகமுண்டு. காந்தியடிகள் விஷநாகத்தையும் தாம் கொல்வதில்லை. மற்றவர்கள் பாம்பைக்கொல்லக் கூடாதென்று அவர் தடுத்ததுமில்லை. ஆயினும் அவர் கொல்வதில்லையாகையால் மற்ற ஆச்சிரமவாசிகளும் கொல்வதில்லை.

சேவாக்கிராமத்தில் ஒரு பெண் ஓரிரவு தேளொன்றை மிதித்து விட்டாள்; தேள் நன்றாகக்கொட்டி விட்டது. அவள் இரவு முழுதும்

வலி தாங்காமல் தவித்தாள். ஆப்பிரிக்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி, சர்ப்பம் ஒருவரையும் தீண்டியதில்லை. ஆனல் பாம்புகள் தினமும் காலடியில் ஓடிக்கொண்டே யிருக்கின்றன. ஆச்சிரமவாசிகள் அவைகளைப் பிடித்து தூரத்தில் கொண்டு விட்டு வருகிறார்கள். தேள் பல தடவைகளில் ஆச்சிரமவாசிகளைக் கொட்டியிருக்கிறது. ஒரு சமயம் ஸ்ரீ மஹாதேவ தேசாய், "பாபூ, தாங்கள் பாம்பைக் கொல்ல அனுமதிப்பதில்லை; இதனல் ஒரு நாள் தாங்கள் மிகவும் வருந்த நேரும். தினமும் பாம்புகள் ஆச்சிரமவாசிகளின் கால்களில் புரளுகின்றன. நல்லகாலம் இது வரையில் ஒருவரையும் தீண்டவில்லை. ஆனல் ஏதாவது நடந்து, ஒருவர் இறந்தால், தாங்கள் மிகவும் வருந்துவீர்கள்" என்றார். காந்தியடிகள், "ஆனல், மஹாதேவ், பாம்பைக் கொல்லவேண்டாமென்று வேறொருவரை நான் எப்பொழுது தடுத்தேன்? நான் கொல்வதில்லை யென்பது உண்மை. தன்னைக் காக்கும் பொருட்டும் பாம்பைக் கொல்வது எனக்குப் பிடித்தமில்லை. ஆனல் வேறு எவரையும் ஆபத்திற்குள்ளாக்க நான் விரும்பவில்லை. பிறர் கொல்ல விரும்பினல் தடையின்றிக் கொல்லட்டும்" என்றார். காந்தியடிகள் கொல்வதில்லை யெனில் வேறு யார் கொல்வார்கள்?

"நமது எந்த ஆச்சிரமத்திலும் இதுவரையில் ஆண்டவன் கிருபையால் ஒருவரையும் பாம்பு தீண்டியதில்லை. எல்லாவிடங்களிலும் பாம்புகள் கணக்கின்றி

யிருந்தன. ஆனால் ஒன்றும் விபரீதம் நடக்கவில்லை. நான் இதில் கடவுளது அருளைக் காண்கிறேன். “உங்கள் ஆச்சிரமவாசிகளிடம் கடவுள் தனியன்பு வைத்திருக்கிறார், உங்களுடைய கவைக்குதவாச் செயல்களை யெல்லாம் கவனித்துக்கொண்டிருப்பது தான் அவர் வேலையா” என்று என்னைக் கேட்பதில் பயனில்லை. இந்த ஒரேமாதிரியான அனுபவத்தின் காரணத்தை விளக்க ‘கடவுளின் அருள்’ என்பதைத் தவிர என்னிடம் வேறு சொல் இல்லை. கடவுளின் லீலையை மனிதனுடைய மொழி எவ்வாறு விளக்கிக் கூறமுடியும்! ஈசனின் மாயை மனத்திற்கும், வாக்கிற்கும் புறம்பானது. மனிதன் துணிவுடன் அதை விளக்க முன்வந்தாலும், தனது தெளிவற்ற பாஷையிடம் தான் சரண்புக வேண்டியிருக்கிறது. ஆகையால் எவராவது ‘இதுவரையில் உங்கள் ஆச்சிரமத்தில் ஒருவரும் பாம்பு தீண்டி இறவாமலிருப்பது தற்செயலாய் நேர்ந்த விஷயம்; இதைக் கடவுளின் கருணை என்பது உனது அறியாமை என்று கூறினாலும் நான் இந்த அறியாமை யிலேயே ஸ்திரமாயிருக்க விரும்புகிறேன்.”

இவ்வாறு காந்தியடிகளின் அஹிம்ஸை, அக்னி பரீக்ஷையில் தேறி ஒளிபெற்று விளங்குகிறது.

[ 7 ]

## சத்திய ஆராதனை

"அஹிம்ஸை சத்தியத்தின் ஆதாரம்." அநேகமாக காந்தியடிகள் அஹிம்ஸையைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் சத்தியத்தை வற்புறுத்துகிறார். ஆபத்கருமமென்று அநேக விதி விலக்குகள் சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. பழைய காலத்தில் பன்னிரண்டு வருஷம் கொடிய பஞ்சமிருந்த பொழுது விச்வாமித்திரர் பசியால் வாடி உணவைத் தேடிக் கொண்டு பல விடங்களில் அலைந்தார். எங்கும் ஒன்றும் கிட்டாமற் போகவே, ஒரு புலையனது குடிசையிலிருந்து நாய் மாமிசத்தைத் திருடத் துணிந்தார். திருடும்பொழுது அப்புலையன் கண் விழிக்கவே, அவன் ரிஷியைப் பார்த்து "தாங்கள் ஏன் இவ்வதருமத்தைச் செய்கிறீர்கள்?" என்று வினவினான்; "ஆபத்துக் காலத்தில் பிராம்மணனும் திருடலாம்" என்று விச்வாமித்திரர் தர்க்கித்தார்.

आपत्सु विहितं स्तैन्यं विशिष्टसमहीनतः ।
विप्रेण प्राणरक्षार्थं कर्त्तव्यमिति निश्चयः ॥ *

"மேலோர் கீழோர் சமநிலை நின்றோர்
தம் பொருள் வெளவல் தாளா மிடிமையிற்
றீதல; தன்னுயிர் தரித்திடவேண்டின்,
அந்தணர் தமக்கே அறமாகும்மே."

புலையன் அவருக்குப் பல தருமோபதேசங்களைச் செய்தான். அவர் செய்வது பாபமென்று எடுத்துரைத்தான். கடைசியில் உபதேசம் கேட்டுக் கேட்டு விச்வாமித்திரர் சலித்துவிட்டார். அவர்

पिबन्त्येवोदकं गावो मण्डूकेषु रुदत्स्वपि ।
न तेऽधिकारो धर्मेऽस्ति मा भूरात्मप्रशंसकः ॥

"புனலினையருந்து மாவும் புலம்பி யென் தவளை யார்த்து,
எனது முன் தருமபோதம் செய்யல் நீ இறுமாப் பெய்தி."

"தவளையின் டர்-டர் சத்தத்தைக் கேட்டுப் பசு பொய்கையில் தண்ணீர் அருந்தாமலிராது. உனக்கு தரும உபதேசம் செய்யும் அதிகாரமில்லை; ஆகையால் ஏன் வீணுகப் பிதற்றுகிருய்?"

"எனக்கு தருமம் தெரியாதா? உயிருடன் இருந்தால் தருமானுஷ்டானம் நடந்தே தீரும். உடலில்லையேல் தருமமேது? ஆகையால் இச்சமயம் உயிரைக் காப்பதே சிறந்த தருமம்" என்றுர்.

காந்தியடிகள் இவ்வாறு ஒருபொழுதும் வாதம்

* மகாபாரதம், சாந்திபர்வம், ஆபத் தருமம் 141—39.

செய்வதில்லை. அவருக்கு இந்த வாதம் பிடித்தமு மில்லை. அவர் தம் உடல் நலத்திற்கு விரோதமாகச் சில காரியங்கள் செய்திருக்கிறார். பாலருந்துவதில்லை என்ற விரதம் இத்தகையது. பலவித எண்ணங்கள் இந்த விரதத்திற்குக் காரணமாயிருந்தன. பால் பிரும்ம சாரிக்கு உகந்த உணவல்லவென்பது அவருடைய நம்பிக்கை. ஆனால் நமது பழைய சாஸ்திரங்களில் இதற்கு ஆதாரமில்லை. கல்கத்தாவில் இடையர்கள் பசுக்களை "பூகா" என்று கூறப்படும் கொடிய முறையில் நடத்துவதை நேராகப் பார்த்ததால் அக்கொடுமை சகியாது விரதமேற்றார். அதைப் பல வருஷங்கள்வரை அனுசரித்தார். கடைசியில் திடீரென்று நோய் சூழ்ந்து கொண்டது. எல்லோரும் பாலருந்துமாறு அறிவுறுத்தினார்கள். கோக்கலே வற்புறுத்தினார்; டாக்டர்கள் சொல்லிப்பார்த்தார்கள்; ஆனால் அவரிடம் ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு மற்றொரு நோய் கண்டது. அது அதிக ஆபத்தானது. ஆனால் பாலின் விஷயத்தில் மட்டும் அவருக்கு அந்தப் பழைய பிடிவாதம் நிலைத்திருந்தது. "தாங்கள் விரதம் கொண்டபொழுது உங்கள் முன்னிருந்தது பசு-எருமைப் பாலின் விஷயமேயாகும். ஆட்டுப் பாலைப் பற்றியதல்ல. ஆகையால் தாங்கள் ஆட்டுப் பாலை ஏன் அருந்தக்கூடாது?" என ஒரு நாள் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் கூறினார். காந்தியடிகள் இந்த வார்த்தையை ஏற்று ஆட்டுப்பாலை யருந்தினார். அன்றுமுதல் ஆட்டுப்பாலையே அருந்திவருகிறார்.

ஆனால் ஆட்டுப்பால் அருந்துவதில் விரத பங்கமுண்டா, இல்லையாவென்பதில் காந்தியடிகளுக்கு இன்னமும் சந்தேகந்தான்.

எந்த விரதமோ, பிரதிக்ஞையோ ஏற்றாலும் அதற்குப் பரந்த பொருளளித்து, அதினின்றும் வழுவாதிருத்தலே காந்தியடிகளின் பழக்கம். செய்யும் காரியம் நியாயத் தவறாகத் தோன்றினால் யாருடைய வேண்டுகோளையும் எதிர் பாராமல் அதினின்றும் விலகி விடுகிறார். ஆனால் தம் வழி நியாயத் தவறானதென்று தெரியாதவரையில் அவர் சிறு விஷயங்களையும் மாற்றுவதில்லை. உலாவச் செல்லுவது ஒரே பாதையில். உறங்கும் இடம் ஒன்றே. உண்ணுமிடம் அதுவே. பாத்திரங்கள் அவைகளே. உபயோகிக்கும் சாமான்களும் அவையே. டில்லி வரும்பொழுதெல்லாம் ‘நிஜாமுத்தீன்’ ஸ்டேஷனில் இறங்குகிறார். செல்லும் பொழுது பெரிய ஸ்டேஷனில் ரயிலேறுகிறார். என் வீட்டில் தங்கினால் எப்பொழுதும் தங்கும் அறை ஒன்றே தான். மோட்டாரை மாற்றுவதுகூடப் பிடிப்பதில்லை. எந்தப் பழக்கத்தையும் வீணில் மாற்றுவதில்லை. சிறு விஷயங்களிலும் அவருக்கு ஒருவிதமான உறுதியிருக்கிறது.

“எல்லா தருமங்களுமடங்கிய சத்தியம் எனக்குத் தலை சிறந்த தருமம். வாய்ச் சொல்லில் உண்மைமட்டுமல்ல, எண்ணங்களிலும் உண்மை வேண்டும். கலப்புள்ள உண்மையல்ல ; அழியாத, சுத்தமான, என்று

முள்ள மாறாத எந்த சத்தியத்தைக் கடவுளென்று கூறு கிறேமோ அது. கடவுள் பலவிதமாக வர்ணிக்கப்படு கிறார். அவரது உருவங்கள் அனந்தம். இந்த விளக் கங்களைக் கேட்டு நான் ஆச்சரியமடைகிறேன்; திடுக் கிடுகிறேன். ஆனால் நான் ஆண்டவனை சத்திய ஸ்வ ரூபியாகப் பூஜிக்கிறேன். நான் அவனை இன்னும் அடையவில்லை. அவனைத் தேடிக்கொண்டிருக்கிறேன். இந்த முயற்சியில் அழியவும் நான் சித்தமாயிருக்கி றேன். நான் சுத்த சத்தியத்தைப் பெறும் வரையில், எதை நான் சத்தியமென்று நம்புகிறேனோ அதைப் பின் பற்றுகிறேன். இச்சத்தியத்தின் பாதை குறுகி யது. கத்தியின் முனைபோன்று கூரியது. ஆனால் இதுவே எனக்குச் சுலுவானது. இப்பாதையை நான் விடாதிருப்பதால் இமயம் போன்ற என் குற் றங்களும் எனக்குக் கலக்கம் விளைவிப்பதில்லை.''

சத்தியம், அஹிம்ஸை, கடவுட்பற்று, இம்மூன் றின் விதைகளும் சிறு பிராயத்திலேயே இவரது இத யத்தில் முளைத்திருந்தன வென்று தோன்றுகிறது. எது முதலிலுதித்ததென்று யார் கூறமுடியும்? முற்பிறப்பின் விதை உடன் வந்திருக்கலாம். ஆனால் இப்பிறப்பிலோ சத்தியத்தின் வித்து முதலில் முளைத்த தென்று தோன்றுகிறது. "பிள்ளைப் பிராயத்திலேயே தருமம் தான் எல்லாவற்றிற்கும் ஆதாரம் என்ற எண் ணம் என் மனதில் வேரூன்றிவிட்டது. ஆகையால் சத்தியம் எனது முதல் லக்ஷியமாகிவிட்டது. இதன்

உரு என் மனத்தில் தெளிவாக ஆக, இதன் பொரு ளும் விரிவடைந்து கொண்டே யிருக்கிறது" என்று அவர் கூறுகிறார்.

காந்தியடிகள் சிறு பிராயத்தில் மிகவும் ஸங்கோச முள்ளவராயிருந்தார். பத்திருபது நண்பர்களிடையி லும் அவர் வாய் திறந்து பேசார். பொதுக் கூட்டங் களிலோ கேட்கவேண்டியதில்லை. லண்டனில் படிக் கும்பொழுது சிறு கூட்டங்களில் எழுந்து பேசும் சம யம் வாய்த்தபொழுதெல்லாம் அவரால் வாய் திறக்க முடிவதில்லை. ஜனங்கள் அவரது வெட்கத்தைக் குறித்துக் கேலி செய்தனர். இவருக்கும் இது அவ மானமாயிருந்தது. பாரிஸ்டராகி இந்தியா திரும்பிய பின்னரும், இக்குறை யிருந்தது. பம்பாயின் நீதிமன் றத்தில் ஒரு வழக்கில் வாதாட எழுந்து நின்றதும் தொண்டை யடைத்துக் கொண்டது. கட்சிக்காரனிடம் பத்திரங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வீட்டை யடைந்தார்.

இந்த ஸங்கோசம் ஏன்? இன்று காந்தியடிக ளின் வாக்கு ஆற்றுப் பெருக்குப்போல் வெளிப்படு கிறது. ஆனால் அந்த வேகத்தில் ஒரு வீண் சொல்லா வது வருவதில்லை. இந்த ஸங்கோசம் சத்தியப் பற்றினாலுண்டானதா? அவர் ஒவ்வொரு சொல் லையும் நிறுத்து நிறுத்துச் சொல்ல விரும்பியதால் இத் தயக்கமேற்பட்டதா? இந்த ஸங்கோசம் ஸத்தியத் தின் வேரை வளர்த்திருக்குமா?

"எனது ஸங்கோசத்தினால் சில சமயங்களில் நான் ஜனங்களின் கேலிக் கிலக்கானதைத் தவிர, எனது இந்த குணத்தினால் எனக்கு யாதொரு நஷ்டமும் ஏற்படவில்லை. இதற்கு மாறாக இதனால் எனக்கு லாபமேயென்பது எனதெண்ணம். வார்த்தைகளைச் சிக்கனமாயுபயோகித்தலைக் கற்றுக்கொண்டது எல்லாவற்றிலும் பெரிய லாபம். தானாகவே என் எண்ணங்களில் ஒரு கட்டுப்பாடு உண்டாகிவிட்டது. என் பேச்சிலும், எழுத்திலும் யோசனையின்றி ஒரு சொல்லும் வருவதில்லை என்று நான் கூறக்கூடும். நான் கூறியதற்காகவோ, எழுதியதற்காகவோ எப்பொழுதும் வருந்த நேர்ந்ததாக எனக்கு நினைவில்லை. சத்தியத்தின் பக்தனுக்கு மௌனமென்பது தன்னடக்கத்திற்குதவும் உறுதியான கருவியென்று அனுபவத்தில் கண்டேன். மிகைப்படுத்திக்கூறல், உண்மையை மறைத்தல் அல்லது மாற்றுதல் என்ற குணம் மனிதனிடம் சாதாரணமாய்க் காணப்படுகிறது. மௌனம் இந்தக் கெட்ட பழக்கங்களைக் களைந்தெறிவதற்கு ஏற்ற சாதனமாகும். குறைவாகப் பேசுவோன், ஒவ்வொரு சொல்லையும் நிறுத்துப் பேசுவான். ஆகையால் யோசனை யில்லாமற் பேசமாட்டான். எனது இந்த ஸங்கோசம் சத்தியசோதனையில் எனக்கு மிகுந்த உதவி யளித்திருக்கிறது."

ஆண்டவன் எவனைக் கண் திறந்து பார்க்கிறானோ, அவனது குற்றங்களும் குணங்களாக மாறிவிடு

கின்றன. சிவபெருமான் விஷ மருந்தி உலகிற் குதவி புரிந்தார். இதனால் அவரது கழுத்து கறுத்துவிட்டது. அது அவருடைய அழகைப் பெருக்கிவிடவும், சங்கரர், நீலகண்டரென்று அழைக்கப்படுகிறார். காந்தியடிகளின் ஸங்கோசத்தினால் அவரிடம் சொற் சுருக்கம், சொற்களை நிறுத்துக் கையாளுதல் போன்ற அநேக சிறந்த குணங்கள் உண்டாகியிருக்கின்றன.

சத்தியத்தில் அவருக்குண்டான பற்று வரவர அவருடைய இயற்கையாகவே மாறிவிட்டது. சத்தியத்தின் பெருமையை அவர் வாலிபத்திலேயே அறிந்து கொண்டார். லண்டன் செல்லும்பொழுது புலால், மது மறுத்தல், பிரும்மசரியம் இவைகளின் விஷயமாகத் தாயின் முன் பிரதிக்ஞை செய்தார். அவர் சத்தியத்தில் உறுதிகொண்டிருந்ததால் இப் பிரதிக்ஞையை நிறைவேற்றுவதில் அவருக்கு யாதொரு சிரமமு முண்டாகவில்லை. தம் லக்ஷியத்திற் கொண்டிருந்த பற்று அவரைப் பள்ளங்களில் விழாமற் காத்தது.

[ 8 ]

## கடவுட் பற்று

"கடவுளின் உருவங்கள் அனேகம். ஆனால் நான் அவரை சத்திய ஸ்வரூபியாக வணங்குகிறேன்—எந்த சத்தியம் அழிவில்லாமல், என்று முள்ளதாய் மாறுமலிருக்குமோ அதுவே கடவுள்." நமது புராணங்களில் பல விடங்களில் பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் ஒரே கடவுளின் மூன்று உருவங்களென்று கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக நோக்கினல் காந்தியடிகளின் அஹிம்சை, சத்தியம், ஈசன் மூன்றும் ஒரு பொருளேயே குறிக்கின்றனவென்று தெரிகிறது. 'ராம' நாமத்தின் மஹிமையை காந்தியடிகள் பின்பு உணர்ந்தார்; ஆனல் அவருக்கு இதில் பற்று முன்னரே ஏற்பட்டுவிட்டது.

குழந்தைப் பருவத்தில் காந்தியடிகளுக்கு பூத பிசாசுகளிடம் பயமிருந்தது; ஆகையால் பல சமயங்களில் இருட்டிற் போக பயந்தார். இவருடைய வீட்டு

வேலைக்காரி 'ரம்பா' வென்பவள் 'ராம' நாமத்தை உச்சரித்தால், பூதத்தை விரட்டும் சக்தி அதற்குண்டென்று சொன்னாள். குழந்தை காந்திக்கு இதனால் ஒரு புதிய ஆயுதம் கிடைத்தது. மேலும் மேலும் 'ராம' நாமத்தில் பற்று உறுதி யடைந்துகொண்டே சென்றது. முதலில் குருட்டு நம்பிக்கையாய், அறிவு சம்பந்த மற்றிருந்தது, வரவர அறிவுக்குகந்ததாகி அனுபவத்தினால் உறுதிபெற்றது. காந்தியடிகள் எழுந்து அமரும் பொழுதும், கொட்டாவி விடும்பொழுதும், பெருமூச்சுடன் 'ஹே! ராமா, ஹே! ராமா,' என்று சொல்லுவதை நான் கவனித்துப் பார்த்திருக்கிறேன். இவர் 'ஹே! ராமா, ஹே! ராமா'என்று சொல்லுவதில் சிறிது சோகமும், சிறிது மனக்குறைவும், சிறிது களைப்பும் இருக்கின்றன. "ஹே! ராமா, கிழவனை ஏன் இன்னும் மாடுபோல் செக்கில் பூட்டி வைத்திருக்கிறாய்? செய்யவேண்டியதைச் சீக்கிரம்செய். என்னை அனுப்பிய வேலையை முடிப்பதில் தாமதம் ஏன்?" என்று அவர் முறையிடுகிறாரோ வென்று நான் சில சமயம் எண்ணியதுண்டு.

ஜெயபுரியின் மகாராஜா பிரதாபசிங்கன் ஒரு கவிஞன். நோயின் கொடுமை சகிக்கமுடியாமல் கடவுளைக் குறைகூறும் கருத்துடன் அவன் இவ்வாறு பாடினான்.

ग्वालीड़ा, थे काई जाणो रे पीड़ पराई ।

थारे हाथ लकुटिया, काँधे कमलिया, थे बन-बन धेनु चराई ॥

"கையிற் கழியும் கரியதோர் கம்பளம்
தோளிலும் தாங்கிடும் யாதவச்சிறியோய்,
கானகத்திடையே கடுவழி நடந்து
ஆவினங்காத்திடு முனக்கு,
பிறர் தம்பிணியும் தெரிந்திடலரிதே."

ஆனால் காந்தியடிகளின் விஷயத்தில் இவ்வாறு நேராமலிருக்கலாம். ஏனெனில், காந்தியடிகளிடம் தைரிய மிருக்கிறது. கடவுளுக்குத் தம்மிடம் மிகுந்த அனுதாப முண்டென்று அவர் அறிவார். அவருக்குக் கடவுளிடம் நம்பிக்கையுண்டு. கீர்த்தி-அபகீர்த்தி, லாபம்-நஷ்டம் இவைகளைப்பற்றிய கவலைகளை அவர் கடவுளின் சரணங்களில் அர்ப்பணம் செய்து விட்டார். இதனால் அவருக்கு அதைரியமோ, அதிருப்தியோ இல்லை. ஆயினும் அவர் ஏங்கிய குரலில் 'ஹே! ராமா, ஹே! ராமா'வென்று கூவுதல் திரௌபதியின் அழைப்பையும், கஜேந்திரனின் பரிதாபக் குரலையும் நினைவூட்டுகிறது.

ஒருசமயம், பக்தரென்று கருதப்படும் ஒரு கனவான் காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். தாம் இரவில் ஒரு கனாக்கண்டதாகவும், கனவில் ஸ்ரீ கிருஷ்ணன் தோன்றி, 'காந்தியின் முடிவு சமீபித்துவிட்டதால் அவர் எல்லா வேலைகளையும் விட்டொழித்து ஈசனுடைய பக்தியில்மட்டும் ஈடுபடட்டும்' என்று சொன்னதாகவும், அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார்.

இது சில வருஷங்களுக்கு முன்பு நடந்த விஷயம். காந்தியடிகள் அந்த நண்பருக்கு "சகோதரா, நான் ஓரிமைப் பொழுதும் ஈசனை பஜிப்பதை மறப்பதில்லை. எனக்கு மக்களின் ஸேவையே ஈச்வர பஜனையாகும். நிற்க, சமயம் நெருங்கிவிட்டதென்று நாம் ஈசனைத் துதிக்கவேண்டும்? நாம் பிறந்தது முதல் நமது உயிர் யமன் கையிலிருக்கிறதென்பது என் எண்ணம். ஆகவே, ஈசனைத் துதிப்பதற்கு நாம் ஏன் முதுமைப் பருவம் வரை காத்திருக்கவேண்டும்? கடவுள் துதி நாம் எந்த நிலையிலும் செய்யற்பாலதாயிற்றே" என்று பதிலெழுதினார்.

अजरामरवत् प्राज्ञो विद्यामर्थं च साधयेत् । *
गृहीत इव केशेषु मृत्युना धर्ममाचरेत् ॥

"மூப்போடு மரணமெய்திடான் போலும்
சேர்த்திடல் கடனே கல்வியும் பொருளும்.
தென்திசைக்கதிபன் நந்தலை மீதிருத்தல் போல்
நெறியினின் றொழுகல் நேரிய தெமக்கே."

அவருக்குக் கடவுளிடம் ஆழ்ந்த பக்தியிருப்பதால் அவர் ஒவ்வொரு பொருளிலும் கடவுளைக் காண்கிறார். ஆச்சிரமங்களில் பாம்பு ஒருவரையும் தீண்டவில்லையெனில், "கடவுளின் கிருபை" என்றும், சின்னஞ்சிறு சம்பவம் நடந்தாலும் "இது கடவுளின் கருணை" என்றும் கூறுகிறார்.

* ஹிதோபதேசம் முகவுரை—௧—3.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்குப் பிறகு, இராஜப் பிரதிநிதியின் மாளிகையிலிருந்து வந்ததும் பத்திரிகை நிருபர்களிடம் ஒரு அறிக்கை தந்தார். அது அச்சமயத்தில் மிகவும் பெருமை வாய்ந்ததாகக் கருதப்பட்டது. அறிக்கை தொடங்கு முன் என்ன கூற வேண்டியது உசித மென்ற எண்ணமும் அவருக்கில்லை. ஆனால் அவர் வாயைத் திறந்ததும், கலைமகளின் அருள்போலும்! சொற்பெருக்கெழுந்தது.

இதைப்போலவே, வட்டமேஜை மகாநாட்டிலும் அவரது முதல் உபந்நியாஸம் மிகச் சிறந்தவைகளில் ஒன்றாகும். அந்த உபந்நியாஸத்திற்கு முன்பும் அவர் ஒன்றும் யோசனை செய்யவில்லை. இதெல்லாம் அவருக்கு சாதாரணமான விஷயங்கள். இந்த இரண்டு சம்பவங்களுக்குப் பிறகு நான் அவரிடம் "தங்களுடைய இந்த அறிக்கைக்குச் சமம் வேறில்லை, இந்த உபந்நியாஸம் ஒப்பற்றது" என்று கூறிய பொழுது "இதில் கடவுளின் கிருபை இருந்தது" என்று பதிலுரைத்தார்.

நாமும் நம்மிடம் யாராவது நமது காரியம் ஒன்று நன்றாயிருந்தது என்று கூறினால், "ஆமாம்! தங்களது தயவினால் நன்றாய் நடந்தது!" அல்லது "கடவுளின் கிருபை" என்று சொல்லலாம். நாம் கடவுளென்று சொல்லும் பொழுது அது ஒரு நடைமுறையாகவோ, அல்லது ஸம்பிரதாயமாகவோ சொல்

கிறோம். ஆனல் காந்தியடிகள் "கடவுளின் கிருபை" என்று கூறும் பொழுதெல்லாம் அவர் உண்மையில் அவ்வாறே உணருகிறார். அவரது நம்பிக்கை உயிருள்ளது. ஸம்பிரதாயத்தைச் சேர்ந்ததல்ல.

துர்நடத்தையுள்ள இவருடைய நண்பனொருவனுண்டு. அவனை, இவர் தன் வீட்டில் வைத்துக்கொண்டிருந்தார். இது ஆப்பிரிக்காவில் நடந்த சம்பவம். அந்த நண்பன் துர்நடத்தையுள்ளவனா யிருந்தும், அவனைச் சந்தேகியாமல் நம்பியிருந்தார். அவனுடைய சில குறைகளையும் இவர் அறிந்திருந்தார். ஆனல் தம் சேர்க்கையினல் அவன் திருந்தி விடுவானென்ற எண்ணமிருந்தது. ஒரு நாள் இவருடைய வேலையாள் ஆபீஸிற்கு வந்து "தங்களுடைய நம்பிக்கையான நண்பன் தங்களை எவ்வாறு ஏமாற்றுகிறனென்று கொஞ்சம் வீட்டிற்கு வந்துபாருங்கள்" என்றான். காந்தியடிகள் அவ்வாறே பார்க்கும்பொழுது, அவன் வீட்டில் ஒரு வேசியை யழைத்து வைத்துக்கொண்டிருந்தான். இவருக்கு வருத்தமுண்டாயிற்று. அவனை வீட்டிலிருந்து விலக்கிவிட்டார். அவனிடம் அவருக்கு அன்பிருந்தது. அவனைத் திருத்தும் நோக்கத்துடனேயே அவனைத் தன்னருகில் வைத்திருந்தார். அவருக்கு இதுவும் கடமையைச் செய்யும் ஒரு முறையேயாகும். இதைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் "கடவுள் என்னைக் காத்தருளினர். எனது நோக்கம் பரிசுத்தமானது. ஆகையால் ஆண்டவன் இனி நான்

ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரிக்கை செய்து குற்றங்களிலிருந்து என்னைத் தப்புவித்தார்" என்று கூறுவதுண்டு. இந்த சம்பவம் அவரது குருட்டு நம்பிக்கைக்கும், குற்றமென்று தெரிந்ததும் உடனே தம் தவறைத் திருத்திக்கொள்ளும் குணத்திற்கும் ஒரு தகுந்த உதாரணமாகும்.

இவரது இரண்டாவது குமாரர் ஸ்ரீ மணிலாலுக்குக் கடுமையான அஸ்திஜ்வரம் (typhoid) வந்த விஷயத்தைக் கீழே காந்தியடிகளின் மொழியிலேயே தருகிறேன்:

"என் இரண்டாவது பையன் அசௌக்கியமாயிருந்தான். அவனுக்கு அஸ்திஜ்வரம் கண்டது. காய்ச்சல் இறங்கவேயில்லை. பயமொரு புறமிருக்க, இரவில் ஜன்னியின் அறிகுறிகள் தென்பட்டன. இந்த நோய்க்கு முன், சிறு பிராயத்தில் அவனுக்கு வைசூரி போட்டியிருந்தது.

டாக்டரைக் கலந்தேன். டாக்டர்—'இதற்கு மருந்து உபயோகமில்லை. இப்பொழுது இவனுக்கு முட்டையும், கோழிக்குஞ்சு சூப்பும் கொடுக்க வேண்டியது அவசியம்' என்று சொன்னார்.

மணிலாலுக்கு வயது பத்து. அவனைக் கேட்டு என்ன பயன்? பொறுப்பாளி நானேயல்லவா? தீர்மானிக்க வேண்டியவன் நானே. டாக்டர் ஒரு பாரசீக கனவான். மிகவும் நல்லவர். 'டாக்டர், நாங்கள் சாக பட்சணிகள். இவை இரண்டில் எதையும் என்

மகனுக்குக் கொடுக்க எனக்கு அபிப்பிராயமில்லை. வேறு ஏதேனும் கொடுக்கக் கூடாதா?' என்று அவரைக் கேட்டேன்.

டாக்டர்: 'உமது பையனுடைய உயிர் ஆபத்தி லிருக்கிறது. பாலேயும் நீரையும் கலந்து கொடுக்க லாம்; ஆனல் அது அவ்வளவு போஷணை தராது. நான் பல ஹிந்துக்கள் குடும்பங்களுக்குப் போகிறே னென்பது உமக்குத் தெரியும். ஆனல் மருந்துக் கென்று நாங்கள் எந்த அவசியமான பொருளையும் கொடுக்கிரும். அவர்கள் அதை மறுப்பின்றி உட் கொள்ளுகிருர்கள். நீரும் உமது பையன் விஷயமாக இவ்வளவு பிடிவாதமாயில்லாதிருந்தால் நல்லது என் பது என் அபிப்பிராயம் என்ருர்.'

'தாங்கள் சொல்வது சரி, தாங்கள் அப்படித் தான் சொல்லவும் வேண்டும். ஆனல் என் பொறுப்பு மிகவும் பெரிது. பையன் பெரியவனுக இருந்தால் அவனுடைய விருப்பத்தை அறிய முயற்சி செய்திருப் பேன். அவன் விரும்புவதைச் செய்யும்படி விட்டு மிருப்பேன். ஆனல், இங்கோ, இவனுக்காக நானே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. இத்தகைய சமயங் களிலேயே மனிதனுடைய தருமப் பற்று சோதிக்கப் படுவதாக நான் கருதுகிறேன். சரியோ, தவருே, மனிதன் மாமிச உணவு கொள்ளாதிருப்பதை நான் தருமமென நம்புகிறேன். உயிர் வாழவென நாம் உப யோகிக்கும் பொருள்களுக்கும் ஒரு வரம்புண்டு. உயிர்

வாழ்வதற்கும் குறிப்பிட்ட சில பொருள்களை நாம் ஏற்கக் கூடாது. எனது மதம் என்னையும், என்னைச் சேர்ந்தவர்களையும் இத்தகைய சமயத்தில்கூட மாமிசம் முதலிய பொருள்களை உபயோகிப்பதைத் தடுக்கிறது. ஆகையால் தாங்கள் எந்த ஆபத்தை எதிர்பார்க்கிறீர்களோ, அதை நான் ஏற்கவேண்டியதே. ஆனால் தங்களிடம் நான் ஓர் உதவி வேண்டுகிறேன். தங்களுடைய சிகிச்சை நான் செய்ய இயலவில்லை; ஆனால் எனக்கு இந்தக் குழந்தையின் நாடியையும், இதயத்தையும் பார்க்கத் தெரியவில்லை. ஜல சிகிச்சை எனக்குக் கொஞ்சம் தெரியும். அந்த சிகிச்சை முறையைக் கையாள விரும்புகிறேன். தாங்கள் முறைப்படி மணிலாலின் உடல் நிலையைப் பார்க்க வந்து, அவனது நிலையில் ஏற்படும் மாறுதல்களை எனக்கு அவ்வப்பொழுது அறிவித்து வருவீர்களாயின் தங்களுக்கு நான் கடமைப் பட்டவனாவேன்' என்றேன்.

டாக்டர் எனது சிரமங்களை அறிந்து என் விருப்பப்படி மணிலாலைப் பார்ப்பதற்கு வர இசைந்தார்.

மணிலாலுக்குத் தனது அபிப்பிராயத்தை நிச்சயிக்கத் தக்க வயதில்லாவிட்டாலும், டாக்டருடன் நான் பேசிக்கொண்டிருந்ததை அவனிடம் கூறி அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

'தங்கள் இஷ்டப்படி ஜல சிகிச்சை செய்யுங்கள். நான் கோழிக்குஞ்சு சூப்போ முட்டையோ சாப்பிட மாட்டேன்' என்று மணிலால் சொன்னான். நான்

இவ்விரு பொருள்களை உண்ணும்படி கூறியிருந்தாலும் அவன் ஏற்றிருப்பானென்பது எனக்குத் தெரியுமாயினும், அவன் கூறியதைக் கேட்டு நான் திருப்தியடைந்தேன்.

'லூயி கூனி'ன் சிகிச்சை முறையை நான் அறிந்திருந்தேன். அவைகளைக் கையாண்டுமிருக்கிறேன். நோயில் உபவாஸம் முக்கியமானதென்று எனக்குத் தெரியும். 'கூனி'ன் முறைப்படி மணிலாலுக்கு இடுப்பு ஸ்னானம் (hip bath) செய்விக்கத் தொடங்கினேன். மூன்று நிமிஷங்களுக்குமேல் நான் அவனைத் தொட்டியில் வைப்பதில்லை. மூன்று நாட்கள் வரை ஆரஞ்சுப்பழ ரசத்தில் தண்ணீரைக் கலந்து கொடுத்து வந்தேன். வேறெதுவும் கொடுக்கவில்லை.

ஜுரம் விடவில்லை. இரவில் சிறிது பிதற்றினான். ஜுரம் 104 டிகிரி வரையில் ஏறிவந்தது. நான் கவலையுற்றேன். குழந்தையை இழந்தேனாயின் உலகம் என்னை என்ன சொல்லும்? அண்ணன் என்ன சொல்வார்? வேறு டாக்டர்களை ஏன் அழைத்திருக்கக் கூடாது? இப்பொழுது தான் அழைத்தாலென்ன? தாய் தந்தையர்களுக்குத் தங்கள் அரை குறையான அறிவைக் குழந்தைகள் விஷயத்தில் உபயோகிக்க என்ன உரிமையிருக்கிறது?

இத்தகைய எண்ணங்கள் என் மனதிலெழும். உடனே இவற்றிற்கு நேர்மாறான எண்ணங்களும் உதயமாகும். 'ஜீவனே, நீ உனக்கு என்ன

செய்கிறாயோ அதையே உன் மகனுக்கும் செய். இதில் கடவுள் திருப்தியடைவார். உனக்கு ஜல சிகிச்சையில் நம்பிக்கையுண்டு; மருந்திலில்லை. டாக்டர் உயிரை யளிக்க முடியாதே. அவரும் கடைசியில் பரீட்சை தானே செய்து பார்க்கிறார். உயிர் நிலைப்பதும் போவதும் கடவு ளொருவர் கையிலல்லவா யிருக்கிறது! கடவுளின் பெயரைச் சொல், அவரை நம்பு. உன் மார்க்கத்தினின்றும் வழுவாதே.'

இவ்வாறு இருவகைப்பட்ட எண்ணங்களால் என் மனம் அலைப்புற்றது. இரவு வந்தது. நான் மணிலாலை என்னருகிற் போட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தேன். ஜலத்தில் நனைத்துப் பிழிந்த துணி யில் அவனைப் போடவேண்டுமென்று நான் நிச்சயித்தேன். உடனே எழுந்தேன். துணியை எடுத்தேன். குளிர்ந்த நீரில் அதை நனைத்துப் பிழிந்து கால் முதல் தலை வரையில் அதில் அவனைச் சுற்றி அதற்கு மேல் இரு கம்பளிகளைப் போர்த்தி விட்டேன். தலையில் நனைத்த துண்டும் வைத்திருந்தேன். உடல், காய்ந்த இருப்புச் சட்டிபோல் தகித்துக் கொண்டிருந்தது. வியர்வை வரவேயில்லை.

நான் மிகவும் களைத்திருந்தேன். மணிலாலை அவனுடைய தாயிடம் ஒப்புவித்துவிட்டு அரை மணி நேரம் திறந்த காற்றில் சுறுசுறுப்பும், சாந்தியும் பெறும் எண்ணத்துடன் சௌபாதியின் பக்கம் சென்றேன். இரவு 10 மணி இருக்கும். மனித நடமாட்டம்

குறைந்துவிட்டது. ஆனால் நான் இதைப்பற்றி நினைக்கவில்லை. 'ஏ, ஈசனே! இந்த தரும சங்கடத்தில் என் மானத்தைக் காப்பாற்று' என்று கடவுளை வேண்டி அதே சிந்தைக் கடலில் மூழ்கி எழுந்து கொண்டிருந்தேன். உதடுகள் 'ராம-ராம' வென்று ஜபித்துக் கொண்டேயிருந்தன. சிறிது நேரத்தில் நான் திரும்பினேன். என் இதயம் படபடவென்றடித்துக் கொண்டேயிருந்தது. வீட்டில் நுழைந்ததும் மணிலாலின் குரல் கேட்டது: 'அப்பா வந்துவிட்டாரா?'

'ஆம், தம்பி.'

'என்னை இதிலிருந்து எடுக்கமாட்டீர்களா? என் உடம்பு எரிகிறதே?'

'ஏன், வியர்க்கிறதல்லவா?'

'அப்பா, நான் வியர்வையில் மிதந்துகொண்டிருக்கிறேன். தயவுசெய்து என்னை வெளியிலெடுங்கள்.'

நான் மணிலாலின் தலையைப் பார்த்தேன். அதில் முத்துக்கள் போல் வியர்வைத் துளிகள் மின்னிக் கொண்டிருந்தன. ஜுரம் குறைந்து கொண்டிருந்தது. கடவுளுக்கு நன்றி கூறினேன்.

'மணிலால், பயப்படாதே. இப்பொழுது உன் ஜுரம் போய்விடும். ஆனால் இன்னும் சிறிது வியர்வை வரட்டுமே?' என்று அவனிடம் சொன்னேன்.

'இல்லை அப்பா, இப்பொழுது என்னை எடுத்துவிடுங்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்றான்.

எனக்கு தைரியம் வந்துவிட்டது. பேச்சிலேயே சில நிமிஷங்களைக் கடத்தினேன். தலையிலிருந்து வியர்வை வெள்ளம் ஓடிற்று. நான் போர்வையை நீக்கிவிட்டு உடம்பைத் துடைத்துக் காயச் செய்தேன். பின்பு தந்தையும் மகனும் நன்றாகத் தூங்கிவிட்டோம்.

காலையில் பார்த்தால் மணிலாலின் ஜுரம் மிகவும் குறைந்திருந்தது. பால், நீர், பழங்களையே உட்கொண்டு நாற்பது தினங்கள் கழிந்தன. என் பயம் நீங்கிவிட்டது, ஜுரம் நீடித்ததாயிருந்தது; ஆனால் வசப்பட்டுவிட்டது. இன்று என் பிள்ளைகளில் மணிலாலே எல்லோரிலும் அதிக ஆரோக்கியமும் தேக வலிமையுமுள்ளவன்.

இது ராமனுடைய கருணையா? ஜல சிகிச்சை, குறைந்த உணவு காரணமா? அல்லது வேறு ஏதாவது உபாயத்தின் பயனென்று யார் தீர்மானிக்க முடியும்? பிறர் தங்கள் தங்கள் நம்பிக்கையின்படி எதுவாகிலும் நினைக்கட்டும்; அச்சமயத்தில் கடவுளே என் மானத்தைக் காத்தார் என்றே நான் நம்பினேன், இன்றும் நம்புகிறேன்."

இந்த முறை "முரட்டு வைத்தியம்" என்கிறார்களே அதுவேயாகுமென்று எனக்குத் தோன்றுகிறது. மற்றவர்களும் இவ்வாறே கருதலாம். இவ்வாறு ஆ த்தை ஏற்பது உசிதமல்ல. ஆனால் "டாக்டர் தான் உயிரைக் காத்துவிடுவதாக எங்கே உறுதி கூற

முடிகிறது? தருமத்திற்கு உகந்ததல்லாததை உயிரைக் காக்கும் பொருட்டாவது எவ்வாறு செய்யலாம்?" என்று கேட்கிறார், காந்தியடிகள்.

மூன்றாவது மகன் ராமதாஸுக்கு சாதாரணக் காயம் பட்டது. அவனுக்கும் இவ்விதமான இயற்கை சிகிச்சையே செய்யப்பட்டது. இதுவும் ஒரு சாதாரண நிகழ்ச்சியே. ஆனால் இதைக் குறிப்பிடும்பொழுதும் அதே ஈச்வர வாதம் வருகிறது. "என்னுடைய முறை முற்றிலும் வெற்றிகரமானதென்று நான் உரிமை கொண்டாடவில்லை. டாக்டர்கள் மட்டும் இவ்வித உரிமை எவ்வாறு கொண்டாட முடியும்? இவ்விஷயங் களைக் குறிப்பிடும் நோக்கம் என்னவெனில், இத்தகைய புதிய முறைகளைக் கையாள விரும்புவோர் தங்கள் விஷ யத்திலேயே முதலில் அதை உபயோகிக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் சீக்கிரத்தில் நாம் உண்மையை அடைகிறோம். கடவுள் இவ்விதச் சோதனையில் ஈடு பட்டவர்களைக் காப்பாற்றுகிறார்."

இந்த வார்த்தைகள் உலக வழக்குப்படி கவைக் குதவாதவை. உலக வழக்கு என்பது எதை ஜனங்கள் பழக்கமாக நம்புகிறார்களோ அதுவேயாகும். ஏனெ னில், உண்மையில் ஆத்மீகமும், உலக வழக்கும் ஒன்றுக் கொன்று முரண்படவே முடியாது. ஆத்மீக முறை வழக்கில் பொருந்தாவிடில், அது வெறும் கற்பனை யாகவே யிருந்துவிடுகிறது. ஆனால் நம்மைச் சேராத தொன்றில் தலையிட நமக்கு அதிகாரம் ஏதென்று நாம்

சுலபமாக வாதிக்கலாம். டாக்டர் எல்லா மறிந்தவரல்லவென்பது உண்மை. மேலும் வைத்தியம் கல்லாத ஒருவன் கற்ற டாக்டரைவிட இன்னும் குறைவாகவே அறிந்தவனாவானென்றும் கூறலாம். ஆனால் இதற்கு பதில் இயற்கை வைத்திய முறைகளினால் நன்மை குறைவாகவோ அதிகமாகவோ இருக்க முடியுமே தவிர தீமையே ஏற்படாதென்று காந்தியடிகள் கூறுவார்.

இன்றுகூட இத்தகைய முறைகளில் அவருடைய ஆர்வம் குறையவில்லை. இன்னும் ஆச்சிரமத்தில், காசம், குஷ்டம் முதலிய பற்பல நோயுள்ளவர்களிருக்கிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை செய்வதில் காந்தியடிகள் மிகுந்த உற்சாகம் காட்டுகிறார். இதில் ஊழியம் புரிதலென்பது ஒரு நோக்கம். நோயாளிக்கு சிகிச்சை செய்வதும், தாழ்ந்தவர்களைக் காத்தலும் அவருடைய சுபாவம். இந்த எளிய நாட்டில் சுலபமாய், சாதாரணமானதாய், பட்டிக்காடுகளிலும் செய்யக் கூடியதாய், அதிகச் செலவில்லாததாய், ஒரு வைத்திய முறையிருந்தால் அது செலவுள்ள வைத்திய முறையைவிட அதிக உபயோகமானதாயிருக்கும் என்ற எண்ணமும் அவருடைய மனதிலுண்டு. ஆதலால் இச் சோதனைகள் நடைபெறுகின்றன. இதிலிருந்து ஏதாவது உபயோகமான முறையைப் பொறுக்கியெடுக்கும் ஆசை அவருக்கு இருந்து வருகிறது. இச் சோதனைகள் சேவை புரியும் கருத்துடன் நடத்தப்படு

வதால், இவை கடவுளை நம்பி நடத்தப்படாவிடில் மன தில் மிகுந்த தளர்ச்சியையும், குழப்பத்தையும் உண்டாக்கும். காந்தியடிகளின் கடவுட் பற்று எச் செயலிலும், எந்நேரத்திலும் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிற தென்பதே நாம் சொல்ல விரும்பிய தாகும்.

"எனது செயல்களெல்லாம் ஆண்டவனின் தூண்டுதலினுல் நடைபெறுகின்றனவென்று நான் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனுல் எனது மிகப் பெரிதும், மிகச் சிறிதுமான காரியங்களைக் கணக்கெடுக்கும் பொழுது, அவைகளெல்லாம் கடவுளின் தூண்டுதலினுலேயே நடைபெற்றனவென்று கூறினுல் பொருத்தமற்றதாகாதென்று தோன்றுகிறது. நான் கடவுளைக் கண்ணுற் கண்டதில்லை. ஆனுல் கடவுளிடம் எனக்குள்ள பற்று அழியாதது. அந்தப்பற்று இப்பொழுது அனுபவமாக மாறிவிட்டது. பற்றை அனுபவமென்று மறுபெயரிட்டழைத்தல் உண்மையைச் சிதைப்பதாகுமென்று யாரும் கூறலாம். இதற்கு நான் சொல்வதென்னவெனில், கடவுள் பற்றைக் குறிப்பிடுவதற்கு என்னிடம் வேறு ஒரு வார்த்தையுமில்லை" என்கிறுர் காந்தியடிகள்.

பிரும்மசரியத்தைப்பற்றி எழுதுகையிலும், அதை அப்பியசிப்பவர்களின் முன்னும் அதே 'ராம'நாமத்தை வைத்திருக்கிறுர். "அந்தப் பிரபுவிடம் அடைக்கலம் புகுந்தாலல்லது எண்ணங்களை முற்றிலும்

வசமாக்குதல் சாத்தியமல்ல. பூர்ண பிரும்மசரியத்தைக் காக்க நான் செய்யும் ஓயாத முயற்சியில் ஒவ்வொரு நொடியிலும் இந்தத் தெளிவான உண்மையை நான் உணருகிறேன்.''

கஸ்தூரிபாய் அம்மைக்கு ஆப்பிரிக்காவில் கொடிய வியாதி வந்தது; அப்பொழுதும் மாமிச சூப்பின் பிரச்சினை எழுந்தது. கஸ்தூரிபாய் டாக்டரின் அபிப்பிராயத்தை ஏற்கவில்லை. அங்கும் நிலைமை கடுமையாக விருந்தது. அப்பொழுதும் காந்தியடிகளின் ஆவேச மொழிகள் அவையே. ''கடவுளை நம்பி நான் என் வழியில் உறுதியுடன் நின்றேன்.'' கடைசியில் வெற்றி கிட்டிற்று.

இதிலும் சிறிய சம்பவங்களில்கூட காந்தியடிகள் ஆண்டவனின் அருளை வர்ணிக்கிறார். தாய் நாட்டிற்குத் திரும்பியதிலிருந்து அவர் யாத்திரை செய்வதெல்லாம் மூன்றும் வகுப்பிலேதான். அந்தக் காலத்திலும் காந்தியடிகளின் பெயரைப் பெரும்பாலானவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் இன்றுபோல் முகத்தைப் பார்த்து எல்லோரும் தெரிந்து கொள்ள முடிந்ததில்லை. போகுமிடங்களில் விஷயம் தெரிந்ததும் தரிசிக்குமாசையுடன் ஜனங்கள் கூடிவிடுவதால் அவர் தனிமையிலிருக்க முடியாதிருந்தது. ஆனால் ரயில் வண்டியிலோ அவரை ஜனங்கள் அறிந்து கொள்ளாத பொழுது இடம் கிடைப்பதே கஷ்டமாயிருந்தது. மேலும், அந்நாட்களில் அவர் தனியாகவே சுற்றி வந்தார்.

பல வருஷங்களுக்கு முன்பு நடந்த விஷயம். காந்தியடிகள் லாகூரிலிருந்து டில்லிக்குச் சென்று கொண்டிருந்தார். அங்கிருந்து மீண்டும் கல்கத்தா போகவேண்டும். கல்கத்தாவில் ஒரு கூட்டம் நடக்க விருந்தது. ஆகையால் நேரத்திற் போய்ச் சேரவேண் டும். லாகூர் ஸ்டேஷனில் வண்டியேற வந்தார். எங் கும் இடமில்லை. கடைசியில் ஒரு கூலி தனக்குப் பன் னிரண்டணு இனும் கொடுத்தால் வண்டியில் இவரை உட்கார வைப்பதாகச் சொன்னான். இவர் இனும் தருவதாக நிச்சயித்தார். ஒரு வண்டியிலிருந்த ஜனங் கள்: "இடமில்லை. சம்மதமானால் நின்றுகொண்டிரு," என்று கூறினார்கள். காந்தியடிகளுக்கு எப்படியாவது ரயிலில் ஏறிவிடவேண்டும்; ஆகையால் நிற்க சம்மதித் தார். கூலியாள், இவரை, திறந்த ஜன்னலின் வழியாக உள்ளே தள்ளிவிட்டு, பன்னிரண்டணுக்களை முடிந்து கொண்டு சென்றான்.

இரவு நேரம். நின்றபடியே பொழுதைக் கழிக்க வேண்டும். இரண்டு மணிநேரம் நின்றே கழித்தார். மெலிந்த உடல், வழிக்களைப்பு வேறு. இன்னும் வண்டியின் இரைச்சல், தூசி, புகை வேறு. இவைகளுக் கிடையில் நின்றபடியே யாத்திரை. இடித்துத் தள்ளி சண்டை செய்யக்கூடியவர்கள் நீட்டி மூடிக்கொண்டு படுத்திருந்தார்கள். ஆனால் இவரோ உட்காருவதற்குக் கூட இடம் கேட்கவில்லை. சிலர் இவரைப் பார்த்து, இந்த விசித்திர மனிதன் உட்காருமிடத்திற்குக் கூட



சண்டை செய்யக் காணோமே என்று நினைத்தார்கள். கடைசியில் அவர்கள் "தம்பி, ஏன் உட்காராமலிருக்கிறாய்?" என்று கேட்டனர். "இடம் இருந்தாலல்லவா?" என்று இவர் பதிலளித்தார். கடைசியில் பெயரை வினவினர். பெயரைச் சொல்லவே நிச்சப்தம் குடிகொண்டது. வெட்கத்தினால் தலைகள் தொங்கிவிட்டன. நாலு பக்கங்களிலும் ஜனங்கள் கைகால்களை மடக்கத் தொடங்கினர். மன்னிப்பு வேண்டினர். தூங்குவதற்கு இடம் கொடுத்தனர் களைப்பினால் மூர்ச்சையடையும் நிலையிலிருந்தார். தலை சுழன்றது. இச்சம்பவத்திலும் காந்தியடிகள் கடவுளின் கருணையைக் காண்கிறார். "எனக்கு மிகவும் அவசியமாக இருந்த சமயத்தில் கடவுள் உதவி அனுப்பினார்" என்கிறார்.

வெள்ளையரின் கொடுமையால் வதைப்படும் குடியானவர்களின் கஷ்டங்களைப் போக்க, சம்பாரன் (பீஹார் மாகாணம்) செல்லும்பொழுது, குடியானவர்களின் சபை கூட்டுகிறார். வெகு தூரங்களிலிருந்து விவசாயிகள் வருகிறார்கள். காந்தியடிகள் அக்கூட்டத்திற்கு செல்லும்பொழுது, தாம் கடவுளின் சன்னிதானத்தில் நிற்பதாக நினைக்கிறார். "நான் மிகைப் படக்கூறவில்லை, ஒவ்வொரு எழுத்தும் உண்மை. அக்கூட்டத்தில் நான் கடவுள், அஹிம்சை, சத்தியம் மூன்றையும் நேராகக் கண்டேன்" என்கிறார்.

பின்பு கைதுசெய்யப்பட்டதும் அதிகாரியின்

முன் அவர் கொடுக்கும் வாக்குமூலமோ காம்பீர்யமும் நேர்மையும் உள்ளதாயிருக்கிறது. "மாஜிஸ்ட்ரேட் அவர்களே, நான் சொல்வதெல்லாம் என் குற்றத்தைப் பொருட்படுத்தாமல் எனக்குக் குறைந்த தண்டனை விதிக்க வேண்டுமென்பதற்கல்ல. நான் தங்கள் கட்டளையை மீறியது என் மனதில் அரசாங்கத்திடம் மரியாதை யில்லாமையாலல்ல. கடவுளின் கட்டளைக்கு முன் தங்களுடைய கட்டளையை ஒப்பமுடியாதிருப்பதாலேயே என்று சொல்ல விரும்புகிறேன்" என்று முடிக்கிறார்.

இது சாதாரண வாசகு அல்ல. ஒரு விதத்தில பயங்கரமான தென்றும் கூறலாம். ஒவ்வொரு மனிதனும் இம்மாதிரி சொல்ல ஆரம்பித்து விட்டால் ஆவது என்ன? "அகக்குரல்," "அந்தர் வாக்கு" அல்லது "ஆகாயவாணி"யைக் கேட்கும் பாக்கியம் ஒவ்வொருவனுக்கும் கிட்டாது. இவைகளுக்கு யோக்கியதை தேவை. காரியங்களுக்குப் பின் தியாகமும் தவமும் இருத்தல் வேண்டும். உண்மை வேண்டும், தைரியம் வேண்டும், விவேகம் வேண்டும், சமதிருஷ்டி வேண்டும், தனக்கெனப் பொருள் சேர்க்கும் எண்ணம் போகவேண்டும். எவன் சேவை புரிவதற்கெனவே உயிர் வாழ்கிறானோ, எவனுக்கு லாப நஷ்டத்தில் பற்று இல்லையோ, அல்லது வேறு ஒரு பற்றுமில்லையோ, எவன் கர்ம யோகத்தை அனுஷ்டித்தவனோ, எவனுக்குக் கடவுளிடம் எல்லையில்லாப் பற்றுண்டோ, எவனிடம் கர்வமென்பது சிறிதுமில்லையோ

அவனே 'அந்தர் வாக்கைக் கேட்பதற் குரியவன். ஆனால் பொய் வேடம் யாரும் போடலாம். "என் மனச்சாட்சி சொல்லுகிறது" என்று அநேகர் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். காந்தியடிகளைப் போல் நடித்தல் நிச்சயமாக ஆபத்தானது. ஆனால் உலகில் எந்த நல்ல பொருள் தான் தவறாக உபயோகப் படுத்தப்படவில்லை!

நம் முன்னுள்ளது காந்தியடிகளுக்குக் கடவுளிடமுள்ள பற்றைக் காட்டும் விஷயம். பையனுடைய ஜுரம் விடுவது கடவுளின் கருணையினால், வண்டியில் இடம் கிடைப்பது ஆண்டவன் கிருபையால், அரசாங்கத்தின் கட்டளையை மீறுவது ஈசனின் கட்டளைப் படி. இத்தகைய மனிதரிடம் உலக வழக்கில் பேசுவோருக்கு இராஜப் பிரதிநிதி வில்லிங்டனுக்கு ஏற்பட்டது போல் சில சமயங்களில் அருவருப்புண்டாகிறது இயல்பே. கடைசியில் காந்தியில்லாமல் காரியமும் நடைபெறுவதாயில்லை. வெறுப்பிருந்தால் இருக்கட்டும். சுற்றிப் பேசுவதாலுண்டாகும் சிக்கல் இருந்தாலும் இவரால்தானே வேலையாக வேண்டியிருக்கிறது! ராஜகோட்டில் மரணம் வரை உபவாஸ மேற்ற பொழுது "உபவாஸம் தொடங்கு முன் எனக்கு அறிவித்திருக்கலாகாதா? தாங்கள் என்னை அறிந்திருந்தும் ஏன் இவ்விதம் செய்தீர்கள்?" என்று இராஜப் பிரதிநிதி லின்லித்கோ பிரபு ஒரு தந்தியனுப்பினார். "ஆனால் நான் என் செய்வேன். 'அகக்குரல்'

எழும்பொழுது ஆலோசனை ஏது, கலந்து யோசிப்ப தேது?" என்று பதிலளித்தார் காந்தியடிகள்.

எடுத்ததற்கெல்லாம் கடவுளை முன்னிட்டுச் செய்வது, பேசுவதென்ற இவரது பழக்கம் நடை முறைக்கு விரோதமானதல்ல. காந்தியடிகளுக்கு ஒவ்வொரு விஷயத்திலுமிருக்கும் தார்மிக நோக்கை, நாம் புரிந்து கொள்வது கஷ்டம். அவரது உண்மையான கடவுள் பற்றை நம்மால் அறிய முடியாது. ஆகையால் சில சமயங்களில் அனுப்பும், வேறு சமயங்களில் அருவருப்பு முண்டாகிறது. கம்பியில்லாத் தந்தியின் விஞ்ஞானத்தை நாம் அறிந்து கொள்ளாவிடில், அதை நமக்கு அறிவிக்க விரும்பும் விஞ்ஞானியிடம் என் நாம் அனுத்துக்கொள்ள வேண்டும்? நமக்கு அவனது பாஷை புரியவில்லை; அதனால் அந்த பாஷையில் (நம்முடன்) அவ்விஞ்ஞானத்தைப்பற்றிப் பேச விரும்புவோனிடம் அருவருப்பா கொள்வோம்? காந்தியடிகளின் நிலைமையும் அதுவே. ஆத்ம விஞ்ஞானத்தின் ரகசியத்தை அவர் புத்தகத்தில் படிக்கவில்லை, அனுஷ்டானத்தில் கண்டு கொண்டிருக்கிறார்.

காந்தியடிகளின் மனதில் தருமப் பற்று உதித்த பொழுது அநேக சாஸ்திரங்களைப் பயின்றார். ஹிந்து மதத்தை ஆராய்ந்தார். இஸ்லாத்தின் நூல்களைப் படித்தார். பாரசீக மதப் புத்தகங்களைப் பயின்றார். சித்தத்தை நிர்மலமாய் வைத்துக் கொண்டு, நடு நிலைமையில் நின்று எல்லா மதங்களின் தத்துவங்களையும்

அறிய முயன்றார். धर्मस्य तत्त्वं निहितं गुहायाम् * பற்றற்றவராக குகைக்குள் மறைந்திருக்கும் சத்திய தருமத்தை அறிய முயற்சித்தார். இதனால் அவரது தன்னலமறுப்பு வளர்ந்தது. அவரது முயற்சி தீவிரமாயிற்று. சத்தியம் கிட்டிற்று. அவருடைய பலம் பெருகிற்று. அவரிடம் நன்மை தீமையை யுணரும் பகுத்தறிவு ஓங்கியது. இவைகளுடன் உறுதியும் வலுவடைந்தது. அவரது உறுதி உருக்கிரும்பை யொத்ததாக ஆயிற்று. ‘அகக்குரல்’ கேட்கத் தொடங்கிற்று. இந்த ‘அகக் குரலை’ப் பற்றிப் பேசுவதில் அவரது ஸங்கோசம் பறந்தது.

* மகாபாரதம், வனபருவம்-யட்ச பிரச்னம்.

## [ 9 ]

## ஆகாயத்தில் பறப்பவரா ?

அவர் ஆகாயத்தில் பறப்பவரா? காரியவாதியல்லவா? அப்படியானல் ஒரு விஞ்ஞான சாஸ்திரி காரியவாதியா யில்லாமலிருப்பாரு வென்றும் கேட்கலாம். காந்தியடிகளுக்கு எழுபத்தோரு வயதாகிவிட்டது. இந்த எழுபத்தோராண்டுகளில் இவரடைந்த புகழ் வேறு எந்த மஹாபுருஷனும் பெறவில்லை. உலகம் இவரை மஹாத்மாவாக அறிந்திருப்பதைவிட மாபெரும் அரசியல் தலைவனென அதிக மறிந்திருக்கிறது. குறுகிய நோக்குள்ள ஆங்கிலேயர்கள், இவரை ஏமாற்றுவோன், மோசக்காரன், கபடன், சூழ்ச்சி செய்யும் ராஜதந்திரி என நினைக்கிருர்கள். குருட்டுப் பிடிவாதமுள்ள முகம்மதியர்கள் இவரை, ஹிந்து ராஜ்யத்தை அமைக்க விரும்பும் துஷ்டத்தனமும், தந்திரமுமுள்ள ஹிந்துவெனக் கருதுகிருர்கள். இதிலிருந்து இவர் ஆகாயத்தில் பறக்கும் நடைமுறை யறியாத மனிதர் அல்ல

வென்பதாவது வெளிப்படுகிறது. இந்தியாவென்ற ஓடத்தை, முதல் இருபது வருஷங்கள் ஆப்பிரிக்காவி லும், பின்னர் இருபத்தைந்து வருஷங்கள் இந்தியாவி லும் செலுத்துவதில் இவர் காட்டிய சாமர்த்தியம், தைரியம், துணிவு இவைகளைக் கண்டு நாம் திடுக்கிட நேரிடுகிறது. இது நடைமுறையறியாத மனிதனுடைய வேலையல்ல. ராஜீயத் துறையில் இவர் ஏகசக்ராதிபதி யாயிருந்திருக்கிறார். எவனும் இவரது அதிகாரத்தை எதிர்க்கவில்லை; எதிர்த்தவன் மண்ணைக் கவ்வினன். காந்தியடிகள் இன்று ராஜீய உலகில் ஒரு இன்றியமை யாத, விலக்க முடியாத மனிதராகிவிட்டார். இது ஆகாயத்தில் பறப்பதற்கு ருசுவாகுமா? இவரிடம் அன்பின் பலத்தைத் தவிர வேறு என்ன பலமிருக் கிறது? ஆனால் இந்த அன்பின் பலம், இவரைச் சேர்ந் தவர்கள் மனதில் நன்ருகப் பதிந்திருக்கிறது. இவரை எதிர்ப்பவர்களிடமும் இந்த அன்பு பதியாமலில்லை. இத்தகைய அரசியல் தலைவரை யார்தான் 'காரியவாதி யல்லவெனக் கூறுவார்? எந்த மனிதன் தேச மக்க ளிடை ராஜீய, ஆன்மீக, ஒழுக்கத் துறைகளில் பல மான எழுச்சியை யுண்டாக்கி, இப்பல்வேறு துறைகளி லும் மென்மேலும் மக்களை எழச் செய்கிருனே, அவனை எவன் ஆகாயக் கோட்டை கட்டுவோனெனக் கூறுவான்? காந்தியடிகளைக் காட்டிலும் சாமர்த்திய மும், காரியவாதியுமான ராஜநீதி வல்லவனைக் காண்ப தரிது என்பது என் கருத்து.

ஆனால் உண்மை என்னவெனில் காந்தியடிகளின் வாழ்க்கையில் ராஜீயத்திற்கு இரண்டாவது இடம் தான் உண்டு. முக்கிய இடம் தரும நீதிக்குத்தான் ஏற்பட்டது. அவருக்கு மோக்ஷத்தை யடைய ராஜீயம் உதவியாயிருக்கிறது. அதனால்தான் அவர் ராஜீயத்தில் இறங்கினார். கதர், ஹரிஜன வேலை, இயற்கை-சிகிச்சை, எல்லாம் மோக்ஷத்திற்குதவி புரிபவை. அவரது குறிக்கோள்—கடவுளைத் தரிசித்தல். மேற் கூறிய எல்லாச் செயல்களும், வெறும் ஸாதனங்களாகும். காந்தியடிகளை வெறும் ராஜீயத் தலைவரென்று கருது கிறவர்களுக்கு, அவர் கடவுள் பெயரை அடிக்கடி சொல்லுதல், அவரது பிரார்த்தனை, அவரது அஹிம்ஸை, அவரது அகக்குரல், அவரது எல்லா ஆத்மீகச் செயல்கள் ஆகியவை யெல்லாம் புதிர்களா யிருக்கின்றன. அவரை ஆத்மஞானியாகக் கருதுகிறவர்களுக்கு அவரது ராஜீய வேலை வெறும் உபகரணமாகத் தோன்றும்.

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते ॥

"யோகத்தேற விரும்பிய முனிவன்
கருமமே கருவியாய்க் கொண்டிடுவானே
யோகத்தமர்ந்த வய்யோகி மேலோங்கிட
உள்ளமைதியே உதவிடுமென்பர்."

கீதையின் இந்த உண்மையை அறிந்துகொண்டு நாம் காந்தியடிகளை ஆராய்வோமாயின், அவர் புதிரல்ல வென்பது தெளிவாகும்.

" அப்படியாயின் ஒரு ஆன்மீகவாதி ராஜீயத்தை நன்கு நடத்த முடியுமா?" என்று பலர் வினவுகின்றனர்.

அவரால் நடத்த முடியாதென்றால், ஒரு பொய்யன், சோம்பேறி, பேராசை கொண்டவன், சுயநலமுள்ளவன், தருமமற்றவன் நடத்த முடியுமா? ஒரு சுயநலமற்ற, கடவுள் பக்தன் ராஜீயத்தை நடத்த முடியாதெனில் நாம் கீதையைக் கிழித்து குப்பையில் போடவேண்டியதே. ராஜீயமென்பது, பொய், தந்திரம் —மோசம் இவைகளின் கலையெனில் **यतो धर्मस्ततो जयः।** * 'தருமமெங்கோ வெற்றியங்கு' என்றதற்குப் பொருளேயில்லை.

தருமம், ராஜீயம் இரண்டும் முரண்பட்டவையென்று நாம் தவறாக எண்ணி யிருக்கிறோம். காந்தியடிகள் இத் தவறைக் களைந்தெறிந்து, தன் செயல்களினால் அறமும், பொருளும் வேறல்ல வென்பதைக் காட்டியிருக்கிறார். எல்லாவற்றிலும் பெரிய பொருள் தான் 'பரம்பொருள்' (**परमार्थ**) என்று கீதை புகட்டியதைக் காந்தியடிகள் நடத்திக் காட்டுகிறார். எதை நாம் படிப்பதற்கென்று மதித்திருந்தோமோ, அது அனுஷ்டிப்பதற் கேற்பட்டதே யன்றி படிப்பதற்கு மாத்திரமல்லவென்று காந்தியடிகள் கூறுகிறார். காந்தியடிகள் புதித-யொன்றும் கண்டுபிடிக்கவில்லை. ராஜநீதி, தரும

* மகாபாரதம், பீஷ்மபர்வம், XXI-11.

நீதி இரண்டையும் ஸ்ரீ கிருஷ்ணன் இணைத்ததைப் போன்றும், ஜனகன் அரசனுயிருந்தும், தபசியாயிருந்ததைப் போன்றும், காந்தியடிகள் கர்மயோகத்தை தம் செயலால் தெளிவாக்கினுர். தூரு ஏறியிருந்த அறவாளை காந்தியடிகள் மீண்டும் தீட்டிப் புதுப்பித்து விட்டார்.

## [ 10 ]

### உபவாஸம்

1933-ஆம் வருஷம் ஏப்ரல் 29-ஆம் தேதி. அந் நாட்களில் ஹரிஜனப் பிரச்சினை காந்தியடிகளை மிகுந்த யோசனையிலாழ்த்தி வந்தது. எரவாடா ஒப்பந்தத்திற்குப் பிறகு தேசத்தில் ஒரு புதிய ஊக்கம் உண்டாகியிருந்தது. பல விடங்களிலும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஹரிஜனங்களுக்குச் செய்த கொடுமையை எண்ணி உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள் பச்சாத்தாபப்படத் தொடங்கினார்கள். ஹரிஜன-சேவா-சங்கம் பலமாகத் தன் சேவைகளை விஸ்தரித்து வந்தது. காந்தியடிகளின் வியாஸங்கள் ஹரிஜன வேலையில் ஓர் புதிய எழுச்சியை யுண்டாக்கின. சத்தியாக்கிரஹம் ஓய்ந்து விட்டது. காந்தீயம் இனி என்றும் எழாதவாறு அழிந்துவிடப் போவதாக வில்லிங்டன் நம்பியிருந்தார். ஆனால் பிரதம மந்திரி ராம்ஸே மாக்டனல்டின் தீர்ப்பை எதிர்த்து காந்தி

யடிகள் மேற்கொண்ட மரணம் வரை உபவாஸ மானது, ஒரே நொடியில் தேசத்தில் பரவியிருந்த சோர்வை நீக்கி, மக்களிடை புத்துயிரை யுண்டாக்கி விட்டது. மக்கள் சத்தியாக்கிரஹத்தை அப்படியே விட்டு விட்டு, ஹரிஜன வேலையில் மும்முரமாய் இறங்கினார்கள். இது தெய்வீகச் செயலாகும். பல வருஷங்களாக காந்தியடிகள் ஹரிஜன வேலைக்குப் பிரசாரம் செய்து வந்தார். ஆனால் உயர் வருண ஹிந் துக்களின் இதயத்தைத் தட்டி யெழுப்ப முடியவில்லை. பல ஆண்டுகளில் நடை பெறாத இவ்வேலை, திடீ ரென்று வெகு வேகத்துடன் நடந்தேறியது. ஒவ் வொரு காரியத்திலும் நேருவதுபோல், ஹரிஜன வேலை யிலும் நன்மையுடன் தீமையும் வளர்ந்தது. ஒரு பக் கத்தில் ஹரிஜனங்களுடன் ஆழ்ந்த அனுதாபம் வளர்ந்தது; மற்றொரு பக்கம் குறுகிய மனமும் குருட்டு நம்பிக்கையு முள்ளவர்களிடையில் பிடிவாதம் மிகுந்தது.

ஹரிஜனங்கள் விஷயத்தில் நடந்து வந்த அநியா யங்களை நவீன கருத்துக்கள் கொண்ட நகரவாசிகள் கற்பனைகூடச் செய்ய இயலாது. இந்த ஏழுவருஷங் களில் உயர்ந்த வருண ஹிந்துக்களின் கருத்துக் களில் எதிர்பாராத மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. அந்நாட்களிலோ நிலைமை மிகவும் பயங்கரமாயிருந் தது. தக்ஷிணத்திலோ தீண்டாமை மட்டுமல்ல; சில வகை ஹரிஜனங்களைப் பார்ப்பதே பாபமாகக் கருதப்

பட்டுவந்தது. ஹரிஜனங்கள் விசேஷ தினங்களில் ஹல்வா செய்யக் கூடாதென்பது, நெய்யில் பூரி செய்யக்கூடா தென்பது, அவர்களைக் காலில் வெள்ளிக் காப்பு அணியாமல் தடுத்தல், குதிரை சவாரி செய்யக் கூடாதெனல், ஓட்டு வீடு கட்டக்கூடா தெனல்— இந்த கொடுமைகள் அநேகமாக நாட்டின் எல்லா பாகங்களிலும், எல்லா மாகாணங்களிலும் அப்பொழுது சாதாரணமாயிருந்தன; இப்பொழுது மிகவும் குறைந்துவிட்டன.

இந்த விழிப்பின் காரணமாக, ஹரிஜனங்கள் சிறிது துணிவு பெறவே, பழைய பிடிவாதக்காரர்களுடைய கோபம் பொங்கியெழுந்தது. பல விடங்களில் ஹரிஜனங்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். இந்தச் செய்திகளெல்லாம் சிறையிலிருந்த காந்தியடிகளுக்கு எட்டிவந்தது. இவ்விபரீத நிகழ்ச்சிகளினுல் அவருடைய துக்கம் அதிகரித்தது. தீண்டாமை ஹிந்து மதத்தில் ஓர் களங்கம். உயர்ந்த வருணத் தலைவரின் மேல் இப்பாபத்தின் பொறுப்பு இருக்கிறதென்று காந்தியடிகள் விடாமல் கூறி வந்திருக்கிறுர். ஹரிஜனங்களிடம் நேர்மையாக நடந்து நாம் பாபத்திற்குப் பரிகாரம் செய்வோமென்று காந்தியடிகள் எப்பொழுதும் சொல்வது வழக்கம். காந்தியடிகள் தாமே மேல் வருணத்தவராகையால் இக்கொடுமை அவரை மிகவும் துன்புறுத்தி வந்தது. அவர் இதயத்தில் ஒரு புயல் எழுந்தது. செய்யவேண்டுவதைப்

பற்றி பற்பல யோசனைகள் எழுந்தன. பண்டிதர்க ளுடன் கடிதப் போக்குவரவு நடந்து கொண்டிருந் தது. “கடவுள் ஏன் இந்தக் கொடுமையை நடக்கும்படி விடுகிறான். ராவணன் ராட்சஸன்; ஆனால் தீண்டாமை ராட்சஸியோ ராவணனை விடக் கொடியவள். இந்த ராக்ஷஸியை தருமத்தின் பெயரால் நாம் பூஜிக்கும் பொழுது நமது பாபத்தின் சுமை இன்னும் அதிகமாகி விடுகிறது. இதைக் காட்டிலும் நீக்ரோக்களின் அடி மைத்தனம் எவ்வளவோ சிறந்தது. இந்த தருமத் தின்—இதைத் தருமமென்று கூறின்—துர்நாற்றம் என் மூக்கைத் துளைக்கிறது. இது ஹிந்து மதமேயல்ல. நான் ஹிந்து மதத்தின் மூலமாகவே, கிருஸ்தவ மதம், முஹம்மதிய மதம் இவற்றை மதிக்கக் கற்றேன். இந்தப் பாபம், ஹிந்து மதத்தின் அங்கமாக எவ்வாறு ஆகமுடியும்? ஆனால் என்ன செய்யலாம்?” என்று மனம் நொந்தார்.

இம்மாதிரி நினைந்து நினைந்து காந்தியடிகள் ஏப் ரல் மாதம் 29-ம் தேதி இரவு சிறையில் தூங்கினார். சிறிது நேரமே தூங்கியிருப்பார். இதற்குள் இரவு பதி னொன்று மணியடித்தது. சிறை நிச்சப்தமாயிருந்தது. காவற்காரர்கள் மட்டும் விழித்துக் கொண்டிருந்தார் கள். பதினொரு மணிக்குச் சிறிது நேரத்திற்குப் பிறகு காந்தியடிகள் விழித்தெழுந்தார். தூக்கம் பறந்து விட்டது. மனதில் பெருங்கடலிலெழுவது போன்ற ஒரு வகைக் கொந்தளிப்பு உண்டாயிற்று.

குழப்பம் மிருந்தது. இதயத்தினுள் ஒரு போர் நடந்து கொண்டிருப்பது போல் தோன்றிற்று. இதற்கிடையில் ஒரு குரல் கேட்டது. இக்குரல் தூரத்திலிருந்து வருவது போல் தோன்றிற்று; யாரோ அருகிலிருந்து கூறுவது போலுமிருந்தது. ஆனால் அக்குரலின் கட்டளையை மீறுதல் சாத்தியமில்லாதிருந்தது. "உபவாஸமிரு" என்றது அக்குரல். காந்தியடிகள் இதைக் கேட்டார். அவருக்கு சந்தேகமில்லை. இது கடவுளின் குரல் என்று அவருக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று. உடனே மனப்போர் ஓய்ந்தது. குழப்பம் கலைந்தது. காந்தியடிகள் நிம்மதியடைந்தார். உபவாஸம் எவ்வளவு தினங்கள் வரை செய்யவேண்டும், எப்பொழுது தொடங்க வேண்டுமென்பதைத் தீர்மானித்து விட்டு இதைப் பற்றி ஒரு அறிக்கையும் எழுதிமுடித்தார். பிறகு அயர்ந்து தூங்கினார்.

காந்தியடிகள், பொழுது விடிய நான்கு நாழிகைக்கு முன்ன ரெழுந்து ஸ்ரீ. வல்லபபாய் படேல், ஸ்ரீ. மகாதேவ தேசாய் இவர்களுடன் பிரார்த்தனை செய்தார்.

उठ जाग मुसाफ़िर भोर भयो,
अब रैन कहाँ जो सोवत है।

"விழித்தெழு,யாத்திரி! விடிந்தது பொழுது,
கழிந்த பினிரவும் கண் துயில் ஆமோ?"

இந்தப் பாட்டை ஸ்ரீ. மகாதேவ தேசாய் அநாயாசமாகப் பாடினார். காந்தியடிகள் ஸ்ரீ. மகாதேவைப் பார்த்து "நீ இரவில் விழித்திருக்கிறாய், ஆதலால்

சிறிது களைப்பாறு” என்று கூறினார். ஸ்ரீ. மகாதேவ் படுத்துறங்கினார். காந்தியடிகள் செய்திருந்த பயங்கரமான தீர்மானத்தைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. தாம் தயாரித்திருந்த அறிக்கையை காந்தியடிகள் ஸ்ரீ. வல்லபபாயிடம் தந்தார். சர்தார் அதை ஒரு முறை படித்து, பிரமித்துப் போனார். இதில் வாதிப்பதற்கு ஒன்றுமிடமில்லை. மேலும் சர்தாருக்கோ காந்தியடிகளின் சுபாவம் நன்றாகத் தெரியும். “நயகரா நீர்வீழ்ச்சியைத் தடுப்பதற்குச் செய்யும் முயற்சி வீண். மகாதேவ், இவரைக் காட்டிலும் அதிகப் புனிதமும், புத்தியுமுள்ளவர் யார்? யாராவது இருந்தால் அவர் இவரோடு தர்க்கம் செய்யட்டும். என்னால் முடியாது” என சர்தார் ஸ்ரீ. மகாதேவிடம் கூறிவிட்டு, கடவுள் கட்டளை என்றெண்ணி சும்மா விருந்தார்.

ईश्वरेच्छा बलीयसी ।

“கடவுள் விருப்பமே வலுத்தது.”

ஸ்ரீ. மகாதேவ தேசாய் காந்தியடிகளுடன் சாதாரணமாக வாதம் செய்து பார்த்தார். ஆனால் கடைசியில் கடவுளின்மேல் பாரத்தைப் போட்டு சும்மா இருந்து விட்டார். மறுநாள் எல்லாவிடங்களிலும் செய்தி பரவிவிட்டது. நாடு முழுவதும் திடுக்கிட்டது. நான் ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவன். என்னிடமும் செய்தி வந்தது. அதில் காந்தியடிகள் என்னைப் பூனா வரவேண்டாமென்றும், இருக்குமிடத்தி

லேயே என் கடமையைச் செய்யும்படியும் கூறியிருந் தார். இச் செய்தியைக் கேட்டு எனக்கும் தக்கர் பாபாவுக்கும் விசேஷக் கவலை யுண்டாகவில்லை. காந்தி யடிகள் இதற்குமுன் பல கொடிய ஆபத்துக்களி லிருந்து தப்பியதுபோல் இச் சோதனையிலிருந்தும் தப்பி விடுவாரென்று எனக்கு உறுதியான நம்பிக்கை யிருந்தது. "கடவுள் நன்மை செய்வார். நாங்கள் தங்களுக்காக அல்லும் பகலும் பிரார்த்தனை செய் கிறோம். தங்களது உபவாஸம் வெற்றி பெற்று யாவருக்கும் நன்மை செய்க" என்று பதில் எழுதி னேன்.

ஆனால் ராஜாஜிக்கு இவ்வளவு சீக்கிரத்தில் எங்கே சமாதானம் உண்டாகிறது? காந்தியடிகளுடன் மிக வும் வாதாடினார். ஒன்றும் பயனில்லை. தேவ தாஸும் மிகுந்த விசனத்துடன் வேண்டினார். ஆப்பி ரிக்காவிலிருந்து ஜெனரல் ஸ்மட்ஸும் இவ்விதம் செய்ய வேண்டாமென ஒரு நீண்ட தந்தியனுப்பினார். ஆனால் கடவுளின் கட்டளையை மீறி காந்தியடிகள் எவர் சொல்வதையும் கேட்பாரா? உபவாஸம் நடந்து கொண்டிருப்பதை அரசாங்கம் அறிந்ததும் அவரை லேடி டாகர்ஸி இல்லமான "பர்ணகுடி"யில் சேர்த்து விட்டது.

இந்த இருபத்தோரு நாட்களின் உபவாஸம் ஒரு சிரம சாத்தியமான விஷயம். இதற்குச் சில மாதங் களுக்கு முன்னரே ஒரு உபவாஸம் நடந்திருந்தது.

அதனால் காந்தியடிகளுக்கு மிகுந்த பலஹீனமுண்டா யிருந்தது. அந்த முன் உபவாஸத்தில் சிற்சில தினங்களி லேயே அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இந்த உபவாஸத்திலிருந்து பிழைப்பாரா வென்று அநேகருக்குச் சந்தேக மிருந்தது. ஆனால் காந்தியடிகளோ, "எனக்கு மரணத்தில் ஆசையில்லை. நான் ஹரிஜன சேவைக்காக உயிர் வாழ விரும்பு கிறேன். ஆனால் இறக்கவேண்டி யிருப்பினும் கவலை யேன்? தீண்டாமையின் களங்கம் நான் அறிந்ததை விட அதிக ஆழமானது. ஆகையால் நானும் என் தோழர்களும் உயிர் வாழவேண்டின், இருப்பதை விட அதிகப் புனிதமாகவேண்டும். நான் ஹரிஜனங் களுக்குச் சேவைபுரிய வேண்டுமென்பது கடவுளின் கருத்தாயின், எனது உடலுக்கு உணவு நின்ற பின்னரும், கடவுள் ஆன்மீக உணவினால் இவ்வுடலை நிலைக்கச் செய்வார். மேலும் எல்லோரும் தங்கள் வேலை யைச் செய்து கொண்டிருந்தால், அதுவும் எனக்கு உணவுபோலுதவும். ஒருவரும் தன்னிடத்தை விட்டு நகர வேண்டாம். எவரும் உபவாஸத்தை நிறுத்தும்படி என்னிடம் கூறவேண்டாம்" என்று கூறினார்.

1933 மேயீ 8உ உபவாஸம் தொடங்கி, 29உ ஆண்டவனருளால் வெற்றியுடன் முடிவுபெற்றது. உப வாஸம் முடிந்து பல தினங்கள் சென்ற பின்னர், "இந்த உபவாஸம், நான் இருபத்தோரு தினங்கள் ஓயாது நடத்திய பிரார்த்தனையாகும். இதனால் நான்

பெற்ற நற்பயனை இப்பொழுது உணருகிறேன். இந்த உபவாஸத்தினால் வயிறு உணவில்லாம லிருப்பதோடு, எல்லா இந்திரியங்களும் உணவின்றி யிருக்கின்றன. கடவுளிடம் மனம் ஐக்யமாகி விட்டால் உடலின் செயல்க ளெல்லாவற்றையும் நாம் மறந்துவிடுகிறோம். அதன் எல்லையைத் தொடும்பொழுது கடவுளைத் தவிர மற்றெல்லாவற்றையும் மறந்துவிடுகிறோம். இந்நிலை ஓயாத முயற்சி, வைராக்கியம் இவைகளினாலேயே கிட்டும். ஆகையால் இத்தகைய உபவாஸத்தை ஒருவித மான கலப்பற்ற கடவுள் பக்தியென்று கூறவேண்டும்" என்று காந்தியடிகள் சொன்னார்.

1924-ஆம் வருஷ கோடைகாலம். காந்தி யடிகள் சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்திருந்தார். அபெண்டிஸைட்டிஸு (வயிற்று ரணம்) க்காக சஸ்திர சிகிச்சை நடைபெற்றது. உடல் சிறிது மெலிந்திருந் தது. ஆகையால் ஆரோக்கிய விருத்திக்காக ஜுஹூ வில் தங்கியிருந்தார். நான் தினந்தோறும் அவருடன் உலாவுவது வழக்கம். அருகில் அமர்ந்திருப்பேன். பல மணி நேரம் பற்பல விஷயங்களைப் பற்றி அவருடன் வாதிப்பேன். ஒரு நாள் கடவுளைப் பற்றி பேச்சு வரவே, "தாங்கள் கடவுளை கண்ணுற் கண்டதாக ஒப்புக் கொள்கிறீர்களா ?" என்று வினவினேன்.

" இல்லை. நான் அவ்வாறு நம்பவில்லை. நான் ஆப் பிரிக்காவிலிருந்தபொழுது கடவுளை யண்டிவிட்டதாக எனக்குத் தோன்றிற்று. ஆனால் அதற்குப் பிறகு

எனது நிலை உயரவில்லையெனத் தோன்றுகிறது. இது மட்டுமல்ல; யோசித்துப் பார்த்தால், பின்னே சென்று விட்டதாகவும் தோன்றுகிறது. எனக்குக் கோபம் வருவதில்லை என்றல்ல. நான் கோபத்திற்கு சாக்ஷியாயிருக்கிறேன். ஆகையால் கோபத்தினால் ஏற்படும் தீமைகள் என்னிடம் நீடித்திருப்பதில்லை. ஆனால் எனது முயற்சி அதி தீவிரமானது. இந்த ஜன்மத்திலேயே கடவுளை தரிசித்துவிடலாமென்ற ஆசை கொண்டிருக்கிறேன். முயற்சி செய்துகொண்டிருக்கிறேன், முடிவு கடவுள் கையிலிருக்கிறது" என்றார்.

இப்பேச்சு நிகழ்ந்து இன்று பதினாறு வருஷங்களாகிவிட்டன. இதன் பிறகு எனக்கு இவ்வித ஆசை எழவுமில்லை; இத்தகைய கேள்வி கேட்டதுமில்லை. ஆனால் கடவுளிடம் அவருக்குள்ள பற்றும், நம்பிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

"இப்பொழுது என்னால் அதிக தர்க்கம் செய்ய முடியவில்லை. எனக்கு மௌனம் மிகவும் பிடித்தமாயிருக்கிறது. மௌன பாஷையினால் ஒன்றும் பயனில்லை என நான் நம்பவில்லை. உண்மையில் வாய்ப் பேச்சை விட, மௌனப் பேச்சுக்கு மிகவும் அதிகமான சக்தியுண்டு. ஜனங்கள் சத்தியாக்கிரகம் என்கிறார்கள். சத்தியாக்கிரகம் தொடங்கினால், முன்பு யாத்திரைகளும் உபந்நியாஸங்களும் செய்ய நேர்ந்ததுபோல் இப்பொழுது அவசியமில்லை என்று நிச்சயமாய் நம்புங்கள். நான் சேவாக்கிராமத்தி

விருந்து கொண்டே, தலைமையேற்று நடத்துவேன் என்ற நம்பிக்கை யுண்டாகிவிட்டது. எனக்குக் கடவுளின் தரிசனம் கிட்டிவிடுமானால் இதுவும் செய்ய வேண்டிய அவசியமிராது. நான் எண்ணிய மாத்திரத்தில் எதுவும் கைகூடும். அந்நிலை யெய்துவ தற்காகவே நான் முயன்று கொண்டிருக்கிறேன்" என்று ஒரு சமயம் எவருடனோ பேசிக்கொண்டிருக் கையில் சொன்னார். இவை இதயத்தைக் கவரும் வாக்கியங்கள். கடவுளென்று மறு பெயரிட்டழைக்கத் தக்கதாக நம்முள் எவ்வளவு சொல்லறிய சக்தி புதைந் திருக்கிறதென்பதை இச் சொற்கள் நினைவுறுத்து கின்றன.

குறிப்பிட்டதோர் செயல் கடவுளின் கருணையால் நிகழ்ந்தது என்று காந்தியடிகள் பலமுறை கூறியிருக்கி றார்கள். ஆனால் நேருக்கு நேராக ஆகாயவாணியைக் கேட்டது இதுதான் முதல் அனுபவம் போலும். அவ ரது அளவற்ற கடவுள் பற்றிற்கு இது தலைசிறந்த அத் தாக்ஷி யென்பது என் கருத்து. நான் அவருடன் இந்த ஆகாயவாணியின் விநோதத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசினேன். தெளிவுபெற இவ்விஷயத்தை எனக்கு விளக்குவதற்கு அவரிடம் சுலபமான சொற் களில்லை யென்று எனக்குத் தோன்றிற்று. எவ்வளவு இலேசாக விளக்கினாலும், எவ்வளவு கம்பீரமான சொற்களைக் கையாண்டாலும், பேச்சிற்குப் புறம் பான பொருளை ஒருவன் எவ்வாறு அறிவுறுத்துவது?

ஒரு குரல் கேட்டதென்று கூறுங்கால், நாம் வெறும் மனித பாஷையில் சொல்லுகிறோம். கடவுளுக்கு உருவம் இருக்க முடியாது. ஒலி, உணர்ச்சி, உரு, ருசி, மணம் இவ்வைந்திற்கும் கடவுள் அப்பாற் பட்டவர். ஆகவே அவருக்குக் குரலேது, உருவந் தானேது? ஆயினும் குரல் கேட்டதுண்டு! அதன் பாஷை எத்தகையது? “நாம் பேசும் பாஷைதான்.” இதன் பொருள் என்னவெனில் நம்மிடம் யாரோ ஏதோ கூறுவதுபோல் தோன்றும். “ஆனால் இத் தகைய பிரமையும் உண்டாகலாமல்லவா?” “ஆம், பிரமையும் உண்டாகலாம்; ஆனால் இது பிரமையல்ல.” அக்குரலைக் கேட்பதற்குத் தகுதி வேண்டுமென்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. ஒரு மனிதனுக்கு பிரமை யுண்டாகலாம். அதை அவன் ஆகாயவாணி யென்று கூறுவானானால், அவன் வீணாகக் குருட்டு நம்பிக்கையை வளர்ப்பவனாவான். மற்றொருவன் தகுதிபெற்றவன், விழிப்பெய்தியவன். இது பிரமையல்ல வென்று அவனே கூறத்தக்கவன். ஆகாயவாணியையும், மற்ற வைகளைப் போன்று, தகுதி யுள்ளவனே கேட்கக் கூடும். சூரியனது நிழல் கண்ணாடியில் தெரியுமேயன்றி கல்லில் தெரியாது.

இந்த இருபத்தோரு நாளைய ஆன்மீக உபவாஸம் காந்தியடிகளின் அநேக உபவாஸங்களி லொன்று. சிறிய உபவாஸங்களைக் கணக்கில் சேர்க்காவிடி னும், உயிரையே பணயமாய் வைத்த பெரிய

உபவாஸங்கள் பத்து அல்லது பன்னிரண்டு நடந்திருக்கின்றன.

மற்ற குணங்களைப் போலவே இந்த உபவாஸ முறை எவ்வாறு உதித்ததென்று கூற முடியாது. முதலில் உண்டானது ரோஜாப் புஷ்பமா அல்லது அதன் மணமா? எந்த குணம் முதலிலுதித்தது, எது பின்னருண்டாயிற் றென்று அறிவது கஷ்டமாயினும், இவருடைய தாய்க்கு உபவாஸத்திலிருந்த பற்று இவரிடத்திலும் உபவாஸ எண்ணத்தைத் தூண்டிற் றென்று அறிகிறோம்.

இவரது தாய் மிகுந்த மதப்பற்றுள்ளவர். உபவாஸங்களில் அவருக்கு மிகவும் நம்பிக்கை யிருந்தது. வருஷம்முழுதும் சிறிதும் பெரிதுமாக ஏற்ற உபவாஸங்கள் பல. சாதுர்மாஸத்தில் ஒரே வேளை உணவருந்துவார். சாந்திராயண விரதம் இவரது தாய் பலமுறை செய்துள்ளார். ஒரு சாதுர்மாஸத்தில், இவருடைய தாய், சூரிய தரிசனம் செய்யாமல் உணவு கொள்வதில்லை யென்ற விரதம் ஏற்றிருந்தார். மாரிகாலத்தில் சில சமயங்களில் பல தினங்கள் வரையில் சூரியனே தென்படுவதில்லை. தெரிந்தாலும் சில நிமிஷங்கள் வரையில்தான் தெரியும். குழந்தை காந்தி கூரையில் ஏறிக்கொண்டு, கவனமாகச் சூரியனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். சூரியன் தென்பட்டதும், தாய்க்கு அறிவிப்பான். ஆனால், சில சமயங்களில் பாவம், தாய் போய்ச் சேருவதற்குள், மேகம் சூழ்ந்த வானத்தில்

சூரியதேவன் மறைந்து விடுவான். ஆனால் தாய்க்கு இதனால் அதிருப்தி யுண்டாவதில்லை. "குழந்தாய், கவலைப்படாதே, நான் இன்று உணவு கொள்ள வேண்டா மென்பது கடவுளின் சித்தம்" என்று கூறி விட்டு தம் வேலையிலீடுபட்டு விடுவார்.

குழந்தை காந்தியின் மனதில் இது எவ்வாறு பதிந்திருக்குமென்று நாம் சுலபமாக ஊகித்துக்கொள்ள லாம். முதல் உபவாஸம் ஆப்பிரிக்காவில் டால் ஸ்டாய்ப் பண்ணையில் நடந்தது. இவர் சில தினங்கள் வரை வெளியே சென்றிருந்தார். பிறகு ஆச்சிரம வாசிகள் இருவர் முறை தவறியதாக அறிந்தார். இதனால் மனம் நோவது இயற்கை; இத்தவறின் பொறுப்பு ஒரு அளவுக்கு ஆச்சிரமத்தின் தலைவனைச் சாருமென்று இவருக்குத் தோன்றிற்று. ஆச்சிர மத்தை நடத்துவோர் காந்தியடிகளாகையால் இச் சம்பவத்தில் தம் பொறுப்பையு முணர்ந்தார். இதன் பொருட்டு காந்தியடிகள் ஏழு நாட்கள் உபவாஸ மிருந்தார். இதன் பின்னர் சில தினங்களுக்குள் இதே நிகழ்ச்சியை யொட்டிப் பதினைந்து நாட்கள் வரை மற்றொரு உபவாஸமிருக்க நேர்ந்தது.

இதற்குப் பின்னர் இன்னும் அநேக உபவாஸங் கள் நடந்திருக்கின்றன. தம் நாடு திரும்பிய பின்னர் இதே போன்ற சம்பவங்களுக்காக ஒன்றிரண்டு உப வாஸங்கள் செய்தார். அஹமதாபாத்தின் மில் வேலை நிறுத்தத்திற்காக ஒரு உபவாஸம் நடத்தினார். ஹிந்து-

முகம்மதிய ஒற்றுமைக்காக இருபத்தோரு தினங்கள் உபவாஸமேற்றார். ஹரிஜனங்களின் ஸ்தானங்களைப் பற்றி பிரதம மந்திரி மாக்டானல்டின் தீர்ப்பை எதிர்த்து மரணம் வரை உபவாஸமேற்றார்; மீண்டும் ஹரிஜன—பிராயச்சித்தத்திற்காக ஓர் உபவாஸம் நடத்தினார். ஹரிஜனப் பிரசார வேலை சம்பந்தமாக அரசாங்கம் அவருக்கு நிர்ப்பந்தங்களை யமைக்கவே மற்றொரு உபவாஸம் செய்தார். ஹரிஜன யாத்திரை முடிந்ததும் சில ஹரிஜன ஊழியர்கள் சகிப்பின்றி நடந்துகொண்டதற்குப் பரிகாரமாக வர்தாவில் ஏழு நாட்கள் உபவாஸ மிருந்தார். ராஜகோட்டில் ஒரு உபவாஸம் நடந்தது.

பிரதம மந்திரியின் தீர்ப்பை எதிர்த்து ஏற்ற உபவாஸம் வெற்றியுடன் முடிந்ததில் எனக்கும் சிறிது பங்குண்டு. இந்த உபவாஸத்தை அருகிலிருந்து கண்ணால் கண்டு ஆராய எனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த நாட்களில் காந்தியடிகள் சிறையிலேயேதானிருந்தார். சத்தியாக்கிரஹம் நடந்து வந்தது. ஆயினும் மக்களிடை சோர்வு வளர்ந்து வந்தது. திடீரென்று ஒரு வெடிகுண்டு வந்து விழுந்தது—காந்தியடிகள் மரணம் வரை உபவாஸம் செய்யத் தீர்மானித்திருப்பதாக ஜனங்கள் கேள்விப்பட்டார்கள். நாலா பக்கங்களிலும் கொந்தளிப்பேற்பட்டு விட்டது. நானோ இச் செய்தியைப் பத்திரிகைகளில் படித்ததும் திடுக்கிட்டேன். காந்தியடிகளுக்குத் தந்தியடித்து

"என்ன செய்ய வேண்டும்? நான் திகிலடைந்து விட்டேன்" என்று கேட்டேன். "கவலைப் படுவதற்கு ஒன்றுமில்லை. சந்தோஷத்திற்குரிய விஷயந்தான். மிகவும் தாழ்த்தப்பட்டோருக்காகக் கடைசி பலியிடுவதற்கு ஆண்டவன் எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை யளித்திருக்கிறான். உபவாஸத்தை நிறுத்த முடியாது என்ற விஷயமாக எனக்கு ஒரு சந்தேகமுமில்லை. இங்கிருந்து ஏதாவது குறிப்போ, ஆலோசனையோ அனுப்புவதற்கு சக்தியற்றவனா யிருக்கிறேன்" என்று உடனே பதில் வந்தது. செய்வதென்ன வென்று ஒருவருக்கும் தெரியவில்லை. எல்லோருடைய மனமும் பூனாவின் பக்கம் திரும்பிற்று. ஒவ்வொருவராக அங்கு போய்ச் சேர்ந்தனர்.

ராஜாஜி, தேவதாஸ், நான் மூவரும் சீக்கிரத்தில் பூனாவை யடைந்தோம். பூஜ்யர் மாளவியாஜி, ஸர் தேஜ்பஹதூர் ஸப்ரூ, ஸ்ரீ ஜயகர், ராஜேந்திர பாபு, ராவ்பஹதூர் எம். ஸி. ராஜா ஆகியவர்களும் ஒருவர் பின்னொருவராக பம்பாய்க்கு வந்து பூனாவை யடையத் தொடங்கினர். பின்னர் டாக்டர் அம்பேட்கரும் அழைக்கப்பட்டார். அரசாங்கத்தின் அனுமதி பெற்று ஸர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ், ஸர். சுன்னீலால் மேதா, ஸ்ரீ மதுரதாஸ் வஸன்ஜீ, நான் எல்லோரும் முதன் முதலில் காந்தியடிகளை சிறையில் கண்டோம். ஜெயில் சூப்பரிண்டெண்டெண்டின் அறையில் காந்தியடிகளைச் சந்திக்க

ஏற்பாடாயிற்று. உபவாஸம் இன்னும் ஆரம்பமாக வில்லை அறை முதல் மாடியிலிருந்தது. அதனுடைய ஜன்னல்களின் வழியாகச் சிறையின் பெரும் பகுதி தெரிந்தது. தூக்குப்போடும் சதுக்கமும் ஜன்னலி லிருந்து தென்பட்டது. காந்தியடிகள் வரும் பாதை அச் சதுக்கத்தின் சுவரை யொட்டியிருந்தது. நான் காந்தியடிகளை ஏறக்குறைய ஒன்பதுமாதமாகப் பார்க்க வில்லை. திடீரென்று காந்தியடிகள் வேகமாக எங்களை நோக்கி வருவதை ஜன்னல் வழியாகப் பார்த்தேன். நான் எல்லாக் கவலைகளையும் மறந்தேன். ஒன்றும் விசேஷம் நடைபெறுதது போலல்லவா காந்தியடிகள் ஓட்டமாய் வந்து கொண்டிருக்கிருர். அவருக்கருகில் தூக்குமேடையிருந்தது. அங்கு இரண்டு மூன்று தினங் களுக்கு முன்புதான் ஒருவனைத் தூக்கிலிட்டதாகக் கூறினர்கள். என் மனம் தத்தளித்தது. இந்த மனி தருக்கு இந்த இடமா! நான் மிகுந்த பக்தியுடன் பாதங்களில் வணங்கினேன். பிறகு முக்கிய விஷயங் களைப் பற்றிப் பேச்சுத் தொடங்கிற்று. அவர் மிகவும் ஸாவதானமாக எல்லா விஷயங்களையும் வரிசைக் கிரம மாக எங்களுக்கு விளக்கினர். உபவாஸம் எவ்விதம் நிறுத்தப்படலாம் — அதாவது தொடங்கிய பின்பு எவ்வாறு நிறுத்தப்படலாம்—இதற்குரிய நிபந்தனை களை முறையே குறிப்பிட்டார். இச்சம்பாஷணைக்கு முன்பு (3)வரை இக்காரியத்தை தேவைக்கு அதிகமான கடுமை வாய்ந்ததென்று நாங்கள் நினைத்திருக்க,

பேச்சு முடிந்ததும் இதுவே தருமம், கடமையுமாகு மென்று தோன்றிற்று. அவரது உருவை மனதிற் பதித்துக்கொண்டு நாங்கள் பம்பாய் திரும்பி வந்து பூஜ்யர் மாளவியாஜியிடமும், மற்ற தலைவர்களிடமும் முழு விவரத்தையும் தெரிவித்தோம்.

அச்சமயத்தில் நமது தலைவர்கள் மிகுந்த குழப்பத்திலாழ்ந்து செய்ய வேண்டியது யாதெனத் தெரியாது திகைத்தனர். காந்தியடிகளின் உபவாஸம் ஒருவருக்கும் பிடிக்கவில்லை. அவர் கூறும் ஆலோசனையின் உபயோகத்தையும் ஒருவரும் உணரவில்லை. காலத்தைக் கடத்தல், காந்தியடிகளின் உயிருக்காபத் தென்பதையும் ஒருவரு மறிந்தாரில்லை. ‘அவர் இப்படிச் செய்திருக்கக் கூடாது.’ ‘இது அவர் செய்யும் பலாத்காரமாகும்.’ ‘இப்பொழுதாவது உபவாஸத்தை விட்டு விடும்படி அவரிடம் வற்புறுத்த வேண்டும்’ என்று அடிக்கடி கூறப்பட்டது. அவர் உபவாஸத்தை விட முடியாதென்றோ, இது குறை கூறுவதற்கேற்ற சமயமல்ல வென்றோ ஒருவரும் உணரவேயில்லை. காந்தியடிகளின் உயிரைக் காப்பதெவ்வாறு என்பதே எங்கள் முன்னிருந்த பிரச்சினை. தலைவர்களில் ஒருவருடைய புத்தி சிறிது நிர்மாண முறையில் வேலை செய்து வந்தது. அவர்தான் ஸர். தேஜ்பஹதூர் ஸப்ரூ. ஆனால் காந்தியடிகளின் உயிரைக் காக்கும் பொறுப்பை, உண்மையில் கடவுள் ஏற்றிருந்தார். நாங்கள் வீணில் குழம்பிக் கொண்டிருந்தோம்.

காந்தியடிகள் உபவாஸம் தொடங்கு முன் போதிய அவகாசம் கொடுத்திருந்தும், அதைப் பயன் படுத்திக்கொள்ள எங்களால் முடியவில்லை. அவர் எல்லா நடவடிக்கைகளையும் தாமே ஏற்று நடத்தியிரா விடில் ஏதாவது உபயோகமான வேலை நடந்திருக்குமா வென்பது எனக்குச் சந்தேகமே. உபவாஸம் ஆரம்ப மானதும் அரசாங்கம் சிறைக் கதவுகளைத் திறந்து விட்டது. இதன் பயனாக தங்கு தடையின்றி காந்தி யடிகளைச் சந்திப்பது சாத்தியமாயிற்று. ஆகையால் இக்காரியத்தின் சூத்திரம் காந்தியடிகளிடமே இருந் தது. ஹரிஜனங்களுக்கும், உயர்ந்த வருண ஹிந்துக் களுக்குமிடையில் எத்தகைய ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அதை ஒப்புக்கொள்வதாக அரசாங்கம் கூறிற்று. ஆகையால் உயர்ந்த வருணத்தவரும், ஹரிஜனங்களும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியதே உசிதமான வேலையாயிற்று. நாங்கள் இரவு பகலாக ஒப்பந்தத் தைப் பற்றிய பேச்சில் ஈடுபட்டிருந்தோம். ஆனால் ஜீவாதாரமான விஷயங்களை இரண்டே மனிதர்கள் தீர்மானிக்க வேண்டும். ஒரு பக்கம் காந்தியடிகள் மறுபக்கம் டாக்டர் அம்பேட்கர். ஆனால் இந்த முரண்படும் முக்கிய விஷயங்களிடையே ஒரு ஒற்று மையைக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. இதில் ஸர். தேஜ் பகதூர் ஸப்ரூ எங்களுக்கு மிகவும் உதவி யளித்தார். காந்தியடிகள் வரவர பலஹீனமடைந்து வந்தாலும், அவரது மனத்தின் சாவதானத்தில் ஒரு

குறைவும் ஏற்படவில்லை என்பதைக் கண்டேன். இடைவிடாமல் நாள் முழுவதும், உயர்ந்த வருணத் தலைவர்களுடனும், ஸ்ரீ அம்பேட்கருடனும் அவர் ஆலோசனை நடத்திக்கொண்டே யிருந்தார்.

ராஜாஜியும், தேவதாஸும் நானும் காரியத்தைத் துரிதப்படுத்தி வந்தோம். சூத்திரம் முழுவதும் காந்தியடிகளின் கையிலிருந்தது. காந்தியடிகளின் தைரியம், அவரது எல்லையற்ற நம்பிக்கை, அவரது பயமின்மை, பற்றின்மை, ஆகியவை யெல்லாம் அப்பொழுது பார்க்கத் தக்கவையாயிருந்தன. யமன் வாயிலில் நின்றான். அரசாங்கம் அதன் கொடுமை விளங்க, நடுநிலைமை வகித்தது. ஸ்ரீ அம்பேட்கரின் இதயம் கைப்பு நிரம்பியிருந்தது. மற்ற ஹிந்துத் தலைவர்கள் இரவு பகலாக முயன்றும் ஒப்பந்தம் முடிவதாயில்லை. ராஜாஜிக்கும், தேவதாஸுக்கும், எனக்கும் சில சமயங்களில் ஆத்திரமுண்டாகும். ஆனால் காந்தியடிகள் எல்லாக்கவலைகளையும் கடவுளிடம் ஒப்புவித்து நிம்மதியாய்ப் படுத்திருந்தார்.

ஒரு நாள் சிறைக்குள் மந்திராலோசனை நடைபெற்றுக் கொண்டிருக்கையில், காந்தியடிகள் சில ஹிந்துத் தலைவர்களிடம் "கனச்யாமதாஸ் எனது கருத்தொன்றை உங்களிடம் தெரிவித்திருப்பாரே?" என்று சொன்னார். ஒரு தலைவர் அவசரமாக: "இல்லை. எங்களுக்கு ஒன்றும் தெரியாதே" என்றார். காந்தியடிகள் சிறிது கோபத்துடன், "இது என்

துரதிர்ஷ்டம்'' என்றார், எனக்குப் பகிரென்றது. காந்தி யடிகளின் முழுக் கருத்தையும் நான் அவர்களிடம் தெரிவித்திருந்தேன். அதை இத்தலைவரும் அறிவார். ஆனால் காந்தியடிகளைக் காரியவாதியல்ல வென்றும், காற்றில் பறப்பவரென்றும் கருதுவோருக்கு காந்தி யடிகளின் கருத்தைக் கேட்கவும் சமயமில்லை. அக் கருத்தை அவர்கள் கேலிசெய்து புறக்கணித்து விட் டார்கள். நான் எல்லா விஷயங்களையும் நினைவுறுத்தவே, அத்தலைவர் தமது தவறைத் திருத்திக் கொண்டார். ஆனால் காரியம் கெட்டது கெட்டதுதான். இதைப் போலவே ஏதோ ஒரு சிறிய விஷயத்தில் காந்தியடி களுக்கு தேவதாஸிடமும் சிறிது கோபம் வந்தது. இரவு ஒன்பது மணிக்குத் தூங்கும் சமயத்தில் காந்தி யடிகளுக்கு துக்க முண்டாயிற்று. "நான் ஆத்திர மடைந்து உபவாஸத்தின் மகிமையைக் குறைத்து விட்டேன்'' என்றார். அது கோபமல்ல, ஒரு நொடி யிருந்து மறைந்த உணர்ச்சியாகும். ஆனால் காந்தியடி களின் சுபாவத்திற்கு இதுவும் ஒப்பவில்லை. தம் குற்றம் எள்ளளவாயினும் மலையளவாகக் கருதுவதும், பிறர் குற்றம் மலையளவாயினும், அதை எள்ளளவாகக் கருது வதும் அவரது வாழ்க்கைத் தத்துவமன்றோ? பீஹாரில் பூகம்பம் உண்டான பொழுது அதை "நமது பாவங் களின் பயன்'' என்று எண்ணினாரல்லவா?

காந்தியடிகள் உடனே ராஜாஜியை யழைத்து அவரிடம் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

கண்ணீர் பெருக்கெடுத்தோடிற்று. இரவு பதினொரு மணிக்கு ஜெயிலதிகாரிகளின் மூலமாக எங்கள் ஜாகை யிலிருந்து தேவதாஸூம் நானும்அழைக்கப்பட்டோம். நான் தூங்கிவிட்டேன். தேவதாஸ்மட்டில் சென்றார். காந்தியடிகள் அவரிடமும் மன்னிப்புக் கேட்டார். தந்தை தனயனிடம் மன்னிப்புக் கேட்பது எவ்வாறு? ஆனால் மஹாத்மாவான தந்தை தம் நடத்தையை நூற்றுக்கு நூறு புனிதமாக வைத்துக் கொள்ளா விடில் உலகத்திற்கு என்ன கற்றுக் கொடுக்க முடியும்!

ராஜாஜி, தேவதாஸ் இருவரிடமும் காந்தியடிகள் தமது வருத்தத்தைத் தெரிவித்த பின்னர் "இப் பொழுதே சென்று கனச்யாமதாஸிடம் எனது வருத் தத்தைத் தெரிவியுங்கள்" என்று கூறினார். அவர்கள் என்னை எழுப்புவது சரியென்று எண்ணவில்லை; ஏனெ னில், இவ்விஷயத்தை நாங்கள் ஒரு சிறிதும் பொருட் படுத்தவில்லை. ஆனால் இதுவே காந்தியடிகளின் பெருமையாகும். சில மாதங்களுக்குப் பிறகு நடந்த "ஆகாயவாணி" உபவாஸத்தின் பொழுது இதே போன்று ராஜாஜியிடமும், சங்கர்லாலிடமும் அவருக் குச் சிறிது கோபமுண்டாயிற்று. அதற்காக அவர் ராஜாஜியிடம் மன்னிப்பு வேண்டி ஒரு கடிதம் எழுதி னார். ராஜாஜியோ அது அநாவசியமென்று கருதி விநோதமாக பதிலெழுதினார். ஏனெனில், காந்தியடிகள் கோபமென்று நினைப்பதை நாங்கள் கோபமென்று கருதுவதில்லை.

இரண்டாவது உபவாஸத்தின் விஷயங்கள் இடையிற் புகுந்து விட்டன. மேலே குறிப்பிட்ட நம் முன்னுள்ள உபவாஸம் நடந்து கொண்டிருந்தது. பொழுது விடிவதும், மாலையாவதுமா யிருந்ததே யொழிய ஒரு சிறிதாவது காரியம் முன்னேறக் காணோம். ஒரு நாள் தேவதாஸ் பரிதவித்து அழத் தொடங்கிவிட்டார். காந்தியடிகளின் நிலைமை அதிக கவலைக்கிடமாய்க் கொண்டிருந்தது. ஒருபுறம் கல் மனதுடன் ஸ்ரீ. அம்பேட்கர் பேசிக்கொண்டிருந்தார்; மற்றொரு புறத்தில் ஹிந்துத் தலைவர்கள் அற்ப விஷயங்களில்கூட பிடிவாதங்காட்டினர். அநேகமாகப் பெரிய விஷயங்களெல்லாம் தீர்ந்து விட்டன. ஆனால் ஒரு விஷயம் பாக்கியிருந்தாலும், முடிவான ஒப்பந்தம் ஆவது அசாத்தியமாயிருக்க, ஒப்பந்தம் ஏற்படாதவரையில் காந்தியடிகளின் உயிரைக் காத்தலும் சாத்யமானதாயில்லை.

ஹரிஜனங்களுக்கு எவ்வளவு ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்பது ஸ்ரீ. அம்பேட்கருடன் நிச்சயமாகிவிட்டது. மாகாணவாரியாக ஹரிஜனங்களின் எண்ணிக்கையும், அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஸ்தானங்களின் தொகையும் தக்கர்பாபாவுக்கு நன்ருய்த் தெரிந்திருந்தது, அச்சமயத்தில் எங்களுக்கு உதவியாயிருந்தது. தேர்தலின் முறையைப் பற்றியும் ஸ்ரீ. அம்பேட்கருடன் ஒப்பந்தம் ஆகிவிட்டது. ஆனால் இந்த ஏற்பாடு எத்தனை வருஷங்கள்வரை அமுலில்

இருக்கவேண்டு மென்பதைப் பற்றி வாத விவாதம் நடந்து வந்தது. ஸ்ரீ. அம்பேட்கர் இத்தேர்தல் முறை பத்து வருஷங்களுக்குப் பிறகு மாறவேண்டு மென்றும், ஹரிஜனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்கள், தனியாகவே யிருப்பதா, அல்லது உயர்ந்த வருண ஹிந்துக்களுடைய ஸ்தானங்களுடன் இணைக்கப்பட்டு எல்லோருக்கும் கூட்டுத் தொகுதி முறையில் தேர்தல் நடத்துவதா என்ற விஷயத்தைப் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு ஹரிஜனங்களுடைய வாக்கெடுத்துத் தீர்மானிக்கவேண்டுமென்றும் கருதினார். ஹிந்துத் தலைவர்களோ இதை எதிர்த்தனர். அவர்கள் இந்த முறையையே குறிப்பிட்ட காலத்திற்குப் பின், அதாவது பத்து வருஷங்களுக்குப் பிறகு, மாற்றிவிட வேண்டுமென்று விரும்பினார்கள். அவர்கள், தீண்டாமை ஒரு களங்கமாகையால் பத்து வருஷங்களில் அதை யொழித்த பிறகு, ராஜீயத்தில் தீண்டுவோன், தீண்டப்படாதவன் என்ற வித்தியாசமே இல்லாத வாறு, கூட்டுத் தொகுதி ஏற்படவேண்டு மென்றார்கள்.

ஸ்ரீ. அம்பேட்கர் இதைப் பிடிவாதமாக மறுத்து விடவே, பிரச்சினை மீண்டும் சிக்குண்டது. காந்தியடிகளின் கருத்தோ வேறு. ஸ்ரீ. அம்பேட்கர் இவ்விஷயமாகச் சிறையில் சென்று காந்தியடிகளிடம் வாதம் புரியும்பொழுது, அவர், "டாக்டர் அம்பேட்கரே, நான் ஹரிஜனங்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாக

எல்லா ஸ்தானங்களையும் இணைக்க விரும்பவில்லை. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஹரிஜனங்களுடைய அனுமதியை வேண்டி வாக்கு எடுப்போம். அவர்களுடைய இஷ்டப்படி முடிவு செய்வோம்'' என்றார். ஆனால் பத்து வருஷங்களுக்கு முன் எக்காரணத்தைக் கொண்டும் அவர்களது அனுமதி வேண்டி வாக்கு எடுத்தலாகாதென்று டாக்டர் அம்பேட்கர் பிடிவாதம் பிடித்தார். இந்த வாக்குவாதம் வெகுநேரம் வரை நடந்துகொண்டே யிருந்தது. ஹிந்துக்கள் ஐந்து வருஷங்களுக்குள்ளேயே ஹரிஜனங்களைத் தங்களோடு சேர்த்துக் கொள்ளவேண்டு மென்பது காந்தியடிகளின் தீவிரமான எண்ணம். இதை விட அதிக காலம் கழியச் செய்தல் அவர் நினைக்கவே முடியாதிருந்தது. ராஜாஜியும் நானும் கவலையுடன் காந்தியடிகளின் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தோம். 'உயிர் பணயமாயிற்றே; காந்தியடிகள் ஏன் இவ்வளவு பிடிவாதம் செய்கிறார்?' என்று நான் நினைத்தேன். காந்தியடிகளுக்கோ வாழ்வும் சாவும் சமமாயிருந்தது. பேச்சு நடந்துகொண்டிருந்தது. கடைசியில் காந்தியடிகள் திடீரென்று "அம்பேட்கர், ஐந்து வருஷ முடிவில் ஹரிஜனங்களுடைய அபிப்பிராயப்படி முடிவாகத் தீர்மானிப்போம். இல்லையேல் நான் உயிரை விட்டுவிடுகிறேன்'' என்றார். காந்தியடிகள் அம்பை எய்துவிட்டாரே, இனி என்ன செய்வது? என்று நாங்கள் பிரமிப்படைந்தோம்.

பெருமூச்செறிந்து கொண்டு நாங்கள் தங்குமிடம் வந்தோம். ஸ்ரீ. அம்பேட்கரிடம் சொல்லிப் பார்த்தோம். அவரோ, அசைந்து கொடுக்கவில்லை. அவருடைய ஹரிஜன நண்பர் டாக்டர் ஸோலங்கிக்கும் அவரின் பிடிவாதம் பிடிக்கவில்லை.

"ராஜாஜி, ஐந்து வருஷமென்ன? பத்து வருஷமென்ன? வருங்காலத்தில் எப்பொழுது விரும்பினும் ஹரிஜனங்களின் அனுமதி பெற்று இத் தீர்மானத்தை மாற்றலாம் என்பதில் என்ன ஆட்சேபம் இருக்கக் கூடும்?" என்று ராஜாஜியிடம் நான் கேட்டேன். "காந்தியடிகள் சம்மதிக்கவேண்டுமே" என்றார் ராஜாஜி.

"நாமும் கொஞ்சம் பொறுப்பேற்போமே. அவரைக் கேட்கச் சமயம் எங்கிருக்கிறது?" என்றேன். ராஜாஜி தலையை யசைத்து "கல்லெறிந்துபார், காய் விழுந்தால் சரி" என்றார்.

நான் இவ்வாலோசனையை ஸ்ரீ. அம்பேட்கரிடம் தெரிவித்தேன். அவர் ஒப்புக்கொண்டார். எல்லோரும் இதை ஆதரித்தனர். ஒரு காரியம் முடிந்தது. காந்தியடிகளின் அனுமதி பெறுவது பாக்கியிருந்தது. ராஜாஜி சிறைக்குச் சென்று காந்தியடிகளிடம் நடந்ததைத் தெரிவித்தார். அவர் ஒப்பந்தத்தின் இப்பகுதியை ஒரு முறை இரு முறை படிக்கச் சொல்லி கவனமாய்க் கேட்டார். கடைசியில் மெள்ள "வெகு நன்று" என்று ஒத்துக்கொண்டார். எல்லோருடைய

முகங்களிலும் சந்தோஷம் தாண்டவமாடிற்று. அவரது அனுமதி பெற்ற பின்னர் அவரிடம் சென்று பாதங்களில் வணங்கினேன். பிரதியாகக் கன்னத்தில் பலமான அறை ஒன்று கொடுத்தார். உபவாஸத்தை நிறுத்துவதற்குள் இன்னும் இரண்டு தினங்கள் கழிந்து விட்டன. ஏனெனில், ஏரவாடா ஒப்பந்தத்தை ஏற்பதில் அரசாங்கத்திற்கு இரண்டு நாட்கள் பிடித்தன. 1932-ம் வருஷம் செப்டம்பர்மீ 20உ உபவாஸ ஆரம்பம். 24உ எரவாடா ஒப்பந்தம் தயாராயிற்று. 26உ அரசாங்கத்தின் சம்மதம் கிடைக்க, உபவாஸம் நிறுத்தப்பட்டது.

நிகழ்ச்சி முழுவதிலும் பார்க்கத்தக்க விஷயம் என்னவெனில், காலன் கண்ணெதிரில் வந்தும் காந்தியடிகளைக் கடுகளவாயினும் கலங்கவைக்க முடியவில்லை. எல்லா உபவாஸங்களிலும் இவரது நிலை இதுவே. ராஜகோட் உபவாஸத்திலும், ஒருபுறம் மரணத்திற்கு ஏற்பாடு, குமட்டல், வாந்தி, அமைதியின்மை இருப்பினும்; மறுபுறம் இராஜப்பிரதிநிதியுடன் கடிதப் போக்குவரத்தும் (டில்லியிலிருந்த) எனக்கும் ஸ்ரீ. மகாதேவுக்கும் செய்தி யனுப்புவதும் நடைபெறுமலில்லை. ஒவ்வொரு உபவாஸத்திலும் கடைசித் தீர்மானம்—அது ஹரிஜனத் தலைவர்களுக்கும், உயர்ந்த வருணத் தலைவர்களுக்கு மிடையில் நடந்ததாயினும் சரி, இராஜப்பிரதிநிதிக்கும் காந்தியடிகளுக்கு மிடையில் நடந்ததாயினும் சரி—காந்தி

யடிகளின் மரணத்தின் பயத்திலிருந்தெழுந்த தென்ப தில் சந்தேகமில்லை. எந்தத் தடவையிலும் ஆர அமர யோசிப்பதற்குச் சமயமுமில்லை, சந்தர்ப்பமு மில்லை. ஆயினும், காந்தியடிகள் "பரபரப்பு ஹிம்ஸை யாகும்" என்று கூறுகிறார். துளசிதாஸர் (समर्थ को नहीं दोष गुसाईं) 'சம நிலை யடைந்தவரிடம் தோஷமொன்று மில்லை' என்று கூறியது உண்மையே. மகானுடைய காரியங்க ளெல்லாவற்றிலும் ஒத்த தன்மையை எதிர் பார்த்தல் முற்றிலும் தவறாகும். ஆனால், ஒவ்வொரு செயலிலும் சேவையும் புனிதத் தன்மையு மிருக்கு மாதலால் அந்த அளவுக்கு ஒத்த தன்மை யிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு செயலும் சேவை செய்யும் நோக்கத்துடனேயே செய்யப்படுவ தால், வெளிப் பார்வைக்கு ஒன்றுக்கொன்று முரண் பட்டதாகத் தோன்றினாலும் உண்மையில் அவை முரண்பட்டவையல்ல.

[ 11 ]

## உபவாஸ ஆராய்ச்சி

**கா**ந்தியடிகளின் உபவாஸத்தைப் பலர் குறை கூறியிருக்கிறார்கள்; பலர் ஆமோதித்திருக்கிறார்கள். சாதாரண வாதப் பிரதிவாதத்தினால் என்ன தீர்மானிக்க முடியும்? ஒரு மனிதன் செய்யும் உபவாஸம் பாபமாகவும், வெறும் உணவு மறுத்தலாகவும், மற்றொருவன் செய்யும் உபவாஸம் தருமமாகவும், கடமையாகவும் இருக்கக்கூடும்.

உபவாஸத்தின் சிறப்பு, லட்சியத்தை யனுசரித்தது. அது பிறரின் நன்மையின் பொருட்டு செய்யப்படுகிறதா? பிரதிப் பயன் எதிர்பார்க்கப்படவில்லையா? சுத்த புத்தியுடன் ஏற்கப்பட்டதா? செய்வோன் ஸாத்வீகத் தன்மையுள்ளவனா? பொறாமை துவேஷமில்லாதவனா? இக்கேள்விகளின் பதிலை யொட்டியே, உபவாஸம் சரியா, தவறா என்று நிர்ணயிக்கப்படும். அதனாலேற்படுட பயனைக் கொண்டும் உபவாஸம்—சரி அல்லது தவறு என்பதைத் தீர்மானிக்கலாம்.

உலகத்தைத் தவறான பாதையினின்று விலக்கி நேர் பாதையிற் செலுத்துவதற்கே மஹா புருஷர்கள் தோன்றுகின்றனர். வெவ்வேறு மஹாபுருஷர்கள் தங்கள் தங்கள் நோக்கம் நிறைவேறும் பொருட்டு வெவ்வேறு வழிகளைப் பின்பற்றி யிருக்கிறார்கள். ஆனால் இந்த எல்லா வழிகளுக்கும் லட்சியம் ஒன்றே இருந்திருக்கிறது—அது தருமத்தை நிலை நிறுத்துவதும், அதருமத்தை யொழிப்பதுமேயாம்.

**यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत। ***

**अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥**

"அழிந்திட தருமம், பாரத!

தீமை ஓங்கிடல் காண்பனேல் என்று

அன்று யானென்னைப் பிறப்பித்திடுவேன்."

ஆனால் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வெவ்வேறு மஹா புருஷர்கள் கையாளும் முறைகள் வெளித் தோற்றத்தில் ஒன்றிற்கொன்று வேறுபட்டே காண்கின்றன. மஹாபுருஷர்கள் தங்கள் ஒழுக்கத்தினாலும், உபதேசங்களினாலும் மக்களுக்கு நல்லறிவு புகட்டி உறங்கியிருக்கும் உன்னதக் கருத்துக்களை எழுப்புகிறார்கள்.

**'मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ।†'**

"என் வழி நிற்பர் எல்லாச்

செயலிலும் மாந்தர் பார்த்த!"

---

* கீதை, IV-7

† கீதை, III-23

“ தேகாப்பியாசத்தினுல் உடல் வலிவு பெறுவது போலும், பயிற்சியினுல் புத்தி வளர்ச்சியுறுவது போலும், ஆன்மீக வளர்ச்சிக்கு ஆன்மீக அப்பியாசம் அவசியமேயாகும். ஆன்மீக அப்பியாசத்திற்குப் பெரும்பாலும் ஆதாரமாயிருப்பது குருவின் வாழ்க்கையும் நடத்தையுமாகும். குரு தன் சீடர்களிடமிருந்து வெகு தூரத்திலிருந்தாலும், அவர் தம் நடத்தையின் சக்தியினுல் சீடர்களின் நடத்தையைச் சீர் செய்ய முடியும். நான் பொய் பேசும்பொழுது, என் பிள்ளைகளுக்கு சத்தியத்தின் மகிமையை எவ்வாறு கற்பிக்க முடியும்? கோழையான ஆசிரியன் தன் மாணவர்களைத் தீரர்களாக்க வியலாது. போக விச்சையுள்ள குருவும், பிள்ளைகளுக்குப் புலனடக்கம் கற்பிக்க முடியாது. ஆகையால் வேறெதற்கு மில்லாவிடினும், எனது பிள்ளைகளுக்காகவாவது, நான் சத்திய வாதியாகவும், தூய்மை யுள்ளவனுகவும், நற்செயல் புரிவோனுகவு மிருக்கவேண்டு மென்பதைக் கண்டு கொண்டேன்” என காந்தியடிகள் கூறுகிருர். ஆகையால் எல்லா மஹாபுருஷர்களும் தங்கள் நடத்தை—உபதேசங்களின் மூலமாகத் தருமத்தைப் பரப்பியிருக்கிருர்கள். தருமத்தின் வளர்ச்சியினுல் அதருமம் தானுகவே அழிந்து விடுகிறது. ஆனுல் சில சமயங்களில் மஹாபுருஷர்கள் அதருமத்தை நேரிலும் எதிர்த்து அழித்திருக்கிருர்கள். இம்மஹாபுருஷர்கள் அநீதியை அழிப்பதற்கு எடுத்தாண்ட துணைக்கருவிகள் வெளித்

தோற்றத்தில் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபடுகின்றன.

ஸ்ரீ கிருஷ்ணன் உலகத்தின் பாரத்தைக் குறைத்தார்; அதாவது உலகின் பாபச் சுமையைக் குறைத்தார். அப்பொழுது அவர் அனுஷ்டித்த முறையின் வெளித் தோற்றத்திற்கும், புத்தருடைய முறையின் வெளித் தோற்றத்திற்கும் தெளிவான வித்தியாசமிருக்கிறது. மகா பாரத யுத்தமும், கம்சன், சிசுபாலன், ஜராஸந்தன் முதலிய துஷ்டர்கள் ஸ்ரீ கிருஷ்ணன் மூலமாக வதமடைதலும் சரித்திரமாகக் கருதப்படின், ஸ்ரீ கிருஷ்ணன் பூமியின் பாரத்தை யொழித்த முறை புத்தரின் முறையிலிருந்து வெளித் தோற்றத்தில் வேறாயிருக்கிறதென்றே கூறவேண்டும். ஆனால் இரண்டும் உண்மையில் ஒன்றேதான். ஸ்ரீ கிருஷ்ணன் வதம் செய்யப்பட்டவர்களிடம், துவேஷமோ, பொறாமையோ, கோபமோ, கொள்ளவேயில்லை.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।*
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

"தூயோரைக் காத்துப் பின் நலமறியாத்
தீயோரைத் தேய்க்கவேண்டி
நேயமொடு நானுதிப்பேன் யுகங்களிடை
நீதியையும் நாட்டுவேனே!"

ஒரு தேர்ந்த ரணசிகிச்சை செய்வோன் நோயாளியின் அழுகிய அங்கத்தை, அவனது நன்மைக்காகவே

* கீதை, IV-8.

அறுத்தெறிவது போல், ஸ்ரீ கிருஷ்ணனும், ஸ்ரீ ராமச்சந்திரனும், ஸமுதாயத்தைக் காக்கவும், வதம் செய்யப் படுவோனின் நன்மைக்காகவும், துஷ்டர்களை அழித்தனர். எவர்களைக் கொன்றார்களோ, அவர்களுக்கும்,—ராவணன், கம்சன், ஜராசந்தன் முதலியோருக்கும்—ஸ்ரீராமனும், ஸ்ரீ கிருஷ்ணனும் நற்கதியளித்ததாக நமது புராணங்கள் கூறுகின்றன.

மகாபுருஷர்கள் துஷ்டர்களைக் கொன்றார்கள். ஆகையால் நாமும் அவ்வாறே செய்தல் வேண்டுமென்று ஹிம்ஸையை ஆதரிப்பவர்கள் ஆலோசியாமல் வாதிக்கின்றனர். ஆனால் இவ்வதங்கள், கோபம், த்வேஷம், பயனில் பற்று ஆகிய இவை ஒன்றுமின்றி ஸமுதாயத்தைக் காக்கும் பொருட்டே செய்யப்பட்டன வென்பதையும், கொலையுண்டவர்களுக்குக் கடவுளினால் நற்கதி அளிக்கப்பட்ட தென்பதையும் மறந்து விடுகிறார்கள். ஆகையால் அந்தரங்கத்தில் ராமன், கிருஷ்ணன், புத்தன் எல்லோரும் அஹிம்ஸாவாதிகளே. ராமன், கிருஷ்ணன் இவர்களுடைய முறை வெளிப் பார்வைக்கு ஹிம்ஸையைப் போன்றிருப்பினும் அதை ஹிம்ஸை எனலாகாது. ஏனெனில்:—

**न मां कर्माणि लिंपन्ति न मे कर्मफले स्पृहा ।***

"கருமங்களெனைச் சாரா, கருமத்தின்
பயன்களிலும் விருப்பொன்றில்லை."

* கீதை IV-14.

மேலும்,

योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेन्द्रियः ।*
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ॥

"யோகத்து நின்றோன், உட்டூய்மை பெற்றோன்
தன்னையும் தீயவைம்புலனையும் வென்றோன்
எல்லா உயிரிலும் தானேயாகிச்
செய்யினும் தொழிலது சார்ந்திடாதவனை."

கீதையின் இம்மொழிகளை நாம் ஆழ்ந்து யோசித்தால், ராமனும் கிருஷ்ணனும் புத்தனைப் போலவே ஹிம்ஸையிலிருந்து வெகுதூரம் விலகியிருந்தார்களென்பது சுலபமாய்த் தெரியவரும்.

காந்தியடிகளும் கன்றைக் கொன்று அதை அஹிம்ஸை யென்று கூறினார். ஏனெனில், கொலை செய்வது மட்டும் ஹிம்ஸையாகாது.

यस्य नाहंकृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते ।†
हत्वापि स इमाँल्लोकान्न हन्ति न निबध्यते ॥

"யானெனுங் கொள்கை யறவே தீர்ந்து
பற்றினிற் பற்றா மதியோனாகி
கொன்றிடின் மக்கள் குலத்தையே; பாபம்
பிணித்திடாதவனை ; பாபியுமன்றே!"

ஹிம்ஸை அல்லது அஹிம்ஸை யென்று நிர்ணயம் செய்வதற்குக் கொன்றவன் எத்தகைய மனோ நிலையில், எக்கருத்துடன் கொன்றானென்று அறிதலும் அவசிய

* கீதை V-7

† கீதை XVII-17

மாகும். ஆனால் ஆசையும் வெறுப்புமின்றி, கோப மின்றி, தூய மனத்தொடு, உலக நன்மைக்காகக் கொலைபுரிவோன், சாதாரண மனிதனாயிருக்கக்கூடுமா? அவன் காணற்கரிய, தெய்வீக மனிதனாகவே யிருப்பான். சிறந்த நோக்கத்திற்காகவும், ஹிம்சைக்குரிய ஆயுதங்களைத் தாங்குதல், சாதாரண மனிதனுடைய தருமமாகா தென்பதும் இதன் பொருளாயிற்று. விருப்பு, வெறுப்பு, கோபம், பொறாமைகளில் பிணிப்புண்ட நாம் ஹிம்சைக்குரிய ஆயுதங்களை தருமத்தை யொட்டிச் செலுத்த முடியாததுடன், விருப்பு வெறுப்புக்களினால் கெட்டுப்போன அறிவு படைத்த மனிதனால், கொல்லப்படத்தக்க துஷ்டன் எவன் என்று தீர்மானிக்கவும் இயலாது. விருப்பு வெறுப்பினின்றும் விடுபடும் வரையில் நாம் துஷ்டர்களா, நமது விரோதிகள் துஷ்டர்களா வென்றும் நிர்ணயித்தல் முடியாது. நாம் துஷ்டர்களாயும், நமது எதிரிகள் நல்லவர்களாயுமிருப்பின், உலக நன்மை யென்ற காரணம் கூறி, ஹிம்சைக்குரிய ஆயுதங்களைக் கையாண்டால், நாம் செய்வது பாவமாவதுடன், நம்மையே நாம் ஏமாற்றியவர்களுமாவோம். தாமரை இலைத் தண்ணீர் போன்று பற்றற்று நிற்கும் மஹாபுருஷர்களுக்கே ஹிம்சைக்குரிய ஆயுதங்களை உபயோகிக்கும் உரிமை உண்டு. ஆகையால் சாதாரண மக்களுக்கேற்ற தூய தருமம் அஹிம்ஸா முறையேயாகும்.

அஹிம்ஸையை ஏற்க முடியாதிருப்பின்,

தற்காப்பிற்காக, ஹிம்ஸையைக் கையாண்டால், அங்கு ஹிம்ஸைக்கும், அஹிம்ஸைக்கும் ஒப்புவமை செய்த லாகாது. கோழைத்தனத்தையும், தன்னைக் காப்பதற் கெனக் கையாண்ட ஹிம்ஸையையுமே ஒப்பிடல்வேண் டும். தற்காப்பிற்காக உபயோகித்த ஹிம்ஸையிலும், கோழைத்தனம் தீயது. கோழைத்தனம் தீயதிலும் தீது. தன்னைக் காக்கும் பொருட்டு ஏற்கப்பட்ட ஹிம்ஸை நடுத்தரமானதா யிருக்கலாம். சுத்த தரும மாகாது. இரண்டாந்தரமான தருமமேயாகும். சுத்த தருமம் அஹிம்ஸையே.

இதை இன்னும் தெளிவாக்குவதற்காக இவ்வா றும் கூறலாம். கொள்ளையிடும்பொழுது ஒரு திருடன் ஹிம்ஸை புரிந்தால் அவன் செய்வது இழிந்த பாபச் செயலாகும். தற்காப்பிற்காகவோ, தேசம் அல்லது மதத்தைக் காக்கும் பொருட்டோ செய்யப்படும் ஹிம்ஸை நமது கட்சியில் நியாயமிருப்பின், அத்திருட னின் ஹிம்ஸையுடனொப்பிடும் பொழுது தருமமெனக் கருதப்படும். ஆனல் நல்ல நோக்குடன் பற்றற்றுப் புரி யப்படும் ஹிம்ஸை அஹிம்ஸையேயாகும். ஆகவே அது தருமமுமாகும். இதைப் போலவே கோழைத் தனத்துடன் ஏற்கப்பட்ட அஹிம்ஸை, அஹிம்ஸையே யல்ல, பாவமாகும். அசோகன் வீரன். அவன் திக்விஜ யத்திற்குப் பிறகு, ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக செய்யப்படும் ஹிம்ஸை பாவமாகுமென்று நினைத் தான். ஆகையால் அவன் மன்னிப்பு தருமத்தைப் பின்

பற்றினன். அது வீரனுடைய மன்னிப்பாகும். ஆனல் அவனுடைய பேரன் தன் கோழைத்தனத்தை மறைப்பதற்காக, அசோகனைப் போல் நடிக்கத் தொடங்கினன். அவனிடம் வீரமுமில்லை; மன்னிக்கும் சக்தியுமில்லை. அவனிடமிருந்தது கோழைத்தனமே. ஆகையால் கவிகள் அவனை 'மோஹாத்மா' என்றழைத்தார்கள். அறிவொடு கலந்த பலவானுடைய அஹிம்ஸையே, தூய அஹிம்ஸையாம். அது தலை சிறந்த குணமாம். கோழையின் அஹிம்ஸையும், திருடனது ஹிம்ஸையும், பாவங்களாகும். பற்றற்றவனுடைய ஹிம்ஸையும், பலவானல், புத்தியுடன் செய்யப்பட்ட அஹிம்ஸையுமே தருமம் அல்லது அஹிம்ஸையாம். தருமத்தின் போக்கு நுண்ணியது. மனிதன் கோபம் அல்லது பேராசையிற் சிக்கி ஹிம்ஸை செய்யுங்கால் சுலபமாக அடக்கத்தைப் பெற முடியாது. ஆகையால் காந்தியடிகள் ஹிம்ஸையை விட்டொழித்து அஹிம்ஸையை ஏற்றார். காந்தியடிகள் சிறிது நேரமாயினும்—ஜீவன் முக்த நிலையில் நின்று கொண்டு, கன்றின் விஷயத்திற்போல், அஹிம்ஸையான ஹிம்ஸை செய்தால், சாதாரண மனிதர்களும், அவ்விதம் செய்ய முயலுவது "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" போலாகும். ஆகையால் எல்லோருக்கும் சுலபமான, சிறந்த வழி, அஹிம்ஸையேயென் றுணர்ந்து அஹிம்ஸை தருமத்தை போதிக்கிறார். உபவாஸமும் இதிலிருந்து பிறந்ததாகும்.

ஹிம்ஸையை முற்றிலும் கைவிடவேண்டிய தென்றுணர்ந்த பின்னரும், அதருமத்தை யொழிப்ப தற்கு ஒரு ஆயுதம் வேண்டியிருக்கிறது. தருமம் மேலோங்கி நிற்கும்பொழுது அதருமம் அழிகிறது. ஆனால் அதருமம் அழிந்த பிறகே, தருமம் வளரக்கூடும். இரண்டும் ஒன்றை யொன்று அண்டியிருக்கின்றன. ராஜகோட்டில் நடந்தது போல் ஒருவன் நமக்குக் கொடுத்த வாக்கை மீறுகிறான்; அல்லது ஹரிஜனங்கள் விஷயத்தில் பிரதம மந்திரியின் தீர்ப்பைப் போன்று கடுமையாக நாம் எதிர்த்தாலல்லது தப்பமுடியாததாக நிர்ப்பந்தமாய் நமது தலையில் ஏதாவது ஒரு தீங்கைச் சுமத்துகிறான்; அப்பொழுது அஹிம்ஸாவாதி செய்வ தென்ன? ஹிம்ஸையை அவன் விட்டொழித்திருக் கிறான். மக்கள் மனதில் கோபமோ, துவேஷமோ உண்டாக்காமல், அதருமத்திடம் மட்டும் வெறுப் புண்டாக்கி, தீமையைப் போக்க உற்சாகமூட்டுவ துடன், தீயவர்களுடைய பயத்தைப் போக்கு மாறும், அவனுடைய முறை யிருத்தல் வேண்டும். நமது பந்து ஒருவன் தீய பழக்க மொன்றில் சிக்குண்டிருக்கிறான்; அவனை அதினின்றும் விலக்குவ தெப்படி? அவனைத் துன்புறுத்த வேண்டியதுதான்; ஆனால் ஹிம்ஸையினாலல்ல; அன்பினால்! இத்தகைய எல்லா நிலைமைகளுக்கும் பற்பல அஹிம்ஸா முறை களை நிர்ணயிக்கலாம். அம்முறைகளெல்லாவற்றிலும் ராமபாணம் போன்ற முறை உபவாஸமாகும்.

இதைக் காந்தியடிகள் அடிக்கடி கையாண்டிருக்கிறார்.

உபவாஸத்தில் பலாத்காரமேயில்லையென்று யார் சொல்கிறார்கள்? ஆனால் பலாத்காரமாயிருப்பதாலேயே அது ஹிம்ஸையாகாது. அன்பிலும் பலாத்காரமுண்டு. அன்பிற் பிணிப்புண்டு நாம் சில சமயங்களில் இஷ்டமில்லாதிருப்பினும் காரியம் செய்கிறோம். ஆனால் அன்பின் வசமாகி, விருப்பமில்லையெனினும், பாபம் செய்தால், அதனால் தீங்கு நேரிடுகிறது. விருப்பமின்றியே புண்ணியம் புரிந்தால் ஸமுதாயத்திற்கு அதன் நற்பயன் கிட்டுகிறது. ஹிம்ஸையை யேற்ற தலைவன், நமது பலஹீனத்தை உபயோகித்துக் கொண்டு தன் ஹிம்ஸைக் கருவிகளினால் நம்மை பயமுறச் செய்து நம்மைப் பாவம் செய்விக்கிறான். அஹிம்ஸாவாதியான தலைவனோ, நம்முள் அமுங்கிக் கிடக்கும் தருமப் பற்றைத் தட்டி எழுப்பி, நம்மை அன்பிற் பிணித்து புண்ணியம் செய்யத் தூண்டுகிறான். இதனால் பாவத்தில் கட்டுண்டு கிடந்த நல்ல எண்ணங்கள் விடுதலை பெறுகின்றன. இவ்விதமாக நாம் முதலில் அன்பின் நிர்ப்பந்தத்திற் செய்த காரியங்களை இப்பொழுது நாமே யோசித்துச் செய்கிறோம். பிறரை அண்டி நிற்பதை விட்டு சுதந்திரர்களாகிறோம். அஹிம்ஸாவாதியான தலைவனுக்கு ஒருவித நிர்ப்பந்தமும் தேவையில்லாதிருப்பதுதான் ஆதர்ச நிலையாகும். ஆனால் அந்நிலையை சத்திய யுகத்தில்

தான் எதிர்பார்க்கலாம். ஸமுதாயம் பலஹீனம் அடைந்தும், அதருமத்தின் வலிமை ஓங்கியும், கொடுமைகளினால் ஸமுதாயம் துன்புறுத்தப்பட்டும், தருமத்தை ஆவலுடன் எதிர்பார்த்துமிருக்குங்கால், மகாபுருஷன் அவதரிக்கிறான். தருமமிருந்து, அதருமமில்லாதிருந்தால், மஹாபுருஷன் வரவேண்டிய அவசியந்தானென்ன, உபவாஸம் எதற்கு? உபதேசமும், நற்போதனையும் ஏன்?

ஒவ்வொரு மனிதனும் இந்த உபவாஸ ஆயுதத்தைக் கையாளத் தகுதியுள்ளவனென்பதும் இதன் பொருளல்ல. ராமனும் கிருஷ்ணனும் கையாண்டதும், காந்தியடிகள் கன்றின் விஷயத்தில் உபயோகித்ததுமான அஹிம்ஸையமான ஹிம்ஸையைக் கையாள மிகச் சிறந்த தகுதி தேவை. ஹிம்ஸை புரியும் ஆயுதங்களுக்கும் அப்பியாசம் அல்லது சிட்சை அவசியமாயிருக்கிறது. போர்வீரர்கள், வாள், சிலம்பம், ஈட்டி முதலியவைகளில் பழகுதல் அவசியமாயிருக்கிறது. அந்த அப்பியாசத்திற்குப் பின்பே அவர்கள் தங்கள் ஆயுதங்களைத் திறமையுடன் கையாளுகிறார்கள். இதே போன்று அஹிம்ஸையைச் சேர்ந்த உபவாஸத்திற்கும் யோக்கியதை அவசியமாகும். எல்லோரும் அஹிம்ஸா—உபவாஸம் செய்ய முடியாது. 'உணவு மறுத்தல்' என்பது வேறு. ஆன்மீக உபவாஸம் வேறு. உண்மையில் தருமமேது, அஹிம்ஸையேது? உண்மை பெரும்பாலும் சுயநலத்திற்காகவே அனுஷ்டிக்கப்படுகிறது. சிலர் வேஷத்திற்காகவும், விளம்பரத்தின் பொருட்டும்

உண்ணுதிருக்கிறார்கள். இத்தகைய உண்ணாமையினால் அதிக பலாத்காரம் நடைபெற்று விட்டாலும், அவைகளை நாம் தரும விரோதமான உபவாஸங்களின் வகுப்பி லேயே சேர்க்கவேண்டும். இதை ஆராய இது இட மல்ல. நாம் ஆராய்வது ஆன்மீக உபவாஸங்கள். ஆன்மீக உபவாஸம் செய்ய விரும்புவோன், முதலில் அதற்குரிய தகுதியைப் பெறவேண்டும். ஒவ்வொரு ஆன்மீக உபவாஸத்திலும் பலாத்காரம் ஏற்படக்கூடும். தருமவிரோதமான உபவாஸத்திலும் பலாத்காரமிருந் தாலும், ஜனங்கள் அதை அலட்சியம் செய்து விடுகிறார் கள். அலட்சியம் செய்யவும் வேண்டும். ஏனெனில் பலாத்காரத்தில் நீதியோ, தருமமோ இல்லை. ஆகையால் இவ்விதம் உண்ணுதிருப்போரெதிரில் பணி வது பாவம். ஆனால் ஆன்மீக உபவாஸத்திலும் பலாத் கார மேற்படக்கூடு மாதலால், உபவாஸ மேற்போன் அதிக எச்சரிக்கையும், அதிகத் தகுதியும் உள்ளவனு யிருத்தல் அவசியமாகும்.

ஆதலால் ராஜகோட் உபவாஸத்திற்குப் பின் காந்தியடிகள் "சத்தியாக்கிரஹத்தின் ஆயுதசாலையில் உபவாஸம் ஒரு வலிவுள்ள ஆயுதமாகும். இதைக் கை யாள எல்லோரும் தகுதியுள்ளவர்களல்ல. கடவுளிடம் உண்மையான பற்றற்றவன், சத்யாக்ரஹ உபவாஸத் திற்கு யோக்கியதை யுள்ளவனுக முடியாது. பிறரைப் பார்த்து நடிப்பதற்குரியவிஷயமல்ல இது. எல்லையில்லா ஆன்ம வேதனையுள்ள பொழுதே உபவாஸமேற்றல்

வேண்டும். விசேஷ சந்தர்ப்பங்களிலேயே இதற்கு அவசியமும் ஏற்படுகிறது. நான் உபவாஸத்திற்கேற் றவனாகி விட்டேனெனத் தோன்றுகிறது. உபவாஸம் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாயினும், இதன் நிர்ப்பந்தங் களும் மிகக் கடுமையானவை. ஆதலால், இதற்குரிய அப்பியாசம் பெறாதவர்களுக்கு இதன் மதிப்புத் தெரி யாது. எனது அளவுகோலால் உபவாஸங்களை அளவிடும் பொழுது, ஜனங்கள் மேற்கொள்ளும் பெரும்பாலான உபவாஸங்களை சத்தியாக்கிரஹ வகுப்பிற் சேர்க்க முடியாதென்று நான் நினைக்கிறேன். அவை வெறும் 'உணவு மறுத்தல்' என்றே அழைக்க வேண்டும்'' என்று எழுதினார். 'அகக்குரல்' கேட்பதாகவும், உப வாஸமென்றும், சுயநலத்திற்காக பலர் நடித்திருக்கிறார் கள். ஆனால் எந்த நல்ல பொருளைத்தான் மக்கள் தவறாக உபயோகிக்கவில்லை? ஒரு பொருளைத் தவறாக உப யோகிப்பதாலேயே அது கெட்டதாகி விடுமா? ஒவ் வொரு விஷயத்தையும் பகுத்துணர்தல் வேண்டும். ஆகையால் காந்தியடிகள் ஆகாயவாணியைக் கேட்டா லும், உபவாஸங்கள் செய்திருப்பினும், இந்த இரண் டைப்பற்றி ஜாக்கிரதையாக நடந்து கொள்ளும்படி தம் வியாஸங்களில் மக்களுக்கு ஆலோசனை கூறுகிறார். அவர் அநேகமாக 'அகக்குரல்' என்று கூறுகிறவர்க ளிடம் சந்தேகங் கொள்வதையும் உபவாஸம் செய் வோரெல்லோரையும் அதை நிறுத்தச் சொல்வதையும் கண்டிருக்கிறேன்.

---

[ 12 ]

## சத்தியாக்ரஹ ஆரம்பம்

காந்தியடிகளை நினைத்ததும் சத்தியாக்ரஹத்தின் சித்திரம் நம்முன் வந்து நிற்கிறது. பாலை விட்டுப் பசுவை நினைக்கமுடியாததுபோல், சத்தியாக்ரஹமின்றி காந்தியடிகளையும் எண்ண முடியாது. காந்தியடிகள் சத்தியாக்ரஹத்திற்குப் பரந்த பொருள் கூறுகிறார். சாத்வீக சட்டமறுப்போடு சத்தியாக்ரஹம் பூர்ணமாகி விட்டதாக அவர் கருதுவதில்லை. சாத்வீக சட்டமறுப்பு சத்தியாக்ரஹத்தின் ஒரு அங்கமேயாகும். அவரது அபிப்பிராயத்தில் ஹரிஜன சேவையும், சாத்வீக சட்டமறுப்பைப் போன்றே சத்யாக்ரஹமாகும். ராட்டை சுற்றுவதும் சத்யாக்ரஹமே. சத்தியம், பிரும்மசரியம் இவைகளெல்லாம் சத்யாக்ரஹத்தின் அங்கங்களேயாம்.

சத்யாக்ரஹம் என்பது சத்தியத்தில் உறுதியுடனிருத்தலேயாம். இதை லட்சியமாகக் கொண்டு

சத்யாக்ரஹ ஆச்சிரமவாசிகள் சத்தியம், அஹிம்ஸை, பிரும்மசரியம், ருசி ஒழித்தல்,[1] திருடாமை[2]; அஞ்சாமை, தீண்டாமை ஒழித்தல், உடலுழைப்பு, சர்வமத சமரசம், அடக்கம், சுதேசியம், இந்தப் பதினேரு விரதங்களை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. இதிலிருந்து இந்தப் பதினேரு விரதங்களும் சத்யாக்ரஹத்தின் அங்கங்களென்பது வெளிப்படையாகின்றன. சாத்வீக சட்டமறுப்போ, அடக்கம், சத்தியம், அஹிம்ஸை, அஞ்சாமை இவைகளுள் அடங்கிவிட்டது. இதற்குத் தனியாக இடமில்லை. ஆனல் சாதாரண மக்கள் சத்தியாக்கிரஹத்தைச் சட்டமறுப்பென்றே கருதுகிறார்கள். சாத்வீகத்தின் பெருமையையும் சிலரே அறிந்திருக்கிறார்கள். நாற்பது வருஷத்திய ஓயா முயற்சியின் பின்னரும் இவ்வித தவறான எண்ணங்கள் மக்களிடை இருந்து கொண்டிருப்பது ஆச்சரியமான விஷயம். பொதுவாக எல்லாவித சட்ட விரோதமான எதிர்ப்பிற்கும் இப்பொழுது சத்தியாக்ரஹமென்ற பெயர் உண்டாகிவிட்டது. சுத்த சத்யாக்ரஹ முறையைப் பின்பற்றாமல் சட்ட மறுப்பைக் கையாளுகிறவர்கள் அதை சத்யாக்ரஹ மென்றழைக்காமல் "நிராயுத

1. ருசி ஒழித்தல் அதாவது நாவின் ருசிக்காக மட்டில் உணவருந்தாது சரீர போஷணைக்கு வேண்டியவற்றை மட்டும் உண்ணுதல்.

2. தனக்கு மிக்க அவசியமான வஸ்துக்களை மட்டுமே உபயோகித்தல்.

எதிர்ப்பு" என்று அழைத்தால் சத்தியாக்ரஹத்திற்கு உதவி செய்தவர்களாவார்கள்.

காந்தியடிகளிடம் இந்த சுத்தமான சத்தியாக்ரஹம் சிறு பிராய முதலிருந்திருக்கிறது. ஆனால் சாத்வீகச் சட்ட மறுப்பு முதன் முதலில் ஆப்ரிக்காவில் தெளிவாக வெளிப்பட்டது. ஆப்ரிக்காவை யடைந்ததும் இவர் பிரிடோரியா போக நேர்ந்தது. டர்பனிலிருந்து பிரிடோரியாவுக்குக் கிளம்பினார். முதல் வகுப்பு டிக்கெட்டு பெற்று வண்டியில் போய் அமர்ந்தார். இரவு ஒன்பது மணிக்கு வேறொரு வெள்ளையன் அதே வண்டிக்கு வந்தான். காந்தியடிகளை அவன் ஏற இறங்கப் பார்த்தான்; பிறகு வெளியே சென்று ஒரு ரயில் அதிகாரியைக் கூட்டிக்கொண்டு திரும்பி வந்தான். வந்ததும்,

"எழுந்திரு. நீ இங்கே உட்காரக் கூடாது. நீ வேறு கீழ் வகுப்பு வண்டிக்குப் போக வேண்டும்" என்றான்.

"ஆனால் என்னிடம் முதல் வகுப்பு டிக்கட்டு இருக்கிறதே" என்றார் காந்தியடிகள்.

"வாதாடாதே. எழுந்திரு. வேறு வண்டிக்குப் போ."

"நான் திட்டமாகச் சொல்லி விடுகிறேன். நான் இந்த வண்டியிலிருந்து இறங்கப் போவதில்லை. என்னிடம் டிக்கட் இருக்கிறது. நான் இதே வண்டியில் தான் யாத்திரையை முடிக்கப்போகிறேன்."

"நீ சமாதானமாய்க் கூறினுல் கேட்க மாட்டாய். நான் போலீஸைக் கூப்பிடுகிறேன்."

போலீஸ் சேவகன் வந்தான். அவன் காந்தியடிகளின் கையைப் பிடித்து அவரை வெளியேற்றி, அவருடைய சாமான்களையும், வெளியே எறிந்தான். இவர் வேறு வண்டியில் செல்ல சம்மதிக்கவில்லை. வண்டியும் இவரை விட்டுவிட்டுக் கிளம்பிச் சென்றது. இவர் பிரயாணிகளின் அறையில் போய் பேசாமல் உட்கார்ந்தார். சாமான்களும் ரயில்காரர்களிடமே யிருந்தன. இரவில் குளிரின் கொடுமை தாங்க முடியவில்லை. அதனுல் இவர் வெட வெட வென்று நடுங்கிக் கொண்டிருந்தார். "நான் என் கடமையைப் பற்றி யோசிக்கத் தொடங்கினேன். நான் எனது உரிமைகளுக்காகப் போரிட வேண்டுமா; அல்லது அவமானத்தைப் பொறுத்துக் கொண்டே பிரிடோரியா சென்று வழக்கு முடிந்ததும் அங்கிருந்து திரும்புவதா? எனது கடமையை நிறைவேற்றுமல் இந்தியாவுக்குத் திரும்புவது ஆண்மையாகாது. கருப்பு மனிதன் வெள்ளை மனிதன் என்னும் இந்த நிற வித்தியாச நோய் இங்கே மிகக் கடுமையாயிருக்கிறது. எனக்கு நிகழ்ந்த அவமானம் அந்நோயின் ஒரு சின்னமேயாகும். 'வியாதியை வேருடன் களைந்து ஒழிக்க வேண்டும்; அம்முயற்சியில் வரும் கஷ்டங்களை யெல்லாம் ஏற்க வேண்டும்' என்று நிச்சயித்து மறுவண்டியில் நான் பிரிடோரியாவுக்குக் கிளம்பினேன்."

டர்பனிலிருந்து பிரிடோரியா சேருவதற்கு ரயிலில் சார்லஸ் டவுன் போக வேண்டும். அங்கிருந்து குதிரைத் தபால் வண்டியுண்டு. அதில் ஜோஹானஸ் பர்க்கையடைந்து அங்கிருந்து மீண்டும் ரயிலில் பிரிடோரியா போகவேண்டும். காந்தியடிகள் இரண்டாவது வண்டியிலேறி சார்லஸ் டவுனைச் சேர்ந்தார். இப்பொழுது இங்கிருந்து மறுபடியும் குதிரை வண்டியில் யாத்திரை செய்தல் வேண்டும். அவர் ரயில் டிக்கட்டுடன் குதிரை வண்டி டிக்கட்டும் வாங்கியிருந்தார். குதிரை வண்டியின் ஏஜெண்டு இவர் கறுப்பு மனிதரென்பதைக் கண்டு, இவரிடம் "உமது டிக்கட் ரத்தாகி விட்டது" என்றான். காந்தியடிகள் சரியான பதில் கூறவே, அவன் மறுக்க முடியவில்லை. ஆனால் கறுப்பு—வெள்ளை யென்ற மூலாதார ஆட்சேபனை எவ்வாறு நீங்கும்? வெள்ளை பிரயாணிகள் எல்லோரும் வண்டிக்குள் அமர்ந்திருந்தனர். இவரை வெள்ளையர்களுடன் அமரச் செய்யக் கூடாது. ஆகையால் வண்டி ஓட்டுவோனுக்குப் பக்கத்தில் தான் உட்காரும் இடத்தில் வண்டியின் சொந்தக்காரன் இவரை உட்காரவைத்துத் தான் உள்ளே உட்கார்ந்தான்.

இது அவமானமானாலும் இதை ஏற்றார். வண்டி சென்று கொண்டிருந்தது. சில மணிகள் கழிந்தன. இப்பொழுது வண்டியின் சொந்தக்காரனுக்கு சுருட்டுக் குடிக்க வேண்டியிருந்தது. ஆகையால் அவன் வெளியே உட்காருவதெனத் தீர்மானித்தான்.

அவனுடைய இடத்தில் காந்தியடிகள் உட்கார்ந்திருக்கிறார். அவரை உள்ளே உட்காரவைக்கவும் முடியவில்லை. அவன் காந்தியடிகளை மற்றொரு முறையும் அவமானத்திற்குள்ளாக்க நிச்சயித்தான். வண்டி ஓட்டுவோனுடைய மறுபுறத்தில் ஓர் அசுத்தமான இடமிருந்தது. அதைக் காட்டி காந்தியடிகளிடம் "இப்பொழுது நீ இங்கே உட்காரு. நான் சுருட்டுக் குடிக்க வேண்டும்" என்றான். இந்த அவமானம் ஸகிக்க முடியவில்லை. "எனக்கு உள்ளே உட்கார உரிமை யிருந்தது. நீ சொல்லியதால் நான் இங்கே உட்கார்ந்தேன். இப்பொழுது நீ சுருட்டுப் பிடிக்க என் இடத்தையும் கேட்கிறாய். எனக்கு உள்ளே உட்கார சம்மதம். ஆனால் வேறு இடத்தில் உட்காரும் பொருட்டு, இருக்குமிடத்தை விடமாட்டேன்" என்றார். இதைக் கூறவும் அவன் பளீரென்று காந்தியடிகளை ஓர் அறை அறைந்தான். இவருடைய கையைப் பிடித்துக் கீழே தள்ளுவதற்கு முயன்றான். இவரும் வண்டியின் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு தம் இடத்தில் அசையாதிருந்தார்.

மற்ற பிரயாணிகள் இந்த வேடிக்கையைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வண்டியின் அதிகாரி இவரை அடித்துக் கொண்டும், திட்டிக்கொண்டும், இழுத்துக் கொண்டுமிருந்தான்; ஆனால் இவர் வண்டியைப் பிடித்துக்கொண்டு பொறுமை யுடனிருந்தார். அவன் பலவான், இவர் இளைத்தவர். பிரயாணிகளுக்கு

இவர்மீது தயவுண்டாயிற்று. "ஐயா, விட்டுவிடுங்கள், ஏழையை ஏன் அடிக்கிறாய்?" என்றான் ஒருவன். கோபம் அடங்கவில்லை யாயினும் அவனுக்குச் சிறிது வெட்கமுண்டாயிற்று. இவரை இருந்த இடத்திலேயே உட்காரச் சம்மதித்தான். வண்டி போகவேண்டிய இடத்தை அடைந்தது. அங்கிருந்து மீண்டும் ரயிலி லேறினால் மறுபடியும் அதே கஷ்டம். ரயில்வே கார்டு முதலில் இவருடைய டிக்கட்டைக் கேட்டான். பிறகு எழுந்து மூன்றாவது வகுப்பிற்குப் போகும்படி கூறினான். மீண்டும் தொந்திரவு ஆரம்பமாகிவிட்டது. ஆனால் ஒரு வெள்ளைக்காரப் பிரயாணி தலையிட்டதால் வழக்கு முற்றவில்லை. அதனால் இவர் சௌகரியமாக பிரிடோரியா சேர்ந்தார்.

சத்யாக்கிரஹத்தில் காந்தியடிகள் கற்ற முதற் பாடம் இது. சத்யாக்கிரஹம் செய்வோன் முன் கூட்டியே யாதொன்றும் நிச்சயம் செய்கிறதில்லை. சமயம் வரவும் நியாயமற்ற கட்டளையைத் தானாகவே மீறுகிறான். அவ்வாறே காந்தியடிகளும் அநீதிமான சட்டங்களை மீறுகிறார். அடிபெறுகிறார், ஆனால் அடிப்பவனிடம் சிறிதும் கோபங் கொள்வதில்லை. அவன் பேரில் வழக்குத் தொடரவும் இஷ்டப்படுவதில்லை. இவ்விதம் அனுஷ்டானத்தில் சத்யாக்ரஹத்தின் முதற் பாடம் வெற்றியுடன் முற்றுப் பெறுகிறது.

சிறிய விஷயத்தில் ஜனித்த சத்யாக்கிரஹம், நாளடைவில் பெரிய விஷயங்களில் கையாளப்படுகிறது.

இது வெறும் கட்டளையை மீறுவது அல்ல; சாத்வீகமானது. சாத்வீகமென்பது சத்யாக்ரஹத்தின் முக்கிய நிபந்தனையாகும். சத்யாக்ரஹம் அவருக்கு ராஜீய ஆயுதமல்ல. முதலிலிருந்து கடைசிவரை அவருக்கு இது ஒரு ஆன்மீக ஆயுதமே யாகும். அவர் இதை ராஜீயத்திலும், வீட்டிலும், எச்சமயத்திலும், எல்லா நிலையிலும் கையாளுகிறார்.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் அம்மையாருக்கு ஒரு தடவை நோயுண்டாகிறது. சிகிச்சையினால் பயனுண்டாகாமற் போகவே, காந்தியடிகள் தமது இயற்கை சிகிச்சை முறைகளைக் கையாண்டார். ஸ்ரீமதி கஸ்தூரிபாய் உப்பையும் பருப்பையும் விட்டு விடவேண்டுமென்று நினைத்தார். ஆனால் அவர்களுக்கு இது பிடிக்கவில்லை. ஒருநாள் இதைப்பற்றி பேச்சுக்கிடையில் "உங்களை உப்பையும், பருப்பையும் விடும்படி கூறினால் விட்டு விடுவீர்களா?" என்றார் "நீ நினைப்பது தவறு. நோய் வாய்ப்பட்டுக் கிடக்க, டாக்டர் என்னை இவைகளை விட்டு விடும்படி கூறினால் நிச்சயமாய் நான் விட்டுவிடுவேன். நீ விட்டாலும் சரி, விடா விடினும் சரி, நான் ஒரு வருஷத்திற்கு உப்பையும், பருப்பையும் சாப்பிடுகிறதில்லை என்று கூறினார். பாவம் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் அவர்கள் பயந்து போனார். வீணில் ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொண்டார். "நான் உப்பையும், பருப்பையும் விட்டு விடுகிறேன். தாங்கள் விடவேண்டாம்!' என்றார். ஆனால் காந்தியடிகளோ



ஸ்ரீமதி கஸ்தூரிபாய் அம்மையார்

பேச்சு வாக்கில் பிரதிக்ஞை செய்திருந்தபோதிலும் அதிலிருந்து பிறழுபவர் அல்ல. பிரதிக்ஞை பிரதிக்ஞையன்றோ! ஸ்ரீமதி கஸ்தூரிபாய் அவர்களும் ஒருவாறு சமாதானமடைந்தார். இச்சம்பவத்தைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் காந்தியடிகள் "எனது இந்த சத்யாக்ரஹம் எனது வாழ்க்கையின் நினைவுகளெல்லாவற்றிலும் அதிக இனிமையானது" என்று கூறுகிறார்.

இந்த இரு சம்பவங்களும் காந்தியடிகளின் சுத்தமான சத்யாக்ரஹ முறையின் உருவை நம்முன் நிறுத்துகின்றன. ஒன்று முன்பின்னறியாத ஒருவன் இவருக்குக் கொடுமை புரிந்தபொழுதும், மற்றது பிடிவாதம் காரணமாகத் தம் ஆரோக்கியத்தை விட ருசியுள்ள உணவைப் பெரிதாக மதித்த மிகவும் நெருங்கிய பந்துவினிடத்தும் கையாளப்பட்டதாயினும், இரண்டின் நோக்கமும் ஒன்றே,—இதயத்தை மாற்றுதல். இரண்டிலும் தாமாகவே விரும்பி கஷ்டத்தை ஏற்றார்; கோபமோ ஆவேசமோ இல்லை. இவ்விரு சம்பவங்களையும் ஆராய்ந்தால், இவைகளுக்குப் பிறகு நடந்த பெரிய ராஜீயப்போர்களிலும் இதே நோக்கம் வெளிப்படுகிறது,—பொறுமையினால் கோபத்தை வெல்லல், கஷ்டங்களைத் தாமேயேற்றுப் பிறருடைய நற்குணங்களைத் தூண்டி எழச்செய்தல் என்பதே. சத்யாக்ரஹ ஆயுதத்தை அவர் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் கையாண்டிருக்கிறார். ஆனால் ராஜீயத்துறையில் இவ்வாயுதத்திற்கு அதிகப் புகழ் கிடைத்திருக்கிறது.

ஆகையால் சத்யாக்ரஹ முறையைச் சரியாக அறிந்து கொள்வதற்கு ராஜீய காரியங்களைக் கண்ணோட்ட மாய்ப் பார்த்தல் அதிக உதவியாயிருக்கும்.

காந்தியடிகள் அரசாங்கத்தை எதிர்த்துப் பல போர்கள் நடத்தினார். பல தடவைகளில் அரசாங்கத் துடன் நெருங்கிப் பழகினார். இந்தப் போர்களிலும், பழக்கங்களிலும் சத்யாக்கிரஹத்தின் ஒளி வீசு கிறது. 1914—18ஆம் வருஷத்திய ஐரோப்பிய மஹா யுத்தத்திலும், அதேகாலத்தில் நடத்திய சம்பாரன் சத்யாக்கிரஹத்திலும், தற்பொழுதைய ஐரோப்பிய மஹாயுத்தத்திலுமே சுத்த சத்யாக்ரஹத்தைக் காண் கிறோம். ஆப்பிரிக்காவின் சத்யாக்ரஹம் இவர் தாமே நடத்தியதாகையால், அதில் சுத்தமான சத்யாக்ரஹ முறையே அனுசரிக்கப்பட்டது. ஆனால் 1920—22இ லும், 1930—32இலும் நடந்த சத்யாம்யாக்கிரஹப் போர்கள் விஸ்தாரமானவை. இவர் தலைமை வகித்தா ரெனினும், பலருக்கும் அதில் பங்கிருந்தது. இதனால் சத்யாக்கிரஹம் முற்றிலும் சுத்தமானதாயில்லை. இப் போர்களில் சத்யாக்கிரஹத்துடன் துராக்கிரஹமும் கொஞ்சம் கலந்திருந்தது.

மக்கள் தங்கள் கையினால் ஹிம்ஸை யொன்றும் செய்யவில்லை யென்பது உண்மையே. ஆனால் மனத் திலும் வாக்கிலும் உள்ள விஷம் முற்றிலும் குறைய வில்லை.

பலவருஷங்களுக்கு முன் இத்தாலிக்கும் துருக்

கிக்குமிடையே சண்டை நடந்தபொழுது அக்பர் கவி இவ்வாறு எழுதினர்.

न सीने में ज़ोर है न बाजू में बल
कि टरकी के दुश्मन से जाकर लड़ें।
तहेदिल से हम कोसते हैं, मगर
कि इटली की तोपों में कीड़े पड़ें।

"ஊக்கமில் உள்ளத்தோடு, உறுதியில் புயமுங்கொண்டு
தாக்குதல் எவ்வாறாகும், துருக்கியின் பகைவன் தன்னை
நோக்கி இத்தாலிதிக்கை நெறித்திடல் செய்தோம்—[சொற்கள்
ஆக்கிடு புழுக்கள் ஆங்கு அமைந்துள படையை யீச."

சிறிது மாற்றி இதே பாட்டைப் பாடத்தக்க அநேக சத்யாக்ரஹிகளிருந்தனர். "இங்கிலாந்தின் சுவாசாசயம் புழுக்க என்று வேண்டிக் கொள்வோருக்குக் குறைவில்லை." ஆனல் சென்ற ஐரோப்பியா மஹாயுத்தத்திலும், தற்பொழுது நடக்கும் யுத்தத்திலும் இவர் கையாண்டுள்ள முறை சுத்த சத்யாக்கிரஹமாகும்.

[ 13 ]

## யுத்தமும் அஹிம்ஸையும்

சென்ற ஐரோப்பிய மஹாயுத்தமும், இன்றைய ஐரோப்பிய யுத்தமும் மாபெரும் சம்பவங்கள். இவை உலகத்தின் உருவையே மாற்றிவருவதுடன், வருங் காலத்திலும் மாற்றக்கூடியவை. உண்மையில் தற் பொழுதைய யுத்தத்திற்குக் காரணம் சென்ற யுத்தமே யாகும். இவ்விரு யுத்தங்களும் உலகின் கொடிய நோயின் அறிகுறிகளாகும். பூமியினுள் கொந்தளிப் பெழுகிறது; அதை நாம் பார்க்கமுடிவதில்லை. பூகம்பம் ஏற்பட்டதும் நமக்கு அது தெரிவதுபோல், மனித ஸமூகத்திலும் உள்ளுக்குள்ளேயே பலவாண்டு களாகப் புகைந்து கொண்டிருந்த பகைமை, யுத்தம் தொடங்கவும் வெளிப்படுகிறது. சென்ற மகா யுத்தம் ஒரு வகை பூகம்பமாகும். பிரிஸிடெண்ட் வில்ஸன் இந்த பூகம்பத்தின் காரணத்தைக் கண்டான். பிரிட்டனுடைய பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜுக்கும்

நிலைமை தெளிவாகப் புலப்பட்டது. இருந்தபோதிலும், இவர்களின் பலவீனம் இவர்களை எதும் செய்யாமல் தடுத்தது. தாத்காலிக வெற்றியின் மயக்கத்தில் இவர்கள் உள் நோயை மறந்தனர். நோய்க்கு வைத்தியம் செய்யாமல், அதன் அறிகுறிகளை அடக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டது. அதன் பயனாக மானிட ஸமூகத்தின் உடலில் புரையோடிவிட்டது. வலி தாளாமல் உயிர்கள் கதறிக் கொண்டிருக்கின்றன.

இவ்விரு யுத்தங்களிலும் காந்தியடிகள் செய்ததென்ன வென்பது ஆராயத் தருந்த விஷயம். காந்தியடிகளின் ராஜீய வேலையில் தருமம் முக்கியமாகும். இந்நூற்றுண்டில், ஐரோப்பிய மகா யுத்தங்களைவிட முக்கியம் வாய்ந்ததாக வேறு ஒரு ராஜீய சம்பவமும் நடைபெறவில்லை. இந்த யுத்தங்களில் காந்தியடிகள் ராஜீயத்தையும், தருமத்தையும் எவ்வாறு இணைத்தா ரென்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். அது காந்தியடிகளின் வாழ்க்கைத் தத்துவத்தை மிகவும் நன்றாக விளக்குகிறது. முதல் ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு காந்தியடிகளின் முறையில் ஒரு மாறுபாடு ஏற்பட்டது. ஆங்கில ஆட்சியில் அவர் வைத்திருந்த அசையாத நம்பிக்கை அழிந்துவிட்டது. அதற்குமுன்பே அவருக்குண்டான அநேக ஏமாற்றங்களினுல் அவரது நம்பிக்கையின் ஆதாரமே சின்னுபின்னமாய்விட்டது. "பிரிட்டிஷ் ஆட்சியில் என்னைவிட அதிகப்பற்றுள்ளவன் வேறு யாருமிருக்கமுடியாது. இப்பொழுது நான் யோசிக்

கும் பொழுது, இந்த ராஜ பக்திக்குக் காரணம் என்னுடைய உண்மைப் பற்று என்று தெரியவருகிறது. எனக்கு பிரிட்டிஷ் ஆட்சியின் தீமைகள் தெரியாமலில்லை; ஆனால் நன்மை தீமைகளைக் கணக்கெடுத்துப் பார்க்கும்பொழுது, தீமைகளைவிட நன்மைகளதிகமிருக்குமென்று அப்பொழுது தோன்றிற்று. ஆப்பிரிக்காவில் நான் கண்ட நிற துவேஷத்தை பிரிட்டிஷாரின் இயற்கைக்குப் பொருத்தமில்லாததெனக் கருதினேன். நான் அதை அங்குமட்டு முள்ளதென்றும், நிலைத்திராதென்றும் எண்ணினேன். ஆகையால் அரச குடும்பத்தாரிடம் மரியாதை காட்டுவதில் நான் எல்லா ஆங்கிலேயர்களையும் தோற்கடித்தேன். இந்த ராஜ பக்தியினால் சொந்த லாபம் எதுவும் அடையவில்லை. ராஜபக்தியின் மூலமாகக் கடமையைச் செலுத்துவதாகவே நம்பினேன்."

இவை அவருடைய பழைய கருத்துக்கள். பிறகு அரசாங்கத்தை அழைப்பதற்கு "சைத்தான்" என்ற சொல்லை உபயோகிக்கத் தொடங்கிய காலத்திற்குள், அவரது எண்ணங்கள் மாறிவிட்டன. அரசாங்கம் சைத்தானாகிவிட்டாலும் அவரது செயல் முறையில் ஒன்றும் மாறுபாடில்லை. ஏனெனில் அவருக்கு சைத்தானிடமும் விரோதமில்லை. ஒரு தடவை நான் "அந்த மனிதன் பெரிய துஷ்டனாயிற்றே. அவனை ஏன் தாங்கள் அருகில் வைத்துக் கொண்டீர்கள்?" என்று கேட்டேன். காந்தியடிகள் "சைத்தானையும்

என்னிடம் வைத்துக் கொள்ளவே நான் விரும்புகிறேன். ஆனால் அது என்னிடம் இருக்க விரும்புகிறதேயில்லை'' என்று பதிலளித்தார். அவருடைய ராஜ பக்தி பறந்துவிட்டதாயினும் அரசாங்கத்தின் மனமாற்றத்திலுள்ள ஆசைமட்டும் போகவில்லை. எந்த சுயராஜ்யத்தை, கடமையைச் செலுத்துவதன் மூலமாகப் பெறுவோமென்ற ஆசையிருந்ததோ, அதை இப்பொழுது 'மனமாற்றத்தா'ல் அடையலாமென்ற எண்ணமிருந்தது. தாமே கஷ்டங்களை ஏற்றல் போன்ற முறைகள் எப்பொழுதும் போலிருந்துவந்தன.

1914-ஆகஸ்டு-4ல் யுத்தம் துவக்கப்பட்டதாக பிரகடனம் வெளிவந்தது. ஆகஸ்டு 6ல் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு இங்கிலாந்தை அடைந்தார். லண்டனை அடைந்ததும் அவரது கவனம் தம் கடமையிற் சென்றது. அச்சமயத்தில் சில இந்திய நண்பர்கள் இங்கிலாந்திருந்தனர். அவர்களை ஒரு சிறு சபையிற் கூட்டி அவர்களிடம் இந்தியர்களின் கடமையைக் குறித்துத் தம் எண்ணத்தைத் தெரிவித்தார். இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியர்கள் போரில் உதவி செய்து தம் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பது அவரது எண்ணம். ஆங்கில மாணவர்கள் சேனையிற் சேர்ந்து வந்தனர். இந்திய மாணவர்களும் அவ்விதமே செய்யவேண்டுமென்பது அவரது கருத்து. " ஆனால் இருவருடைய நிலைமையும் ஒன்று ? ஆங்கிலேயர் எஜமானர்கள், நாம் அடிமை

கள். அடிமை எதற்காக உதவவேண்டும்? விடுதலையை விரும்பும் அடிமைக்கு, எஜமானுக்குக் கஷ்டம் நேர்ந்த பொழுதல்லவா ஏற்ற சந்தர்ப்பம்." தம் தீர்மானத்திலிருந்து காந்தியடிகளை மேற்கூறிய வாதத்தினால் அசைக்கமுடியவில்லை. இன்றும் இத்தகைய வாதங்கள் அவருக்குப் பிடிப்பதேயில்லை.

"எனக்கு ஆங்கிலேயர், இந்தியர் இருவருடைய நிலைமையிலுள்ள வித்தியாசம் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால் நாம் முழுவதும் அடிமைகளாகிவிட்டோமென்று நான் நம்பவில்லை. நமது இந்நிலைக்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சியல்ல. அதிகாரிகளேயாகுமென்று எனக்குத் தோன்றிற்று. அன்பினாலேயே இதை மாற்ற முடியுமென்றும் நம்பினேன். நாம் நமது நிலையில் மாறுதலை விரும்பினால், ஆங்கிலேயருக்கு, ஆபத்துக்காலத்தில் உதவிசெய்து அவர்களுடைய மனதை மாற்றுவதே நமது கடமையாகும்" என்று நினைத்தார்.

ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் காந்தியடிகளைப்போல் மற்றவர்களுக்குப் பற்றில்லை. ஆகையால் உதவியளிப்பதில் அவர்கள் உற்சாகம் கொள்ளவில்லை. இன்றோ காந்தியடிகளுடைய பற்றும் அழிந்துவிட்டதால் அவருடைய உதவியும் அரசாங்கத்தாருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் "ஆங்கிலேயருக்கு வந்த ஆபத்து நமக்கு நல்ல சந்தர்ப்பம்" என்ற வாதத்தை காந்தியடிகள் இன்றும் ஏற்க மறுக்கிறார். அப்பொழுது "இச்சமயத்தில், நாம் நமது தேவைகளைத் தெரி

விக்கவேண்டும்'' என்று நண்பர்கள் கூறினர். ஆனால் காந்தியடிகளோவென்றால் "நாம் நமது தேவைகளை யுத்தத்திற்குப் பின்னர் தெரிவித்தால் இன்னும் அழகாகவும், தூர திருஷ்டியுடன் செய்ததாகவுமிருக்கும்'' என்றார். இப்பொழுதோ, தேவைகள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் ஆங்கிலேயருக்கு நேர்ந்த விபத்தின் கவலை காந்தியடிகளை விடவில்லை. அவர் ஆங்கிலேயருக்கு எத்தகைய தொந்தரவும் உண்டாக்க விரும்பவில்லை. முதல், இரண்டாவது ஐரோப்பிய யுத்தங்களைக் குறித்து காந்தியடிகள் கொண்டுள்ள கருத்துக்களில் தென்படும் சூட்சுமமான ஒற்றுமைகள் ஆராயத் தக்கவை.

கடைசியில் லண்டனில் சுயம் சேவகர்களின் படை யொன்று அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இந்தியா மந்திரியாக இருந்தவர் "க்ரூ'' பிரபு என்பவர். அவர் மிகுந்த ஆட்சேப சமாதானங்களுக்குப் பிறகு—அப்படையின் ஊழியத்தை ஏற்க சம்மதித்தார். ஆங்கிலேயர்களுக்கு அன்று நம்மிடமிருந்த அவநம்பிக்கை இன்றுமிருக்கிறது.

காந்தியடிகள் யுத்தத்தில் உதவி புரியும்பொருட்டு சுயம் சேவகர்களின் படையொன்று அமைத்த செய்தியைத் தென் ஆப்பிரிக்காவில் அவருடைய நண்பர்கள் கேட்டு மிகுந்த ஆச்சரிய மடைந்தனர். ஒரு புறம் அஹிம்ஸையை உபாஸித்து, மறுபுறம் யுத்தத்தில் சேருவதா? காந்தியடிகளின் இந்த ஒன்றுக்கொன்று

முரண்படும் கருத்துக்கள் அவருடைய தோழர்களுக்கு கலக்கத்தைத் தந்தன.

யுத்தத்தில் அவருக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. "நாம் நம்மைக் கொல்ல வருவோனிடமும் சகிப்புத் தன்மை காட்டவேண்டுவதாயின், எந்தக் கட்சியில் தருமமுள்ளதென்று தெரியாத நிலையில், நாம் எக்கட்சியிலும் எவ்வாறு சேருதல் கூடும்?" என்பது அவரது கேள்வி. இக்கேள்விக்கு விடையும் காந்தியடிகளே தருகிறார் :—

"யுத்தமும், அஹிம்ஸையும் ஒன்றோடொன்று ஒரு பொழுதும் பொருந்ாதவை என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் தருமம் எது, அதருமம் எது என்று தீர்மானித்தல் இவ்வளவு சுலபமல்ல. சத்தியத்தை வணங்குவோன் சிற்சில சமயங்களில் வழி தெரியாது தவிக்க நேருகிறது. அஹிம்ஸை ஒரு விசாலமான தருமம். (जीवो जीवस्य जीवनम्) 'உயிரே உயிருக்கு உயிர்' இந்த வாக்கியத்தின் அருத்தம் மிகவும் நுண்ணியது. மனிதன் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு கணமும் ஹிம்ஸை செய்யாது ஜீவிப்பதில்லை. உயிர் வாழும் செயலிலேயே—சாப்பாடு, குடித்தல், அசைதல் இவைகளில், மனிதன், அணுக்களையொத்த மிகச் சிறு உயிர்களையேனும் கொல்ல நேரிடுகிறது. ஆகையால் உயிர்வாழ்தலே ஹிம்ஸையாகும். தன் செயல்களெல்லாம் தயையிலிருந்து உதிப்பதாயிருந்தாலன்றி, அஹிம்ஸா பக்தன் தனது தருமத்தைச் சரிவர

நிறைவேற்ற முடியாது. அவன் தன்னுலியன்ற வரையில் உயிர்களைக் காக்க முயலுகிறான். இவ்வாறு அவன் ஹிம்ஸையின் பாவ வலையிலிருந்து தப்பிக் கொண்டேயிருக்கிறான். அவனுடைய கடமைகள் புலன்களை அடக்கி, தயையை வளர்த்தலேயாம். ஆனால், மனிதன் ஹிம்ஸையிலிருந்து முற்றிலும் விடுபடுதல் ஒரு பொழுதும் ஆகாது. ஆன்மா ஒன்றே; அது எங்குமிருப்பது. ஆகையால் ஒரு மனிதனுடைய தீமையின் பயன் மறைமுகமாக எல்லோரையும் சாரும். இப்படிப் பார்த்தாலும் மனிதன் ஹிம்ஸையிலிருந்து முற்றிலும் தப்ப முடியாது. மற்றொரு விஷயம் யாதெனில், அவன் ஸமுதாயத்தின் ஒரு அங்கமாயிருக்கும் வரையில், அதன் வாழ்விற்கெனச் செய்யப்படும் ஹிம்ஸையில் அவனுக்கும் பங்குண்டு. இரு நாடுகளுக்கிடையில் யுத்தம் நடக்கையில் அஹிம்ஸாவாதியின் முதற் கடமை அதை நிறுத்தச் செய்வதாம். ஆனால் இதற்குரிய யோக்கியதையில்லாதவன், அல்லது யுத்தத்தைத் தடுக்கும் சக்தியற்றவன்; தான் அதில் சேர்ந்தாலும், நாட்டையும், உலகையும், தன்னையும் அதிலிருந்து மீட்பதற்குரிய முயற்சியை இடைவிடாது செய்து கொண்டேயிருத்தல் வேண்டும்."

காந்தியடிகளின் காரியமுறைகள் வெளிப்பார்வைக்கு வேறுபட்டவைகளாகத் தோன்றினும் அவரது கருத்துக்களில் அன்றைக்கும், இன்றைக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. 'அஹிம்ஸையை வணங்கு

வோன், தன் செயல்களெல்லாவற்றிற்கும் மூலகாரணம் தயையாயிருந்தாலன்றி, தன் கடமையை முற்றிலும் நிறைவேற்ற இயலாது.' இந்த வாக்கியம் அவரது தீர்மானங்களெல்லாவற்றிற்கும், ஓடத்திற்குத் துடுப்புப் போன்றது. சென்ற யுத்தத்தில் கலந்துகொள்வதற்கு வேறொரு காரணமும் கூறுகிறார்.

"எனது நாட்டின் நிலையை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியினால் சீர்திருத்த ஆசை கொண்டிருந்தேன். இங்கிலாந்தில் பிரிட்டிஷ் கடற்படையின் உதவியினால் காப்பாற்றப்பட்டு வந்தேன். இங்கிலாந்தின் குடைநிழலில் ஆபத்தின்றி யிருந்ததால், ஒரு விதத்தில் இங்கிலாந்தின் ஹிம்ஸையிலும் நான் கலந்துகொண்டவனே. இங்கிலாந்துடன் எனது சம்பந்தத்தை அறுத்தெறியத் தயாராயில்லாத நிலையில், எனக்கு மூன்று வழிகளே இருந்தன. சத்யாக்கிரஹ முறைப்படி யுத்தத்தை எதிர்த்து நின்று, இங்கிலாந்து தனது முறையை மாற்றிக் கொள்ளும் வரையில் அதன் ஆட்சியுடன் ஒத்துழையாதிருத்தல்; அல்லது சட்டத்தை மீறி சிறை செல்லுதல்; அல்லது பிரிட்டிஷ் ஆட்சிக்கு யுத்தத்தில் உதவி புரிந்து கொண்டே—யுத்தத்தையே ஒழிப்பதற்கு வேண்டிய முயற்சி செய்தல். நான் முதலிரு முறைகளை அனுசரிப்பதற்குத் தகுதியற்றவனா யிருந்ததால், கடைசி முறையையே ஏற்றேன்." இந்த வாதம் நொண்டிச் சாக்கைப் போல் தோன்றுகிறது. காந்தியடிகள் எப்படி தீர்

மானத்தை முதலில் செய்து அதற்கு ஆதாரங்களைப் பிறகு தேடுகிறார் என்பதைப் பின்னர் விசாரிப்போம். வாதம் அவ்வளவு கலைக்கு உதவக்கூடியதாயில்லாவிட்டாலும், காந்தியடிகள் தம் ஆன்மாவுக்கு எப்பொழுது எது சத்தியமென்று தோன்றுகிறதோ அதையே பின்பற்றுகிறார். அவருடைய வாதங்களில் வேண்டுமென்றே தம்மையேதாம் ஏமாற்றிக் கொள்வதென்பதில்லை. அவருக்கு உண்மையில் பிரிட்டிஷ் ஆட்சிமுறையில் எல்லையற்ற நம்பிக்கை இருந்தது. தென்னாப்பிரிக்காவில் அவருக்கு எவ்வளவோ அநீதிகள் செய்யப்பட்டனவாயினும் அவரது தைரியமும், நம்பிக்கையும் குறையவில்லை. 'போயர்' யுத்தத்திலும், "ஜுலு" கலகத்திலும், அவருடைய அனுதாபம் போயர்—ஜுலு ஜனங்களிடமிருந்ததாயினும், ஆங்கிலேயர்களுக்குதவி செய்வதே தம் கடமை யென்றெண்ணினார். இவ்வுதவிக்குப் பிறகு இந்தியர்களின் நிலைமையை அறிவதற்காகக் குடியேற்ற நாட்டு மந்திரி ஜோஸப் சேம்பர்லேன் ஆப்பிரிக்கா வந்தபொழுது இந்தியர்களின் பிரதிநிதி கோஷ்டி ஒன்று அவரைச் சந்திப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது சேம்பர்லேன், "மற்ற எல்லோரும் வரட்டும்; காந்தியை மட்டில் தலைவனுக்கிக் கொண்டுவரவேண்டாம். அவரை ஒரு முறை சந்தித்தாகிவிட்டது; மீண்டும் அவரைப் பார்க்கவேண்டியதில்லை" என்று சொல்லியனுப்பினார்.

ஆங்கிலேயர்களுடைய இந்தப் பழைய முறை இன்றும் அப்படியே நிலைபெற்றிருக்கிறது. வட்ட மேஜை மகாநாட்டின் இந்திய அங்கத்தினர்கள் இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்ல, அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்களேயாவர். அரசாங்கம் நமக்கு அமைதியை அளித்து, பாதுகாப்பை யீந்து, பராதீனத்தையும் தந்தது. ஆகையால் பிரதிநிதிகளையும் அதுவே ஏன் நியமிக்கலாகாது? இன்றும் காங்கிரசுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இதைக் குறித்தே வாதம் நடக்கிறது. அரசாங்கம் "போர் முடிந்த பிறகு எல்லா ஜாதிகள், ஸமூகங்கள், கட்சிகளின் பிரதிநிதிகளைக்கொண்டு இந்தியாவின் புதிய ஆட்சி முறையைப் பற்றி ஆலோசனை செய்வோம்" என்று சொல்கிறது. ஜாதிகள் எவை, ஸமூகங்கள் என்பது எவைகளை, கட்சிகள் என்றால் என்ன என்பதையும் அரசாங்கமே தீர்மானிக்கும். மாகாண அரசாங்கங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் மூலமாக நடந்து வந்தன. ஆனால் அந்தப் பிரதிநிதிகள் தங்கள் வீட்டிலிருக்கட்டுமென்று சொல்லி அரசாங்கம் தன் அவசியத்தை யனுசரித்துப் புதிய பிரதிநிதிகளைச் சிருஷ்டிக்கிறது. காந்தியடிகள் தென் ஆப்பிரிக்க இந்தியர்களின் பிரதிநிதியாக சேம்பர் லேனைச் சந்திப்பதென்ற வழக்கத்திற்கு விரோதமான விஷயத்தை அரசாங்கம் எவ்வாறு சகிக்கக்

16323



கூடும்! ஆகையால் காந்தியடிகள் சேம்பர்லேனைச் சந்திக்க முடியவில்லை.

காந்தியடிகளுக்கு இதனாலும் வருத்தமில்லை. ஐரோப்பிய யுத்தம் தொடங்கியதும் மீண்டும் உதவி புரிந்தார். பின்னர் பஞ்சாபில் ரத்தப் பெருக்கெடுத்தது. ரௌலட் சட்டம் செய்யப்பட்டது. ஜாலியன்வாலா தோட்டத்தில் கோர சம்பவம் நிகழ்ந்தது. காந்தியடிகளின் நம்பிக்கை அப்பொழுதும் குறையவில்லை. புதிய சீர்திருத்தம் வரவும், அதை ஏற்கும்படி வற்புறுத்தினார். காந்தியடிகளின் நம்பிக்கையும்' அஹிம்ஸையும் இத்தகையவை.

जो तोको कांटा बुवे ताहि बोय तू फूल।
तोको फूल के फूल हैं, वाको है तिरसूल।

"பூ இட்டுச் செல்வயேல் நீ அவரிட்ட முள்ளை நீக்கி,
பூ உடன் சூலமாகும், முள்ளெலாம் மலராய் மாறும்."

காந்தியடிகளின் இக்குணம் ஆற்றுப் பெருக்கைப் போல், தங்கு தடையின்றி ஆரம்பமுதல் கடைசிவரையில் காணப்படுக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் நியாயத்தில் அவருக்கு இருந்த நம்பிக்கை இப்பொழுது போய்விட்டாலும், காரியங்களெல்லாம் எப்பொழுதும் போல் அன்பையும், அஹிம்ஸையையுமே ஆதாரமாகக் கொண்டவையாயிருக்கின்றன. காந்தியடிகள் சென்ற யுத்தத்தில் உதவி செய்தது, பிரிட்டிஷ் ஆட்சியின் நியாயத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்

கையாலேயே யாகும். அவருடைய காரணங்கள் முடிவுக்குப் பின் உதிக்கின்றன; ஆதலால் வீண் சாக்குகள் போல் தோன்றுகின்றன. சண்டையில் அரசாங்கத்திற்கு உதவி புரிவது தமது தருமமென்று அப்பொழுது தோன்றியதால், சில வரம்புகளுக்குள் உதவிசெய்ய நிச்சயித்தார். போயர் யுத்தத்திலும், 'ஜுலு'க் கலகத்திலும், அவர் போயர்கள்-ஜுலுக்களி டம் அனுதாபம் கொண்டிருந்தபோதிலும், ஆங்கிலே யருக்கு உதவுவது தமது கடமையென்று நம்பினார். எனவே, ஆங்கிலேயருக்கு உதவினார். இத்தகைய முரண்பாடு ஆச்சரியமானதல்ல. ஒரு சமயத்தில் தருமமாயிருப்பது மற்றொரு சமயத்தில் அதருமமாக லாம். ஆகையால் தருமத்தின் போக்கு சூட்சும மானதென்று கூறப்பட்டிருக்கிறது.

இதே போன்ற விஷயம் ஒன்று மகாபாரதத்தில் இருக்கிறது. மகாபாரத யுத்தத்தில், யுத்தம் துவக்க ஏற்பாடுகளெல்லாம் முடிந்து, படைகள் ஒன்றை யொன்று எதிர்த்து நிற்கும்தறுவாயில், யுதிஷ்டிரர், பீஷ்மரிடம் சென்று வணங்கி, யுத்தம் தொடங்கு வதற்கு அவருடைய கட்டளையை வேண்டினார். யுதிஷ்டிரருடைய இந்த அடக்கத்தினால் பீஷ்மர் மிகவும் மகிழ்ச்சியுற்று "குழந்தாய்! நீ யுத்தத்தில் வெற்றி பெறுவாய். எனக்கு உன்னிடம் திருப்தி. நீ விரும் பியதைக் கேள். நீ தோற்கமாட்டாய்" என்று ஆசீர் வாதம் செய்தார். ஆனால், பீஷ்மர் துரியோதனன்

கட்சியிலல்லவா யுத்தம் செய்யப் போகிறார்? ஆகை யால் இந்த முரண்பாட்டை விளக்கி மேலும்கூறினார். "நான் கௌரவர்களின் அன்னத்தைத் தின்றிருக்கிறே னாகையால், அவர்கள் பக்கத்தில் நின்றே போர் செய்வேன். வேறு எதை விரும்பினும் நீ கேள்."

अर्थस्य पुरुषो दासः दासस्त्वर्थो न कस्यचित् । *
इति सत्यं महाराज बद्धोस्म्यर्थेन कौरवैः ॥

"பொருளினதடிமை மாந்தர், பொருளிலை யடிமை யார்க்கும்
குருவுடை மைந்தர் செல்வக் கட்டில் யான் நிற்ற
லுண்மை."

பீஷ்மருக்குக் கட்டேது, பொருள் எம்மாத்திரம்? ஆனால் இங்கு 'பொருள்' என்பதற்கு ஸ்தூல 'தருமம்' என்று அருத்தம். ஸ்தூல தருமப்படி பீஷ்மர், குரு மைந்தர்களின் சார்பில் யுத்தம் புரிய நேரிடினும், தம் அனுதாபம் முழுதையும் பாண்டவர்களுக்கே யளித் தார். ஆயிரமாயிர மாண்டுகளுக்குப் பின்னர் ஐரோப் பாவில் மற்றொரு மகாபாரதம் நடைபெறுகிறது. "நான் யுத்தத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் நான் இங்கி லாந்தின் பாதுகாப்பில் வளர்ந்திருப்பதால், அதற்கு உதவி புரிவது என் தருமம்" என்கிறார் காந்தியடிகள். சரித்திரத்தின் புனராவிருத்திக்கு இது ஓர் சிறந்த உதாரணமாகும்.

சென்ற ஐரோப்பிய யுத்தம் நான்கு வருஷங்கள் வரை நடந்தது. அதில் நேச நாடுகள் தத்தம் உயி ரைக் காக்கவே போரிட்டன. ஏற்றமும், இறக்கமும்

---

* மகாபாரதம், பீஷ்மபர்வம் 43-43

எவ்வளவோ ஏற்பட்டன. அச்சமயத்தில் இந்தியாவில் காந்தியடிகள் தூய மனதுடன் இங்கிலாந்திற்குதவியது போன்று, வேறு யாரும் உதவியிருக்க முடியாது. பல தலைவர்கள் அவரை எதிர்த்தார்கள். பெரும்பாலோர் நடுநிலைமை வகித்தார்கள். ஜனங்களின் அபிப்பிராயமோ அப்பொழுதும், இப்பொழுது போலவே இருந்தது.

யுத்த காலத்தில் இராஜப்பிரதிநிதி செம்ஸ்போர்டு பிரபு எல்லாத் தலைவர்களையும், பிரபுக்களையும் யுத்த சபைக்கு அழைத்தார். சிறிது தயக்கத்துடன் காந்தியடிகள் சபையிற் கலந்து கொள்வதென நிச்சயித்தார். காந்தியடிகள் சபையின் முன்னிருந்த பிரேரணையை ஆதரித்து ஹிந்தியில் "நான் இதை ஆதரிக்கிறேன்" என்று மட்டும் கூறினார். ஆனால், அவர் சொல்லவேண்டியதை ஒரு கடிதத்தில் செம்ஸ்போர்டுக்கு எழுதியனுப்பினார். அக்கடிதமும் படிக்கத்தக்கதாகும் :—

" மற்ற குடியேற்ற நாடுகளைப் போலவே, நாங்களும் வெகு சீக்கிரத்தில் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் பங்காளியாக ஆய்விடுவோமென்ற ஆசையினாலேயே பிரிட்டிஷ் நாட்டிற்கு உதவி புரிய வேண்டுமென்று நான் தெளிவாக உணருகிறேன். இவ்விதம் செய்வதால் எங்கள் லக்ஷியத்தை சீக்கிரத்தில் அடைவோமென்ற நம்பிக்கை இருக்கிறது. கடமையை நிறைவேற்றினால், உரிமை தானாகக் கிட்டும். தாங்கள் குறிப்பிட்ட சீர்திருத்தத்தில் காங்கிரஸ்-லீக்

ஒப்பந்தத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்வீர்களென்று மக்களும் பல தலைவர்களும் நம்புகிறார்கள். இந்நம்பிக்கையே தலைவர்களை இச்சமயம் முழு உதவியும் புரியத் தூண்டியிருக்கிறது.''

காந்தியடிகளின் கடிதத்தில் இது ஒரு பகுதி. எத்தகைய மருவற்ற நம்பிக்கை! அச்சமயத்தில் ஹிந்து—முகம்மதிய ஒற்றுமை நிலவியிருந்தது. இன்று போல் ஜாதிப் பூசல் என்ற சாக்குச் சொல்வதற்கிடமில்லை. லீகும், காங்கிரசும் கூட்டு ஏற்பாடு செய்து அதை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தன. ஆனால் அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவில்லை. இவ்விதமாக எல்லா ஆசைகளும் வீணாயின. இன்று ஹிந்து-முகம்மதிய வேற்றுமையே இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதில் தடையா யிருக்கிறதென்று நம்புகிறவர்களுக்கு இந்தப் பழைய கதை ஒரு பாடமாகும்.

"நான் எனது தேசவாசிகளை ஒப்பச் செய்ய முடியுமானால் யுத்த காலத்தில் சுயராஜ்யப் பேச்சையே எடுக்காமலிருக்கும்படி செய்வேன்'' என்றும் பின்னர் காந்தியடிகள் எழுதினார்.

இன்றைய யுத்தத்தின் தொடக்கத்தில் காந்தியடிகள் லின்லித்கோ பிரபுவைச் சந்தித்த பின்பு தமது ஒரு அறிக்கையில் "எனக்கு இப்பொழுது இந்நாட்டின் விடுதலையைப்பற்றிய எண்ணமேயில்லை. விடுதலை ஒரு நாள் வந்தான் போகிறது. ஆனால் இங்கிலாந்தும், பிரான்ஸும் அழிந்து போனாலும் சரி, அல்லது நேச

நாடுகள் ஜெர்மனியை அழித்து வெற்றிபெற்றாலும் சரி, நமது விடுதலையால் என்ன பயன் ?" என்று கேட்டார். இந்த இரண்டு சமயங்களிலும் அவரது கருத்து ஒன்றேயென்பதைக் காண்கிறோம்.

காந்தியடிகள் இராஜப்பிரதிநிதி செம்ஸ்போர்டுக்கு " இந்தியா தன் ஒவ்வொரு வலிவுள்ள வாலிபனையும் பிரிட்டிஷ் ராஜ்யத்தைக் காக்கும் பொருட்டு பலி கொடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தத் தியாகமே இந்தியாவை பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தில் மதிப்பிற்குரிய பங்காளியாக்குவதற்குப் போதுமென்பது எனது நம்பிக்கை. இந்த ஆபத்தான சமயத்தில் ஸாம்ராஜ்யத்திற்கு முழு மனதுடன் ஊழியம் புரிந்து, அதை பயத்தினின்றும் காப்போமாயின், எங்களுடைய இவ்வேலையே எங்களை எங்கள் லட்சியத்தில் சீக்கிரம் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஸாம்ராஜ்யத்திற்கு ஊழியம் புரிவோமாயின், அதனாலேயே நமக்கு சுயராஜ்யம் கிடைத்து விடுமென நினைத்தல் வேண்டுமென்று நான் எனது தேசவாசிகள் உணரும்படி செய்ய விரும்புகிறேன் " என்று எழுதினார்.

இதில் வியக்கத்தக்க விஷயமென்னவெனில், மேற்கூறிய கடிதத்தில் காந்தியடிகள் எந்த சொற்களைக் கையாண்டிருக்கிறாரோ, சற்றேறக்குறைய அதே சொற்களையே இன்று அரசாங்கம் நமது தேவைகளைக் குறிக்கும்பொழுது உபயோகிக்கிறது. " இப்பொழுது யுத்தத்தைப் பற்றியே பேசு. உற்சாகத்துடன் எங்கள்

கட்சியில் சேர்ந்து போரிடு. அதனாலேயே உனக்கு சுயராஜ்யம் கிடைத்துவிடும்" என்று அவர்கள் சொல்கிறார்கள். சென்ற யுத்தத்திலும் அரசாங்கத்தின் சார்பில் நமக்குள் உள்ள சண்டைகளை மறந்து, நாம் யுத்தத்தில் ஈடுபட வேண்டுமென்று கூறப்பட்டது. காந்தியடிகள் அவ்வாறே செய்தார். இந்தியா தனது வாலிபர்களை பலி கொடுத்தது. பொருளையும் அள்ளிக் கொடுத்தது. ஆனால் அதனால் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிட்டவில்லை. யுத்த முடிவில் ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்தபொழுது காந்தியடிகளுக்கு அரசாங்கத்திடமிருந்த நம்பிக்கையும், பற்றும் பறந்துவிட்டன. ஆயினும், அவரது நடைமுறையில் மாறுபாடு ஒன்றுமுண்டாகவில்லை. தற்பொழுதைய ஐரோப்பிய யுத்தத்தில் காந்தியடிகள் அனுஷ்டித்த முறையும் தூய சத்யாக்கிரஹ முறையேயாகும். சென்ற யுத்த சமயத்தில் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தில் இவர் கொண்டிருந்த நம்பிக்கை இப்பொழுதில்லை. ஆனால் எதிரியின் கொடுமை அதிகமாக ஆக, நாமும் அஹிம்ஸையை அதிக ஆர்வத்துடன் கைக்கொள்வது அவசியமென்பது, அவரது கருத்தின்படி சத்யாக்கிரஹ முறையாகும். ஆகையால் ஒத்துழைக்காவிட்டாலும், இங்கிலாந்திற்குச் சிறிதும் தொந்தரவு செய்தல் அவருக்கு இஷ்டமில்லை. ஆதலால் யுத்தத்தில் இங்கிலாந்தின் சக்தி குறையக் குறைய அதற்கு நம்மால் உபத்திரவமுண்டாகக் கூடாதென்று அவர் எச்சரிக்கையாயிருக்கிறார்.

சென்ற யுத்தத்திற்கும், இந்த யுத்தத்திற்கும் மற்றொரு வித்தியாசமுண்டு. அதனால் இந்த யுத்தத்தில் சேருவதா, சேராதிருப்பதா என்ற தர்க்கம் எழுந்தது.

சென்ற யுத்தத்தில் நாம் முற்றிலும் பிறரின் கீழிருந்தோம்; நமக்கு ஒரு பொறுப்புமில்லை; நம்மைக் கேட்பாருமில்லை. நாம் தொந்தரவு விளைவித்து ஓரளவுக்கு ஆங்கிலேயர்களுக்குக் கிடைக்கும் உதவியைத் தடுத்திருக்காலம்; ஆனால் இவ்விதம் செய்தல் சத்யாக்கிரஹ முறைக்கு விரோதமாயிருந்திருக்கும். தடை செய்வதென்பது வேறு; கிரியாம்சத்தில் உதவி செய்வது வேறு. தடை செய்யாவிட்டாலும் கிரியாம்சமான உதவியையாவது மறுத்திருக்கலாம். ஆனால் காந்தியடிகளோ கிரியாம்சத்தில் உதவி செய்வதே தமது கடமையென்று கருதினர். "நாம் இங்கிலாந்தினால் பாதுகாக்கப்பட்டு, அப்பாதுகாப்பை சந்தோஷமாக ஏற்கும்பொழுது ஆங்கிலேயர்களுக்குக் கிரியாம்சத்தில் உதவுவதும், அவர்கள் சார்பில் ஆயுதந் தாங்கிப் போர் புரிவதும் நமது கடமையாகும்." ஆனால் இந்த வாதத்திற்கு, தற்பொழுதைய நிலைமையில் அருத்தமில்லை. ஏனெனில், அப்பொழுதிருந்த நிலைமைக்கும், இப்பொழுதுள்ளதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆகையால் அந்தப் பழைய வாதம் இன்றைய நிலைமையில் பொருந்தாது. இப்பொழுதைய யுத்தம் தொடங்கியபொழுது, மாகாணங்களில் மாகாண சுய ஆட்சி நடந்துகொண்டிருந்தது. எட்டு மாகாணங்

களில், காங்கிரஸ் ஆட்சிபுரிந்து வந்தது. மற்றொரு மாகாணத்திலும் — ஸிந்துவிலும் — பாதி அதிகாரம் காங்கிரஸிடமிருந்தது. இவ்விதம் மொத்தத்தில் ஒன்பது மாகாணங்களில் காங்கிரஸின் ஆட்சி நடைபெற்றது. மத்திய அரசாங்கத்திலும் சுய ஆட்சி தருவதாக வாக்குக் கிடைத்திருந்தது. ஆகவே, நாம் பூரண சுயராஜ்யத்திற்கு அருகில் வந்திருந்ததாகக் கருதலாம். ஆதலால், 'அவர்களுடைய பாதுகாப்பில் நாம் சௌக்கியமாயிருக்கிறோம்' என்று இப்பொழுது கூறுவதற்கில்லை. நாம் நம்மையே காத்துக்கொண்டு சுகமாய் வாழக்கூடிய நிலைமையை இன்று எய்திவிட்டோம். சென்ற யுத்த சமயத்திலிருந்ததுபோல் இன்று நாம் பிறரை அண்டியிருக்கவில்லை. சட்டப்படி இல்லையெனினும், நம்மை எவ்வாறு காப்பதென்று கூறுவதற்கு நமக்கு நியாயமாக உரிமையுண்டு. இங்கிலாந்திற்குத் தொந்தரவு கொடுக்காதிருப்பது தம் கடமையென்று நம்பும் காந்தியடிகளுக்கு, இந்தியாவின் மீது படையெடுப்பு வந்தால் அதை ஹிம்ஸை முறைப்படி எதிர்ப்பதா அல்லது அஹிம்ஸை முறைப்படியாவென்று தீர்மானிப்பதும் கடமையாகிவிட்டது. நாம் பிறரைக் கொன்று சாவதா, அல்லது கொல்லாமல் சாவதைக் கற்பதா? என்ற கேள்வி பிறந்தது. தீர ஆழ்ந்து ஆலோசித்தபின், கொடிய ஹிம்ஸையை அஹிம்ஸையைக் கொண்டே எதிர்க்க முடியுமென்று முடிவு செய்தார். அபிஸீனியா, ஸ்பெயின், சைனு

ஆகிய யுத்தத்திற் சிக்குண்ட நாடுகளுக்கு காந்தி யடிகள் அஹிம்ஸையை உபதேசித்தார். ஆபத்துக் குள்ளான அந்நிய நாடுகளுக்குக் கூறிய ஆலோசனையை விட்டு வேறு ஆலோசனையா தம் நாட்டு மக்களுக்குச் சொல்வார்?

காந்தியடிகளின் அபிப்பிராயத்தில் அஹிம்ஸையை உண்மையில் சோதிக்கும் சமயம் வந்து விட்டது. அஹிம்ஸையைக் கையாண்டு, கிரியாம்சத்தில் அதனாலுண்டாகும் பயனைக் காட்ட இதைவிடச் சிறந்த சமயம் வேறு ஏது? ஆன்மீக முறையிலும் சரி, கிரியாம்சத்திலும் சரி, காந்தியடிகள் யுத்தம்தொடங்கு முன்னரே, இவ்வளவு கொடியதும், கட்டுப்பாடுள்ளது மான ஹிம்ஸையை, இந்தியாவைப் பொறுத்தவரை யில் நிச்சயமாக, ஹிம்ஸை முறைகளினால், எதிர்க்க முடியாதென்ற முடிவுக்கு வந்து விட்டார். ஒழுங்கும் கட்டுப்பாடு மொருங்கே அமைந்த நாடுகளை எதிர்த்து நிற்க, இந்தியாவிடம் உபகரணங்களேது? ஆனால் இது முக்கிய விஷயமல்ல. முக்கிய விஷயம் என்ன வெனில், "நாம் கொடிய ஹிம்ஸையை அஹிம்ஸை யின் மூலமாக வெற்றியுடனெதிர்த்து நின்று உலகிற்கு ஒரு ஆன்மீக ஆயுதத்தைக் காட்ட வேண்டாமா என்பதேயாகும். இங்கிலாந்திற்கும் இந்தியாவுக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டால், ஆங்கிலேயர்களுக்கு ஆன்மீக உதவி நிச்சயம் தர வேண்டும்; ஆனால் காங்கிரஸ் ஹிம்ஸையில் கலந்து கொண்டுதன் லட்சியத்

தைக் குறைத்துவிடக் கூடாது' என்ற முடிவிற்கும் காரணமாயிருந்தது மேற்சொன்ன கருத்தேயாகும்.

காங்கிரஸின் மாபெரும் தலைவர்கள் இந்த முறையின் சிறப்பை யுணர்ந்திருந்தார்கள். ஆனால் இவ்வழியை அனுசரிப்பதற்குத் தயங்கினார்கள். ஸ்ரீ. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் போன்ற மேதாவிகளோ அஹிம்ஸை முறையை காந்தியடிகள் போல் தருமமென்றுகருதவில்லை. யுத்தத்தின் ஆரம்பத்தில் இப்பிரச்னை இவ்வளவு முக்கியத்வம் அடையவில்லை. காங்கிரஸின் தேவைகள் அரசாங்கத்தின் எதிரில் சமர்ப்பிக்கப்பட்டுக் கிடந்தன. ஆனால், அரசாங்கம் அவைகளைப் பூர்த்தி செய்யவுமில்லை; பூர்த்தி செய்யுமென்ற நம்பிக்கைக்கும் இடந்தரவில்லை. காங்கிரஸ் தரப்பில் அதன் தீர்மானத்திற்கு இருசாரார் இருவிதமாக அருத்தம் கற்பித்து வந்தனர். காந்தியடிகள் அரசாங்கத்துடன் சமாதானமான பிறகு ஆன்மீக உதவி மட்டும் தர விரும்பினார். மற்றப்பெரியோர்களோ கிரியாம்சத்தி உதவி செய்வதும் கடமை யென்று கருதி வந்தார்கள். காங்கிரஸ் ஒன்றன்பின் ஒன்றாகப் பல தீர்மானங்கள் செய்தது. இரு சாராரும் அவைகளுக்கு இருவகை அருத்தம் செய்துகொண்டே வந்தனர்.

காந்தியடிகள் தமது வியாஸங்கள், அறிக்கைகள், இராஜப்பிரதிநிதியுடன் சந்திப்புகள் ஆகியவைகளில் இந்தியா ஆங்கிலேயர்களுக்கு ஆன்மீகபலத்தைத்தான்

உதவ முடியுமென்ற விஷயத்தைத் தெளிவாக்கி யிருந்தார். ஆனால் சமாதானமானபின் கிரியாம்சத்தில் உதவி கிட்டுவது அசாத்தியமல்ல வென்று இராஜப்பிரதிநிதி நிச்சயமாய் எண்ணியிருக்கலாம். நாட்கள் கழிந்தன ; மாதங்களும் சென்றன. ஜெர்மனி ஒன்றன்பின்னொன்றாகப் பல நாடுகளைக் கபளீகரம் செய்து கொண்டே சென்றது. பிரான்ஸு வீழ்ந்ததும் “கொன்று சாவதா” அல்லது “கொல்லாமற் சாவதா” என்ற பிரச்சினை சீக்கிரத்தில் மகத்துவம் பெற்று விட்டது. இதுவரையில் இரு சாராரும் தனித் தனிக் கருத்துடன் குருட்டுப் போக்காய்ச் சென்று கொண்டிருந்தது போல் இனிச் செல்வது அசாத்திய மாய் விட்டது. காந்தியடிகள் ஆரம்பம் முதல் இந்த வித்தியாசத்தை யறிந்திருந்தார். ஆரம்பத்திலிருந்தே தம்மை விட்டுவிடும்படி தம் கூட்டாளிகளிடம் கூறி வந்தார். ஆனால் நண்பர்கள் சந்தோஷமாக அனுமதிக்கும் வரையில் அவரால் காங்கிரஸைவிட்டு வெளியேற முடியவில்லை. கடைசியில் காங்கிரஸின் பெருந்தலைவர்கள் காந்தியடிகளை இனியும் கட்டுப்படுத்துவது முற்றும் அநியாயம் என்று கண்டு, வர்தாவில் 1940 ஜூன் 20-இல் நீண்ட வாக்குவாதத்திற்குப் பின் அவரை விடுவித்தனர்.

இது காந்தியடிகளின் வாழ்க்கையில் ஒரு விசேஷ சம்பவமாகும். இதையொத்த சம்பவம் புராணங்களில் யுதிஷ்டிரர் சுவர்க்கமேறியதாகும். காந்தியடிகளுக்கும்

மற்ற தலைவர்களுக்கு மிடையேயுள்ள இந்த அபிப் பிராய வித்தியாசத்தைக் குறித்து "பாபூ! இதை அபிப் பிராய பேதமென்று கூறக்கூடாது. ஒரு சர்க்கரைக் கட்டி அதிக தித்திப்பும், மற்றொன்று குறைந்த தித் திப்பும் கொண்டிருந்தால், இரண்டிற்கும் அபிப்பிராய பேதமென்று சொல்லுவது? தாங்கள் சுத்த கருமத் தைப்பற்றிப் பேசுகிறீர்கள். மற்ற தலைவர்களோ ஆபத் கருமத்தைக் குறித்து கூறுகிறார்கள். சுத்த கருமத்தின் பலிபீடத்தில் காரியவாதத்தை அர்ப்பணம் செய்வதற் குத் தகுதியானபடி அவர்களுடைய நம்பிக்கை அவ் வளவு உறுதியாய் இருக்குமென்று தாங்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? யுதிஷ்டிரர் சுவர்க்கத்திற் குச் சென்றபொழுது அவருடன் நெருங்கியிருந்தோ ரெல்லாம் ஒவ்வொருவராகச் சோர்ந்து விழுந்தார்க ளல்லவா? அதே போன்று இந்த நிலைமையிருக்கிறது. தாங்கள் முன்னேற ஏற, தங்களுடைய நண்பர்கள் களைத்துப் பின் வாங்குகிறார்கள், சோர்ந்து விழுகிறார் கள்" என்று நான் ஒரு நாள் கூறினேன். பக்கத்தி லுட்கார்ந்திருந்த டாக்டர் ஸுசீலா "யுதிஷ்டிரருடன் நாயுமிருந்ததல்லவா? பாபூ! இந்த உதாரணத்தை யனுசரித்து சுவர்க்கத்தை யடைந்த நாய் எது?" என்று வேடிக்கையாகக் கேட்டார். "முதலில் அந்த யுதிஷ்டிரர் யாரென்று சொல்" என்றார் காந்தியடிகள். விஷயத்தின் கம்பீரத் தன்மையினால் எல்லோருடைய முகத்திலும் காணப்பட்ட கவலைக்குறி இவ்விநோதத்

தில் மறைந்து விட்டது. எல்லோரும் கொல்லெனச் சிரித்தனர்.

ஆனால் இதன் முடிவு என்ன ஆகும்? இப்பொழுதுதான் காலதேவன் சரித்திரத்தை அமைத்துக் கொண்டிருக்கிறான். முடிவு பாக்கி இருக்கிறது. வரப்போவதோ தெரியவில்லை. ஆனால் ஒரு விஷயம் தெளிவாயிற்று. காங்கிரஸ் கையாண்டுவந்த அஹிம்ஸை முறை வியாபார முறையாகும்; அதாவது லாபங் கருதிச் செய்த முறை. காந்தியடிகளின் அஹிம்ஸையோ அவருக்கு உயிர் போன்றது. அவருடைய அஹிம்ஸை காங்கிரஸை மாற்றுமென்றும், எந்த அஹிம்ஸை இதுவரையில் ஸமயோசித வாதத்தினால் மறைபட்டிருந்ததோ அது இனி தனது சுயரூபத்துடன் பிரகாசிக்குமென்றும் யார் கூற முடியும்?

இரண்டு மாதங்கள் வரை ஸமயோசித வாதத்தைக் கையாண்ட பின்னர், பம்பாயில் மீண்டும் காந்தியடிகளின் கையில் காங்கிரஸின் அதிகாரம் ஒப்புவிக்கப்பட்டதிலிருந்தே, காங்கிரஸ் விரும்பியோ, விரும்பாமலோ காந்தியின் தூய அஹிம்ஸா முறையின் பக்கம் இழுக்கப்பட்டிருக்கிற தென்பது தெளிவாகவில்லையா?


வெளிப் படையெடுப்புக்களினின்றும் இந்தியாவைக் காக்கும் பிரச்சினை உண்மையில் எழும்பொழுது நமது தலைவர்கள் மிகவும் யோசிக்க நேரிடு மென்பது எனதெண்ணம். ஹிம்ஸைமயமான ஆயுதங்களினால்

எந்தப் பெரிய தேசத்தையும் எதிர்க்கவேண்டுமென்ற நமது ஆவல்—உண்மையில் அவ்வித ஆவல் இருப்பின் —சிறு பிள்ளைத்தன மாகும். அன்றி வேறு ஒரு நாட்டினரிடமும் இல்லாத சத்யாக்கிரஹ மென்ற ஆயுதம்—அது சாணை பிடித்து சிறந்த நிலையிலில்லை யெனினும்—நம்மிடமிருக்கிறது. ஆகையால் என்று இந்தியாவின் தற்காப்புப் பிரச்னை உண்மையில் எழுமோ, அன்று காந்தியடிகள் உயிர் வாழ்ந்திருப்ப ரேல், சத்யாக்கிரஹ ஆயுதம் தருவேறிக்கிடப்பது சாத்தியமல்ல. அப்போரில் இந்திய மக்கள் பின்வாங்க மாட்டார்களென்றும் காந்தியடிகளுக்குத் தெரியும்.

எதுவாயினும், ஒன்று நிச்சயமாகி விட்டது. அது காந்தியடிகளுக்கு அஹிம்ஸையிலுள்ள உண்மையான உறுதி. இரண்டாவதாக அஹிம்ஸை ஆயுதத்தின் சக்தி வெளியாக வேண்டியது எஞ்சியிருக்கிறது. அதற்கும் சமயம் வந்து கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. அச்சந்தர்ப்பம் காந்தியடிகளின் ஆயுளிலேயே வந்து, அதில் இவ்வாயுதத்தின் வெற்றி யும் நிரூபிக்கப்படுமாயின், உலகின் எதிர்கால சரித் திர அமைப்பில் இது ஒரு அற்புதமான நிகழ்ச்சி யாகும்.

நடுவில் வருங்கால யோசனை வந்து விட்டது. என்னவாயினும் ஆங்கிலேயருக்குத் தொந்தரவு தரக் கூடாதென்ற, காந்தியடிகளின் கருத்தை, நாடு

இதுவரை ஒரே மனதுடன் நிறைவேற்றி வந்திருக்கிறது. 'காக்ஸார்'கள் உபத்திரவம் செய்தார்கள். ஆனால் காங்கிரஸ் அமைதியா யிருந்தது. இது பலசாலியின் அமைதியாகும். இன்று காங்கிரஸ் லட்சக்கணக்கான ஜனங்களை பலிகொடுக்க முடியும், ஜெயில்களைத் திணறும்படி நிறப்ப முடியும். ஆனால் அமைதியை நிலவச் செய்து இந்த யுத்த காலத்திலும் தமக்கு மக்களிடமுள்ள செல்வாக்கை நிலைநாட்டி விட்டார் காந்தியடிகள். இன்றுள்ளது போல் இந்தியாவில் ஒருபொழுதும் அமைதி யிருந்ததில்லை. நமது உதாரகுணத்தைக் நாம் காட்டிவிட்டோம். இதனால் நமது சக்தி நிரூபிக்கப் பட்டுவிட்டது. நமது நேர்மைக்கும் ருஜு கிடைத்தது. இதிலிருந்து தூய சத்யாக்கிரஹத்தின் இயல்பு இங்கிலாந்திற்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆங்கிலேயர்களுடன் நமது போர் நின்றுவிடவில்லை. ஐரோப்பிய யுத்தத்துக்குப் பிறகு அவசியமானால் அது தொடங்கலாம். அது மிகவும் கொடிய போராயிருக்கலாம். அரசாங்கம் தனது தவறுகளினால் காங்கிரஸைப் போரிடும்படிநிர்ப்பந்தம் செய்யலாம். ஆனால் காந்தியடிகள் ஆங்கிலேயரை சங்கடங்களிலிருந்து காக்க முயற்சி செய்வார். இன்று ஆங்கிலேயர் ஆபத்திலாழ்ந்திருக்கின்றனர்; ஆகையால் இப்பொழுது அவர்களை எதிர்த்தல் கோழைத்தனமாகும் என்ற எண்ணம் காந்தியடிகளின் மனதில் நிச்சயமாயிருக்கிறது. காந்தியடிகளுக்கு சுயராஜ்யத்தைவிட சத்யாக்கிரஹத்தில்



பிக்ஷாந்தேஹி

அதிகப் பற்று உண்டு. தூயசத்யாக்கிரஹத்தை அனுஷ்டிக்க, அனுஷ்டிக்க சுயராஜ்யத்திற்கு அதிகம் உழைத்தவர்களாவோ மென்று காந்தியடிகள் கருதுகிறார். ஆகையால் காந்தியடிகள் பிரிட்டிஷ் ஆட்சியைத் தொந்தரவிலிருந்து போதிய அளவு காத்தார். இங்கிலாந்து இதன் பொருட்டு நன்றியுள்ளதாகக் காணவில்லை. அதன் மனமும் மாறவில்லை. ஆனால் காந்தியடிகள் நம்பிக்கையைக் கைவிடாது, "ஈசனின் லீலா விநோதங்களின் காலம் முடிந்து விடவில்லை. ஈசனுள்ள வரையில் விநோதங்களும் நடக்கும்" என்று காத்திருக்கிறார். இந்த நம்பிக்கை என்ற நீராவியின் சக்தியால் காந்தியடிகள் என்ற எஞ்சின் ஓடிக்கொண்டே யிருக்கிறது.

இந்த யுத்த காலத்தில் நான் காந்தியடிகளிடம் மற்றுமொரு விஷயத்தையும் கண்டேன். யுத்தம் தொடங்கியது முதல் அவர் சேவாக்கிராமத்திலேயே இருக்க விரும்புகிறார். மிக்க அவசியம் ஏற்படவே, அவர் ஒருமுறை வங்காளம் செல்ல நேர்ந்தது. ராம்கர் காங்கிரஸிற்குப் போகவேண்டி யிருந்தது. இராஜப்பிரதிநிதியிடம் போக நேர்ந்தபொழுதெல்லாம் போனார் ஆனால் இந்த யாத்திரைகளைத் தவிர வேறு எங்கும் போக விரும்பவுமில்லை; போவதற்கான ஏற்பாட்டையும் விரும்பவில்லை. வருவதாக முன்னரே கொடுத்திருந்த வாக்குகளையும் ரத்து செய்துகொண்டார். எனக்குத் தந்திருந்த வாக்கும்

ரத்து செய்யப்பட்டு விட்டது. ஏன்? “யுத்தம் நடைபெறும் வரையில் சேவாக்கிராமத்தை விட்டு வெளியேறப் பிடிக்கவில்லை.” ஏதோ யோசனை செய்து கொண்டிருக்கிறார் போலும்! ஆனால் எப்பொழுதும் அவர் ஆலோசனையிலாழ்ந்திருப்பதாகவும் காணவில்லை. ஆயினும் தற்பொழுதைய யுத்தத்தில் அவர் மிகுந்த சிந்தனை செய்ய நேரிட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

## [ 14 ]

## அவர் சிந்திப்பதெப்பொழுது?

காந்தியடிகள் யோசனை செய்வதெப்பொழுது என்ற கேள்வி பிறக்கிறது. காந்தியடிகளுக்கிருக்கும் வேலைகளைப் பார்த்தால் அவருக்கு ஒரு கணமும் ஓய்வில்லை யென உண்மையாகக் கூறலாம். வேலை மிகவும் அதிகமாயிருப்பதால், சில சமயங்களில் முக்கிய வேலையை மறக்கவும், சாதாரண வேலையில் அவசியத்தை விட அதிக நேரம் கழிக்கவும் நேர்ந்து விடுகிறதென்று எனக்கு அடிக்கடி தோன்றி யிருக்கிறது. இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டிற்குச் சென்றபொழுது அவருடன் எப்பொழுது மிருந்த காரியதரிசிகளே உதவிக்கிருந்தார்கள். புதுப் புது வேலைகள் வெள்ளம் போன்று வந்தவண்ணமிருந்தன. ஆயினும், அவைகளைச் சீக்கிரத்தில் செய்து முடிப்பதற்கு ஒரு ஏற்பாட்டையும் காணோம். புதிதாகச் சிலரைக் காரியதரிசிகளாக்குவதைத் தவிர இதற்கு வேறு என்ன உபாய

மூண்டு? ஆனால் காந்தியடிகள் இதற்குச் சம்மதிக்க வில்லை. வேலை வளர வளர, இருப்பவர்களே தங்களுக் குள் வேலையைப் பிரித்துக் கொண்டு எவ்வாறோ செய்து வந்தார்கள். இதன் பயனாக காந்தியடிகளின் தூக்கம் குறைந்து கொண்டே வந்தது.

லண்டனில் வேலை செய்து கொண்டிருக்கையில் இரவு இரண்டு மணி கூட ஆய்விடுவதுண்டு. காலை நான்கு மணிக்குப் பிரார்த்தனை செய்த பிறகு ஒன்பது மணிக்குள் உலாவுதல், உணவு ஆகியவற்றை முடித்துக் கொண்டு மீண்டும் வேலைக்குத் தயாராகவேண்டி யிருந் தது. ஒருபொழுதும் நான்கு மணிக்கதிகம் தூங்க முடிந்ததேயில்லை. ஆகையால் காந்தியடிகள் மகா நாட்டிலேயே உபந்நியாஸங்கள் நடைபெறும்பொழுது நாற்காலியி லமர்ந்தபடியே தூங்கத் தொடங்கி விடு வார். "பெரியவர்கள் உட்கார்ந்திருக்கும்பொழுது உபந்நியாஸங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், தாங்கள் தூங்குவது நன்றாயில்லையே" என்றேன். "அப்படியானால் கண் விழித்துக் கொண்டிருந்து இங்கு நோயுற வேண்டுமா? நான் எந்த முக்கிய மான உபந்நியாஸத்தையாவது கேட்கத் தவறி யதை நீ கண்டதுண்டா?" என்று கேட்டார். இது உண்மை. இங்கும் அவரது விவேகத்தின் அளவுகோல் வேறு தன்மையது. என்ன சூக்ஷ்மமோ தெரியவில்லை. எப்பொழுது ஒரு முக்கிய மனிதர் பேச எழுந்தாலும், காந்தியடிகள் கண்களைத் திறந்து கொண்டு பேச்சைக்

கேட்பதும், பேச்சு முடிந்ததும் தூங்க ஆரம்பிப்பது மாயிருந்தார்.

ஆனால் எனக்கு இந்நிலை பிடிக்கவில்லை. காந்தியடிகள் புதிதாகச் சிலரைக் காரியதரிசிகளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், ஒவ்வொரு கடிதத்தையும் காந்தியடிகளோ, ஸ்ரீ. மகாதேவ தேசாயோதான் தங்கள் கையால் எழுதவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏன் என்றும் அவருடன் கூட இருந்த நாங்கள் எங்களுக்குள் விவாதிப்பது வழக்கம். காந்தியடிகள் எழுதி எழுதி வலது கை களைத்துப் போனால் இடது கையால் எழுத ஆரம்பித்து விடுவார். வட்ட மேஜை மகாநாட்டின் வேலைகளைச் சில சமயங்களில் அவர் பொருட்படுத்துவதுமில்லை. இதற்குப் பதிலாக பசுக் காட்சிக்குப் போதல், இங்கிலாந்தின் ஆடுகளைப் பார்வையிடல், பொதுமக்களைச் சந்தித்தல், பலவிதமான பைத்தியங்களுடன் அவசியத்திற்கதிகமான நேரத்தைக் கழித்தல்—இவைகள் வளர்ந்து வந்தன. அடிக்கடி ஏழைகளின் குழந்தைகளுடன் விளையாடும் பொழுது "எனது வட்ட மேஜை மகாநாடு ஸெண்ட் ஜேம்ஸ் மாளிகையிலல்ல, இக்குழந்தைகளின் இடையில்தான் நடக்கிறது" என்று கூறுவார். இந்த விஷயங்கள் எல்லாம் அருகிலிருந்தவர்கள் மனதில் உறுத்திக்கொண்டுமிருந்தன. காந்தியடிகள் வட்ட மேஜை மகாநாட்டை மதியாதிருந்ததால் ஒன்றும் கஷ்டமாகி விடவில்லையென்று இப்பொழுது

காண்கிறேன். ஆயினும் அவரிடம் வேலையதிகம், ஆட்கள் குறைவு என்பதை நான் இப்பொழுதும் உணருகிறேன். ஏன் ஒரு சுருக்கெழுத்து குமாஸ்தாவை வைத்துக் கொள்ளலாகாது? அதனால் எழுத்து வேலை சுளுவாவதுடன் பொழுதும் மீதமாகுமே? பல தடவைகளில் நான் இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். ஆனால் பயன் ஒன்றுமில்லை.

"இவ்வளவு வேலைகளுக் கிடையில் இவருக்கு யோசிக்க நேரம் ஏது?" என்பதல்லவா கேள்வி.

அவருக்கும் அவரது தோழர்களுக்கும் அபிப்பிராயபேத முண்டான கதைகள் எவ்வளவோ உண்டு. காந்தியடிகள் தவறு செய்வதாக நான் நினைத்த பல நிகழ்ச்சிகள் எனக்கு நினைவிருக்கின்றன. பிறகு பார்த்தபொழுது தவறு மற்றவர்களுடையதே யன்றி அவருடையதல்ல வென்று தெரியவந்தது. மதிப்பிற்குரிய நண்பர் ஒருவர், ஒரு சமயம் ஒரு சம்பவம் நடந்துகொண்டிருக்கையில், காந்தியடிகள் செய்து கொண்டிருப்பது தவறு என்று கூறினார். நானும் "ஆம். தவறுதான்" என்றேன். ஆனால் அதே நண்பர், "நாம் பல தடவைகளில் காந்தியடிகளின் தவறு என்று நினைத்தது பின்னர் அவருடைய புத்திசாலித் தனமாகியிருக்கிறது" என்பதை நினைவூட்டினார். இது உண்மையாகும். இவ்வளவு வேலைகள், இவ்வளவு சிக்கலான பிரச்சினைகள் இருந்தும், இவ்வளவு தெளிவாகத் தீர்மானம் செய்வதென்பது ஆச்சரியமான

விஷயமாகும்! மனிதன் தவறுவது இயற்கை. காந்தியடிகளும் தவறுவதுண்டு. அவர் தமது குற்றங்களைப் பல சமயம் மிகைப்படுத்திக் கூறியிருக்கிறார். இதில் வேடிக்கை யென்னவெனில் அவர் குற்றமென்று கருதியதை, அவருடைய சகாக்களே குற்றமாகக் கருதியதில்லை. ஆனால் காந்தியடிகள் குற்றமென்று ஒப்புக்கொண்டதே குற்றமென்று எண்ணியிருக்கிறார்கள்! அவர் செய்யும் குற்றமோ மிக மிகக் குறைவு.

காந்தியடிகள் தீர்மானம் செய்யும் முறை எது? அவர் எப்படி யோசிக்கிறார்? இவ்வளவு வேலைகளுக்கிடையில் எப்பொழுது யோசனை செய்கிறார்? காந்தியடிகள் ஆலோசனையிலாழ்ந்திருப்பதை நான் ஒருபொழுதும் கண்டதில்லை. கேள்வி பிறந்ததும் சட்டென்று தீர்ப்புத் தந்துவிடுவார். பெரிய பெரிய நெருக்கடிகளில், தீர்மானம் செய்ய வேண்டிய சமயம் வந்து விட்டாலும், சரியான சமயம் வரும் வரையில் தீர்மானம் செய்யாதிருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

வட்டமேஜை மகாநாட்டின் முதற் கூட்டத்தில் அவருடைய முக்கியமான, முதல் உபந்நியாஸம் நடக்க விருந்தது. அதைக் கேட்பதற்கும், அவருடைய கருத்துக்களை அறிவதற்கும் எல்லோரும் மிக்க ஆசை கொண்டிருந்தனர். காந்தியடிகள் யோசனையும் செய்யவில்லை; தயார் செய்து கொள்ளவுமில்லை. பேச எழுந்ததும், அவர் வாயிலிருந்து கடல்

மடை திறந்ததுபோல், சூக்ஷ்மமான விஷயங்கள் வெளி வருகின்றன. மிகவும் முக்கியமான காரியமாக இராஜப் பிரதிநிதியைச் சந்திப்பதற்குப் போய்க் கொண்டிருக்கிறார். ஐந்து நிமிஷங்கள் முன்பு "என்ன சொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்கிறேன். "என் மூளை காலியாயிருக்கிறது. என்ன சொல்லப் போகிறேனென்று தெரியவில்லை" என்று பதில் வருகிறது. அங்கே போனதும் ஏதோ விசேஷமான விஷயத்தைச் சொல்கிறார். இது ஒரு அற்புதம்.

அஹமதாபாத்தில் ஆலைக் கூலிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். கூலியாட்கள் கட்சியில் நியாயமிருந்ததென்பதை காந்தியடிகள் கண்டார். ஆலை சொந்தக்காரர்களிடமும் அவருக்கு அன்புண்டு. ஆகையால் ஓரளவு அன்பர்களிடையே சண்டையாகும். கூலியாட்கள் முதலில் ஆவேசங் கொண்டிருந்தனர். பிறகு வரவர உற்சாக மிழக்க வாரம்பித்தனர். கூலிகள் கூட்டத்தில் காந்தியடிகள் பேசிக்கொண்டிருந்தார். கூலிகளின் முகங்கள் சோர்ந்திருந்தன. திடீரென்று காந்தியடிகள் "நியாயம் கிடைக்கும் வரையில் வேலை நிறுத்தம் செய்தவர்கள் உறுதியுடனிரா விடில் நான் உணவைத் தொடப்போவதில்லை" என்று சொன்னார். முன்னர் இதைப்பற்றி நினைக்கவுமில்லை, ஆலோசனை செய்து தத்துவத்தைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யவுமில்லை. ராஜகோட்டிலும் இதைப்போலவே திடீரென உபவாஸம் ஏற்கப்பட்டது.

---

[ 15 ]

## முடிவு முன், தர்க்கம் பின்.

இந்த நிகழ்ச்சிகளில் நான் ஒரு விஷயத்தைத் தெளிவாகக் கண்டேன். காந்தியடிகள் தீர்மானம் செய்யுமுன் சிந்தனையிலாழ்வதுமில்லை, தமது தீர்மானத்தை வாதப் பிரதிவாதங்கள் செய்து சோதிப்பதுமில்லை. தீர்மானம் முன்னராகி விடுகிறது; வாதங்கள் — யுக்திகளெல்லாம் பின்னுலுதிக்கின்றன. இதனாலேயே சிற்சில சமயங்களில் அவரது காரணங்கள் நிலையாததாகத் தோன்றுகின்றன. சில சமயங்களில் "நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?" என்பதுபோல் மிகவும் சூக்ஷ்மமாக இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அவரது எதிரிகள், அறியாமையினால் அவரைச் சாணக்கியரென்று கூறுகிறார்கள். அவரை வழுக்கிக் கொண்டு போகும் ஒருவகை மீனுக்குச் சமானமானவரென்றும் கூறுவதுண்டு.

ஆனால் உண்மையில் காந்தியடிகளின் யுக்திகள் இயற்கையானவை. இந்த யுக்திகள் முடிவிற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுவதால்—யுக்திகளின் ஆதாரத்தில் முடிவு நிறுத்தப்படுவதில்லை யாதலால்—யுக்திகள் சில சமயங்களில் சிக்கலாயும், சில சமயங்களில் குயுக்தி போன்றும், சில சமயங்களில் சாரமற்றவை போலவும் தோன்றுகின்றன. வேறு எவ்வாறு இருக்க முடியும்? சூரியபகவானிடம், நீங்கள் மாரிகாலத்தில் தக்ஷிணாயனமாகவும், கோடையில் உத்தராயணமாகவும் ஏன் போகிறீர்களென்று கேட்டால், ஏதாவது சரியான பதில் கிடைக்குமா? குளிரும், உஷ்ணமும், தக்ஷிணாயன, உத்தராயணங்களினால் உண்டாகின்றனவேயன்றி, குளிர்—உஷ்ணத்தினால் தக்ஷிணாயனமும் உத்தராயணமும் உண்டாவதில்லை. காந்தியடிகளின் தர்க்கமும் இவ்வாறே. காரணங்கள் தீர்மானத்தினால் உண்டாகின்றனவேயன்றி, அவைகளிலிருந்து தீர்மானம் பிறப்பதில்லை. உண்மையில் அவருடைய தீர்மானத்திற்கு மிக உறுதியான காரணம், அது காந்தியடிகளின் தீர்மானமென்பதே யாகும். இவ்வாறு நான் கூறுவது மிகையாகாது. ஏனெனில், அவரது தீர்மானம் அவரது யுக்திகளை விட அதிக பலமுள்ளதாகவும், மறுக்க முடியாததாகவு மிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

சுதந்திர தினத்தையொட்டி ஏற்கப்படும் பிரதிக்ஞையில் "ஆங்கிலேயர்கள், இந்தியாவின் பொருளா

தாரம், ராஜீயம், கலாசாரம், ஆன்மீகமாகிய இவை களை அழித்திருக்கிறார்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது. இது பலவாண்டுகளாக நடைமுறையிலிருக்கும் பழைய பிரதிக்ஞை. இவ்வருஷத்தில் (1940) இப்பழைய பிரதிக்ஞையை ஒட்டி மிகுந்த கொந்தளிப்பேற்பட்டது. ஆங்கிலேயரின் பத்திரிகைகளும், சில ஆங்கிலத்தலைவர்களும் "இது முழுப்பொய், நாங்கள் எப்பொழுது ஸமுதாயத்தையோ ஆன்மீகத்தையோ அழித்தோம்? நாங்கள் இந்தியக் கலாசாரத்தையோ ஆன்மீக வாழ்வையோ கொன்றோம் என்பது முற்றிலும் பொய்" என்றார்கள்.

இந்த ஆக்ஷேபணையில் சிறிது உண்மையுண்டு; ஆனால் எப்பொழுதும்போல் காந்தியடிகள் கூறுவதற்கு மக்கள் எத்தகை பொருள் கொண்டாலும், தாம் கொண்டுள்ள அருத்தத்தையே அவர் ஒப்புவார். அவர் சொற்களின் இலக்கிய சம்மதமான பொருளை மதிப்பவரல்ல. சொற்களிலுள்ள உண்மை அல்லது சாரம் சந்தான் அவர் வேண்டுவது. காங்கிரஸ் "சுதந்திரம் வேண்டும்" என்றது. காந்தியடிகளும் "ஆமாம், சுதந்திரம் வேண்டும்" என்றார். ஆனால் ஸ்ரீ. ஜவாஹர்லால் சுதந்திரம் வேண்டுமென்னும் பொழுது, அவர் விரும்புவது வேறு பொருளை; காந்தியடிகளின் சுதந்திரம் வேறு. காந்தியடிகளின் சுதந்திரம், பூரண சுயராஜ்யமே; ஆனால் அது பலவிதத்திலும் வெறும் ராஜீய சுதந்திரத்தைவிட சிக்கலானது. காந்தி

அடிகளின் பூரண சுயராஜ்யத்தில், ஆங்கிலேயர்கள் தியாகம் செய்யவேண்டி யிருப்பதுடன், இந்தியர் களும் சுகமாகத் தூங்குவதற்கு இடமில்லை. சுதந்திர மென்று கூறிக்கொண்டே காந்தியடிகள் "பூரண சுய ராஜ்யம்" என்று சொல்ல ஆரம்பிக்கிறார். பிறகு அதையே "ராம ராஜ்யம்" என்றும் அழைக்கிறார்.

உண்மையில் அவர் கோருவது 'ராமராஜ்யமே.' பல தடவைகளில் அவர், மேல் நாட்டுத் தேர்தல் முறையை தூஷித்து, ராம ராஜ்யத்தைச் சிறந்த தென்று சொல்லியிருக்கிறார். அவருடைய அபிப்பிரா யத்தில் ராமராஜ்ய மென்பது பூரண சுயராஜ்யமா யிருக்க முடியும். ஆனால் பூரண சுயராஜ்யம் ராட்சஸ ராஜ்யமாகவும் இருக்கலாம். ஜெர்மனி ஓர் சுதந்திர நாடென்று நாம் மதிக்கலாம். ஆனால் காந்தியடிகள் கோருவது இதனுடையதுபோன்ற சுதந்திரமல்ல. அவருக்குக் கருத்தில்தான் குறி. அவர் வார்த்தைகளுக் கடிமையல்ல. அதை 'ஹல்வா' என்று சொல், வேறு ஏதாகிலும் பெயரிட்டழை, அவர் விரும்புவது ருசியும் புஷ்டி தருவதுமான உணவு. அவர் சொற்களைக் கையா ளும்பொழுது அவைகளில் ஏதாவது கருத்திருக்கும்; உண்மை யிருக்கும். ஆகையால் ஒவ்வொரு சொல் லுக்கும் தனி அருத்தம் செய்கிறார். அதிலேயே உறுதி யுடன் நிற்கிறார். இதிலிருந்து மிகுந்த தவறான அபிப் பிராயங்கள் உண்டாகி விடுகின்றன; ஆனால் அவருக்கு இதனால் வருத்தமுண்டாவதில்லை.

அரசியல் நிர்ணய சபை (கான்ஸ்டிடுவெண்ட் அஸெம்பிளி) என்ற சொற்களின் அருத்த விஷயத்திலும் இதே நிலைமைதான். "ராமகர்" காங்கிரஸின் சாத்விக சட்டமறுப்புத்தீர்மானத்துடன் சேர்ந்துள்ள நிபந்தனைகளை ஜனங்கள் மறந்து விடுகிறார்கள். சட்டத்தை மீறுவதை மட்டில் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் சட்டத்தை மீறுவதை மாடத்தில் வைத்துவிட்டு நிபந்தனைகளை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறார். ஜனங்கள் 'ரஸகுல்லா', வென்று சொல்லும் பொழுது அவர்களுடைய விருப்பம் முட்டையைப் போன்ற, வெண்மையான, தித்திப்பும் ரஸமுமுள்ள வஸ்துவை நினைக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் இவைகளுடன் திருப்தியடைய மாட்டார். அவர் உருண்டை, முட்டையைப் போன்றிருப்பது, வெண்மையுள்ளது என்பதை யெல்லாம் பொருட்படுத்துவதில்லை. அது சப்பையா யிருந்தாலும் சரி, கெட்டியில்லாவிடினும் சரி, தித்திப்பாயும், புதிதாயுமிருந்தால் அவருக்குப் போதும். அதில் விஷமொன்று மில்லாமல் சுத்தமான பாலினால் செய்யப்பட்டதாய், அதில் இருக்கவேண்டிய சாமான்களெல்லாமிருந்தால், அதன் உருவத்தைப் பற்றியோ, நிறத்தைப் பற்றியோ அவர் கவனிக்கமாட்டார். சர்க்கரை வெண்மை யில்லாமல் சிவப்பாயிருந்து, அதனால் ரஸகுல்லா சிவப்பாயிருந்தால் அவருக்கு அதிக திருப்தியுண்டாகும். காந்தியடிகள் "நான்கு வித நாசம்"

என்ற விஷயமடங்கிய சுதந்திரதினப் பிரதிக்ஞையை ஆதரித்தபொழுது, அவர் அதற்குக் கொண்ட அருத்தம் வேறு; காங்கிரஸ் நினைத்த அருத்தம் வேருகும்.

ஆகையால் சில பெருமைவாய்ந்த ஆங்கிலேயர்கள் இந்தப் பிரதிக்ஞையை, ஹிம்ஸையும், பொய்யும் நிறைந்ததென்று குறை கூறியபொழுது, காந்தியடிகள் உடனே தமது கருத்தை இவ்வாறு வெளியிட்டார். "என் தந்தை கபடமற்ற மனிதர். காலில் மிருதுவான தோலாலான நாட்டுச் செருப்பு தரிப்பது வழக்கம். ஆனல் அவர் கவர்னரின் தர்ப்பாருக்குப் போக நேர்ந்த பொழுது காலுறையும், பூட்ஸும் தரிக்க நேர்ந்தது. கல்கத்தாவில் கர்சன் பிரபுவிடமிருந்து அழைப்பு வரவே, சில ராஜாக்களும், மகாராஜாக்களும் அவரை சந்திக்க விசித்திரமான ஏற்பாடுகள் செய்வதைக் கண்டேன். அவர்களுடைய உடுப்புக்களையும், வேஷத்தின் கோலத்தையும் பார்த்தால், அவர்கள் சமையற்காரர்களைப்போல் தோன்றினர்கள். ஆயிரக் கணக்கான இந்தியர்கள் ஆங்கிலம் படித்து வித்துவான்களாயிருந்தும், தங்கள் பாஷையையே அறியாதவர்களா யிருக்கிருர்கள். இது கலாசாரம், ஆன்மீகம் இவைகளின் நாசமல்லவா? இது நாங்களாகச் செய்தது என்பதை ஒப்புக்கொள்வோம். நாங்களாகவே எங்களை பலியிட்டுக் கொள்ளுவதால், ஆங்கிலேயரின் குற்றம் குறையுமா? அடிமையைப் பிணிக்கும் விலங்கை அவன் பூஜிக்கவும் ஆரம்பித்து, விலங்கிட்டவனை

வலமும் வரத் தொடங்கினால், நாசத்தில் இன்னும் என்ன எஞ்சியிருக்கிறது?''

இது சிறிது விசித்திரமான வாதமே. ஆனால் இத னால் இந்தப் 'பிரதிக்ஞை'யினாலுண்டான மனக் கசப்பு குறைந்தது. மேலும், எதிரிகளுக்கு இது நொண்டிச் சாக்கு என்றும் தோன்றாமலில்லை. உண்மை யென்ன வெனில், அப்பிரதிக்ஞையைக் குறித்து காந்தியடிகள் கொண்டிருந்த பொருள் வேறு; மற்றவர்கள் கொண் டிருந்த பொருள் வேறு. காந்தியடிகளின் முடிவு யுக்தி களின் ஆதாரத்திலிருந்து உண்டாவதில்லை. யுக்திகள் பின்னர் வருகின்றன; முடிவு முன்பே ஏற்பட்டு விடு கிறது. உண்மையில் தூய புத்தியுள்ளவர்கள் தீர்மானம் செய்யுமுன் அதிக யோசனை செய்யவேண்டி யிருப்ப தில்லை. நல்ல துப்பாக்கியிலிருந்து கிளம்பும் ரவை, உடனே வேகமாகச் சென்று குறியைத் தாக்குகிறது. அதைப் போலவே கலங்காத புத்தியுள்ளவனுடைய முடிவும் சீக்கிரத்தில் அமைந்து விடுகிறது. ஏனெனில்,

सत्यप्रतिष्ठायां क्रियाफलाश्रयत्वम् ।*

"உண்மையில் நின்றோர் புரிந்திடும் செயலை
உடனடைந்திடுமே, பயன்கள்தாமேகி."

ஆனால் அவரிடமுள்ள இந்த தெய்வீகச் சக்தி—இதை வேறு என்ன பெயரிட்டு அழைப்பது?—அவ ரது நண்பர்களையும், எதிரிகளையும் சங்கடத்தி லாழ்த்தி விடுகிறது. இந்த சக்தி அவரை நமது புத்திக்கு

* பதஞ்சலி யோக சூத்திரம், II-36.

எட்டாதவராய்ச் செய்து விடுகிறது. இதனால் பலர் அவர் கூறுவதை அப்படியே ஏற்கத் தயங்குகிறார்கள்.

காந்தி-இர்வின் ஒப்பந்தம் நடந்த சமயம். அநேகமாக எல்லா விஷயங்களும் நிச்சயமாகி விட்டன. ஒப்பந்த பத்திரத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் இராஜப் பிரதிநிதியும் காந்தியடிகளும் சேர்ந்து படித்தார்கள். படித்துக்கொண்டிருக்கையில் இராஜப் பிரதிநிதியின் வீட்டில் நடுப்பகலாய் விட்டது. இர்வின் பிரபு, “நான் போஜனம் செய்துவிட்டு வருகிறேன். தாங்களும் களைத்திருக்கிறீர்கள்; எனது அறையில் தூங்குங்கள்; பிறகு எழுந்து மேலே காரியத்தைப் பார்க்கலாம்” என்றார். காந்தியடிகள் தூங்கிவிட்டார். இரண்டரை மணிக்கு விழித்தார். முகத்தைக் கழுவிக்கொண்டார். காந்தியடிகள், “எனக்குச் சிறிது கலக்கமாக விருந்தது. நான் நினைத்தேன்—இந்தக் கலக்கம் ஏன்? இது உடற் களைப்பு அல்ல. மனச் சோர்வுதான். நான் ஏதோ பாவம் செய்வது போல் தோன்றிற்று. ஒப்பந்தத்தின் நகலை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். படித்துக் கொண்டே நிலத்தைப் பற்றிய பகுதியையடைந்ததும் எனக்கு பகீர் என்றது. அவ்வளவுதான், இதுதான் நடந்த குற்றம் என்று கண்டுகொண்டேன். இர்வின் பிரபுவிடம் ‘இந்த நகல் சரியல்ல. நான் இதை ஏற்க முடியாது. நான் இதை ஒப்புக்கொண்டது உண்மையே. ஆனாலும், நான் செய்வது பாவமென்று எனக்குத் தெரியவருகிறது. ஆகையால் கொடுத்த சம்ம

தத்தை திரும்ப வாங்கிக் கொள்கிறேன்' என்று சொன்னதாகக் கூறியிருக்கிறார்.

இர்வினுக்கு, பாவம், என்ன செய்வதென்று தெரியவில்லை. இதுவும் ஒரு முறையாகுமா? எதிரியின் வாயை யடக்கக் கூடியதாக, காந்தியடிகளிடம் ஆயிரம் உபாயங்கள் இருந்தன. ஆனால் வாதங்கள் பின்னர் வந்தன. தீர்மானம் வந்தது முன்னால். கடைசியில் இர்வின் காந்தியடிகள் வார்த்தையை ஒத்துக் கொண்டார். ஆனால் இர்வின் பிரபு அவரைப் பற்றி என்ன நினைத்திருப்பாரோ!

ஏப்ரல் 6வ சத்யாக்கிரஹ தினம் கொண்டாடப்படுகிறது. இந்தத் தீர்மானித்த கதையும் இதைப் போன்றதே. சில தினங்களுக்கு முன்வரையில், காந்தியடிகள் இதைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. ஓரிரவு காந்தியடிகள் தூங்கிவிடுகிறார். ஏப்ரல் 6வயன்று சத்யாக்கிரஹ தினம் கொண்டாட வேண்டுமென்று கனவு காண்கிறார். தோழர்கள், "சமயமில்லை, வெற்றிகரமாய் நடத்தமுடியாது" என்று கூறுகின்றனர். அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. விளம்பரம் செய்யப்படுகிறது. 6வ கொண்டாட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. இது வாதவிவாதம் செய்து காரணங்களுடன் அமைந்த முடிவா? 'இவர் எத்தகைய தனித்தன்மை வாய்ந்தவராயிருக்கிறார். முடிவு முதலில் செய்துவிட்டு காரணங்களைப் பின்னர் ஜோடிக்கிறார்' என்று தோழர்கள் ஆச்சரியமடைந்

இருக்கமாட்டார்களா? ஆனால் அந்தராத்மாவின் தூண்டுதலால் தீர்மானிப்பவர்களின் முடிவுகள் யுக்தி களைக் கொண்டு நிர்ணயிக்கப் படுபவைகளல்ல. அப்படிச் செய்வது எல்லோருக்கும் சாத்தியமல்ல. ஏன் அப்படி என்று அறிய முயலுவதும் வீண் பிரயத்தனமேயாகும்.

[ 16 ]

## ஸ்திதப் பிரக்ஞர்

நான் காந்தியடிகளை முதலில் தரிசித்ததி லிருந்து அவருடன் எனக்கு அறாத தொடர்பு இருந் திருக்கிறது. முதல் சில வருஷங்கள் வரை, நான் அவருடைய குறைகளைத் தேடும் விமர்சகனாக அவரை யணுகி வந்தேன். ஏனெனில், வாலிபர்களின் தெய்வ மாயிருந்த லோகமான்யரின் புகழுக்குச் சமமாக அவரது கீர்த்தி ஓங்க ஆரம்பித்தது எனக்குப் பிடிக்க வில்லை. அவரது குறைகளைத் தேடும் பொருட்டு அவரை நெருங்க நெருங்க, நான் ஏமாற்ற மடைய வேண்டியதாயிற்று. ஆகவே, சிறிது காலத்தில் குறை தேடும் எண்ணம் போய், மரியாதை யுண்டாயிற்று! பின்னர் அந்த மரியாதை பக்தியாகப் பரிணமித்தது. அவரிடம் நெருங்கியவன் அவருடைய பழக்கத்தினால் மாறாதிருப்பதரிது. இது அவருடைய இயற்கையின் சிறப்பாகும்.

நாம் விழித்திருக்கும் பொழுது செய்யத் துணி யாத செயலை சொப்பனத்தில் செய்து விடுகிறோம். நமது கண் விழித்திருந்தாலும், மனம் தூங்கிக் கொண்டிருப்பதுண்டு. கவனத்துடன் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு, மன உறக்கத்தில் செய்யப்படும் காரியங்கள் இவை யென்று தெளிவாகி விடுகின்றன. காந்தியடிகளுடன் எனக்கு இருபத்தைந்து வருஷத் திய பழக்க முண்டு. நான் மிகவும் அருகிலிருந்து நுண் பொருள் விளக்கி கொண்டு அவரை ஆராய்ந் திருக்கிறேன். விமர்சகனாக இருந்து, குறைகளைக் காண முயன்றிருக்கிறேன். ஆனால் அவர் உறங்கு வதை ஒருபொழுதும் கண்டதில்லை. ஒவ்வொரு கணமும் அவர் விழித்திருப்பதாகவே தெரிகிறது. ஆகையால் “எனது ஒவ்வொரு கணமும் கடவுளின் சேவையில் கழிகிறது” என்று அவர் சொல்லும் பொழுது மிகைப்படக் கூறியதாக நான் கருத வில்லை. இம்மொழி கர்வத்திற்கறிகுறியல்ல. ஏனெ னில், இங்கு காந்தியடிகள் எதிராளியைப்போலிருந்து, தம் நிலையை விவரிக்கிறார். எதிராளியைப்போலி ருந்து ஒருவன் தன்னையே பார்ப்பானானல், அவன் தன்னைப் பற்றிக் கூறினும், பிறரைப் பற்றிக் கூறினும், அவைகளில் வித்தியாசமிராது. அந்நிலையில் பிறரைப் பற்றிக் கூறுவதுபோலவே, தயக்கமில்லாமல் தன்னைப் பற்றியும் கூறமுடியும்.

ஏரவாடாவில் அவர் ஒரு உபவாஸத்திற்குப் பின்

மற்றொரு உபவாஸம் தொடங்கிய பொழுது, "நானோ கிழவனாகிவிட்டேன், இறக்க வேண்டியவன். ஆகையால், ஏன் சண்டையிட்டபடியே சாதல் கூடாது?" என யோசிக்கிறார் போலும் என்று நான் கருதினேன். "நீங்கள் தம் வாழ்க்கையால் நாட்டிற்கு நலம் புரிந்தீர்கள். இப்பொழுது மரணம் நெருங்கி விட்டதால், மரணத்தினாலும் நன்மை செய்ய விருப்புகிறீர்களா?" என்று குறை கூறும் முறையில் அவரைக் கேட்டேன். "இம்மாதிரி நினைப்பதே கர்வ மாகும். ஏனெனில் செய்தல், செய்வித்தல், செய்விக்காதிருத்தல் இவையெல்லாம் கடவுளிஷ்டம். நாம், நீ எண்ணுவதுபோல் கற்பனை செய்யத் தொடங்கினால், கடவுளை அலக்ஷியம் செய்தவராவோம். நம்மிடம் கர்வம் நிலைபெற்றுவிடும்" என்று பதிலுரைத்தார். நான் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்தேன். அவர் அஹங்காரத்தை எவ்வளவு தூரம் அழித்திருக்கிறார் என்பது புலப்பட்டது.

" काछ दढाँ कर बरसणा मन चंगा मुखमिट्ठ ;
रणसूरा जगवल्लभा सौ मैं विरला दिट्ठ "

"உடல் வலி மிகுதியும், கொடையினில் விரிவும்,
மனத்திடைத் தெளிவும், முகத்தொளிரினிப்பும்
போரிடைத் திறமையும், பாரினிற் புகழும்
ஓரிடத்தமைதல் அரிதினு மரிதே."

ஹரிஜன சேவா சங்கத்தில் பதவி வகிப்போர் ஒவ்வொருவரும், "நான் எனது வாழ்க்கையில் உயர்வு

தாழ்வு என்ற வித்தியாசத்தை மதிப்பதில்லை" என்ற பிரதிக்ஞை செய்யவேண்டும். இந்தப் பிரதிக்ஞை செய்யும் சமயம் வந்தபொழுது, நான் செய்ய மறுத்தேன். "தற்செயலாய் நேரும் பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் ஒரு மனிதன் திருடன், துஷ்டன், பாவி; அவன் செய்யும் கெட்ட காரியங்கள் எனக்கு நன்றாய்த் தெரிந்தவை. என்னிடம் அத்தீய குணங்களில்லை. கர்வம் கொள்ளாவிடினும், நான் அவனைவிட நல்லவன் என்று எப்படி எண்ணாதிருப்பது? ஆகவே 'நான்' என்பதை மறந்தாலும், ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் அவனிலும் தாழ்ந்தவன் என்பதை மறப்பது எப்படி?" என்று வினவினேன்.

இதை அவர் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே நான் அவரையே உதாரணமாய்க் கொண்டு மீண்டும் வாதித்தேன். "தாங்கள் தம்மையே பாருங்கள். என்னைவிடத் தாங்கள் கடவுளுக்கு அருகில் இருப்பவர். தாங்கள் — கர்வமில்லாதிருப்பினும் — தாம் உயர்ந்தவரென்பதையும் நான் தாழ்ந்தவனென்பதையும் மறக்க முடியுமா?" என்றேன்.

அவர் "ஆனால் இந்த விஷயமே சரியல்ல; ஏனெனில் நாம் நமது (ஜீவன) யாத்திரையை முடிக்கும் வரையில், எவன் கடவுளுக்கு அருகிலிருக்கிறான், எவன் தூரத்திலிருக்கிறான் என்று யார் கூறமுடியும்? தூரத்திலிருப்பதாகத் தெரிகிறவன் அருகிலும், அருகி

விருப்பதாகத் தோன்றுவோன் தூரத்திலும் இருத்தல் கூடும். நான் ஒரு சமயம் இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்கா போய்க் கொண்டிருந்தேன். சரியான சமயத்தில் கப்பலேற முடியவில்லை. நங்கூரத்தை எடுத்தாய் விட்டது. ஆகையால் ஒரு படகிலேற்றி என்னை அனுப்பினார்கள். கொந்தளிப்பு அதிகமாயிருந்ததால் பல தடவைகள் எனது படகு கப்பலில் மோதுவதும் விலகிப் போவதுமாயிருந்தது. கடைசியில் எவ்வாறோ நான் கப்பலில் ஏற்றப்பட்டேன். ஆனால் பல தடவைகளில் படகு கப்பலில் மோதி விலகியது போல், விலகியே போய்விட, நான் கப்பலை யடையாமலே இருந்திருக்கலாம். படகு கப்பலைத் தொட்டதனாலேயே நான் கப்பலருகில் வந்து விட்டேனென்று கூற முடியுமா? அருகில் வந்த பிறகும் விலகிப் போயிருக்கக் கூடுமல்லவா? அதனால் நான் கடவுளின் அருகிலிருப்பதாகவும், வேறொருவன் தூரத்திலிருப்பதாகவும் எவ்வாறு கொள்வது? இத்தகைய எண்ணமே தவறானது, அஹங்காரம் நிறைந்தது" என்றார்.

இந்த மொழிகள் என்னை மயக்கி விட்டன. காந்தியடிகள் எவ்வளவு விழிப்புள்ளவர் என்று எண்ணி எண்ணி வியந்தேன். ராஜாவின் வேஷம் தாங்கிய கலைவாணன், தன் நடிப்பைக் கண்டு மயங்குவதில்லை. காந்தியடிகள் தம் பெருமையை நினைப்பதேயில்லை. கர்வம் என்பது மயக்கத்தின் மறு பெயர். விழிப்

புள்ளவனுக்குக் கர்வம் ஏது, மயக்கம் ஏது? இதனு லேயே சிற்சில சமயங்களில் காந்தியடிகள் ஸங்கோச மின்றிச் தற்புகழ்ச்சி செய்துகொள்கிறுர். "நான் பிரசார சாஸ்திரத்தில் பண்டிதன்." "பத்திரிகை நடத்துவதில் நிபுணன்." "நல்ல கோமுட்டி." "உடல் நூலின் மாணவன்." "முப்பத்தெட்டு வருஷங்களாக கீதையைப் பின்பற்றி நடந்து வருகிறவன்"* "சத்தி யத்தின் பக்தன்." "எனது வாழ்க்கை அல்லும் பகலும் கடவுளின் சேவையில் கழிகிறது." இவைகளை வேறு எவர் கூறினும் கர்வம் தொனிக்கலாம். ஆனுல் காந்தியடிகள் வாக்கிலிருந்து வரும்பொழுது, அவ் வாறு கருத முடியாது. ஏனெனில் காந்தியடிகள் நடு நிலையிலிருந்து தம்மை ஆராய்பவர்.

ஒரு சாமர்த்தியமுள்ள ரண சிகிச்சை செய் வோன் கத்தியை யெடுத்துக் கிழித்து மனித உடலி னுள் மறைந்திருக்கும் அங்கங்களைப் பிரித்து அழுகிய வைகளைத் தயையின்றி அறுத்தெறிகிருன். ஊசி கொண்டு தைக்கிருன். இவைகளைப் பார்த்தால், உயி ரற்ற மரத்தில் தன் திறமையைக் காட்டுவது போல் தோன்றுகிறதே யல்லாது, உயிருள்ள சரீரத்தில் என்று தோன்றுகிறதில்லை. ஆனுல் அதே ஸர்ஜனுல் தன் உடலிலேயே அவ்விதம் செய்ய முடியாது. அழுகிய தன் காலை அவசியம் நேரும் பொழுது

* 1929-ஆம் வருஷத்தில் இது எழுதப்பட்டது.

வெட்டி எறியக்கூடிய ஸர்ஜன் உண்டா? ஆனால் காந்தியடிகள் அத்தகையவர். அவருடைய தசைகள் அபிமான உணர்ச்சி யற்றுவிட்டன. அவர் பிறர் விஷயத்தில் தயையின்றி கத்தியை உபயோகிப்பதுபோலவே தம் விஷயத்திலும் உபயோகிக்கக் கூடும்.

"நான் இமயத்தை யொத்த பெரிய குற்றம் புரிந்தேன்." "நான் அந்தப் பாவம் செய்தேன்" என்பது போன்ற தம் குற்றங்களை ஒப்புக்கொள்ளும் வசனங்கள் அவரது ஆத்ம சரித்திரத்தில் நிறம்பியிருக்கின்றன. அவர் இவ்வாறெல்லாம் கூறினால் அதில் ஆச்சரியமேது? "புத்தருடைய அஹிம்ஸை எனது அஹிம்ஸையைவிடக் குறைவானது." "டால்ஸ்டாயால் எப்பொழுதும் தமது கருத்துக்களை முற்றிலும் அனுஸரிக்க முடியவில்லை. ஏனெனில் அவருடைய கருத்துக்கள் அவரது செய்கையை விட வெகு தீவிரமாய் ஓடிக்கொண்டிருந்தன. நான் எனது கருத்துக்களைவிட எனது செயலை ஒரு அடி முன்னாலேயே வைத்திருக்க முயன்று கொண்டிருக்கிறேன்." இவை கர்வத்தைக் காட்டும் வார்த்தைகள் அல்ல. இவை, எவ்வளவு திறமையுடன் பிறரைக் கிழிக்க முடியுமோ, அதே திறமையுடன் தம்மையும் கிழித்துக்கொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்த ஒரு நடுநிலைமையிலுள்ள ரண சிகிச்சை நிபுணனுடையதே யாகும்.

ஆழ்ந்து ஆராய்வோருக்கு, கர்வத்தின் வாசனை

கூட காந்தியடிகளிடம் கிடையாதென்று தெரியவரும். மனிதனைப் பரீட்சிக்க வேண்டியது சிறு சிறு காரியங்களிலேயேயன்றி, பெரியவைகளிலல்ல வென்பது என் கருத்து. பெரிய தியாகிகள் தினந்தோறும் செய்யும் சிறிய சிறிய வேலைகளில் மெய்மறந்திருப்பதுடன் மிக்க இழிவாகவும் நடந்துகொள்ளுகிறார்கள். காரணமென்னவெனில், பெரிய செயலில் மனிதன் ஜாக்கிரதையாயிருந்து ஆன்மாவையும் செயலுடன் இணைத்து விடுகிறான். ஆகையால் அது ஒளி பெற்றெழுகின்றது. ஆனால் சிறிய காரியங்களில் மெய் மறந்து, அஜாக்கிரதையாயிருந்து விடுகிறான். இத்தகைய மனிதனது தியாகம் இயற்கையான செயலல்ல என்று தெரிகிறது. ஆனால் காந்தியடிகள் பெரிது, சிறிது எல்லாக் காரியங்களையும் விழிப்புடன் புரிகிறாரென்று கூறலாம். இதன் பொருள் சத்தியம், தியாகம், அஹிம்ஸை ஆகியவை அவருடைய இயற்கை குணங்களாகி விட்டன என்பதேயாகும். தருமத்தைக் காக்க அவர் தனி முயற்சி செய்யவேண்டியிருப்பதில்லை. அப்படி முயற்சி அவசியமாயினும், சிறிதே போதுமானது. அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அவர் விழிப்புடனிருக்கிறார். இது சாதாரண நிலையல்ல. ஒரு ஸ்திதப் பிரக்ஞருடைய நிலையாகும்.

[ 17 ]

## ‘ பாபூ ’

காந்தியடிகளை ஒரு மஹாத்மாவாகப் பார்த்தோம்; ஒரு தலைவராகப் பார்த்தோம்; ஆனால் ‘பாபூ’ வாகத்தான் நாம் அவரது உண்மை உருவை அறிய முடியும். சேவாக்கிராமத்திலிருந்து இராஜப் பிரதிநிதியுடன் கடிதப் போக்கு வரவு நடக்கிறது; அங்கே காரியக் கமிட்டியின் கூட்டங்கள் நடைபெறுகின்றன; பெரிய பெரிய தலைவர்கள் வருகிறார்கள்; காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற சமயத்தில் மந்திரிகள் ஆலோசனைக்காக வந்த வண்ணமாயிருந்தனர். ஆனால் ஆச்சிரமவாசிகள் பெரியோரின் கடிதங்களைக் கண்டு மூர்ச்சையடைவதுமில்லை; பெரிய தலைவர்களைக் கண்டு மயங்குவதுமில்லை; அவர்களுக்கு ராஜீயத்தில் விசேஷ ருசியுமில்லை. அவர்களுக்கோ, ‘பாபூ’ என்ன சாப்பிட்டார், என்ன அருந்தினார், எப்பொழுது விழித்தார், எப்பொழுது உறங்கினார்,

எவரிடம் என்ன கூறினர், யார் என்ன கேட்டார்— என்பவைகளை அறிவதிலேயே ஆவல். காந்தியடிகளும் ஆச்சிரமத்தின் சிறுசிறு விஷயங்களிலும், அவசியத்திற்கு அதிகமாகவே ஆசை காட்டுகிருர்.

ஆச்சிரமம் என்பதென்ன ? அது ஒரு விசித்திரமான கோஷ்டி. அதை சிவனுடைய பூதகணத்திற்கு ஒப்பிடலாம். பலவிதமான ரோகிகள் இருக்கிருர்கள் ; அவர்களுக்கு சிகிச்சை செய்வதில் காந்தியடிகளுக்குத் தனி ருசியிருக்கிறது. எல்லோரும் ‘ பாபூ ’விடம் எல்லையிலா அன்பு கொண்டவர்கள். ஒருநாள் ஒரு ரோகிக்காகக் குளிரில் போர்த்துக்கொள்ள மெல்லிய ‘ரஜாய்’ மெத்தை தயாரிக்கப்பட்டு வருவதைக் கண்டேன். கஸ்தூரிபாய் அம்மையினுடைய பழைய கிழிந்த புடவைகள் கொண்டு வரப்பட்டன. காந்தியடிகள் தம் கையினுல் அவைகளை அளந்தார். எவ்வளவு துணி வேண்டுமென்று கணக்கிடப்பட்டது. மெத்தைக்குள் பஞ்சுக்கு பதிலாக பழைய பத்திரிகைகளை ஒன்றின் மேல் ஒன்ருகப் பரப்பித் துணியுடன் தைக்கப்பட்டது. காந்தியடிகள் வேலை முழுவதையும் ஆசையுடன் செய்வித்தார். பஞ்சைவிட காகிதம் அதிக உஷ்ணமானது என்று எனக்குச் சொன்னர். இத்தகைய காரியங்களிலா இவரது மதித்தற் கரிய காலம் கழியவேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. “ உங்களுக்கு தேசத்தின் பெரிய வேலைகளைவிட ஆச்சிரமத்தின் இச்சிறு காரியங்களில் அதிக ஆசை

பிருக்கிறது.'' என்று வேடிக்கையாகக் கூறினேன். அவர், '' அதிகமில்லை ; அதே மாதிரியென்று சொல்லலாம் '' என்ருர்.

நான் பதில் கூறமுடியவில்லை. ஏனெனில், காந்தியடிகள் உணர்ச்சியுடன் பதிலளித்தார்; வேடிக்கையாயல்ல. விஷயம் உண்மை. ஒருக்கால் காந்தியடிகள் இரவு பகலாக முக்கிய விஷயங்களையே குறித்து யோசித்துக் கொண்டிருந்தால் அவருக்குச் சிறிதும் ஓய்வு கிட்டாதென்பதும், இதற்குக் காரணமாயிருக்கலாம். ஆச்சிரமம் அவருக்குப் பரோபகாரம், விளையாட்டு இரண்டும் கலந்த ஒரு ரசாயனசாலை. ஆச்சிரமம் காந்தியடிகளின் குடும்பமாகும். மிகப் பெரிய மனிதனுக்கும் குடும்ப சுகத்தில் விருப்பமிருக்கும். காந்தியடிகளுக்கு இவ்வுலகம் முழுவதுமே குடும்பந்தான். ஆனுல் ஆச்சிரமக் குடும்பத்தின் பொறுப்பு அவருக்கு அதிகமுண்டு. அந்தப் பொறுப்பை அவர் பற்றின்றி ஏற்று நடத்துகிருர்.

ஆச்சிரமத்தில் அவர் வெவ்வேறு வித சக்தியும், சுபாவமும் உள்ள மனிதர்களை வைத்திருப்பதை வெளி மனிதன் பார்த்தால், இந்தச் சிவகணங்களை ஏன் சேர்த்துவைத்திருக்கிருரென்று ஆச்சரியமுண்டாகாமலிராது. ஒவ்வொருவரையும் அறிந்ததும், ஒவ்வொருவருக்கும், அங்கே தனித்தனி இடமுண்டு என்பது தெரியவரும். அவர்களிற் சிலரை, சில விஷயங்களில் தம்மினும் மேலாக காந்தியடிகள் கருதுகிருர்.

ஏதாவது ஆன்மீக பிரச்சினையைப் பற்றிய சர்ச்சை யெழும்பொழுது தம் சகாக்களில்—ஸ்ரீ. விநோபா, ஸ்ரீ. கிஷோரிலால், காகா சாகேப் காலேல்கர் முதலியோர்களின் உதவியை ஏற்றுக் கொள்கிறார். இத்தகைய சகாக்களை வைத்துக் கொள்வதனாலேயே, அவர் தம் மனதிலிருந்து உயர்வு, தாழ்வு என்ற எண்ணத்தை விலக்கினார் போலும். இழிந்ததென்று கருதப்படும் வேலை செய்வோரும், உயர்ந்ததென்று கருதப்படும் காரியம் செய்வோரும், ஆச்சிரமத்தில் சேர்ந்திருந்தே சாப்பிடுகிறார்கள். சாப்பாட்டுப் பந்தியில் உயர்வு—தாழ்வென்ற வித்தியாசமே இல்லை.

சில தினங்களுக்கு முன் நடந்த விஷயம். இராஜப் பிரதிநிதியைச் சந்திப்பதற்காக காந்தியடிகள் டில்லிக்கு வந்திருந்தார். திரும்பி சேவாக்கிராமம் போவதற்குத் துடித்துக் கொண்டிருந்தார். கடைசியில் தாம் சீக்கிரம் திரும்ப முடியாதென்பதைக் கண்டதும், ஸ்ரீ. மஹாதேவ தேசாயைத் திரும்பும்படி கட்டளையிட்டார். மிக அதிகமாக வேலையிருக்கும் பொழுது தாம் ஏன் திரும்புவதற்குத் துடிக்கிறார் என்றும், திடீரென்று ஏன் ஸ்ரீ. மகாதேவைத் திருப்பி யனுப்புகிறாரென்றும் எனக்குப் புரியவில்லை. “இவ்வளவு பெரிய வேலைகளிருக்கையில் ஸ்ரீ. தேசாயைத் திருப்பி அனுப்புவதிலுள்ள இந்த ஆத்திரம் எனக்குப் புரியவில்லை” என்று சொன்னேன். காந்தியடிகள்

"என் பொறுப்பை நினைத்துப் பார். நான் சேவாக்கிராமத்தில் ஒரு பெரிய கும்பல் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறேன். ரோகிகள் இருக்கவேயிருக்கிறார்கள்; சில பித்தர்களும் அங்கே இருக்கிறார்கள். சில சமயங்களில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு மகாதேவை மட்டில் வைத்துக் கொள்வோமாவென்று தோன்றுகிறது. 'பா'* வேண்டுமானால் இருக்கட்டும். ஆனால் எல்லோரையும் விட்ட பிறகல்லவா பொறுப்பு நீங்கும்? இக்கூட்டத்தின் பொறுப்பிருக்கும் வரை, அதற்கேற்றவாறு நடக்க வேண்டுமல்லவா? இதனாலேயே என் உடல் டில்லியிலிருந்தும் என் மனம் சேவாக்கிராமத்திலிருக்கிறது." என்றார்.

சேவாக்கிராம குடும்பத்தினிடம் அவரது பற்று எத்தகையது என்பதை மேலே யுள்ள அந்தரங்க மொழிகள் சிறிது தெளிவாக்குகின்றன.

* ஸ்ரீமதி கஸ்தூரிபாயை காந்தியடிகளுள்பட எல்லா ஆச்சிரம வாசிகளும், நெருங்கி பழகுவோரும் 'பா' என்று கூப்பிடுவது வழக்கம். 'பா' என்பதற்குத் தாயார் என்பது பொருள்.

[ 18 ]

## கணக்கும், கண்டிப்பும்

**கா**ந்தியடிகள் இருக்குமிடத்தில் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்துக் கொள்ளப் படுகிறது. சிறு பிராயம் முதலே ரூபாயின் கணக்கு ஜாக்கிரதையாக வைத்துக் கொள்வது காந்தியடிகளுடைய பழக்கம். அவருக்கு ஒழுங்கில் மிக்க பற்றுண்டு. ஆகையால் அவருடைய குடில் சுத்தமாக மெழுகிப் பூசி ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறது. இடுப்பிலுள்ள கச்சமும் கச்சிதமாகத்தான் கட்டப்பட்டிருக்கிறது. காந்தியடிகள் கிழவர்தான். ஆயினும், அவருடைய சரீரம் பளபளவென்று வாலிபர்களுடையது போல் இருக்கிறதென்று ஒரு ராஜப்பிரதிநிதி கூறினர். அவர் தேக ஆரோக்கியத்தை நன்ருகக் கவனித்துக் கொள்கிருர் என்பது உண்மை. ஒவ்வொரு விஷயத்திலும் செட்டு செய்யப்படுகிறது. கடிதங்களில் குண்டூசி குத்தி யிருந்தால் அதையும் ஜாக்கிரதையாக எடுத்து வைத்துக்கொள்வார்.

லண்டனுக்குப் போகும்பொழுது கப்பலில் ஒரு வெள்ளைக்காரன் தினந்தோறும் வந்து காந்தியடிகளைத் திட்டிவிட்டுப் போவது வழக்கம். ஒருநாள் அவன் காந்தியடிகளைப் பற்றிச் சில விநோதமான கவிதைகள் எழுதி அவரிடம் எடுத்து வந்தான். அவைகளை அவரிடம் கொடுத்தவுடன் அவர் அவைகளைக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்து விட்டார்; ஆனால் அவைகளில் குத்தப்பட்டிருந்த குண்டூசியை ஜாக்கிரதையாக எடுத்துத் தம் டப்பியில் வைத்துக் கொண்டார். அவன் "காந்தி, படித்துப் பாரேன். இதில் ஒன்றும் சாரமில்லையா?" என்றான். "ஆமாம்! இருந்த சாரத்தை எடுத்து டப்பியில் வைத்துவிட்டேனே!" என்று பதிலளித்தார். இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். அவன் வெட்கிப்போனான்.

காந்தியடிகள் சிறிய உபயோகமுள்ள பொருளையும் கெட்டுப்போக விடுவதில்லை. ஒரு கெஜம், இரண்டு கெஜம் நீளமுள்ள சணற் கயிறுகளை ஜாக்கிரதையாய் வைத்திருந்து மாதங்கள் சென்ற பிறகும், அவசியம் நேரும் பொழுது நினைவாக எடுத்துத் தருவார். அவருடைய ராட்டையின் கீழே வைக்கப் பட்டிருக்கும் கருப்புத்துணியின் சிறு துண்டு 12 வருஷங்களாக ஒன்றே இருந்து வருகிறதைப் பார்க்கிறேன். வரும் கடிதங்களிலுள்ள எழுதாத பாகங்களைக் கிழித்து பை செய்து உபயோகிக்கிறார். இந்தக் காரியங்கள் முதல் தரமான கருமியையும் தோற்கடிப்பவையாயிருக்கின்றன.

லண்டனில் நடந்த விஷயம். காந்தியடிகள் தங்குமிடம் நகரத்திலிருந்து வெகுதூரத்தில் கிழக்குப் பக்கத்திலிருந்தது. அதிலிருந்து மேற்கே ஏழெட்டு மைல் தூரத்தில் ஆபீஸிருந்தது. பகல் போஜனம் ஆபீஸிலேயே நடந்து வந்தது. தங்குமிடத்திலிருந்து தினமும் ஆகாரங்கள் ஆபீஸுக்குக் கொண்டுவரப் பட்டு வந்தன.

சாப்பாடுடன் காந்தியடிகள் சில சமயங்களில் தேனும் சேர்த்துக் கொள்வதுண்டு. நாங்கள் இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில், எகிப்தில் தங்கிய பொழுது, எகிப்தியர் ஒரு ஜாடி நிறையத் தேன் கொடுத்தனர். அதிலிருந்து சிறிது தேன் தினந்தோறும் சாப்பிட்டு வந்தார். அன்றைய தினம் சாப்பாடுடன் தேன் கொண்டுவர மறந்துவிட்டதால், ஸ்ரீமதி மீராபாய் நாலணுக் கொடுத்து ஒரு சீசா தேன் வாங்கி வந்து, உணவுடன் வைத்திருந்தார். காந்தியடிகள் சாப்பிட உட்கார்ந்ததும் தேன் சீசாவைக் கண்டார். "இந்த சீசா ஏது?" என்று கேட்டார். தேன் வாங்க நேர்ந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவ்வளவுதான்; புயலைப்போல் கோபம் பொங்கி எழுந்தது. "ஏன் இப்படிக் காசை வீணாக்குகிறீர்கள்? ஜனங்கள் கொடுக்கும் பொருளை நாம் இப்படியா வீண் செலவு செய்வது? ஒரு நாள் தேன் இல்லையானால் நான் பட்டினியாயிருந்து விடுவேனா?" என்றார்.

இந்தியாவைப் பற்றிய பெரிய சிக்கலான பிரச்

சினைகள் முன்னால் இருந்தன. அவைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, தேனைப் பற்றி வெகுநேரம் வரை உபந்நியாஸமும், கண்டனமும் நடந்துகொண்டிருந்தன. பக்கத்தி லிருந்தவர்களுக்கு அருவருப்பா யிருந்தது. ஆனால் காந்தியடிகளுக்கோ பெரிய விஷயங்களைப் போன்றே சிறியவையும் முக்கியமானவையே. இதில் சில சமயங்களில் அவருக்குப் பெரிது சிறிது என்ற வித்தியாசமே தெரியவில்லை போலத் தோன்றும். பக்கத்திலிருப்பவர்களுக்கு ஆத்திரம் வரும். ஆனால் காந்தியடிகள் இவைகளி லொன்றையும் பொருட்படுத்துவதில்லை.

துணிகளை மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்கிறார். சிறிது கிழிந்ததும் ஒட்டுப்போட்டு விடுகிறார். ஒவ்வொரு பொருளையும் சுத்தமாய் வைத்திருக்கிறார். செட்டோ சொல்ல வேண்டியதில்லை. தண்ணீரைக் கூட வீண் செலவு செய்யமாட்டார். முகம், கை கழுவுவதற்கு மிகவும் கொஞ்சம் தண்ணீரே உபயோகிக்கிறார். குடிப்பதற்குக் காய்ச்சின தண்ணீர் ஒரு சீசாவில் வைத்திருக்கிறார். அதையே அவசிய மேற்படும் பொழுது குடிக்கவும், முகம் கழுவவும் உபயோகிக்கிறார்.

[ 19 ]

## ‘ தினசரியை ’

காந்தியடிகளின் தினசரியை ஒழுங்குள்ளது. ஒரு நிமிஷமாவது வீணாக்கப் படுவதில்லை. வெளியி லிருந்து மிக அதிகமான தபால்கள் வருகின்றன. அவை களெல்லாவற்றிற்கும் பதில் அனுப்ப வேண்டி யிருக் கிறது. பல ஸமயங்களில் அவர் சாப்பிட்டுக் கொண்டே படிக்கிறார். சில ஸமயங்களில் சாப்பிடும் பொழுதும் எவருக்காவது சம்பாஷிப்பதற்கு அனுமதி யளித்து விடுகிறார். உலாவும் நேரமும் வீணாவதில்லை.

காந்தியடிகள் காலை நான்கு மணிக்கு எழுந்திருக் கிறார். எழுந்ததும் கை கால் கழுவிக்கொண்ட பின், பிரார்த்தனை நடைபெறுகிறது. இதன் பின்னர் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஏழு மணிக்குச் சிறிது ஆகாரம் உட்கொள்கிறார். பிறகு உலாவுதல், பின்னர் வேலை ஆரம்பம். ஒன்பது மணி சுமாருக்கு எண்ணெய் தடவி உடம்பு பிடித்துவிடப் படுகிறது. அப்பொழுதும்

வேலை நடந்த வண்ணமாகவே இருக்கிறது. பிறகு ஸ்நானமும், பதினோரு மணிக்கு போஜனமும் நடைபெறுகின்றன. ஒரு மணி வரையில் வேலை செய்த பிறகு சிறிது கண்ணயர்கிறார். இரண்டு மணி சுமாருக்கு எழுந்து மீண்டும் அங்க சுத்திசெய்து கொள்கிறார். அதன் பிறகு வயிற்றில் களிமண் பட்டி வைத்துக் கொண்டு சிறிது களைப்பாறுகிறார். ஆனால் வேலை படுத்த படியே நடந்த வண்ணமாயிருக்கிறது. நான்கு மணிசுமாருக்கு நூல் நூற்கிறார். பிறகு எழுத்தும், படிப்பும் நடக்கின்றன. மாலை ஐந்து மணிக்கு உணவு உட்கொண்டு உலாவச் செல்கிறார். ஏழு மணிக்குப் பிரார்த்தனை நடக்கிறது. பிறகு சிறிது வேலை; ஒன்பது அல்லது ஒன்பதரை மணிக்குத் தூங்கி விடுகிறார்.

அவசியமிருந்தால் இரவு இரண்டு மணிக்கே எழுந்து வேலை ஆரம்பிக்கிறார். காந்தியடிகளின் உணவு சாதாரணமானது. ஒன்றிரண்டு வருஷங்களாக அது மாறிக்கொண்டே யிருக்கிறது. ஒரு காலத்தில் வேர்க் கடலையும், வெல்லமும் மட்டும் உண்டு வந்தார். அநேக வருஷங்களுக்கு முன், பாலே அருந்தாமல் பாதாம்பருப்பு சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். பல வருஷங்களுக்கு முன்னர் ஒருதடவை ரொட்டியை ஒழித்துவிட்டுப் பேரீச்சம் பழங்கள் சாப்பிட்டதைக் கண்டேன். இதைப் போலவே ஒரு காலத்தில் ரொட்டி அதிகமாகவும், பழங்கள் சிறிதும்

சாப்பிட்டு வந்தார். இந்த மாதிரி உணவில் பரீட்சைகள் நடந்துகொண்டேயிருந்திருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன் வேப்பிலையும், புளியும் சாப்பிடும் பரீட்சை பலமாக நடந்து வந்தது. பிறகு விடப்பட்டது. வேகவைக்காத காய்கறி, தானியங்கள் உண்ணும் சோதனையும், நோயுற்றதால்விடப்பட்டது.

இச்சோதனைகள் ஒவ்வொரு மனிதனும் செய்யத்தக்கவையல்ல. தற்சமயம் அவரது உணவு மெல்லிய ரொட்டி, வெந்த கீரை, வெல்லம், உள்ளி, பழங்கள் ஆகியவையே. ஒவ்வொரு பொருளிலும் சிறிது சோடா சேர்த்துக் கொள்கிறார். சோடா உடம்பிற்கு நல்லதென்பது அவர் கருத்து. ஒரு நாளில் ஐந்து பொருள்களுக்கு மேல் உண்ணுவதில்லை. காந்தியடிகள் வாலிபத்தில் தினம் ஐம்பது மைல்கள்கூட நடந்திருக்கிறார். கிழப்பருவத்திலும்கூட உலாவுவதை விடவில்லை. "ஒரு நாள் உணவு கிடைக்காவிடினும் பாதகமில்லை; தூக்கம் குறைந்தாலும் கவலையில்லை; ஆனால் உலாவ முடியாவிடின் நோயுற்று விடுவேன் என்று சொல்வதுண்டு. வயிற்றின்மேல் ஒரு மணி நேரம்வரை மண்பட்டியை வைத்திருக்கிறார். இதற்கும் மிகுந்த மஹிமை யுண்டென்று கூறுகிறார்.

தூக்கமோ விரும்பிய பொழுது தூங்க முடிகிறது. காந்தி-இர்வின் ஒப்பந்த சமயத்தில் என் வீட்டில் சில ஆங்கிலேயர்கள் காந்தியடிகளைச் சந்திக்க நிச்சயம் செய்திருந்தனர். நிச்சயிக்கப்பட்டிருந்த நேரத்திற்குப்

பதினைந்து நிமிஷம் முன்பே காந்தியடிகள் வந்துவிட்டார். "நான் தூங்கவேண்டும்; சிறிது தூங்கட்டுமா" என்றார். "தூங்க சமயமேது? பதினைந்து நிமிஷந்தானே இருக்கிறது" என்றேன். "பதினைந்து நிமிஷம் போதும்" என்று பதிலளித்தார். உடனே கட்டிலிற் படுத்து ஒரு நிமிஷத்தில் நித்திரையிலாழ்ந்தார். இதிலும் ஆச்சரியம் என்னவெனில், பதினைந்து நிமிஷமானதும் தாமே விழித்தெழுந்தார். "தங்களுடைய தூங்கும் சக்தி அற்புதமானது" என்று கூறினேன். "என்றைய தினம் என் தூக்கம் என் வசத்திலில்லையோ அன்று என் முடிவு என்று அறி" என்றார். காந்தியடிகளுக்கு நோயாளிகளுக்குச் சேவை செய்வதில் மிகுந்த ஆசையுண்டு. இந்த ஆசை சிறு பிராயத்திலிருந்தே இருந்திருக்கிறது. தனது "இந்திய சுயராஜ்ய" மென்ற நூலில், ஆஸ்பத்திரிகளை ஒரு விதத்தில் கண்டித்திருக்கிறாரென்றாலும், ஆப்பிரிக்காவில் சேவையின் பொருட்டு 'நர்ஸ்' வேலை செய்ததன்றி, ஒரு சிறிய 'ஆஸ்பத்திரி'யும் நடத்தி வந்தார். ரோகிகளுக்குச் சேவை செய்வதிலுள்ள ஆசை இன்றும் அப்படியே குறையாமலிருக்கிறது. சேவையில் மட்டுமே அவருக்கு ருசி என்பதல்ல. சிகிச்சையிலும் ருசியுண்டு. இன்னும் சுலபமான வைத்திய முறைகளைப் பற்றின பரீக்ஷை நடந்து கொண்டேயிருக்கிறது.

நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயிலிருக்கையில் ஒருவர் காந்தியடிகளைக் காண விரும்பினால், தமது

அசௌகரியத்தையும், கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் ரோகியைப் போய்ப்பார்த்து வருகிறார். நான் பல தடவை அவர் இவ்விதம் செய்வதைப் பார்த்திருக்கிறேன். ஒன்றிரண்டு சமயங்களில் அவரது வருகையால் ரோகிகள் அளவற்ற சாந்தி யடைந்ததையும் கண்டிருக்கிறேன்.

பல வருஷங்களுக்கு முன் டில்லியில் நடந்த விஷயம். சாகும் தறுவாயில் ஒரு ஸ்திரீ இருந்தாள். நோயுடன் போரிட்டு, பாவம், உடல் துரும்பாய்ப் போய்விட்டது. மூச்சுத்தான் பாக்கியிருந்தது. அவள் வாழ்விடம் விடை பெற்றுவிட்டாள். நீண்ட யாத்திரை செய்யவேண்டி யிருக்கிற தென்று நம்பி ராமஜபம் செய்துகொண்டே நாட்களைக் கழித்து வந்தாள். அவள் என்னிடம் "காந்தியடிகளின் தரிசனம் கிடைக்குமா ? போவதற்கு முன் அவரைச் சந்தித்துவிட வேண்டும்" என்று கூறினாள். அது சமயம் காந்தியடிகள் டில்லியினருகிலில்லை. ஆகையால் தரிசனம் கிடைப்பதரிது. ஆனாலும் இறக்கும் தறுவாயிலிருப்பவளை ஏமாற்றமடையச் செய்வது சரி யென்று நான் கருதவில்லை. ஆகையால் "கடவுள் உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தாலும் செய்யலாம்" என்றேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு காந்தியடிகள் கான்பூரிலிருந்து டில்லி வழியாக அஹமதாபாத்திற்கு போவதாக எனக்குச் செய்தி கிடைத்தது. அவரது

வண்டிகாலை நான்கு மணிக்கு டில்லி வந்து சேரும். அஹமதாபாத்தின் வண்டி ஐந்து மணிக்குப் புறப்படும் ஆகையால் ஒரு மணி நேரந்தான் அவர் டில்லியிலிருக்க முடியும். ரோகியோ டில்லியிலிருந்து பத்து மைல் தூரத்திலிருந்தாள். ஒரு மணி நேரத்தில் அவளைப் பார்த்துவிட்டுத் திரும்புவது அசாத்தியமான காரியம்.

குளிர் காலம். காற்று வேகமாய் வீசிக்கொண்டிருந்தது. மோட்டாரில்—அந்தக் காலத்தில் திறந்த வண்டிகளே இருந்தன—காந்தியடிகளை இருபது மைல் பிரயாணம் செய்யச் செய்வதும் பயமாயிருந்தது. காந்தியடிகள் வருகிறார் என்ற விஷயமே அவளுக்குத் தெரியாது. காந்தியடிகளை தரிசிக்க வேண்டு மென்ற ஆசை மட்டும் அவளுக்கிருந்தது. காந்தியடிகள் வண்டியினின்றும் இறங்கினார். நான் மெதுவாக, " இன்று தாங்கள் தங்க முடியாதா?" என்று கேட்டேன். காந்தியடிகள் " தங்குவது கஷ்டம் " என்றார். நான் நம்பிக்கையைக் கைவிட்டு விட்டேன். ரோகிக்கு எவ்வளவு ஏமாற்ற முண்டாகு மென்பதை அறிந்திருந்தேன்.

காந்தியடிகள் குழம்பிக்கொண்டு " தங்குவதைப் பற்றி ஏன் கேட்கிறாய்?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார். நான் காரணம் கூறினேன். "சரி, இப்பொழுதே கிளம்பு" என்றார். "ஆனால் இந்தக் குளிரிலும். பேய்க் காற்றிலும், காலை நேரத்தில் மோட்டாரில் தங்களை எவ்வாறு அழைத்துச் செல்வேன்?"

என்றேன். "இதைப்பற்றி யோசியாதே. என்னை மோட்டாரில் ஏற்று, நேரத்தைக் கழிப்பதில் என்ன லாபம்? கிளம்பு, கிளம்பு" என்று துரிதப்படுத்தினார். காந்தியடிகளை மோட்டாரில் அமர்த்தினேன். குளிர் காற்று தாங்க முடியவில்லை. இன்னும் சூரியன் உதிக்கவில்லை. எங்கும் காலையின் அமைதி நிலவி யிருந்தது. நோயாளி படுக்கையில் படுத்து "ராம், ராம்" என்று ஜபம் செய்துகொண்டிருந்தாள். காந்தி யடிகள் அவளுடைய கட்டிலினருகில் சென்றார். "காந்தியடிகள் வந்திருக்கிறார்" என்று கூறினேன். அவளுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. பிரமை யடைந் தவள் போலானாள். திகைத்து எழுந்து உட்கார முயன்றாள். ஆனால் சக்தி ஏது? அவளுடைய கண் களிலிருந்து நீர்த் திவலைகள் வெளிப்பட்டன. நான் எனது கடமையைச் செய்துவிட்டதாக எண்ணினேன்.

நோயாளியின் ஆன்மாவுக்குக் கிட்டிய இன் பத்தை அவளுடைய கண்கள் காட்டின. காந்தியடிகள் போகவேண்டிய ரயில்டில்லியைவிட்டு புறப்பட்டு விட் டது. ஆகையால் மோட்டாரில் சென்று அடுத்த ஸ்டேஷனில் வண்டியைப் பிடித்தோம். காந்தியடி களுக்குக் கஷ்டம்தான். ஆனால் நோயாளிக்குக் கிடைத்த அமைதியை எண்ணி அவர் தம் கஷ்டத்தின் நினைவேயில்லாதிருந்தார்.

பசித்தவனுக்கு உணவும், தாகமுள்ளவனுக்கு நீரும் கொடுப்பதற்கு மகிமை உண்டென்று நினைக்கிறோம்.

ரந்திதேவரும்,* அவருடைய குழந்தைகளும், தாங்கள் பட்டினியாயிருந்தும், பசியுள்ளவருக்கு உணவளித்ததைப் பற்றிப் புகழ்ந்து நமது புராணங்கள் கூறுகின்றன. இறக்கும் தறுவாயில் ஒரு மனிதன் இருக்கிறான். அப்பொழுது ஒரு மகானைத் தரிசிக்க விரும்புகிறான். அவனது இவ்வாசை பூர்த்தியாகிறது. அவனுக்கு சாந்தி கிடைக்கிறது. இந்த தானத்திற்கு எவ்வளவு மகிமையிருக்கும்!

---

* ரந்திதேவர், துஷ்யந்தன்-சகுந்தலையின் வம்சத்தில் உதித்தவர். அவர் தம்மிடமிருந்த உணவை அதிதிகளுக்கு ஜாதி வித்தியாசம் பாராது பகிர்ந்து கொடுத்துத் தாமும் தம் குழந்தைகளும் பட்டினியாகத் தண்ணீருமில்லாதிருந்தாரென்பது கதை. பாகவதம், ஸ்கந்தம்—9, அத்தியாயம் 21.

## [ 20 ]

# ஆண்டவன் அருள் வேண்டும்

**கா**ந்தியடிகளுக்கு எழுபத்தோரு வயதாகி விட்டது! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு முதலில் அவரை நான் தரிசித்த பொழுது, நல்ல வாலிப தசையிலிருந்தார்; இன்று கிழவராகி விட்டார். அக்காலத்திய அவரது தோற்றம், உடுப்பு முதலியவை களையும், தற்சமயத்தின் தோற்றம், உடுப்புகளையும் ஒப்பிட்டால் மிகுந்த வித்தியாசம் தெரிகிறது. நாம் தினமும் பார்த்து வரும் பொருளில் ஒவ்வொரு நாளும் உண்டாகிற மாறுதல்கள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. மாறுபாடு திருடனைப்போல் ஒளிந்து வருகிறது. ஆகையால் காந்தியடிகளின் சரீரத்திலும், பேச்சிலும், உடுப்பிலும், எப்பொழுது, எத்தகைய மாறுதலுண்டாயிற்றென்று இப்பொழுது யாருக்கும் நினைவில்லை. நான் முதலில் கண்ட பொழுது அவர் 'கோட்' அணிந்திருந்தார். பிறகு 'குடுத்தா'வும், தலைப்

பாகைக்கு பதிலாகக் குல்லாயும் வந்தன. ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கையில் ‘குடுத்தா’வையும் கழற்றி எறிந்து விட்டார். அது முதல் முழங்கால் வரை வஸ்திரமும், போர்த்துக் கொள்வதற்கு ஒரு துணியும் எஞ்சியிருக்கின்றன.

முதலில் அவர் குடுமியே வைத்துக் கொள்ளவில்லை. ஹரித்துவாரத்தில் ‘கும்பமேள’த்தின் சமயத்தில் ஒரு சந்நியாசி இவரிடம் “காந்தி! பூணூலுமில்லை! சிகையும் காணேம்! ஹிந்து என்பதற்கு ஏதாவது சின்னமிருக்கட்டுமே!” என்றார். அது முதல் காந்தியடிகள் குடுமி வைத்துக்கொண்டார். அந்தக் குடுமி நன்கு அடர்ந்திருந்தது. ஒரு நாள் திடீரென்று நான் அவருடைய தலையைப் பார்த்தபொழுது குடுமியைக் காணவில்லை. குடுமியின் ரோமங்களெல்லாம் தானாகவே உதிர்ந்துவிட்டன. விரும்பித் தரித்திருந்த சிகைவிடை பெற்றுச் சென்றுவிட்டது. பற்களெல்லாம் போய்விட்டன. ஆனால் எப்பொழுது எவ்வாறு போயின, என்பது பக்கத்திலிருந்தவர்களுக்கும் தெரியவில்லை.

மனிதர்களுக்குத் தங்கள் வாழ்வில் கீர்த்தி, அபகீர்த்தி இரண்டும் கிட்டியிருக்கின்றன. ஒரு சமயம் செல்வாக்கு கிட்டும், ஒரு சமயத்தில் போய் விடும். வெல்லிங்டன், நெப்போலியன், டிஸ்ராலி, கிளாட்ஸ்டன் முதலிய ராஜீயத் தலைவர்கள் தங்கள் வாழ்விலேயே ஏற்றம், இறக்கம் இரண்டையும் கண்

டுள்ளார்கள். ஆனால் காந்தியடிகளோ ஏற்றத்தைத் தவிர இறக்கத்தையே காணவில்லை. தம் ஆயுளில் பெரிய பெரிய செயல்கள் புரிந்திருக்கிறார். ஒவ்வொரு துறையிலும் பெயர் விளங்கும்படியான காரியங்கள் பல செய்திருக்கிறார். இலக்கியத்துறைக்கு அவர் தந்தது கொஞ்சமல்ல. எவ்வளவு புதிய சொற்களைச் சிருஷ்டித்திருக்கிறார்! எவ்வளவு புதிய பிரயோகங்களைக் கையாண்டிருக்கிறார்! எழுதும் முறை அவரால் எவ்வளவு மாறுதலடைந்திருக்கிறதென்பது போன்ற பல விஷயங்கள் பின்னொரு காலத்தில் தெரியவரும்.

இந்தியாவில் நம்மிடமுள்ள மிகப் பெரிய துர்க்குணமென்னவென்று யாரோ அனிபெஸண்டு அம்மையிடம் கேட்டார். அவர் அதற்கு “இந்தியாவில் மக்கள் பிறரை வீழ்த்தித்தாம் முன்னேற முயற்சி செய்கிறார்கள்; இதுவே தீதிலும் தீது” என்று விடையளித்தார். ராஜீயத்துறையில் இத்தீமையை அடிக்கடி காண்கிறோம். ஆனால் காந்தியடிகளோ மண்ணிலிருந்து தோண்டித் தோண்டி ரத்தினங்களையெடுத்தார். அவர் சாம்பலைச் சலித்துத் தங்கம் சேர்த்தார். சர்தார் வல்லபாயை உண்டாக்கிய புகழ் காந்தியடிகளைச் சாரும். ஸ்ரீ. இராஜகோபாலாசாரியாரையும், ராஜேந்திர பாபுவையும் கண்டெடுத்தவர் காந்தியடிகளாவர். நூற்றுக்கணக்காக சேனைத் தலைவர்களையும், லக்ஷலக்ஷம் வீரர்களையும் சிருஷ்டித்தார். கோடிக்கணக்கான உயிரற்றிருந்த நாட்டு மக்களுக்குப்

புத்துயிரளித்தார். சிறு சிறு மனிதர்களைச் செப்ப னிட்டுப் பெரியவர்களாக்கினார்.

चिड़ियों से मैं बाज लड़ाऊँ
तब गोविन्दसिंह नाम रखाऊँ।

"குருவிகொண்டு யான் கழுகினைக் கொல்லுமுன்,
பெருமை சேர் பெயர் 'கோவிந்த'னென்றிடேன்."
என்று சீக்கிய குரு கோவிந்தசிங்கர் சொன்னார்.

எந்த காந்தி நமக்கு இவ்வளவையும் அளித் திருக்கிறாரோ, அவர் கிழவராகிக் கொண்டிருக்கிறார். எப்பொழுது கிழவரானாரென்ற நினைவே நமக்கில்லை.

दिन-दिन, घड़ी-घड़ी, पल-पल, छिन-छिन,
स्रवत जात जैसे अंजरी को पानी।

"ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும், ஒவ் வொரு விநாடியும், ஒவ்வொரு நொடியும் கையிலுள்ள நீரைப்போல்," ஆயுள் கழிந்துகொண்டேயிருக்கிறது. காந்தியடிகள் எழுதுகிறார், பேசுகிறார், நம்மை நடத்து கிறார். ஆகையால் அவரது உடலின் சோர்வு நமக்குத் தெரிவதேயில்லை. காந்தியடிகள் எப்பொழுதும் நம் முடனிருப்பாரென்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். அவர் சிரஞ்சீவியாயிருக்கும்படி ஆண்டவன் அருள் புரிவாராக!

தங்கள் யௌவனத்தை காந்தியடிகளுக்குத் தந்து அவரை நெடுங்காலம் உயிர் வாழச் செய்யமுடியு

மாயின் தங்கள் ஆயுளையே அர்ப்பணஞ் செய்வதற்கு ஆயிரக்கணக்கான வாலிபர்கள் காத்திருக்கிறார்கள்.

கடைசியில் மீண்டும் காந்தியடிகளின் வாழ்க்கை யாது? என்ற கேள்வி எழுகிறது.

ஸ்ரீராமருடைய சரித்திரத்தை ஒரு கவிஞர் ஒரே செய்யுளில் வர்ணித்து விட்டார்:—

आदौ रामतपोवनाधिगमनं, हत्वा मृगं कांचनम् ।
वैदेहीहरणं, जटायुमरणं, सुग्रीवसंभाषणम् ।
वालीनिग्रहणं, समुद्रतरणं, लंकापुरीदाहनम् ।
पश्चाद्रावणकुंभकर्णहननं, एतद्धि रामायणम् ॥

' வனமேக ராமன், கொல்ல வன்னமான், வௌவி யோடச் சனகனின் பேற்றையாவிச் சடாயுவும் போக்கச்—சுக்ரீ வனையுடன் சேர்த்தல், வாலிவதை, வாரிதாண்டல் லங்கை யனைத்தையு மரக்கர்தம் மோட ழித்தலே ராமகாதை.'

காந்தியடிகளின் வாழ்க்கையும் ஒரே செய்யுளில் எழுதப்படலாம்; ஏனெனில், ' அஹிம்ஸை ' என்ற ஒரே பொருள் ஆதிமுதல் அந்தம் வரையில் இருக் கிறது. கதர் என்றாலும் ஹரிஜன சேவை என்றாலும் அஹிம்ஸையின் அங்கங்களே. ஒரு விஷயம். ஸ்ரீராமருடைய சரித்திரத்தை விவரிக்கும் செய்யுள் கடைசியில் " அரக்கர்தம் மோடழித்தல்" என்று கூறு கிறது. நாமும் காந்தியடிகளைப் பற்றி,

इंग्लैण्डगमनं, विद्याध्ययनम् , भारतागमनम्,
आफ्रीकागमनं, सत्याग्रहप्रकरणं, भारतपुनरागमनं,

## ஆண்டவன் அருள் வேண்டும்

**सत्याग्रह संचालनम् "पारतंत्र्यविनाशनम् ?"**

"இங்கிலாந்தேகிக், கல்விபயின்றபின், பாரதம் மீண்டு
மங்கு திக்காப்பிரிக்கா மீதிலே சத்தியப்போர்
மங்களமாய் நடாத்தி மீண்டுமே பாரதம் வந்து
இங்குமப்போர் நடாத்தித் 'தெறித்தனனடிமைப்
பாசம்.'

என்று கூறக்கூடிய காலம் வருமா? யார் கூறமுடியும்?

சில தினங்களுக்கு முன் ஒரு சீன தேசத்துத் தலை சிறந்த கனவான் அவரைத் "தாங்கள் தம் ஆயுளில் இந்தியாவை சுதந்திர நாடாகப் பார்க்க முடியுமென்று எதிர்பார்க்கிறீர்களா?" என்று வினவினார். "ஆமாம், எதிர்பார்க்கிறேன். கடவுளுக்கு என் மூலமாக இன்னும் காரியங்கள் செய்விக்குமெண்ணமிருந்தால், நிச்சயமாக என் ஆயுளிலேயே இந்தியா சுதந்திரமடையும். ஆனால் கடவுள் என்னை முன்னமேயே அழைத்துக் கொண்டாலும் அதனால் எனக்கு வருத்தமுண்டாகாது" என்றார்.

வருங்காலத்தில் நடக்கப்போவது என்னவென்று யாருக்குத் தெரியும் !!

**को जाने कल की !**

யாரே யறிவார் நாளை வருவதை !

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 17 | सस्यक् | सम्यक् |
| 20 | 4 | ஆவலுடன் என்று | என்று ஆவலுடன் |
| 24 | 2 | பெறும் | தெளிவு பெறும் |
| 109 | 10 | நம்முன் | நம்முள் |
| ,, | ,, | சொல்லறிய | சொல்லரிய |